# நல்லை குமரன் மலர் 1995



வெளியீடு:
யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற
சைவ சமய விவகாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DISSERTATION

பல்கலைக்கழக மாணவர்களின்

ஆய்வுக் கட்டுரைகள்

பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு

அமைய

அட்டைகள் அழகுற அச்சிட்டுக் கட்டி (பைபிண்ட்)

உரிய நேரத்தில் பெறுவதற்கு

யாழ் நகரில்

அநுபவமும் ஆற்றலும் வாய்ந்த ஒரே இடம்

# பாரதி பதிப்பகம்

430, காங்கேசன் துறை வீதி,

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் குமாராய நம:

# நல்லை குமரன் மலர்










## 1995



''தமிழ்மணி''
தெல்லியூர் செ. நடராசா
— கௌரவ பதிப்பாசிரியர் —

**சைவசமய விவகாரக் குழு**
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்றத்தின்

# சைவசமய விவகாரக் குழு உறுப்பினர் - 1995

காப்பாளர்: திரு. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

தலைவர்: வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன்
சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

செயலாளர்: திரு. இ. இரத்தினசிங்கம்
பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்

பொருளாளர்: திரு. இ. தாமோதரம்பிள்ளை
மின்சாரப் பொறியியலாளர்

உப பொருளாளர்: திரு. து. சோமசுந்தரம்
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

நிர்வாக உறுப்பினர்: திரு. செ. இராசரத்தினம்
பிரதம எழுதுநர், மின்சார இறைவரி

திரு. த. சிவசுப்பிரமணியம்
பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்

திரு. க. ஸ்ரீ கிருஷ்ணகுமார்
பாதுகாப்பு உத்தியோகத்தர்

திரு. க. தயாபரன்
எழுதுவினைஞர், மாநகராட்சி மன்றம்.

திரு. நா. ரகுமார்
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

கௌரவ பதிப்பாசிரியர்: ''தமிழ்மணி''
திரு. தெல்லியூர் செ. நடராசா
குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப் பதிப்பு: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்

## யுவ வருஷம் மகோற்சவ

# விசேஷ தினங்கள் 1995

### 1-8-95 முதல் 27-8-95 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| 1-8-95 | செவ்வாய் | கொடியேற்றம் | பகல் 10.00 | (1ம் திருவிழா) |
| 10-8-95 | வியாழன் | மஞ்சம் | மாலை 5.00 | (10ம் திருவிழா) |
| 18-8-95 | வெள்ளி | கார்த்திகை உற்சவம் | மாலை 5.00 | (18ம் திருவிழா) |
| 20-8-95 | ஞாயிறு | சந்தானகோபாலர் உற்சவம் | காலை 7.00 | (20ம் திருவிழா) |
| | | கைலாச வாகனம் | மாலை 5.00 | (20ம் திருவிழா) |
| 21-8-95 | திங்கள் | கஜவல்லி-மஹாவல்லி உற்சவம் | காலை 7.00 | (21ம் திருவிழா) |
| | | வேல்விமானம் | மாலை 5.00 | (21ம் திருவிழா) |
| 22-8-95 | செவ்வாய் | தெண்டாயுதபாணி உற்சவம் | காலை 7.00 | (22ம் திருவிழா) |
| 23-8-95 | புதன் | சப்பறம் | மாலை 5.00 | (23ம் திருவிழா) |
| 24-8-95 | வியாழன் | தேர் | காலை 7.00 | (24ம் திருவிழா) |
| 25-8-95 | வெள்ளி | தீர்த்தம் | காலை 7.00 | (25ம் திருவிழா) |
| 26-8-95 | சனி | பூங்காவனம் | மாலை 5.00 | (26ம் திருவிழா) |
| 27-8-95 | ஞாயிறு | வைரவர் உற்சவம் | மாலை 5.00 | (27ம் திருவிழா) |

PUBLIC LIBRARY JAFFNA
NALLUR BRANCH LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஆநந்தம் பொலியும் ஆழவந்த
விநாயகர்
அருள் நிலைக்க வேண்டுகின்றோம்.

☆

முருகன் அடியார்களுக்கு என்றும் நிலைக்கும்
அவன் அருள் பொலிகவென
உளமார வேண்டுகின்றோம்.

☆

பரம்பொருள் சக்திகளாம்
ஈஸ்வராம்பாள்
சக்தி மலிகவென்று
மக்கள் நிலை தழுவி வழுத்துகின்றோம்.



# ஈஸ்வர பகவான் அன் கம்பனி

***104 (298) கிட்டு சாலை,***

*(ஆஸ்பத்திரி வீதி)*

***யாழ்ப்பாணம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமரன் அடியிணையில்....


* மன்றக் கீதம் — 5
* சமர்ப்பணம் — 7
* வாழ்வில் சைவம் — 13
வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன்
* தும்பிக்கை நாதன் துணை — 17
தமிழரன்
* அன்பாசி — 19
நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்
* வாழ்த்துரை — 21
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
* ஆசியுரை — 23
மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள்
* ஆசிச்செய்தி — 25
பேராசிரியர் க. குணரத்தினம்
* ஆசிச்செய்தி — 27
திரு. க. கனகராசா
* ஆணையாளர் வாழ்த்துரை — 29
திரு. வே. பொ. பாலசிங்கம்
* திருமுருகாற்றுப்படை — 31
திரு. வை. அநவரதவிநாயகமூர்த்தி
* அறியாயோ? — 35
திரு. சோ. பத்மநாதன்
* நல்லூர்க் கந்தசுவாமி நான்மணிமாலை — 37
திரு. சொக்கன்
* அஞ்சுமுகம் தோன்றில்... — 41
திரு. கோ. சி. வேலாயுதம்
* நாவலர் சற்குரு மணிமாலை... — 45
பண்டிதர் அ. ஆறுமுகம்
* இந்து மதத்தில் கன்மம்... — 51
திரு. கி. கிருபானந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நல்லூர் வீதியில் உலாவிய மூவர் — 55
திரு. நா. முத்தையா
* சரண கமலாலயம் — 59
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா
* யாழ்ப்பாண நகரத்திற்கு ஒரு சதுக்கம் — 63
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
* சமஸ்கிருதத்திலுள்ள முருகன் துதி மாலைகள் — 65
பேராசிரியர் வி. சிவசாமி
* அந்த ஒரு வாசகம் எது — 71
திரு. க. சிவராமலிங்கம்
* முருகனும் தமிழும் — 73
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
* இருபதாம் நூற்றாண்டுக்கான... — 77
கலாநிதி சபா ஜெயராசா
* உலகளாவிய இந்து மதம்... — 81
கலாநிதி கா. குகபாலன்
* கரும மார்க்கமும் தரும மார்க்கமும்... — 87
திருமதி கலைவாணி இராமநாதன்
* மலோன் மருகன் — 93
திரு. எஸ். சிவலிங்கராசா
* கச்சியப்பரின் கவிதா சாமர்த்தியம் — 97
தமிழருவி த. சிவகுமார்
* ஈழநல்லூர் குறவஞ்சி — 101
திரு. நா. க. சண்முகநாதபிள்ளை
* நல்லூர் கந்தசுவாமி கோயில் தல இலக்கியங்கள் — 105
திரு. ப. கணேசலிங்கம்
* பிறவாமை பெரும் பேறு — 111
திரு. ந. விஜயசுந்தரம்
* நல்லூரும் நாவலர் சிலையும் — 115
பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்
* கந்தன் வழிபாட்டில் காவடியாட்டம் — 129
திரு. எம். வேதநாதன்
* அறிவும் அறமும் ஆறுமுகமும் — 143
திருமதி நா. செல்வநாயகம்
* சமய அறிவுப் போட்டி முடிவுகள் — 149
* நன்றி — 158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

# மன்ற கீதம்

ராகம்: மோகனம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ்நக ராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே (ஈழத் தமிழர்...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம் (ஈழத் தமிழர்...)

ஏழிசை வல்லோன் யாழிசைப் பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழி சூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம் (ஈழத் தமிழர்...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதரராவர்
நமதரும் பண்பு கலைகலாச் சாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க (ஈழத் தமிழர்...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல் விரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க (ஈழத் தமிழர்...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில் நிலையங்கள்
எழிலுறு கோட்டை கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க (ஈழத் தமிழர்...)

வேத மந்திர கீத மொலிக்கும்
விளங்கிடு குர் ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும் (ஈழத் தமிழர்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர்சுதன்

மாணிப்பாய



ஆணவத்தால் அழிவுச் செயல்
புரியும் அரக்கர்குல மழிந்து
தங்கள் மண்ணிற் பற்றுடன் யாவரும்
வாழ உன் அருளை பொலிகலூட்டி
ஆரா வுன்னழகுடை திருப்பாதம்
போற்றி வாழ கருணை புரிக.

## சுந்தர்சுதன்

மத்திய சந்தை — மானிப்பாய்.



# சமர்ப்பணம்

"ஓம்'' என்ற எழுத்தே சூக்கும சடக்கரமாம் ஆறெழுத்தும் அதில் அடங்கியுள்ளது. ''ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே'' என்று கூறுவது நோக்கற்பாலது. ''ஓம் எழுத்தில் அன்பு மிகவூறி ........ அருள்வாயே'' என்று அருணகிரிப் பெருமான் கூறியுள்ளதும் தெளிவானது. ''ஓம்'' என்னும் பிரணவ அட்சரமே ஆதியில் உபதேசிக்கப்பட்டது. அதுவே தியானம். அதுவே தியானிக்கற்பாலது என்னும் பொருள்பட அதர்வ சிகோப நிடதம் கூறுகின்றது — ''ஓமித்யேத தக்ஷர மாநௌ ப்ரயுக்தம் த்யானம் த்யாவிதவ்யம்.'' இப்பிரணவ மந்திரத்தை ஒரு முறை உச்சரித்த மாத்திரத்திலேயே உயர்ந்த கதியில் கொண்டு போய்ச் சேர்க்கின்றது. ''ஸக்ருதுச் சரிதமாத்ர: ஊர்வத்வமுந் நமய நீத் யோங்கார:'' என்று அதர்வ சிகையும் ''ஓமித்யேத தாத்ம் ஓமித்யேத தக்ஷரம்'' என்று சாமவேத மைத்ராயன் யுக்தி பேதமும் ''ஸர்வவேதா யத்பதமாம நந்தி தபாம்ஸி ஸர்வாணி'' என சயத் வதந்தியும் இந்த ஓம் பற்றி தெளிவாகத் தெரிவிக்கின்றன. ''இந்தப் பிரணவ மந்திரத்தை மிகுந்த அன்பு பூண்டு, தியானித்து ஓவியம் போல் அசைவற்று விளங்குந் தன்மையே முடிவு. அதனை அடியேனுக்கு அருள்க'' என்று திருப்புகழில் பெருமானைக் கேட்கின்றார் அருணகிரியார்.

''திருநில மருவிக் காலினிருவழி... ...'' என்னும் திருப்புகழ் சிவத்தைப் போற்றுகின்றது. திருவடியில் விளங்கும் சிலம்பின் ஓசையும் வீரக் கழலின் ஒலியும் எட்டுத் திசைகளுக்கும் செவிடுபடுமாறு ஒலி செய்யவும் பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளும் பழமையான வேதங்களும் பணிந்து போற்றி வழிபடவும் சூலமும் மழுவும் மானும் அன்போடு சுழலவும் ஆதிசேடனுடைய பணாம குடங்கள் நெறு நெறுவென்று முறியவும் பசுவாகிய வாகனத்தில் திருவடி மலரை வைத்திருத்தலை விடுத்து நடனஞ் செய்து அடியவர்கள் (அரனரன்) அரஹர அரஹர — என்றும் ஜெய ஜெய என்றும் கூறி ஒலிக்கவும் திருநடனக் கோலத்தை அருள் செய்த பார்வதி பாகராம் பரமசிவன் அருளிய திருக்குமாரரே! நிலையற்ற உடம்பினை நிலைப்படுத்த முனைந்து ஹடயோகம் செய்து துன்புறுவதை அருணகிரிநாத சுவாமிகள் கண்டிக்கின்றார். நீர்மேற் குமிழிக்கு நிகரான உடல் எத்தனை நாள் இருப்பினும் ஒருநாள் அழியும். (அனலூடு— பிராணவாயுவினால் மூலக்கனலை மூட்டி எழுப்புதல்). விநாயகரகவலில் — ''மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக் காலாலெழுப்புங் கருத்தறிவித்தே'' — யோக நூல்களைப் படித்து அதன்படி ரேசக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரக கும்பகம் முதலிய சாதனங்களைச் செய்து சித்தியடையும் பொருட்டு கவலைப்பட்டு உள்ளம் உடைபட வேண்டாம். முருகவேள் முளரியந் தாளில் கருத்தைப் பதித்தால் முத்தியடைதல் எளிது. கந்தர் அலங்காரம் —

''காட்டிற் குறத்தி பிரான்பதத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளிதே விழி நாசிவைத்து
முட்டிக் கபால மூலாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப்பிடி த்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே''

என்று கூறுகின்றது. இப்பாடலிலே யோகமார்க்கத்தின் அருமையையும் அன்பு மார்க்கத்தின் எளிமையையும் சுவாமிகள் விளக்கியுள்ளார். விதிமார்க்கம், அன்பு மார்க்கம் என்று இருக்குமிரு மார்க்கங்களில் வேதாகம வழி நின்று விதித்தன செய்தும் விலக்கியன தவிர்த்தும் அணுவளவு கூட மாறுபாடின்றி நடப்பது விதி மார்க்கமாகும்; யாதொன்றும் கருத்தில் புகாமல் ஒரே அன்பு மயமாக நிற்பது அன்பு மார்க்கமாகும். விதி மார்க்கத்தில் நிற்போர் இறைவனைத் தேடிச் சென்று திருவடியடைவர். அன்புமார்க்கத்தில் நிற்போரை இறைவன் தேடிச் சென்றுவலிதில் ஆட்கொள்வான். விதிமார்க்கத்தில் நின்றவரினும் அன்பு மார்க்கத்தில் நின்றவர் இறைவனை மிகவும் நெருங்குகின்றனர். தாமே முருகனை விரும்பி மணந்து கொண்டவர் தெய்வானையம்மையார். முருகப் பெருமான் தாமே வலிதில் போய் ஆட்கொள்ளப்பட்டவர் வள்ளியம்மையார். இதற்காகவே இப்பாடலில் ''காட்டிற் குறத்தி பிரான்'' என்றார் சுவாமிகள்.

உள்ளத்திலே வேறு ஒன்றுக்கும் இடமேயில்லாது முருகப் பெருமானுடைய திருவடியிலே உள்ளத்தைச் செலுத்த வேண்டும். ஆண்டவன் பாத மலரில் உள்ளத்தைச் செலுத்த வல்லாருக்கு உலகில் வேண்டியது யாதொன்றுமில்லை. இறைவன் திருவடிக்கமலத்தில் உள்ளத்தைச் செலுத்தி அன்பு செய்து அகங் குழைவார்க்கு இறைவன் தானே வெளிப்படுவான். அன்பினால் நெஞ்சம் நெகிழ்ந்து, கண்ணீர் மல்க கசிந்துருகாது—அந்த நெறியறிந்து ஒழுகாது—காடு சென்று புற்றினால் மூடப்பட்டும் காற்றைப் புசித்தும் கனலிடை நின்றும் புனலிடை மூழ்கியும் துன்புறும் பலர் எய்தும் பலன்தானென்னை? இதனைப் பட்டினத்தடிகள் கூறுகின்றார்-

''காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தை சுற்றி
ஓடே எடுத்தென்ன யுள்ளன் பிலாதவர் ஓங்கு விண்ணோர்
நாடே யிடைமருதீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.''

அன்பினால் அகிலத்தை மட்டுமல்ல — அரனையும் ஆளலாம். திருமால் தேடியுங்காணாத திருவடிகளை வந்தியம்மையின் அன்பு மதுரையம்பதியில் நடந்து வரச் செய்தது; பிரம்மதேவர் அன்னமாகப் பறந்து என்றும் காணாத திருமுடி மீது விறகு கட்டையைச் சுமக்கச் செய்தது பாணபத்திரன் அன்பு; மண் சுமந்து பாண்டியன் பிரம்படிபட்டதும் புண்சுமந்தும் கண்ணப்பன் கால் பாதுகையை சென்னிமேல் ஏற்றதும் வாயினால் கொப்புளித்து உமிழ்ந்த எச்சில் நீரில் குளிர்ந்ததும் அளப்பரிய அன்பின் சிறப்பை வெளிக்காட்டுவனவாகும். வீடு பேறடைய உதவும் நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆதியவற்றுக்கு உயிர்நாடி அன்பு. இறையன்பில்லாது விட்டால் எப்பலனும் எய்தாது. இறையன்பின்றி மூச்சைப் பிடித்து சாதனை செய்யும் யோகிகள் அன்பு நெறியின்படி முருகவேளின் திருவடியில் சரண்புகுந்தால் எளிதில் வீடுபேறு கிடைக்கும். கந்தவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அணைவோருக்கு காலனுடைய பயமும் இருக்காது. உலகமாயையை போக்கும் குமரா என்னும் மந்திரத்தை இடையறாது சிந்திப்பவர்க்கு மலமாயாகன்மங்கள் தொலையும். ''குமரா சரணம் சரணம்'' என்று குமரனை வழுத்துதல் வேண்டும்.

உடம்பை வளர்ப்பது உணவு; அறிவை வளர்பபது கல்வி; உயிரை வளர்ப்பது சமயமும் தெய்வ பக்தியுமாகும். இவையே ஒரு மனிதன் பெறத்தக்கவை. இறைவன் தந்த கைகள் கூப்பித் தொழவும் தலை அப்பெருமானை சிரந்தாழ்ந்து வணங்கவுமேயாகும். சிற்சபையில் நடராஜப் பெருமான் திருக்கரத்தில் கொண்ட உடுக்கையால் படைப்பையும். அபய திருக்கரத்தால் காத்தலையும் மழுவேந்திய திருக்கரத்தால் அழிப்பையும் ஊன்றிய திருவடியால் மறைப்பையும் தூக்கிய திருவடியில் அருளையும் கொண்டு ஐந்தொழிலுக்கும் தானே ஆதாரமென்பதைக் காட்டியாடுகின்றான். இப்பெருமானே கண்டு காமுறும் பெருங்கவினுடையவர் முருகப்பெருமான். கச்சியப்பர் கூறுகின்றார் - ''மன்று தோறாடிய வள்ளல் காமுறக் குன்று தோறாடிய குமரற் போற்றுவாம்.'' ஞானம் பெற வேண்டுவோர் உபாசிக்கும் ஞானபண்டிதன் குமரனாவார்.

இக் கலியுகத்துக்கு எளிமையாகச் செய்யக்கூடிய இயல்பானது பிரார்த்தனை வழிபாடு. இறைவனின் திருநாமத்தை நாம் எளிதாக பிரார்த்தனையின்போது உச்சரிக்கின்றோம். நாதோபாசனைதான் கலியுகத்தில் எம் வாழ்வுக் கடலைக் கடக்க உதவும் தோணியாகும்.

வானத்திலே ஞாயிறு தோன்றியதும் உலகமெலாம் ஒளிபரவி பிரகாசமுண்டாகின்றது. வீடுகளில் விளக்கேற்றியதும் இருள் நீங்கி ஒளி எங்கும் பரவுகின்றது. படைப்பின் கண்ணுள்ள தீய — அசுர சக்திகளையெல்லாம் ஓட்டிக்கலைத்து தேவாம்சசம்பத்துக்களையெல்லாம் மலரச் செய்து தனது அருட்பெருக்கினால் உலகை மலர்விப்பவள் பராசக்தி — மலைமகள். மக்களது வறுமையிருளை ஓட்டி இல்லையெனும் நிலையை நீக்கி— பிணிக் கொடுமை போக்கி வள ஒளியைத்தருபவள் இலட்சுமி — அலைமகள். மக்களது அறியாமை போக்கி — மனவிருளை ஓட்டி — அறிவு ஒளியூட்டி திகழச் செய்பவள் சரஸ்வதி — கலைமகள். கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றைத்தரும் கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகியோர் மக்களது வாழ்வில் ஒளியேற்றுகிறார்கள். முத்தேவியரால் இவற்றை நாம் பெற்று மகிழ்கின்றோம்.

முன்னோரால் பல்லாண்டுகளாக ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்ட ஒழுக்க நெறிகள் — கோட்பாடுகள் யாவும் இன்றும் பொருந்தக்கூடியனவே. தர்மமாக கடைப்பிடிக்கப்பட்டனவற்றை இன்றும் அவ்வாறே கொண்டு நாம் நடக்கலாம். இவற்றில் நடைமுறையில் ஏதும் மாற்றமேற்படலாமேயொழிய அன்றைய கோட்பாடுகள் — நெறிமுறைகளில் மாற்றமேற்படமுடியாது. நமது சிந்தனை — சொல் — செயல் இன்றும் தர்மவழியில் இருந்தால் வாழ்வு சிறக்கும். வள்ளுவப் பெருந்தகையும் எங்கள் சிந்தனை — சொல் — செயல் யாவுக்கும் தக்கவழிகள் காட்டியுள்ளார். அறம், பொருள், இன்பத்தைக்கூறி அவ்வழி நடந்து வாழ்ந்தால் வீடு சுலபமாக அமையும் என்பதை தெளிவாக்கியுள்ளார். வாழ்க்கை நூல் திருக்குறள்.

கணபதி, சிவன், அம்பிகை, முருகன், சூரியன், திருமால் போன்ற தெய்வங்களை வழிபடமுன்னர் தமிழில் இருந்த நூல்கள் அன்று மிலேச்சரால் அழிக்கப்பட்டன. தமிழில் கோட்டெழுத்தில் இருந்தவற்றை மிலேச்சராக உட்புகுந்து சீரழிவுகளைச் செய்தோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மொழியாக்கி அதிகாரம் காட்டியமையால் இன்று தூய தமிழில் தெய்வ வழிபாட்டு நாமாவளிகள் கிடைக்கவில்லை. பிறமொழியாக இருந்துலவும் மொழியிலுள்ள வழிபாடுகளை நாம் செய்யப் புகுங்கால் உச்சரிப்புக்களில் தவறிழைக்கலாமாகையால் அவற்றை தூய தமிழில் ஆக்கி வழிபாடுகளை நாம் கையாளலாம். மனத்தூய்மையும் பக்தியுமுடையவர்கள் எல்லோரும் இந்த மந்திர வழிபாடுகளை செய்யலாம். உள்ளத்தூய்மையுடன் செய்யும் கடமைகளை ஒழுங்காக – விதிமுறைகளுடன் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோரெல்லோரும் பாகுபாடு, கட்டாயம் ஏதுமின்றி முறையாக வித்தைகளைப் பயின்று, கடமைகளை கிரமமாக — ஒழுங்காக — கண்ணியத்தோடு — செந்தண்மை பூண்ட நிலையிலுள்ளவர்கள் மந்திரங்கள், வழிபாடுகள், பூசைகளை செய்வதும் அதற்கணிய வேண்டிய சின்னங்களை அணிவதும் கையாளப்படலாம்.

ஆன்மீகத்துறையில் — உள்ளம் தூய்மையாக இறைபக்தியோடு வாழ்வதில்தான் நிலையான இன்பம் என்ன வென்பது தெரியுமென நம்முன்னோர் வாழ்ந்து காட்டினார்கள். முற்காலம் தொட்டு அமைந்துள்ள எங்கள் சைவசமயாசார முறைகளும் வேதங்களும் நாங்கள் வாழவேண்டிய — வாழும் முறைமைகளை எங்களுக்குக் கற்பிக்கும் உயரிய பான்மையில் — பண்பில் அமைந்துள்ளன என்பதை மறக்கக் கூடாது. ஒவ்வொருவரும் அவரவர் மனப்பான்மையையும் மனப்போக்குக்கு அமையவும் சௌகரியத்தை அனுசரித்தும் தாம் எடுத்த — எடுக்கும் செயல்களை முறையாக ஆற்ற வேண்டும். அனாதியானகாலம் — தொடக்ககாலம் நிர்ணயிக்கமுடியாத பழமைவாய்ந்தது சைவம். இதரமதங்களெல்லாவற்றுக்கும் காலங்கள் நிர்ணயஞ் செய்யப்பட முடிகின்ற தாயினும் சைவம் மதமென்பதுடன் எந்நாட்டவர்க்கும் இறையருள் பொலிக வென உலகெலாம் பரந்து போற்ற அனாதிகால முதலாக நிலவிவருகின்றது. பதியொருவன் — எல்லாப் பொருள்களும் அவனே. பக்திநெறியைக் கடைப்பிடித்து அடியவர், மலமற்று பசுபாசம் அற்று சித்தமலம் இற்று சிவமாகும்படி அவன் ஆட்கொள்ளுகின்றான். எல்லா மெய்ப்பொருளும் வேதமுதற்பொருளும் செம்பொருளும் சிவனே என்பது உறுதியானது. ''குறியொன்று மில்லாத கூத்தனை'' தாம்கண்டு பிடித்து அனுபவித்ததை கூறுமிடத்து வாசகப்பெருமான் தம் மணிவாக்கால், ''இருளிடத்தும் உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்'' என்றோதுகின்றதை சிந்தைகொள்வது நலம்.

மனிதவாழ்வுக்கு — சைவவழி — தர்மவழி வாழ்வதற்கு வழிகாட்டும் உரைகள் பொதிந்த அறிஞர்பெருமக்களது எழுத்தோவியங்கள் ''முதல் எழுத்தாளர்'' வழியில் தந்துள்ளவற்றை அப்படியே இம் மலர் மூலம் உங்கள் முன் படைத்துள்ளோம். முருகவழிபாட்டிலேயே முளைவிட்டு வளர்ந்து, அருட்பெரும் சோதியாம் சிவன் தரிசனத்திலே செழிப்புற்று, தில்லைப் பெருவெளியே நடனமாடிய நடனவேந்தன் நினைவிலே தெளிவுற்று ஜோதி ரூபமாகிய சிவ அருட் பெருஞ்சோதியிலே ஒன்றிக் கலந்து அப்பெரும் சிவசோதியாக ஞானவொளிவீசிய வள்ளலார் பெருமான் கந்தக்குமரனுக்குச் சூட்டிய ''தெய்வமணிமாலை'' போன்று இக்குமரன் மலரிலும் அவரவர் தம் அறிவொளிகால நல்கிய உரைகளை அப்படியே பதித்துள்ளேம். ஆன்மீக ஞானக்கடலிலே மூழ்கித்திளைத்து வையக மக்கள் உலகாயதப்புயலிலிருந்து மீட்சிபெற ஒளிமுத்துக்களை வாரிவாரிவழங்கியுள்ள மக்களை — வாழிவாழி என்று வாழ்த்துகின்றோம். பிறவிப்பிணி நீக்கி, சஞ்சலந்தீர்த்து, உள்ளங்களில் நிறைந்திருக்கும் அருட்பிரகாசத்தை உணர்த்தி மக்களை உய்யும் வழிக்குவழி காட்டும் அரிய மருந்தை அவைகள் எல்லோருக்கும் வழங்கி வாழவைக்க நல்லைக்குமரன் தாள்பணிந்து வேண்டி நிறைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானமும் பக்தியும் பக்குவம் அடைந்தோர்க் சொன்றே ஞாலம் செழிக்க ஞானந் தந்த ஞானவான் ஆசான்வாழி! உலகமே மாயை, செயலெலாம் மாயை, செய்தியையுரைத்து உலகிலே வாழும் வளமான வாழ்வுக்கு வழிகாட்டிய பேரன் சங்காரவுலகுக்கு சரியான நெறிகளை சங்கரதேவன் வகுத்தான். சங்கந்தந்த தவத்தழிழ் கொண்டு சொல்ல வந்த சிறியேனுக்குத் தாயேகோயில் தந்தையே மந்திரம் என்றுரை செய்தாளத்தாயை வணங்கி, தந்தைதாள் பணிந்து எடுத்தோதுதற்கு அத்தெய்வங்களை வேண்டி சிரந்தாழ்த்தி தருகின் றேன். அத்தாய்வாழி! தந்தைவாழி!! இந்தஞானந்தந்த குருமணிவாழி!!!

சாந்தி! ஓம் சாந்தி!! சாந்தி!!!

ஓம் ஸ்ரீ வித்தகத்தேவா போற்றி.

நன்றி — வணக்கம்.

"தமிழ்மணி"
தெல்லியூர் செ. நடராசா
கௌரவ பதிப்பாசிரியர்

சைவசமய விவகாரக்குழு,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

## போற்றி வாழ்க

வையத்துள் தெய்வமாக நீங்கள் வாழ விரும்பினால்
வழிவழியாக வந்தவாளுமை ஆணைக்கடி பணிந்து
தாயே கோயிலாக தந்தையே மந்திரமாக
முந்தையோர் உரைத்த மூதுரை கைக்கொண்டு
தாய்தந்தை முதல்வன் குருவே தெய்வம்
தாமாக வழிகாட்டி வைத்தவர் அடிச்சுவட்டில்
ஏகசிந்தை ஏகசெயல் ஏந்தலேகனை நாடி
எழிலுற வாழ்ந்தால் எங்குமெலாம் நிறையும்
அன்பொடு கடனாற்றி பண்பொடு வாழ்ந்தால்
அகிலமும் உன்வசமாகு மந்நெறிப்படி வாழ்க.

—தெ. செ. ந.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதி புடவையகம்

முருகன் குமரன் அருள் பொலிக

சகல மங்கள கருமங்களுக்கும்

முகூர்த்த வைபவங்களுக்கும் தேவையான

**பட்டுவேட்டி சால்வைகள்**

**கூறைச் சேலைகள் – பட்டுப்புடவைகள்**

உங்கள் தெரிவுக்கு

விருப்பப்படி தேர்ந்தெடுக்க

எல்லாம் இருக்கின்றன.

# சோதி புடவையகம்

14, சிறப்பு அங்காடி,

**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் சைவம்

இன்றைய வாழ்வுக்கு மக்களுக்குத் தேவையானவற்றை முன்னோர் அடிச்சுவட்டில் நின்று ஆய்ந்து தருவதே ''குமரன் மலர்'' ஆற்றும் முக்கிய தொண்டாகும். வாழ்வு வழியில் சைவ சமயம் — ஆன்மீகம் எவ்வளவுக்கு துணை நிற்குமென்பதை அறிஞர் பெருமக்கள் தரும் ஆக்கங்களை சமர்ப்பித்து உதவுவதும் ஒருகடனாகின்றது. இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்கள், திருமுறைகள், ஆன்மீகந் தொடர்பான நூல்கள் யாவற்றிலும் அடங்கியுள்ள கருத்துக்களை எடுத்து இலகுதமிழில் அழகாக எழுதி மக்கள் முன் சமர்ப்பிப்போம். அதனால் எங்கள் இளஞ்சமுதாயத்தை மரபுவழி தவறாது வழிநடத்திச் செல்ல முடியும் என்பதே எமது உள்ளார்ந்த நோக்காகும். பக்திமார்க்கம் மட்டுமே இன்றைய சமுதாயத்தைத் தூய்மைப்படுத்தி வழிநடத்தும். இன்று கடவுள் நம்பிக்கை பெருமளவில் குன்றிவருகின்றது. இதற்காகக் கலங்கிக்கொண்டிருக்காது நடைமுறையில் மக்களுக்கு கடவுள் மீது நம்பிக்கையை ஊட்டி, ஒழுக்க நெறிகளுக்கு மதிப்புக் கொடுக்க வழிகாட்டி, சம்பிரதாயமாகவந்துள்ள பழைய பழக்க வழக்கங்களை புறக்கணியாது வாழ இளஞ்சந்ததியினருக்கு நல்வழிகாட்டல் அவசியமாகும். மக்களுக்கு வழிகாட்டி விமோசனம் தரவல்லது சமயமும் அதன் கோட்பாடுகளும்தான் - மக்கள்தம் சொந்தவாழ்விலும் பொதுவாழ்விலும் தூய்மையைக் காப்பாற்றி நடக்க வேண்டும். தூய்மையான வழியைப் பின்பற்றி நடப்பதால் தன்னம்பிக்கை, மனத்தெளிவு, மனஅமைதி, வாழ்வில் கருத்தான நோக்கு ஆகியன நிச்சயமாக அமையும். பெரியவர்கள் இந்த நல்வழியைப் பின்பற்றி நடக்க, சிறியவர்களும் குழந்தைகளும் அவர்களைத் தொடர்ந்து தூய்மையைக் கடைப்பிடித்து வாழ்வர் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய இளஞ்சமுதாயத்தினது தேவைகளை உணர்ந்து — மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற முன்னையோரின் அடிச்சுவட்டில் தெளிந்தவற்றை தேர்ந்து மலரில் தருவதே கருத்தாகும்.

நல்வழியில் செல்வதற்கு ''நான்'' என்னும் அகப்பற்றினை நீக்கி பொது சமுதாயப் பற்றினை மக்கள் மனத்தில் பதிக்க வேண்டும். ''நான்'' என்பது எப்பொழுது நீங்குகின்றதோ அன்றே மெய்ஞ்ஞானத்தின் படியில் ஏற ஆரம்பிக்கின்றோம் என்பதனை மறக்கக்கூடாது. நான் என்றால் என்ன? யார்? என்பதை முதலில் ஆராய வேண்டும். இந்தத் தேகம் நான் அல்ல என்பதை உணர்ந்து தெளிந்தால் தேகத்துக்கும் எமக்கும் தொடர்பேயில்லை என்பது புரியும். பற்றற்ற பரம்பொருளை வழிபடுவதன் மூலம் நான் என்னும் அகங்காரமும் எனது என்ற மமகாரமும் நீங்கும். தனக்குவமையில்லான் தாள் சேர்ந்தார்க்கே இவைகள் நீங்கும். அவன்தாள் சேர்ந்து விட்டால் பற்றற்ற வீடுபேறு கிடைக்கும்.

இந்தப் பற்றுக்களைத் தூண்டுவதற்குக் காலாக இருப்பவைகள் ஒருவகையில் பகைமையே காரணமாகும். பகைமையிலும் கொடிய பகைமைகள் - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறாலும் ஏற்படுவனவேயாம். இந்த ஆறும் எங்களுக்குள்ள உட்பகைவர்கள். அளவுக்கு மீறிய ஆசை காரணமாக ஏற்படுவது முடிவில் அழிவுதான். எந்தப் பொருளிலும் ஆசை வைக்கக்கூடாது. அதற்குப் பதிலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொருளில் – சம்பந்தப்பட்ட ஆட்களில் அன்பை வைப்பது உத்தமம். அன்பு நெறியானது எங்களை வாழவைக்கும். இறைவன்கூட அன்புக்குக் கட்டுப்பட்டவன். இறைவனே அன்புதான். ஒருவருக்கு ஏற்படும் பெருமையை – ஒருவர் பாராட்டப்படுவதை – வாழ்த்தப்படுவதை – ஒருவர் சிறப்பாக வாழ்தலை கண்டு குரோதம் கொள்வது – பொறாமைப்படுவது – ஆத்திரப்படுவது மிகத் தவறாகும். இன்னொருவருக்கு வரும் பெருமையை நாமும் மதித்து பாராட்ட வேண்டுமேயன்றி கோபப்பட்டு – பொறாமை வயப்பட்டு எதிர்க்கக் கூடாது. அப்படி எதிர்ப்பது – பொறாமைப்படுவது நமது அழிவுக்கு நாமே காலாக அமைகின்றோம். ஒருவனுடைய நற்குணங்களையெல்லாம் அழித்தொழிக்கும் வல்லமை லோபக் குணத்துக்கு உண்டு. தீயகுணங்கள் பல இருந்தாலும் ஒருவன் அள்ளி வழங்கும் வள்ளன்மை இருப்பின் அத்திய குணங்கள் மறைந்து உலகம் அவனை மதித்து துதிக்கச் செய்யும்.

''உளப்பரும் பிணிப்புறா உலோபம் ஒன்றுமே
அளப்பரும் குணங்களை அழிக்குமாறு போல்
கிளப்பரும் கொடுமைய அரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப்பு அதனை மாற்றினாள்''

என்று இராமாயணத்தில் கம்பர் கூறுகின்றார். இங்கு இராமருக்கு தாடகை செய்த செயல்களை விசுவாமித்திரர் விளக்குவதாக இது அமைந்துள்ளது. ஒருவனுடைய நற்குணங்கள் எல்லாவற்றையும் அழிக்கும் வல்லமை லோபக் குணத்துக்கு உண்டு. அது தீக்குணமாகும். மோகத்தால் அழிந்தவர்கள் அநேகர் உளர். காமத்தால் இராவணன் அழிந்ததை இராமாயணம் விபரிக்கின்றது. ஒருவன் தன்னைவிட ஆள்வேறில்லை என ஆணவ மதங்கொண்டலைந்தால் அது அவனுக்கு அழிவையே தரும். பொருள் இருக்கென்ற மதம் — பதவி இருக்கென்ற மதம் — கல்வி அதிகம் கற்றுவிட்டோமென்ற மதம், இப்படியாக மதம் பிடித்தவர்கள் நிச்சயமாக அழிவுதான் காண்பார்கள். ஒருவன் தன்னிலும் மற்றொருவன் சகல விதத்திலும் உயர்வுபெற்று — மதிப்புப்பெற்று வாழ்கிறான் என்பது மாற்சரியத்தைக் கொடுத்தால் அதுவும் அழிவுக்கு வழிவகுக்கும். இந்த ஆறு பகைகளையும் நாம் முதலில் வெல்ல வேண்டும். இவை அகப்பகையாக இருப்பதால் நாம் அவற்றை அடக்கி நீக்கி, வென்று வாழவேண்டும்.

இவ்வுலகில் நாம் தாய், தந்தை, குரு, தெய்வம் பேணி — போற்றிவாழ வேண்டும். ''அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்'' என்னும் முன்னோர்வாக்கு சிந்தித்து நடந்தால் உயர்வு தரும். பிதாமாதாக்களைவிட வேறோர்தெய்வம் மக்களுக்கு இல்லை. தாயே கோயில் — தந்தையே மந்திரம் என்று அவர்களைப் போற்றிவாழ வேண்டும். தாய் தந்தையரைப்போல சிறந்த பொருள் உண்டாயதுமில்லை, உண்டாகப் போவதுமில்லை. ''தந்தை மகற்கு ஆற்றுமுதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்''. அதற்கு மகன்ஆற்றும் நன்றி — ''மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல்'' எனும் சொல்லைப் பெற்றுக் கொடுப்பதுதான். ''தன்மகனைச் சான்றோன்'' எனக் கேட்குந் தாயானவள் அவனைப் பெறும் பொழுதுதான் அனுபவித்ததுன்பங்களையே மறந்துவிட்டு இன்பமடைகிறாள். நாம் ஆறுதலாக, அமைதியாக, சிந்தித்து கற்கவேண்டும். அதுவும் 'கசடறக்கற்க'' என்று வள்ளுவர் கூறியுள்ளதை சிந்தித்துக் கற்கவேண்டும். அதன்படி ஒழுகவேண்டும்.

பெற்றோர் செய்த நன்றியை மறக்காது வாழ்வது பிள்ளைகள் கடனாகும். வயோதிப காலத்தில் அவர்கள் மனம் வருந்தி வாழ இடமளிக்காதிருப்பது மகனது கடன். எச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமத்தை எவர் ஆரம்பித்தாலும் பெற்றோரை வழிபட்டு அவர் ஆசியுடன் ஆரம்பிப்பதே சிறப்பும் நன்மையும் தரும். பெற்றோருக்குச் செய்யும் பணிவிடை நிச்சயமாக பலன் தந்துதான் தீரும். பெற்றோரைப் போற்றி வாழ்தல் வேண்டும். அப்படி வாழ்பவர் நிச்சயமாக பரம்பொருளின் அன்புக்கு - அருளுக்குப் பாத்திரனாவான்.

எங்கள் மனவிருளைப் போக்குவது அறிவு. அந்த அறிவைத் தருபவர் குரு. பெற்றோர் தருவது உணவு; உணவு உடம்பை. வளர்க்கும். ஆன்மாவை வளர்ப்பது குருதரும் ஞானம். இந்த ஞானம் எங்கள் பிறவிகள் தோறும் தொடர்வதாகும். பரம்பொருளை வழிபட்டு நலம் பெற்றுவாழ அறிவைத்தரும் குருவைப் போற்றி வாழ வேண்டும். எவருக்கும் தீங்கை விழைத்து அறிவைத் தேடத் தேவையில்லை. அறிவுச்செல்வம் நாம் குருவிடமிருந்து பெறும் பெரும்பேறு. ''எழுத்தறிவித்தவன் இறைவனாகும்'' என்ற சொற்படி குருவை மனிதனாகக் கொள்ளாது தெய்வமாக கொண்டு நடக்கவேண்டும். குருவை நிந்திக்கலாகாது. குரு நிந்தை கொடிய பாவமாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதை உணர்ந்து நாம் வாழ வேண்டும்.

நாம் பிறந்த நோக்கம் சிறப்புற வாழ்வில் நாம் ஆற்றும் செயல் தர்மம். அதனை விடச் சிறந்தது வேறில்லை. தர்மவழியில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நமக்கு உயர்வைத் தரும். இரப்போருக்கு இல்லையென்னாது ஈய்ந்து வாழ வேண்டும். இரப்பவர்க்கிடுவது எங்களுக்கு எங்காயினும் சிறப்புற வருமென அருணகிரிநாதரும் ''ஈந்துவக்கும் இன்பம்'' என வள்ளுவப் பெருந்தகையும் கூறியன சிந்தனைக்குரியனவாகும். இரப்போர்க்கீந்து வாழ வேண்டும்; குறிப்பறிந்தும் வாழ வேண்டும். பாரதத்திலே ''சாண் புடவை'' கொடுத்து உதவிய திரௌபதி, அவையிலே அவள் மானத்தைக்காக்க கண்ணன் சேலையை வளரச்செய்து மலைபோல் சேலைகளை குவித்த சம்பவம் சிறப்புற சிந்தனைக்குரியதாகும். நாம் செய்யும் தர்மம் நமக்கு ஒன்றுக்குப் பத்தாக பயன்தரும். எல்லாம் சிவார்ப்பணமாக அமைதல் நன்று.

வாழ்விலே நாம் சத்தியத்தைக் கடைப் பிடித்து உண்மையாக வாழவேண்டும். தெய்வமே சத்தியத்தின் வடிவமாக இயங்குகின்றார். பொய்மை பேசாது சத்திய நெறி நின்று ஒழுக்க வாழ்வை வாழ்பவன் இறையுலகை சுயமாக அடைவான். என்றும் இறைவன் சிந்தனையுடன், அகப்புறச் சுத்தத்துடன் நாம் வாழவேண்டும். சிவவழிபாடு சிறப்புடையது. எல்லாம் சிவமயமென்று, அகம்புறம் சுத்தமாக, தீர்க்கமான உறுதியுடன், நம் முன்னோர் காட்டிய வழியில் நிறைவோடு செல்வதற்கு வழிகாட்டும் நற்சிந்தனைகளை எங்கள் ''நல்லைக்குமரன் மலர்'' உங்களுக்கு வழங்கிவர குமரன் அருள் வேண்டுகின்றோம். எங்கும் அவன் அருள் பொலிக.

நன்றி.

வைத்தியகலாநிதி இ. தெய்வேந்திரன்
தலைவர்
சைவசமய விகாரக் குழு
யாழ் மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்கநாதன் வண்ணச் சோலை

திருமணம் மற்றும் வைபவங்களுக்குத் தேவையான

**காஞ்சிபுரம் — தஞ்சூர் — மணிப்புரி**

இன்னும் பல இடங்களையும் சார்ந்த

**பட்டுச்சாறி — சேலை — வேட்டிகளுடன்**

**சேட்டிங் — சூட்டிங்**

மற்றும் இதர ஆடைகளுக்கும்

நீங்கள் நாடவேண்டியது

## ச. லிங்கநாதன் வண்ணச் சோலை

13, 14, மேஜர் சோதியா தெரு

(பெரியகடை வீதி)

**யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பிக்கை நாதன் துணை

ஆக்கம்: "தமிழரசன்"

"நம்பிக்கை யுள்ளோர்க்கும் நாடித்துதி ப்பவர்க்கும்
தும்பிக்கை நாதன் துணை" — "தெசெந"

தும்பிக்கைநாதனையே துணையென வேண்டி நித்தம் தொழுது பெரும்பேறுபெற்ற தமிழ் மூதாட்டி "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்றார். அந்த இறைவன், தெய்வத்துள் எல்லாம் தெய்வமாகத் திகழும் மகா கணபதி. தேவர்களுக்குத் தேவனானவர் எங்களுக்கெல்லாம் பிள்ளையாகி பிள்ளையார் ஆனார். எவர் எந்த எழுத்தைத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையார் சுழி போட்டுத்தான் ஆரம்பிப்பார்.

"பரிவுடனழகிய பழமொடு கடலைகள்
பயனொடுசில வகை பணியாரம்
பருகிடு பெருவயி றுடையவர் பழமொழி
எழுதிய கணபதி ...இளையோனே"

என்று அருணகிரியார் விளித்துள்ள பெருமகனார் – அன்புடன் இனிமையான பழங்கள்' கடலைகள், பயறு வகையான பணியாரங்கள் முதலியவைகளை உண்ணுகின்ற பெருவயிற்றினையுடையவரும் பழமையான மொழியாகிய மகாபாரதத்தை மேருமாமலையில் எழுதியருளியவருமான விநாயகப் பெருமானுக்குத் தம்பியே (முருகன்) என்று இப்பாடலில் எடுத்தாண்டுள்ளார். பழமை வாய்ந்த மொழியை முதன்முதல் எழுதிய முதல எழுத்தாளர் இவரேயாவர்.

அகில உலகங்களையும் தமது வயிற்றினுள் அடக்கியவர் என்னும் குறிப்பை விநாயகப் பெருமானுடைய பெருவயிறு உணர்த்துகின்றது. அன்புடன் அடியவர்கள் நிவேதிக்கின்ற நல்ல கனிகளை உண்டு அவ்வடியவருக்கு அவர் அருள் பாலிக்கின்றார். நிலக்கடலை, வேர்க்கடலை, குண்டுக்கடலை என்ற பலவகையான கடலைகளுடன் கடலையும் தேனையும் கூட உட்கொண்டு அருள்புரிவார்.

"இலகு கடலை கற் கண்டு தேனோடும்
இரதமுறு தினைப் பிண்டி பாருடன்
இனிமையி னுகருற் றெம்பிரா னொடு—கொம்பினாலே
எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று"

என்றும் அருணகிரியார் போற்றிப் பரவியுளார்.

இப்பிரபஞ்சத்துக்கு முதன்முதலாக எழுத்தை எழுதிக்காட்டி அறிவித்தவர் – உலகின் முதல் "எழுத்தர்" இறைவனென ஒளவைப்பாட்டி எடுத்தாண்ட மகா கணபதியே பழமையான மகாபாரதத்தை வியாச முனிவர் பாட உலகம் உய்யும் பொருட்டு வடமேரு கிரியிலே தமது ஞானமாகிய கோட்டினாலே விநாயகப்பெருமான் எழுதியருளினார். இதனாலேயே நாம் எழுதும் போது பிள்ளையார் சுழி போட்டு அந்த முழுமுதலுக்கு – முதல் எழுத்தாளருக்கு அஞ்சலி செய்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினங்களுக்கு அதிபதியாகி, விக்கினங்களை நீக்குதற்கும் நாயகராகி விளங்கும் விக்னேஸ்வரரை எல்லோரும் — தேவரும் மூவரும் கொண்டாடுவர். பண்டாசுரனுடன் போரிட்டபோது ஆதி பராசக்தி தேவிக்கு ஏற்பட்ட விக்கினத்தை நீக்கி அம்பாளுக்கு வெற்றியைத் தேடித்தந்தவர் விநாயகப் பெருமானே.

திரிபுர தகனத்தை இறைவன் மேற்கொண்ட காலையில் கணபதியின் திருவருளினால் தான் தாம் அதனை நிறைவேற்றியதாக சிவனார் எடுத்தாண்டுள்ளார். மாலவன் அவதாரமாகிய இராமபிரான் சீதாதேவியை மீட்க உபாசித்ததும் கணபதியைத்தான். வள்ளியம்மையைக் கைத்தலம் பற்ற முருகனுக்கு கைகொடுத்தவரும் கணபதியே தான். ஆனையாக வந்து தம்பிக்கு உதவினார்.

சமயசமரசத்துக்கும் இவரே தெய்வம் என்று—கணேசராகச் சைவர்கள் வழிபட— இவரை ''தும்பிக்கை ஆழ்வார்'' என்று வைணவர்கள் வழிபடுகின்றார்கள். வழிபாடுகளில் சமய ஒழுங்கமைத்துத்தந்து சண்மதப் பிரிவுகளை வகுத்த ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் ''காணாபத்தியம்'' என்று முதற்பிரிவை ஏற்படுத்தி பிள்ளையாருக்கு முதன்மையான உரிமையைத் தந்துள்ளார்கள்.

பிரணவத்தின் சாரமாய ஓம் என்னும் எழுத்தே மகா கணபதியின் தோற்றமாக அமைந்துள்ளதைப் பார்க்கலாம். அவருடைய முகம் — தும்பிக்கை அமைப்பு. அவரே பிரணவம் — அவரே பிரணவ சாரம் — அவரே பூரணம் — அவரே முதல்வர் — அவரே முழுமையானவர் — அவரே ஆதி என்பதை உணர்த்துகின்றது. எழுத்தறிவித்த இறைவனே ஓம் என்னும் பிரணவமாக இருப்பதால் உலகம் சிறக்க வாழ்கின்றது. எங்கள் பிறவி வினைதீர்க்கும் பிள்ளையாகவும் அவரே விளங்குகின்றார். வெல்லத்தில் பிள்ளையாரைத்தவிர வேறு தெய்வத்தை செய்வதில்லை. பிள்ளையாரைத் தொட்டுக் கொண்டால் எல்லாம் — எங்கும் — எப்பொழுதும் இனிக்கும் என்று, எப்பொழுது அவரைத் தொடுகின்றோமோ அப்போது முதல் எங்கள் வாழ்வே இனிக்கின்றது — அவ்வாறே அமைகின்றது. நம்பிக்கையோடு நாம் வாழ்ந்தால் தும்பிக்கை நாதன் இனிமையை வற்றாதளித்தருள்வான்.

அபிராமி

''அபிராமி அன்னை தோலிற்குத் தலைவியாவாள். அவள் பிரீதி கிடைத்தால் அமைதி, ஆறுதல், தோற்புரை நோய் இன்மையுண்டாம். வெட்டிவேர் விசிறியினால் விசிறி, விபூதியை அணிந்து, பிட்டும் சர்க்கரைப் பானகமும் நிவேதனம் செய்து, ஏழைகட்கு விநியோகித்தால் அன்னை சாந்தம் அடைவாள்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதின முதல்வர் வழங்கும்

# அன்பாசிச் செய்தி

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே!

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரப் பகுதி அன்பர்கள் வருடம் தோறும் நல்லூர் கந்தப் பெருமானின் உற்சவ காலத்தில் நல்லைக் குமரன் மலரை வெளியிட்டு வருவதைப் பாராட்டுகிறோம். உள்ளம் கசிந்துருகி முருகன் புகழ் பாடுவோர்க்கு இச் சஞ்சிகை துணை நிற்கும். கலியுகவரதனுக்கு நாமாற்றும் கைங்கரியங்களெல்லாம் மேன்மையானவை. திரிகரண சுத்தியோடு பெருமானின் திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டால் நாம் வேண்டுவனவெல்லாம் நிறைவுறும். குற்றம் பொறுக்காத தெய்வமானதினால் அவரை வழிபடும் பொழுது அகச்சுத்தம் புறச்சுத்தம் மிக மிக முக்கியம்.

பெரு முயற்சிகள் எடுத்து இச் சஞ்சிகையை அழகான முறையில் உருவாக்கிய அன்பர்களை வாழ்த்துகின்றோம். எல்லோருக்கும் முருகன் திருவருளை உளமார வேண்டி எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

## உடம்பும் ஆலயமும்

ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்கள் நமது உடம்பைப் போலவே விளங்குகின்றன. ஆலயத்தில் கொடிமரம் அல்லது துவஜஸ்தம்பம் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. முதுகுத்தண்டில் 32 (முப்பத்திரண்டு) எலும்புவிழையங்கள் இருக்கின்றன. அது போலவே கொடிமரமும் அமைக்கப்பட்டுள்ளது. முதுகுத்தண்டிற்குள் தான் மூலாதாரம், ஸ்வாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்களும் இடைக்கலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளும் அமைந்துள்ளன. கொடிமரத்திலுள்ள கொடிக்கயிறு இதனைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கம் பட்டு அகம்

முகூர்த்த பட்டுப் புடவைகளுக்கும்

அதோடு இணைந்த

ரவிக்கைத் துணிகளுக்கும்

பேரும் புகழும் பெற்ற தாபனம்

லிங்கம் பட்டு அகம்

18, 21, சிறப்பு அங்காடி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
— துர்க்காதேவி தேவஸ்தானம் —

நல்லைக் கந்தனின் பெருந் திருவிழாக்கள் நடைபெறும் காலம் முருகன் அடியார்களுக்குப் பேரானந்தம் ஊட்டும் இன்பப் பொழுதாகும். கோலமயில் மீது எம்பெருமான் உலா வரும் அற்புதக் காட்சி எமது நெஞ்சை விட்டு என்றும் அகலாது. யாழ்ப்பாண நகரிலே நல்லை இராசதானியிலே கோயில் கொண்டு எழுந்தருளி ஆலயத்தின் வீதியிலும் அன்பர்களின் உள்ளத்திலும் உலாவரும் பெருமான் இவன். ஆவணி மாதத்திலே குறிப்பிட்ட 25 தினங்களும் எமது இதயக் குகையிலே அவனுடைய அருளொளி வீசி ஞான உணர்வை ஏற்படுத்தி விடும்.

அடியவர்கள் மாத்திரமன்றி கொடியவர்களும் இப்பெருமானின் பேரழகில் மயங்கி நின்றார்களென்றால் சிற்றறிவினர்களாகிய நாம் இவை பற்றி எப்படி வர்ணிப்போம். இந்த இடத்தில் சூரபன்மன் அடைந்த வியப்பைக் காண்போம். தான் கண்ட திருவுருவத்தின திருவடி முதல் திருமுடி வரை தன் கண்களைச் செலுத்துகின்றான். திருக்கரங்களின் முடிவையோ திருமேனியின் எல்லையையோ அவனால் காண முடியவில்லை. அழகுக்கெல்லாம் தலைமையானவன் மன்மதன் என்று சொல்கிறார்களே அந்த மன்மதன் எம் பெருமானுக்கு முன்னாலே நிற்க முடியுமா? திருவுருவம் முழுவதையும் ஒதுக்கிப் பெருமானின் திருவடி ஒன்றையே எடுத்துக் கொண்டாலும் அதற்கு ஆயிரம் கோடி மன்மதர்களும் எதிர் நிற்க முடியாதே என்ற நிலையில் சூரபன்மனின் அனுபவம் வெளிக்கொணரப்படுகிறது. அசுரனையே கவர்ந்து இழுத்த இப்பேரழகு அடியவர்களை எவ்வாறு ஈர்த்து ஈர்த்து என்புருகச் செய்யும் என்பதை நல்லைக் கந்தனின் திரு உலாக்காட்சி தெற்றென உணர்த்தி நிற்கும். கோல மாமஞ்ஞை தன்னில் குலவிய குமரனைக் கண்ணுற்ற சூரபன்மனின் மனமாற்றத்தைப் பின்வரும் பாடல் உணர்த்தி நிற்கிறது.

''ஆயிரகோடி காமர்
அழகெலாந் திரண்டொன் றாகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணந் தன்னில்
தூயஇவ் வெழிலுக் காற்றா
தென்றிடின் இனைய தொல்வோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வகுக்க வல்லார்?''

என்பது கந்தபுராணம்

இப்பேரழகிலே மயங்கி நின்ற சூரபன்மன் நான் எனது என்ற அகங்கார மமகாரங்களை இழந்து நின்றமையையும் பின்பு மறக்கருணை காட்டி அவனுக்குப் போரிலே ஊக்குவிப்பை அளித்து வேலினால் சங்காரம் செய்து சேவலும் மயிலுமாக ஏற்றுக்கொண்டமையையும் கந்தபுராணக் கதை நமக்குக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு தோறும் நல்லைக் கந்தனின் திருவருளை மாந்துவதற்கு இத்தகைய அருள் நூல்களை ஆதாரமாகக் கொண்டு வெளிவருவது தான் நல்லைக்குமரன் மலர். யாழ். மாநகரசபை இந்துசமய விவகாரக் குழுவினர் மிகச் சிறப்பான முறையில் இவ்வெளியீட்டைச் செய்து வருகிறார்கள். ஞானமணம் வீசும் இம்மலரை நாம் அனைவரும் மனமார வரவேற்கின்றோம். இந்தப் புண்ணியப் பணி நல்லபடி தொடரவேண்டும் என்று நல்லைக் கந்தனை வழுத்துகின்றோம். உண்மையும் உறுதியும் எம் உள்ளத்தில் நிலைபெற வேண்டும் என்றால் இத்தகைய பணிகளைச் சைவசமய விவகாரக் குழுக்கள் மேலும் மேலும் மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றோம்.

## பாதுகை வழிபாடு பதியைத் தரும்

இறைவழிபாட்டுக்கு பல காவியங்களையும் வேதாந்தக் கிரந்தங்களையும் தந்த ஸ்ரீ வேதாந்த தேசிகன் சிறப்புமிக்கதான ''பாதுகாஸகஸ்ரம்'' என்னும் ஸ்தோத்திரத்தையும் அருளியுள்ளார். அதன் கண்ணுள்ள ஸ்தோத்திரத்திலிருந்து ஒரு சுலோகம் இங்கே தரப்படுகின்றது. இச்சுலோகமானது மங்கையர் வாழ்வுக்கு பெருநலந்தரும் சிறப்புடையதாகும். கிராம காவியத்தில் தம் தமையனை அயோத்திக்கு அழைக்கும் முயற்சியில் தோல்வியுற்ற வேளையில் அண்ணனின் பாதுகைகளைப் பெற்றுச் சென்று அவற்றை ஸ்ரீ இராமனாகவே பாவித்து நந்திக்கிராமத்தில் வைத்து வழிபாடாற்றினான். பாதுகை வழிபாடு வேட்டியவற்றை நல்கும் ஆற்றலுள்ளது. தாமரை மலருக்கு ஒப்பான இறைவனது பாதங்கள் வாழ்வில் விடிவைத் தரும்.

''சுபப்ரணாதா பவதீச்ருத்நாம் கண்டேஷு வைகுண்ட
பதீம் வராணாம் /
பத்கானி தூநாம் மணிபாதாரகோடி மாங்கல்யஸீத்ரம்
மணிரச்மி ஜாலை //

இச்சுலோகத்தை 'உதயத்தில் விழித்து, புதுப்புனலில் நீராடி பரமன் திருமுன் பாராயணம் செய்யும் கன்னியர் தம் மனதுக்கேற்ற மணாளனைத் துணைவராகப்பெற்று நல்வாழ்வு வாழ்வர். இதனைச் செய்பவர் மூன்று தரம், ஒன்பது தரம், இருபத்தொரு தரம் ஒரு ஒழுங்கைப் பின்பற்றி கிரமமாகச் செய்து வரல் வேண்டும். இறுதியில் ''ஓம் ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்பர்யாம் நம:'' என்று வழிபடுக.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவையாதீனம்

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

# ஆசியுரை

ஈழத்தில் சகல மக்களாலும் வழிபாடு செய்யப்படும் முருகப்பெருமான், அமிழ் தினும் இனிய தமிழ் மொழியை அகத்திய முனிவருக்கு அறிவுறுத்திய தமிழ்க்கடவுள். "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்பான்" என அருணகிரிநாதரால் பாடப் பெற்றவர். நால்வேத முதல் மந்திரமாகிய 'ஓம்' என்ற பிரணவப்பொருளின் உண்மை களை சிவபெருமானுக்கும் உபதேசித்தருளிய சிவகுரு.

கங்கையின் மைந்தன் காங்கேயன். அதேபோன்று பாரதத்தில் பீஷ்மரும் கங்கை யின் மைந்தனாகவே பிறந்ததனால் "காங்கேயன்" எனப்பட்டார். பாரதயுத்தம் ஆரம்ப மானது. துரியோதனனது முழுச் சேனைக்கும் பிதாமகர் பீஷ்மரையே சேனாதிபதியாக நியமித்த துரியோதனன் பீஷ்மரிடம் சென்று,

"பர்வதானாம் யதாமேருஃ ஸுபர்ணஃ பக்ஷிணாம் யதா|
குமாரசிவ தேவாநாம் வஸூனாமிவ ஹவ்யவாட்||
ப்ரயாதுநோ பவானக்னே தேவானாமிக பாவகி|
வயம் த்வா மனுயாஸ்யாமஃ ஸௌரபேயாஃ இவரிஷபம்||

"பிதாமஹா! மலைகளில் மேருபோலவும், பக்ஷிகளில் கருடன் போலவும், தேவுக் களில் திருமுருகன் போலவும் நீர் விளங்குகின்றீர். எவ்வாறு வேதர்கட்கு தேவசேனா பதியாக முருகப்பெருமான் சென்றாரோ, அதேபோன்று யுத்தகளத்தில் தாங்களே எங் கள் முன் சேனாதிபதியாகச் செல்லுங்கள்" என்றான் பீஷ்மர் சம்மதம் கொடுத்து.

"நமஸ்கிருத்ய குமாராய ஸேனான்யே சக்தி பாணயே|
அஹம் ஸேநாபதிஸ்தேத்ய பவிஷ்யாமி நஸம்சயஃ||"

"குமாரனும் சேனாதிபதியும் சக்திபாணியுமான முருகனுக்கு நமஸ்காரஞ் செய்து விட்டு உனக்கு சேனாதிபதியாகிறேன்" 'என்றார்' பீஷ்மர் ஸ்கந்த பக்தியினால் பாரதப் போரில் பத்து தினங்கள் சளைக்காது போரிட்டார்.

மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் வால் மீகியும், கம்பரும், வியாசரும் கந்தப்பெருமானின் சக்திதத்துவத்தை எடுத்துக்காட்டி உசார்படுத்திய சம்பவங்கள் ஏராளமுண்டு.

சகரவ்யூகம் அமைந்ததறிந்து தர்மர் தடுமாற, கிருஷ்ணர் அவரையணுகி

"கந்தனிற் சிறந்த நின்கனிட்டன் நாளையே
மைந்துரம் பொருது அவன் மகுடம் கொள்ளுமே" என்று

அர்ச்சுனன் கந்தன் போன்று வீரனாவான், வெற்றி கொள்வான்" — என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான் அவதாரஞ்செய்ததும் விஸ்வாமித்திரமுனிவர் தான் முதலாவதாக அவரிடம் சரணடைந்தார் — துதித்தார் — மங்களங்களைச் செய்தார். ஜாதகர்மா முதலான வைதீகச் சடங்குகளையும் செய்து வைத்தார். விஸ்வாமித்திரர் தான் முருகனுக்குச் சக்தி அஸ்திரத்தையும், சேவலைக் கொடியாகவும் அமைத்துக் கொடுத்தார். இதனால் விஸ்வாமித்ரரிடம் முருகனுக்கு பேரன்பு மிகுந்தது.

ஸ்கந்தருக்கு வஸ்திரம் சிவப்பு. அவரது சக்திவேல் அனைத்துப் பூதங்களுடைய சக்திப்பிரபாபவம் அனைத்தும் உள்ளடங்கியது. யுத்தம் நேரும்போது ஸ்கந்தனை வழிபட்டால் வழிபட்டவரது சரீரத்திலேயே ஸ்கந்தகவசம் இணைந்துவிடுகிறது. இதனாற்தான் இராமாயண பாரத போர்களில் வெற்றியீட்ட அவ்வவ் வீரர்கட்கு அடிக்கடி ஸ்கந்தனை வால்மீகியும், கம்பரும், வியாசரும் ஞாபகப்படுத்தியிருந்தனர்.

சூரசம்ஹாரத்தில் சக்திவேலின் பெருமையைக் கண்ட சூரன்

"சூர்புயல் அன்னதோர் சூரன் விடுக்கும்
மாற்படு போதன் வயப்படை சென்று
பாற்படு மெல்லை பரஞ்சுடர் செங்கை
வேற்படை சென்று விழுங்கிய தன்றே!
விட்டிடு மாயவன் வெம்படை ஏகி
மட்டறு கண்ணர் தம் மாலுரு ஈன்று
கிட்டிய காலை கிளர்ந்திடும் ஒள்வேல்
அட்டது தன்னையும் ஆர்ந்தது மன்றே!
செயம்புனை செம்மல் தனாதருள் நீரால்
அயன்படை தன்னுடன் அம்புவி கேள்வன்
வியன்படை தன்னையும் மேற்படை யுண்ண
கயம்படு சூரதுகண்டு விம்முற்றான்".

இவ்வாறு நான்முகன், நாராயணன் அஸ்திரங்களையும் மிஞ்சி நிற்கின்றது வேற்படை, சிவனின் திரிசூலமும், விஷ்ணுவின் சக்கரமும் ஒன்றுசேர்ந்து, மும்மூர்த்திகளின் சமஷ்டி உருவமான சக்திவேற் பெருமான் கந்தவேட்பெருமான் நல்லூரிலிருந்து அருள்பாலிப்பதை இந்த ஈழம்வாழ் சைவத்தமிழர்கள் நன்குணர்கின்றார்கள். நல்லூர் கந்தனின் பெருமைக்கு மெருகூட்டும் யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு, அயராது அல்லும் பகலும் கந்தப் பெருமானைச் சிந்தித்து, "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெலாம்" என பிரார்த்திக்கின்றது. இதுவும் ஓர் தவமேயாம். யாழ் மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக்குழு நன்கு செயற்பட்டு நீடூழி வாழ்ந்து நல்லறம் செய்யும் வாய்ப்பினைக் கொள்ள கலியுகவரதன் கந்தசுவாமியாரது அனுக்கிரஹம் சேரல்வேண்டுமென ஆசீர்வதித்தும் பிரார்த்திக்கின்றோம்.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்
மாவையாதீன கர்த்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்
பேராசிரியர் க. குணரத்தினம் வழங்கும்

# ஆசிச்செய்தி

யாழ். மாநகராட்சி மன்றம் சைவசமய விவகாரக் குழுவொன்றை அமைத்து அதன் மூலம் சைவச் சிறார்களிடையே சமய உணர்வை வளர்த்து அவர்களை ஆன்மீகத்துறையிலும் ஆர்வம் காட்டச் செய்யும் முயற்சிகள் பலவற்றை எடுத்துவருவதை நாம் எல்லோரும் அறிவோம். இந்த முயற்சிகளில் ஒன்றே மன்றத்தினரால் நல்லைப் பெருமான் உற்சவகாலத்தில் வெளியிடப்பட்டுவரும் 'நல்லைக்குமரன் மலர்' என்ற வருடாந்த மலர். முன்னைய ஆண்டுகள் போலவே இவ்வாண்டும் இந்த மலர் சைவசமயப் பெரியோர்களதும் அறிஞர்களதும் சமய சார்பான கட்டுரைகளைத் தாங்கி சிறப்பாக வெளிவந்துள்ளது. இது மக்களுக்கு, குறிப்பாக சைவச் சிறார்களுக்கு, மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

எமது கலாசாரத்தில் ஆலயங்கள் முக்கிய இடத்தை வகிப்பவை. அவை மக்களுக்கு மன அமைதியையும் ஆறுதலையும் கொடுக்கும் நிலையங்களாகவும் அவர்களின் ஆன்மீக வாழ்வை வளம்படுத்துபவையாகவும் இருக்கின்றன. இன்னல் சூழ்ந்த இக்காலகட்டத்திலும் ஆலய வழிபாடுகளும் திருப்பணிகளும் திருவிழாக்களும் குறைவின்றி நடைபெற்று வருவது எமது கலாசாரத்தின் ஸ்திரத் - தன்மையைக் காட்டுவதாய் உள்ளது. யாழ்குடாநாட்டு வாசிகளைப் பொறுத்தமட்டில் இத்திருவிழாக்கள் எல்லாவற்றிலும் சிறப்பானதும் முதன்மையானதும் இருபத்தைந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் நல்லூர்க்கந்தன் திருவிழாவேயெனலாம். இத்திருவிழாக் காலத்தின் உணர்வுகளையும் எண்ணங்களையும் பிரதிபலிப்பதாய் 'நல்லைக்குமரன் மலர்' அமைகின்றது.

யாழ்நகர வாசிகளின் சுகவாழ்விலும் சுகாதார வசதிகளிலும் அக்கறை செலுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாமல் அவர்களினதும் யாழ்குடாநாடு முழுவதும் வாழும் மக்களதும் ஆன்மீக வளர்ச்சியிலும் ஈடுபாடு கொண்டு செயற்படும் யாழ் மாநகராட்சி மன்றத்தினருக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் க. குணரத்தினம்
துணைவேந்தர்

### தேவிதான் உலகமெலாம்

''ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகுஞ் சமயக்
களியார் பரமுங் கருத்துறை யந்தத்
தெளிவாஞ் சிவானந்த நட்டத்தின் சித்தியே''

— திருமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமா வண்ணச் சோலை

★ குமரன் அருள்பொலிக ★

இன்றைய நாகரிகத்திற்கேற்ற

❊ அழகு சாதனப் பொருள்கள்

❊ அன்பளிப்புப் பொருள்கள்

❊ பாடசாலை உபகரணங்கள்

❊ தங்கமுலாம் பூசப்பட்ட நகைகள்

❊ பெண்களுக்குரிய கைப்பைகள்

❊ சூட்கேஸ் மற்றும்

அலங்காரப் பொருள்கள்

உயர்ந்தரகம் — மலிந்த விலை

தெரிவுக்கு நிறைய பொருள்கள்

வருக

# உமா வண்ணச் சோலை

30, நவீனசந்தை (சிறப்பு அங்காடி உட்புறம்)

**யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிப் புலவரின்

# ஆசிச் செய்தி

நல்லூர்க் கந்தன் ஆலய பிரகாரத்தின் உள்ளும், புறமும் தெய்வீக அலை மோதுகிறது. ஆலயத்தின் தரையிலோ நிலத்திலோ பாதம் பதிந்தாலே பறந்துவிடும். கவலையெல்லாம், நெஞ்சக் கனகல்லும் நெகிழ்கிறது, உருகுகிறது. ''முருகன், குமரன், குகன்'' என்று எம்மை அறியாமலே எம் நா அசைகிறது. கண்கள் பனிக்கின்றன. அங்கு தவழும் தெய்வீக அலையில் திளைக்கின்றோம். தெவிட்டாத பேரின்பம் கூட்டுகிறது. அப்படியே அருள் பிரவாகத்தில் அமிழ்ந்து விடுகிறோம். வைகறைப் பொழுதில் நல்லூர்க்கந்தன் ஆலயப்புறவீதியில் அடியார்கள் கூட்டிப் பெருக்கப்பெற்று தண்ணீர் செழிப்பாக விசிறப் பெற்ற நிலத்திலே அங்கப் பிரதட்சணம் செய்யக்கூடியதாக இருக்கின்றது. முன்னைய தினத்தில் வெற்றி வேலாயுதப் பெருமானின் வீதி பவனி தரிசித்து அவன் அருள் வேண்ட அடியார்களால் இறையப்பெற்ற கழிவுப்பொருட்கள், ஒரு சில மணித்தியாலங்களுக்குள் இரவோடிரவாக அகற்றப்பெற்று தண்ணீரும் விசிறிப் புனிதத்திற்குத் தூய்மை சேர்த்தவர்கள் யாழ். மாநகராட்சி மன்றத்தினர் என்பது யாவரும் அறிவர்.

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினரும் வருடாந்த மகோற்சவத்தின்போது ஸ்ரீமுக வருடத்தில் ஆரம்பித்து இருமுறை நல்லைக்குமரன் மலரினை மலரவைத்துள்ளார்கள். யுவ வருட மகோற்சவத்தின் போதும் மூன்றாவது முறையாக நல்லைக் குமரன் மலரை மலர்த்தும் பணியில் முனைப்பாக ஈடுபட்டுள்ளார்கள் என்பதை அறிந்தோம்; மகிழ்ந்தோம். முன்னைய இருமலர்கள் போலவே இவ்வருடத்திலும் நல்லைக் குமரன் மலர் பொலிவுடனும் நறுமணத்துடனும் மலர்ந்திட வேண்டும் என நல்லூர்க் கந்தன் பாதம் இறைஞ்சி, எமது ஆசியினையும் தெரிவிக்கிறோம்.

''உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே''

க. கனகராசா ஜே. பி.

காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

''தில்லையம்பலத்தே திருக்கூத்தாடும் — ஏர்மேவு
பேரொளியாஞ் சிதம்பரத்தை
எந் நாளும் இதயம் சேர்ப்பாம்.''

—புலியூர்ப்புராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"றஞ்சனா வண்ண ஆடையகம்"

பெரியவர்கள் — சிறியவர்கள்

ஆண்கள் — பெண்கள்

எல்லோரும்

திருப்திப்பட விரும்பிய வண்ணம்

வண்ண வண்ண ஆடைகளுக்கு

வருக

உங்கள் சேவையே எங்கள் திருப்தி

முருகன் — குமரன் அருள்பொலிக

"றஞ்சனா வண்ண ஆடையகம்"

17, 18, 18 ஏ— சிறப்பு அங்காடி

யாழ்ப்பாணம்.

லலிதா

பட்டுச்சோலை

குமரன் அருள் பொலிக.

நிதான விலையில் — சிறந்தரக

மங்களகர வைபவங்களுக்கேற்ற

சேலைவகைகள் — சூட்டிங் வகைகள் யாவுக்ம்கு

யாழ் நகரில் எல்லோராலும் மதிக்கப்படும்

சிறப்புத் தாபனம்

↓

**லலிதா பட்டுச்சோலை**

5, 6, சிறப்பு அங்காடி

**யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணையாளரின் வாழ்த்துரை

நல்லைக்குமரன் மலர் தொடர்ந்து 3 வது ஆண்டில் வெளிவருவது குறித்து புளகாங்கிதமடைகின்றேன். காலங்காலமாக ஈழத்தில் நடைபெற்று வரும் திருவிழாக்களில் நல்லைக் கந்தனின் திருவிழா தனிச் சிறப்பு வாய்ந்தது என்றால் மிகையாகாது. குறிப்பாக எம் மக்களின் முக்கியமான திருவிழாவாதலினால் யாழ்ப்பாண மாநகரசபையும் தனது தார்மீகப் பொறுப்பை உணர்ந்து திருவிழா சிறப்புற அனைத்துக் கடமைகளையும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றி வரும் பாரம்பரியமானது தொடர்ந்து கொண்டிருக்கின்ற போதும், நாட்டுநிலைமை காரணமாக அவ்வப்போது ஏற்படுகின்ற துன்பங்கள், துயரங்கள், அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்து ஆலயத்தின் அனைத்து சேவைகளையும் வழங்கிவருவதற்கு முருகனின் அருளே துணைநிற்கின்றது என மனதார நம்புகின்றேன்.

இளைய தலைமுறையினரிடையே சமயப் பற்றினையும், ஆன்மீக அறிவினையும் மேம்படுத்தும் முகமாக யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினால் வருடா வருடம் வெளியிடப்பட்டு வரும் ''நல்லைக் குமரன் மலரில்'' குறிப்பாக இவ்வாண்டில் க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பயன்படும் விதத்தில் சைவசமய பாட மாதிரி வினாக்களும் பின்னிணைப்பாக இடம்பெற்றிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

மலர் வெளியீட்டுக் குழுவினரின் முயற்சி எம் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதே. முருகன் அடியார்கள் அனைவரும் தாம் பயன்பெறும் பொருட்டு நல்லைக் குமரன் மலரினை வாங்குவதன் மூலம் மேற்படி குழுவுக்கு தமது ஆதரவினை வழங்குகின்றோம் என்ற மனநிறைவோடு அனைத்து அடியார்களின் கரங்களிலும் இம்மலர் இடம்பெற வேண்டுமென்பதே எமது பேரவாவாகும்.

சைவசமய விவகாரக் குழுவினரின் முயற்சி மேலோங்க வேண்டுமென நல்லைக் கந்தனின் சேவடிகளைத் தியானித்து மனதார வாழ்த்துகின்றேன்.

''என்றும் வேண்டும் இறவாத அன்பு''.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகன் அருள் பொலிக

உங்கள்

தேவைகளுக்கு வேண்டிய

திருமண

* கூறைச்சேலைகள்

* பட்டுவேட்டிகள்

* சேட்டிங் சூட்டிங்

* மற்றும் எல்லாவிதமான துணி வகைகளுக்கும்

உங்கள் தேவைகளுக்கு

உங்கள் மனம்போல் தெரிவு செய்ய

யாழ்நகரில் தனிச் சிறப்புடைத் தாபனம்

# புதிய மகிழ்ச்சி ஆடையகம்

146, நவீனசந்தை

**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகாற்றுப்படை

''சிவநெறிச் செம்மல்''
வை. அநவரதவிநாயகமூர்த்தி

முருகன் அழகுத் தெய்வம்; கண்கண்ட தெய்வம். முருகன் என்றால் இளமையை உடையவன்; அழகுடையவன்; மணம் உடையவன்; தெய்வத்தன்மையுடையவன் என நான்கு விதமாகப் பொருள் கொள்ளலாம். நம்முடைய இளமை முதலியன என்றும் நிலைபெற்று நிற்பவையல்ல; அவை அழியும் தன்மை வாய்ந்தவை. ஆனால் முருகனது அழகு, இளமை முதலியனவோ என்றும் நிலைபெற்று நிற்பன.

முருகன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுட் சிறந்த ஆறு படைவீடுகள் பற்றியும், அங்கு எழுந்தருளி நின்று அடியார்களுக்கு அருள் புரியும் சிறப்பையும் எடுத்துக் கூறுவது ''திருமுருகாற்றுப்படை'' என்னும் நூல். பிறவிப் பிணிபோக்கும் பேரமிழ்தம் என்று இத் திருமுருகாற்றுப்படையைக் கூறலாம். முருகன் அருளை நாடி வருவோருக்கு வழிப் படுத்தும் சிறந்த நூலாக இது அமைந்துள்ளது. புலவராற்றுப்படையெனவும் முருகு எனவும் வழங்கப்பட்டு வரும் இப்பனுவல் 317 அடிகள் உள்ள ஆசிரியப்பாவால் ஆக்கப்பெற்றது. கடைச் சங்கப்புலவர்களான கபிலர், பரணரோடு வைத்து மதிப்பிடத்தக்க பெரும் புலமை படைத்த அருட்கவிஞருள் தலைமை பெற்ற நக்கீரரே இந்த திருமுருகாற்றுப்படையை நமக்கு அளித்தவர். பத்துப்பாட்டு என்னும் நூலுக்குத் திருமுருகாற்றுப்படையே கடவுள் வாழ்த்தாக உள்ளது. பக்திரசம் ததும்பும் இப்பாமாலை இளமையும், அழகும் என்றும் நிறைந்து விளங்கும் முருகன்பால் ''வீடு பெறுவதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றான் ஒருவன் முருகக் கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தி அதற்குரிய வழிவகைகளை விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது'' என நச்சினார்க்கினியர் விளக்கியது காண்க.

ஆற்றுப்படை என்பது ஆறு + படை என்னும் இரு சொற்களும் புணர்ந்து ஆற்றுப்படை என்று ஆகி வழியில் செலுத்துதல் என்னும் பொருள்படும். ''திருமுருகாற்றுப்படை'' என்னும் தொடர்மொழிக் கண்ணுள்ள 'திரு' என்பது திருக்கோயில், திருக்குளம் வழக்கில் இருப்பது போல் திருவருட்சக்தி பதிதலைக் குறிப்பால் உணர்த்தும் ஓர் மொழியாம். முருகு என்பது இளமையைக் குறிக்கும் ஓர் பண்புச் சொல். அது ஈண்டு அவ்விளமையை என்றும் தம்பாற்கொண்டு விளங்கும் முருகனுக்காயிற்று. ஆற்றுப்படை அகவற்பாவால் விறலி, பாணர், கூத்தர், பொருநர் ஆகிய நால்வருள் ஒருவர் பரிசு பெறப் போவோரைப் பரிசு பெற்று வருவார் ஆற்றுப்படுத்தி தலைவன் கீர்த்தியும், கொடையும், கொற்றமும் சொல்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கூத்தரும் பாணரும் பொருநரும்
விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு
அறிவுறீ இச்
சென்று பயன் எதிரச் சொன்ன
பக்கமும்''

என ஆற்றுப்படையின் இலக்கணத்தைத் தொல்காப்பியம் நன்கு விளக்குகின்றது.

இத் திருமுருகாற்றுப்படையில், வீடு பெற்றான் ஒருவன், வீடு பெறுவதற்குச் சமைந்த ஓர் இரவலனை முருகனிடத்து ஆற்றுப்படுத்திய விதம் புகழ்ந்து போற்றுதற்குரியது. இவ்வாற்றுப்படையுள் வீடு பெற்றான் ஒருவன் அது பெறாதானை நோக்கி ''நீ வீடுபேறு கருதினையாயின் முருகனிடத்துச் செல்க'' என்றனன். பெறாதான், ''அம் முருகன் எங்கு எழுந்தருளியிருப்பான்? அவன் இயல்பு என்ன?'' என்று கேட்க, ''அவனோ பரங்குன்றில் உள்ளான்; ஆறுமுகமும் பன்னிரு கைகளும் உடையவன்'' என்றான். அப்பொழுது இரவலன், வீடு அருளுந் தன்மையுடையானோ முருகன்! என ஐயுற்றான். 'நீ ஐயுறேல், அவனோ முத்தேவர்க்கும் அருள் புரிந்தவன். முப்பது முக்கோடி தேவரும், பதினெண் கணங்களும் தன்னை வழிபட நின்றான் ஆவினன் குடியில்'' என்றான். அங்ஙனமாயின் எவ்வாறு அவனை வழிபட வேண்டுமென்று கேட்க, அதற்கு ஏரகத்தில் அந்தணர் வழிபடு முறைகளையும் அவர்கள் உச்சரிக்கும் ஆறெழுத்தாகிய மந்திரத்தையும் உபதேசித்தான். மேலும் இரவலனுக்கு முருகனது இயல்புகளையும் அவனை வழிபடும் முறைகளையும் விரிவாக எடுத்து உரைத்தான் வீடு பெற்றோன். ''அப்பனே! நீ கவலையடைய வேண்டாம். முருகனோ முற்கூறிய இடங்களில் மட்டுமன்று; சீர்கெழுவிழவு, மேவரு நிலை, வெறியயர்களன் காடு, கவின் பெறு துருத்தி, கந்துடை நிலை முதலிய இன்னும் பல விடங்களில் நீ எங்கு காண விரும்புகிறாயோ ஆண்டாண்டுக் காணப் படுவன்'' என்றும் ''மலைமகள் மகனே. மாற்றோர் கூற்றே! மாலை மார்ப! நூலறி புலவ!'' என்று நீ விரும்பும் சொற்களால் அப் பெருமானைப் புகழ்ந்து துதிக்கலாம். விண்ணுலகத்தவர்க்கு மட்டும் அருள் செய்பவன் அல்லன். அவனோ வேண்டுவார் வேண்டுவதை அருளும் வள்ளல்; தன்னை நாடிவரும் யாவர்க்கும் நிச்சயம் அருள் புரிவான். நீ அவ்விடத்துச் செல்க'' என்று ஆற்றுப்படுத்திய முறை அருமையிலும் அருமையாம்.

கடைச் சங்கப்புலவர் குழாத்துள் தலைமை பெற்றிருந்த நக்கீரர் ஒரு சமயம் தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டார்! செல்லும் வழியில் குளம் ஒன்றில் நீராடிவிட்டு அதன்கரையோரத்தில் உள்ள அரச மரத்தின் நிழலில் சிவ வழிபாடு செய்து கொண்டிருந்தார். அந்நேரத்தில் அரச மரத்தில் ஓர் இலை அவருக்கு முன்னே பாதி நீரிலும் பாதி தரையிலும் விழுந்தது. நீரிலே வீழ்ந்த பாதி மீனும் தரையில் வீழ்ந்த பாதி பறவையுமாகி, மீன் பறவையை நீரினுள் இழுக்கப் பறவை மீனை தரையில் இழுத்தது. நக்கீரதேவர் அப்புதுமையைக் கண்டு மிகவும் வியப்படைந்தார். சிவ வழிபாட்டிற்குத் தவறு உண்டாயிற்று அவ்விடத்திலே சிவவழிபாட்டில் வழுவினர்வகளாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒரு மலைக் குகைக்குள்ளே அடைத்து வைத்துக் கொண்டு மேலும் ஒருவருக்காகக் காத்துக் கொண்டிருந்த பூதம் ஒன்று நக்கீரரைத் தூக்கிச் சென்று அக்குகையிலுள்ளே அடைத்து ஆயிரவராக்கி தன் கொள்கைப்படி ஆயிரவரையும் உண்ணுவதற்குமுன் நீராடப் போயிற்று. முன் அடைபட்டவர் எல்லோரும் நக்கீரரிடம் முறையிட்டார்கள் ''இது காறும் உயிரோடு இருந்த நாங்கள் இன்றைக்கு உம்மாலே இப் பூதத்திற்கு இரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும் காலம் நெருங்கிவிட்டது'' என்று அழுதார்கள். அடியார்களை ஆட்கொண்டு அருளும் முருகன் அருளை நாடினால் அன்றி இப்பூதத்தினின்றும் தப்ப முடியாது என்று உணர்ந்தார் நக்கீரதேவர். முத் தமிழால் வைதாரையும் வாழவைப்போன் அல்லவா நமது குருநாதன் என்று நெஞ் சுருகினார். பாமாலைக்கே வசப்படுவான் நமது பச்சை மயில் ஏறிவரும் பாலன் என்று பரவசமடைந்தார். திருமுருகாற்றுப் படை என்னும் அருள் நூலையே பாடி விட்டார். கருணையங் கடலாகிய முரு கப் பெருமான் தமது திருக்கரத்தில் உள்ள வேலாயுதத்தைச் செலுத்திப் பூதத் தைக் கொன்று நக்கீரதேவர் உட்பட ஆயிரவரையும் சிறையிலிருந்தும் விடுவித் துக் காத்தருளினார் என்பது கதை. நக் கீரர் பூதத்தால் பரங்குன்றம் உள்ள குகை யின் கண் சிறை வைக்கப்பட்டு பன்னிரு கைக் கோமானின் அருளால் விடுவிக்கப் பட்ட நிகழ்வை பகழிக் கூத்தர் தமது ''திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழில்'' பின் வரும் பாடலில் நயம் படக் கூறியுள்ளார்.

'' ஏர் கொண்ட பொய்கைதனில் நிற்கு மொருபேரரசின்
இலை கீழ் விழில் பறவையாம்
இது நிற்க நீர் விழில் கயலாம் இதன்றியோர்
இலை யங்கு மிங்குமாகப்
பார் கொண்ட பாதியும் பறவைதானாக அப்
பாதியுஞ் சேலதாகப்
பார் கொண்டி ழுக்க அது நீர் கொண்டிழுக்க இப்
படி கண்ட ததிசய மென

நீர் கொண்ட வாவி தனில் நிற்கு மொரு பேழ்வாய்
நெடும் பூதம் அது கொண்டு போய்
நீள் வரை யெடுத்ததன் கீழ் வைக்கும் அது கண்டு
நீதி நூல் மங்கா மலே
சீர் கொண்ட நக்கீர னைச்சிறை விடுத்தவா
செங்கீரை ஆடி அருளே
திரையெறியும் அலைவாய் உகந்தவடி வேலனே
செங்கீரை ஆடி அருளே''.

இத்திருமுருகாற்றுப்படை முருகப்பிரா னுடைய அருங்குணாதிசயங்களையும், வீர பாரக்கிரமங்களையும் அருள் விசேடங் களையும் ஆறுபடை வீடுகளின் (திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன் குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழ முதிர்சோலை) சிறப்பையும் எடுத்துரைக் கின்றபடியால் இத் தெய்வப்பனுவலை அனுதினமும் அன்போடு பாராயணம் பண் ணுவோர்க்கு ஆண்டவன் ஆறுமுகப் பெரு மான் திருவருள் புரிவான் என்பது ஆன் றோர் துணிபு.

'' நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால் — முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தரும் ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவேரி
பட்டுச்சோலை

திருமுருகன் அருள் பொலிக.

உயர்தர — மங்கள வைபவ தேவைகளுக்குரிய
பட்டுப் பிடவைகளுக்கு
நீங்கள்
நாடவேண்டிய தாபனம்

காவேரி பட்டுச்சோலை
42, சோதியா தெரு, (பெரியகடை)
யாழ்ப்பாணம்.

நேசராசா துணிக்கூடம்
(அங்கலின் ரெக்ஸ்ரைல்)
உங்களுக்கு தேவையான விதவிதமான பிடவைகள்
தையல் உபகரணங்கள் அங்கலின் தயாரிப்புகள்
பிளாஸ்ரிக், பொலிதீன், குறோசறி, சொப்பிங்பாக்
வகைகள் யாவும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள — இன்றே நாடுங்கள்

நேசராசா துணிக்கூடம்
43, 48 — நவீனசந்தை
யாழ்ப்பாணம்
கிளை: அங்கலின் காமன்ஸ்
24/1 பெரியகடை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாயோ?

தூவி மயில்கடல் போல, அதன்மிசை
ஞாயி றெனதிமிர் வடிவாலும்
தோளில் அசைகடம் பாலும், அடியவர்
தூவு பிறமலர் வகையாலும்
ஆவி உனதடி மேவி சிறிதும்வி
டாது சுழலுவ தறியாயோ!
ஆகம் உனதருள் ஆன கடலிடை
ஆடல் புரிவது தெரியாதோ!

தேவர் படுதுயர் யாவும் பொடிபட
சேனை யொடுகளம் புகுநாளில்
தீய அவுணர்கள் மாய நெடுமரம்
சாய விடுமொரு வடிவேலா!
கோயில்களில் அழகான வடிவுள
கோலம் அமைநல்லை அமர்வோனே!
கூடும் அடியவர் பாடும் இசைமழை
ஊடு நனைகிற பெருமாளே!

குண்டு மழைபோல வந்து பொழிவேளை
குஞ்சு குருமான்கள் ஓடுகாதல்
கொண்ட மனைதாயர் தந்தை கிளைதோழர்
என்ற உறவேதும் நிலையாது!
பஞ்சு படும்பாடு கொஞ்சமல, நாளும்
நொந்து வருவார்கள் துயர்காண
நெஞ்சுருகும், ஆறி நின்றொரு சொல்கூறு
முன்வரு விமானம் பலிகோரும்!

எங்கள் பொருள், வீடு, எங்கள் தொழில், வாழ்வு
எங்கள் உயிர்ஏதும் எமதாமோ?
என்ற நிலைமாற இந்த இடர்தீர
என்று மயிலேறி வருவாய்நீ!
மங்கை தெய்வ யானை குன்றிலுறைபேதை
என்றிருவர் சூழ திருவீதி
எங்கும் நிறைகோடி அன்பர் இசைபாட
இன்பமுறும் நல்லை முருகோனே!

— சோ. பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை குமரன் மலர்

பல்லாண்டுகாலம் மலர உளமார வாழ்த்துகின்றோம்.
வையத்து மக்களுக்குக் குமரன் அருள் பல்கிப் பெருக
இறையன்பை வேண்டுகின்றோம்.

கண்ணன் மருகன் மனம்மகிழ

❊ திருக்குமரன் விபூதி

❊ அண்ணா பத்தி

❊ துர்க்கா பத்தி

❊ ஜெயந்தி பத்தி

உள அன்புடன் இவற்றை வாங்கி அர்ச்சனைக்கு உபயோகிப்பதால்
ஒப்பற்ற பெருமான் அருள் பெறலாம்.

# அண்ணா தொழிலகம்

இணுவில்.

---

வாழ்க வளமுடன்

மீண்டும் உதயம்

## அம்பிகாபதி அழகு மாடம்

மங்கள நாட்களுக்குரிய

★ அழகு சாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் ★
★ ரேடியோக்கள், கல்குலேற்றர்கள் கணணி ★
★ கைக்கடிகாரங்கள், மேசை, சுவர் மணிக்கூடுகள் ★
★ தங்கமுலாம் பூசப்பட்ட அலங்கார நகைகள் ★
★ எவர்சில்வர் பாத்திர வகைகள் ★

இவைகளுக்கும் ஏனைய தேவைகளுக்கும்

# அம்பிகாபதி அழகு மாடம்

இல. 9 A, சிறப்பு அங்காடி (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தசுவாமி
# நான்மணிமாலை

ஆக்கம்:- சொக்கன்

காப்பு

உலக அரங்கில் உயிர்களை ஆட்டும்
நிலவணிந்த நின்மலனின் மைந்தர் — நலமருளும்
ஆனை முகத்தோய்! நின் அன்பளைந்த தம்பிக்கென்
தேனமுதப் பாட்டினைநீ சேர்.

நூல்

பெற்றவளும் பெற்ற பெருநாடும் வாயினிக்க
உற்ற மொழியும் ஒருவற்கு — நற்றவத்து
வானிற் பெரியனவாம் மன்னுபுகழ் நல்லைநகர்
ஞானவே லாவுணர்ந்தோம் நாம். 1

நாமுணருண்மையை நல்லுளத் தேயென்றும் நாட்டிமிகச்
சேமமே பெற்றிடச் செந்தமிழீழஞ் செழித்துயரப்
பாமணக் கும்புகழ் கொண்டிடுங் கொள்கையிற் பற்றுவைத்தோம்
காமணக் கும்பொழில் நல்லையிற் கந்த! கனிந்தருள்வாய் 2

அருளொன்றே எம்மவருக் காற்றலை ஈயும்
பொருள்போகந் தூசெனவே போக்கி — இருளாக
ஈழத் தமிழரினை இன்றலைக்கு மின்னலெலாம்
வீழவே கந்தா! நீ வீழ்த்து. 3

வீழ்த்துவை வெற்றிக் கொடியினை நல்குவை "வேதனையில்
ஆழ்த்துவதும் என்றெண்ணி ஆர்ப்பரிக் குங்கொடு மாணவத்தர்
பாழ்த்துயர் பெற்றுப் பரிபவம் எய்திடப் பண்ணிடுவை
வாழ்த்துவம் உன்னை வணங்குவம் நல்லையின் வானவனே! 4

வானவர்க்கு வாழ்வளித்து மாகொடிய சூரனுக்கே
ஈனமளித் தாண்டவனே! எம்முதல்வா! — கானவரின்
கன்னியினைக் கைபிடித்துக் கட்டியணைத் தேநல்லை
நின்றவுனக் காரே நிகர்? 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரார் இவர்க்கென்று நீணில மீதில் நிலைக்கவைப்பாய்
புகழார் திருநல்லூர்ப் பொன்னணி வேல்வுன் பூங்கழல்கள்
திகழார் மனந்தந்து செந்தமிழ் வாயில் திளைக்கவைப்பாய்
இகழ்வாரை மாய்த்திந்த ஈழத்து மண்ணில் இருக்கவையே. 6

இருப்பதென் றாலிந்த ஈன உடலைப்
பருப்பமுறச் செய்வதலப் பாங்காய்ச் — செருக்களத்தில்
மண்ணுக்காய்ப் பொய்யுடலை மாய்க்கும் பெருமையினை
எண்ணி முனைவதே யாம். 7

ஆமுன்றன் பன்னிரு கையிலும் போர்ப்படை ஆற்றலுடன்
நாமிரு கையுந் தொழுதிடத் தாங்கி நமைப்புரப்பாய்
காமரு சோலை எழில்தரு நல்லையிற் கந்தனே! நீ
ஏம மளித்திடு மெம்மவ னே!யுன்னை ஏத்துவமே 8

ஏத்துதற்குச் சொல்லளித்தாய் ஏங்குதற்கு நெஞ்சளித்தாய்
ஈத்துவக்கக் கைகள் எமக்கீந்தாய் — பாத்தியிலே
பாய்ந்து செலும் நீரெனவே பார்விழிக்கு நீரளித்தாய்
சாய்ந்தபயிர்க் கென்னளித்தாய் சாற்று. 9

சாற்று அடிமைத் தனங்கெடச் சஞ்சலப் பேயகல
மாற்றும் விறலருக் கோர்வழி காட்டிட வந்திடுவாய்
ஆற்றும் வழியினில் எம்மவர்க் கென்றும் அருள்வழங்கிக்
கூற்றும் நடுங்கிட வேல்தொளும் நல்லைக் குமரவனே! 10

குமரவனே! வள்ளியொடு குஞ்சரியுங் கொஞ்சி
இமைப்பொழுதும் நீங்கா இளையோய்! — நமைப்புரக்க
வஞ்சகரை மாய்க்க மதிதாராய் நல்லைநகர்
தஞ்சமெமக் கின்பங்கள் தா. 11

தாவென வேண்டித் தயாபர! உன்றனின் சந்நிதியை
மேவிய எங்களை மேனிலை தன்னில் விளங்கவைப்பாய்
சாவினும் வாழ்வினும் தந்தையே! உன்றன் சரணமையா!
நாவலர் போற்றிய நல்லையி லேயுறை நாயகனே! 12

நாயகனே! உன்னடியார் நாமென் பதனாலுன்
தோயுமருள் வேண்டித் துதித்திடுவோம் — பாய்விழிநீர்
பார்த்திருக்கும் தாயுலகி லில்லையெனில் நல்லையுளாய்!
ஆர்க்குமிலாத் தாயெமக்கு நீ. 13

நீயேயெந் தாயுனக் கெந்துயர் நீக்கும் நெடுங்கடமை
போயே விடுமோ? புகலிடம் உன்றன் புனிதபதம்
வாயால் துதிப்பதும் நெஞ்சால் வழுத்தலு மன்றிவெதும்
நாயேம் எமக்குள வேறெவை? நல்லையின் நல்லவனே! 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதெது தீயதெது நாமறிந்த வாறுரைக்கின்
கொல்லவருந் தீமையினைக் கோறுவதும் — கல்லெனவே
பொல்லவரைக் கால்பிடித்துப் போற்றுவது மென்றறிவோம்
நல்லையனே! உன்னடியார் நாம். 15


நாமுனக் கல்லால் தொழும்புகள் செய்யோம் நமது மண்ணில்
தாமுயர் மேன்மைகள் கொண்டவர் என்னும் தருக்கருக்கே
ஏமமா யுள்ள எதனையும் மாய்ப்போம் எனுங்குறிக்கோள்
சேமமாய்க் கொண்டோம் திகழ்நல்லைக் கந்தா! திகட்டிடுமோ? 16

திகட்டாத தேனமுதச் செந்தமிழிற் றேர்ந்தோர்
பகட்டறியாப் பாங்கினத்தம் பாக்கள் — புகட்டியுனைப்
பாற்சுவையும் வேண்டாப் பரவசத்தி லாழ்த்திடுவார்
ஆற்றலனே கேட்டே அருள். 17

அருளிற் சிறந்தது யாதுள தெங்களுக் காரமுதே!
மருளிற் றிளைத்தவர் மண்ணைப் பிடிக்கும் மதியிலிகள்
இருளிற் கிடக்குவர் எண்ணம் பிழைத்திட ஏற்றவழி
மருவத் தமிழருக் காக்குவை நல்லையின் மாதவனே! 18

மாதவத்த ராணாலும் மண்ணை இகழ்கின்ற
பேதைமையைப் பேணார் பெருமையெலாம் — மாதரசி
அன்னைநா டென்றே அகங்குளிர்வ ராதலினால்
இன்றெமக் கெம்நா டளி. 19

அளிமலச் சோலையும் ஆலய மும்மணி நல்லைநகர்
களிகொளக் காதலித் தேயமர்ந் தெங்களைக் காப்பவனே!
இளைஞரும் நல்லெழிற் பாவையர் தாமும் எழுச்சியுற்றார்
தளையறுத் தேயவர் நாடுறப் பெற்றிடின் பெற்றவரே. 20





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாகரிகத்திற்கேற்ற

❋ அழகு சாதனப் பொருள்கள்

❋ பரிசுப் பொருள்கள்

❋ தையல் பொருள்கள்

❋ விளையாட்டுச் சாமான்கள்

❋ பாடசாலை உபகரணங்கள்

மலிவாகப் பெற்றுக் கொள்ள

சிறந்த ஒரே இடம்

**சிவகாந்தா விற்பனை நிலையம்**

65, 66, சிறப்பு அங்காடி (நவீனசந்தை)

யாழ்ப்பாணம்

கணேசானந்தா பட்டுமாடம்

கண்கவர் வர்ணங்களில் அமைந்த

❋ ஆடவருக்கான — மங்கையருக்கான

அனைத்து ஆடை வகைகளுக்கும்

❋ சிறந்த ரகங்கள்

❋ நிதான விலை — நிதான சேவையுடன்

செயலாற்றும் தாபனம்

**கணேசானந்தா பட்டுமாடம்**

15, சிறப்பு அங்காடி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்

கோ. சி. வேலாயுதம்

'ஊரான் ஓர் தேவகுலம்'' என்று உரையாசிரியர்கள் காட்டும் பழைய தொடர்மொழி ஒன்று உண்டு. கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. இவை ஒவ்வோர் ஊரிலும் கோயில் இருக்க வேண்டியதன் அவசியத்தைச் செப்புகின்றன. நல்லையம்பதி, தொல்லையிரும் பிறவிச் சூழும் தளை நீக்கும், வல்லிக்கொடியர் மணவாளன் முல்லை நறுஞ்சிரிப்பின் முதல்வன் முருகன் குடிகொண்ட தொல்பதி. அன்றியும் திருமுருகாற்றுப்படை சொல்லும் ''ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்'' என்னும் அடி ஆலயத்தின் தேவையைச் செப்பா நிற்கும்.

அருணகிரியார் திருப்புகழில்

''அடியவர் நேசத் துறைவேலா
அறுமுக விநோதப் பெருமாளே''

என்று வீரத் திருவிழிப் பார்வையும், பங்க வரைக் கூறுபட வீட்டும் வேலும் உடைய அழகன் முருகனைப் போற்றுகின்றார். தமிழ்க் கடவுளான முருகன் குடிகொண்ட திருத்தலங்கள் தெற்கே கதிர்காமம் தொடக்கம் வடக்கே திருத்தணிகை வரை நீண்டு பரந்திருக்கின்றன. அன்னவனின் படை வீடுகள் ஈண்டு சிந்தித்துப் போற்றக் கூடியதே. அவனின் அழகுத் தோற்றம் தீந்தமிழின் ஒப்பீட்டிற்கு உகந்ததாய் அமைவதே அழகு.

நமது உடலிலுள்ள ஆறு ஆதார ஸ்தானங்களான மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை முதலானவற்றிற்கு ஆறுபடை வீட்டை ஒப்பிடுவர். முருகனின் பெருமையைப் பேசவந்த திருமூலர்

''ஆரறிவார் எங்கள் அண்ணல்
பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின்றேனே''

என்கின்றார்.

அகத்தியருக்குத் தமிழைக் கற்றுக் கொடுத்த குருநாதராகவும், தமிழ்ச்சங்கத்தில் தலைவனாக வீற்றிருந்து தமிழ் எனும் அமிழ்தை அரவணைத்த பெருமானாகவும் இருக்கும் முருகனைத் திருப்புகழ்

''மனித்தர் பத்தர் தமக்கெளியோனே
மதித்த முத்தமிழிற் பெரியோனே''

என்கின்றது.

நற்றமிழ்வல்ல நக்கீரன் திருமுருகாற்றுப்படையிலே

''அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம்
தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்
தோன்றும் — நெஞ்சில்

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகால் நினைக்கின் இருகாலும்
தோன்றும்
முருகா என் றோதுவார் முன்''

என்கின்றான்.

கலியுக வரதன், காருண்யசீலன், கார்த்திகை பாலன், நம்மைக் காத்திட ஈண்டு களிநடம் புரிபவன். அவனை நினைக்கும் போது அரக்கர் செயல் அத்தனையும் பொடிபடுமன்றோ.

கந்தன் என்ற பெயர் ஒன்றுசேர்ந்தவன், இனிய மணமுடையவன், சர்வவல்லமையுடையவன் என்றெல்லாம் பொருள் தருவதோடு எவ்விதப் பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் என்ற அர்த்தத்தையும் தருகிறது. இக்கருத்தை நச்சினார்க்கினியர் என்ற புலவர்

''சார்பினால் தோன்றாது தான்
அருவாய் எப்பொருட்டும்
சார்பென நின்றெஞ்சஞான்றும் இன்பம்
தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான்
மனத்தான் அறிவிறந்த
தூய்மையதாம் மைதீர் சுடர்''

எனக் கூறி விளக்கம் தருகிறார். எதிலும் சார்பற்ற பெருமான் தானே மாயையால் சூழப்பட்டுள்ள மக்களுக்கு விடுதலை அருள முடியும். கந்தரநுபூதி

''எந்தாயு மெனக்கருள் தந்தையுநீ
சிந்தாகுல மானவைதீர்த் தெனையாள்
மைந்தா குமரா மறைநாய கனே''

எனப் பேசுகிறது. ஆன்ம விடுதலைக்கு இறைவன் கருணை வேண்டும். இதனைச் சிவகதிக்கு வித்தென விளங்கும் திருமூலர் திருமந்திரம்.

''பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசுபாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகா, பசுபாசம்
பதிஅணுகில் பசுபாசம் நில்லாவே''

என்கிறது.

கலியுகத்திற்குக் குகப்பெருமானே சிறந்த தெய்வம் எனச் சாத்திரங்கள் விளம்பும். கந்தனைக் கரங்குவித்து வணங்குபவர்க்குக் கலியின் கொடுமையும் யம பயமும் கிடையாது என்பதை ஸ்காந்தம்

''ஸ்கந்தஸ்ய அதுலாம் கீர்த்திம்
கலி கல்மஷ நாசினீம்''

என்றும், பழனி ஸ்தல புராணம்

''கந்தனைப் போற்றுவோர் மேல்
காலனும் அணு கொணாதே''

என்றும் அறிவிக்கின்றன. மாசிலடியார்கள் வாழ்கின்ற வூர் சென்று தேடி விளையாடியே யங்ஙனே நின்று வாழுமயில் வீரன் வேலவன்,

''யார் வேண்டினாலும் கேட்ட
பொருளீயும்
தியாகாங்க சீலம்''

முருகன் என அருணகிரியாரும் கூறுவது ஈண்டு சிந்திக்கற் பாலதே.

வைதாரையும் வாழவைக்கும் வேற்படை விமலன். இதற்குச் சான்றாக கந்தரலங்காரப் பாடலை நோக்குவோம்.

மொய்தார் அணி குழல்வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப்போன்
வெய்ய வாரணம் போல்
கைதானிருப துடையான்
தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த
இலஞ்சியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும் கவி களமேகம்

"அப்பன் இரந்துண்ணி ஆத்தாள்
மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—
சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன்
ஆறுமுகத்தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை"

என நிந்தாத்துதி பாடி அருள் பெற்றார். திருமந்திரத்திலே

"அப்பனை நந்தியை ஆராஅமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின்
ஏத்தினால்
அப்பரி சீசன் அருள் பெறலாமே"

என்று வலியுறுத்தப் படுவதையும் சிந்திக்கலாம்.

திருவாய்மொழியில்

"பாதம் நாளும் பணியத் தணியும்
பிணி
ஏதம் சாரா; எனக் கேல்
இனிஎன்குறை?
வேத நாவர் விரும்பும் திருக்கண்ண
புரத்து
ஆதி யானை அடைந்தார்க்கு அல்லல்
இல்லையே"

எனவும் பேசப்படுகிறது.

நான்காவது படைவீடாகிய திருவேரகத்தில் (சுவாமி மலை) சுவாமிநாத மூர்த்தியைச் சொக்கநாதப் புலவர் நோக்கிப் பின்வருமாறு பாடலுற்றார்.

"வெங்காயம் சுக்கானால்
வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்து இருப்பார்
இச்சரக்கை—மங்காத
சீரகத்தைத் தந்திரேல் தேடேன்
பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே"

எனவே கந்தனை அனுபவித்து கந்தரநுபூதி சொல்லும்

"உருவாய் அருவாய் உளதா
யிலதாய்
மருவாய் மலராய் மணியா
யொளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய்
விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய்
குகனே"

எனப் பாடுவோம்.

முருகனை நினைக்கும் நெஞ்சு அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்சுதல் தோன்றுமாயின் ஆறுதலைத் தருகின்ற ஆறுமுகம் தோன்றுமன்றோ. இதனைக் கந்தரலங்காரம்

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனை
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே

என்று அழுத்திக் கூறுகிறது.

விராலை மலைக் கந்தனை, வீரத்திருமகனைப் பாடவிழைந்த கந்தரலங்காரம்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனு
நாமங்கள் முன்பு செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வேலுஞ்
செங்கோடன் மயூரமுமே

என்று எக்காளமிடுகிறது.

ஈற்றிலே எங்கள் வாழ்வாய் அமைந்த வள்ளி மணாளனை பாரதி நோக்கிலே பார்த்து நிறைவு பெறுவோம்.

வீரத்திருவிழிப் பார்வையும்—வெற்றி
வேலும் மயிலும்என்—முன்னின்றே—
எந்த
நேரத்திலும் என்னைக் காக்குமே—
அன்னை
நீலி பராசக்தி தன்னருட்—கரை
ஓரத்திலே புணை கூடுதே—கந்தன்
ஊக்கத்தை என்னுள்ளம் நாடுதே—
மலை
வாரத் திலேவிளை யாடுவான்—என்றும்
சனர்கள் கொடுமையைச் சாடுவான்

என்ற காலக்கருத்தை நிறுத்தி கந்தனை வந்தனை செய்வோம்.

## தியான மந்திரம் உருப்போடுதல்

மந்திரங்களின் சக்தி மிக அபூர்வமானது. இந்த அபூர்வத்தன்மை உணர்ச்சி உள்ளத்தில் எந்நேரமும் ஊற்றெடுக்க வேண்டும். ''ஓம் நமசிவாய'' என்று அல்லது ''ஓம் சிவசக்தி ஐக்கிய ரூபிண்யே நமஹ'' என்றோ அல்லது ''ஓம் ஸ்ரீ சங்கர நாராயணாய நஹோ'' என்றோ அல்லது ''ஓம் ஸ்ரீ நாராணாய'' என்றோ அல்லது ''ஓம் ஸ்ரீ மகாகணபதியே நம:'' என்றோ உளவுணர்வு நிலையிலிருந்து இம்மந்திரங்களை மூன்றுதரம், ஐந்துதரம், ஒன்பதுதரம் அல்லது இருபத்தெருதரம் பக்திசிரத்தையுடன் காலை மாலை செய்து வருவது உத்தமமாகும். எப்பொழுதும் மனத்தை அலைத்துக் கொண்டிருக்கும் எண்ணங்களை – உணர் அலைகளை நீக்கி, தெய்வத்தன்மையை நாடி பந்தங்களை விலக்கி வாழ்வதற்கு முயற்சிப்பது அவசியமாகும். மனத்தில் உருவாகும் எண்ணங்களை விலக்கி, படிப்படியாக அமைதியுற்று, தெய்வத்தைநாடி வாழ்வதற்கு வசதிகளும் உண்டாகும். நாமநாத வழிபாடு உத்தம வாழ்வைத் தரும்''.

—தெ. செ. ந.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாவலர் சற்குருமணிமாலை" பாடிய அம்பலவாண நாவலர்

பண்டிதர் அ. ஆறுமுகம்
தமிழ்ச் சங்கம் - பண்ணாகம்

நாவலர் என்ற விருது பெற்ற பலர் இந்நாட்டிலும் தமிழ்நாட்டிலும் இருந்துள்ளனர். பெயரைக் குறிப்பிடாது "நாவலர்" என்னும் விருதினை மட்டும் கூறினால், எல்லார் நினைவிலும் யாழ்ப்பாணத்து நல்லூர் திருப்பெருந்திரு ஆறுமுக நாவலரே இடம் பெறுவார். நாவலர் காலம் 1822 — 1879 வரையுமுள்ள 57 ஆண்டுகளாகும். தாழ்வுற்றுச் சீர்கெடும் நிலையில் இருந்த செந்தமிழ் மொழியையும் சிவத்திருநெறியையும் வாழவைப்பதற்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர் நாவலர். அவரிடமும் அவருடைய மாணாக்கரிடமும் படித்த பரம்பரையினரே தொடர்ந்தும் தமிழும், சைவமும் தழைக்க உழைத்தவரும் ஆவர். நாவலர் பெருமானிடம் வரன்முறையாகக் கற்கும் வாய்ப்பைப் பெறாவிடினும், அவரின் தூய ஒழுக்கம், மெய்யுணர்வு, ஆளுமை என்பவற்றால் கவரப்பட்டு, அவரைத் தமது ஞான குருமூர்த்தியாகக் கொண்டவர் அம்பலவாண நாவலர் ஆவார்.

## அம்பலவாணரின் இளமையும் கல்வியும்

சித்தர் ஒருவர் வெட்டிய கேணியொன்று இருந்த காரணம் பற்றியோ வேறு எக்காரணத்தாலோ சித்தன்கேணியெனப் பெயர்பெற்ற கிராமம் யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை கோயிற்பற்றைச் சார்ந்ததாயுள்ளது. அந்தக் கிராமத்தில் உத்தம குடும்பத்தில் உதித்த பெரியார் ஆறுமுகம்பிள்ளைக்கும் அவரது துணைவியார் சுந்தரவல்லியம்மைக்கும் வாய்த்த ஒன்பது நன்மக்களில் நடுநாயகமாக 1855இல் தோன்றியவர் அம்பலவாணர். அவர் தமது ஆரம்பக் கல்வியைச் சங்கானை மேற்கைச் சேர்ந்த வடலியடைப்புக் கிராமத்தில் வாழ்ந்த வேலாயுத பிள்ளையென்னும் நல்லாசிரியரிடம் பெற்றார். பின்னர் புகழ் சிறந்த மட்டுவில் கதிரவேற்பிள்ளை உரையாசிரியரிடம் நன்னூல், நிகண்டு, தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும், கம்பராமாயணம், வில்லிபாரதம் என்னும் இதிகாசங்களையும், சங்க இலக்கியங்கள், புராணங்கள் பலவற்றையும் துறைபோகக் கற்றார்.

இதனை

"சேயெனக்கு செவிலியெனச் சங்கானை
மட்டுவிலில் தீரா தென்றும்
பாயபுகழ் தமிழ்எளிதிற் புகட்டினார்
வடலியமைப் பமர்பண் பாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயகுண வேலா யுதக்குரவன் அவன்
பதத்தை அன்பாற் போற்றித்
தாயனைய நல்லூர்நா வலர்பெருமான்
அருள்வாழ்விற் சார்ந்திட் டேனால்''

என்று அவரே பாடியது கொண்டும் துணியலாம். அம்பலவாணர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிற் கற்று ஆங்கிலப் புலமையும், நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதரிடம் கற்று வடமொழிப் புலமையும் வாய்க்கப் பெற்றார், விளைவேலி வேதக் குட்டிக் குருக்கள் குமாரரான அப்பாத் துரைக் குருக்களிடம் விசேட தீட்சையும் பெற்றார்.

## நாவலர் பெருமானின் ஆசி பெற்றமை

நாவலர் பெருமானின் அருள்வாழ்வில் அம்பலவாணருக்கு ஈடுபாடும் ஆர்வமும் அதிகரித்தன. நாவலரைப் போலவே சன்மார்க்கச் சொற்பொழிவுகள் சித்தன் கேணிப் பிள்ளையார் கோயிலிலும் பிற இடங்களிலும் செய்து நாவல்லபம் பெறுவாராயினார். நாவலர் பிரசங்கம் செய்யும் இடங்களிற்கும் சென்று கேட்டு ஆர்வம் மீதுற்றார். நாவலர் ஒரு நாள் நாயன்மார்கட்டிலே பிரசங்கம் செய்தார். பிரசங்க முடிவில் சபைத் தலைவர் அவையோரை நோக்கி ''விரும்பியவர்கள் குறிப்புகள் கூறலாம்'' என்றார். கூட்டத்தின் ஒரு மூலையில் இருந்த இளைஞன் ஒருவன் எழுந்தான். துருதுருத்த கண்கள், பட்டொளிப் பார்வை, கட்டுறுதியுள்ள தேகம், சிவமணங் கமழும் கோலம் கொண்ட அந்த இளைஞனான அம்பலவாணரைக் கண்ட நாவலர், ''அந்தப் பிள்ளையை முன்னுக்கு வர வழி விடுங்கள்'' என்று சபையோர்க்கு கூறினார். இளைஞர் அம்பலவாணர் அப்போது அந்தப் பெரிய சபையில் நடந்து சென்று ஆணித்தரமான நல்ல குறிப்புக்கள் கூறினார். நாவலருக்குப் பூரிப்பும் ஆனந்தமும் பொங்கின. இளைஞனது கையைப் பற்றினார். ''மகனே எனக்குப் பின்னர் என்னுடைய இடத்துக்கு நீ தான்'' என்று கூறி ஆசிர்வதித்தார். அதன் பிறகே அம்பலவாணர் அடிக்கடி நாவலரிடம் சென்று, தொண்டுகள் செய்து, தமது சந்தேக விபரீதங்களைப் போக்கி, நாவலரையே தமது ஞானகுருவாகக் கொண்டு ஒழுகினார்.

## தமிழ்நாட்டுப் பிரயாணம்

ஒருமுறை வண்ணார்பண்ணையில் அம்பலவாணர் செய்த பிரசங்கத்தைக் கேட்டு ஆராமை கொண்ட வரணி ஆதீனத்தைச் சேர்ந்த சிலரும், வண்ணையில் காசுக்கடை வைத்திருந்த பெரிய சொக்கலிங்கச் செட்டியார், சின்னச் சொக்கலிங்கச் செட்டியார் என்னும் சகோதரர்களும் தங்கள் நாட்டிற்கு வருகைதந்து சற்பிரசங்கங்கள் செய்து சைவசமய ஒழுக்கங்களை வளர்க்க வேண்டுமென இவரை விரும்பிக் கேட்டனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று இவர் தோணியேறித் தமிழ்நாட்டுக்குச் சென்றார். தம்மையழைத்துச் சென்றவர்களின் ஆதரவில் இவர் காரைக்குடி, காளையர் கோயில், தேவகோட்டை முதலான இடங்களில் வாழ்ந்த தனவைசியக்குலப் பிள்ளைகள் பலரும் போற்றும் கல்விக் களஞ்சியமாகவும், சமய போதகராகவும் விளங்கினார். அங்கு வாழ்ந்த காலத்தில் கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளிடமும், கோகலம் இராம சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதமும், தெலுங்கும் பயின்றார். மதுரைத் திருஞானசம்பந்தர் மடத்துச் சந்நிதானம் அவர்களிடம் காவியுடையும் கண்டிகையும் பெற்றுத் தரித்துச் சந்நியாசியானார்.

## அம்பலவாண நாவலர் ஆனமை

தமிழ்நாட்டில் பலபல இடங்களிற்கும் சென்ற அம்பலவாணர் திருவாவடுதுறையாதீனத்துக்குச் சென்றார். அப்போது அங்கே 24ஆவது மகாசந்நிதானமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த அம்பலவாண தேசிகரைக் கண்டார். தேசிகர் இவரிடம் இலக்கண இலக்கிய சித்தாந்த சாத்திரங்களில் பல கேள்விகள் தொடுத்துப் பரிசோதித்து, இவரது புலமைச் சிறப்பையும் நாவன்மையையும் கண்டு ''நாவலர்'' விருதும் பீதாம்பரமும் வழங்கிக் கௌரவித்தார். அன்றிலிருந்து இவர் அம்பலவாண நாவலர் ஆனார்.

### திருஞானசம்பந்தர் மடம்

அம்பலவாண நாவலர் திருநெல்வேலியில் ஸ்ரீ நெல்லையப்பர் காந்திவிலாச மண்டபத்தில் நெடுங்காலம் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார். பிரசங்கம் தொடங்கும் முன் கொடி, குடை, ஆலவட்டம், செங்கோல் முதலான விருதுகளுடன் அழைத்துச் செல்லப்படுவார். இராமநாதபுரம் சேதுபதி மகாராசாவும் ஏனைய பிரபுக்கள் பலரும் இவரது பிரசங்கங்களைக் கேட்பதோடு, பிரசங்க முடிவில் பொன்னும், பட்டும், மணியும், நிலபுலங்களும் பரிசாக வழங்கினர். இவ்வாறு திருநெல்வேலியில் அம்பலவாண நாவலர் தனக்கு பரிசாக கிடைத்த 5 வீடுகளையும், கோடக நல்லூர் என்னும் கிராமத்தில் கிடைத்த 103 நெற்காணிகளையும் கொண்டு திருநெல்வேலியில் திருஞான சம்பந்தர் திருமடம் தாபித்து அம்மடத்துக்கு அவற்றை வழங்கினார். அந்த மடம் இன்றும் சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

### பாடசாலையும் கோவிலும் தாபித்தமை

அம்பலவாண நாவலர் தமது பிறப்பிடமாகிய சித்தன்கேணியில் தாபித்த தமிழ்ப் பாடசாலையில் தாமும் ஓர் ஆசிரியராய் அமர்ந்து கற்பித்து வந்தார். அந்த தமிழ் பாடசாலையை சில வருடங்களால் சைவாங்கில வித்தியாசலையென விஸ்தரித்தார். அதுவே இன்று புகழ்பெற்ற வட்டு இந்துக் கல்லூரியாக விளங்குகின்றது. சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவிலின் வட பாகத்தில் அமைந்துள்ள கைலாசநாதர் நித்திய கல்யாணியம்மை கோவிலும் அம்பலவாண நாவலராலேயே தாபிக்கப்பட்டவை. சித்தன்கேணிச் சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்திலும் இவருடைய திருப்பணிகள் இடம் பெற்றன.

### நாவலரின் நன்றிக் கடன்

1879 இல் நாவலர் பெருமான் மறைந்தார். யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் மறைவு தினத்திலன்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலுருந்தும் மக்கள் பெருந்திரளாக வந்து நாவலர் பெருமானுக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். யாழ்ப்பாணக் கச்சேரி அதிபரான வெள்ளைக்காரத் துவைனந்துரையும் அன்று கச்சேரி அலுவலர்களையெல்லாம் நாவலருக்கு அஞ்சலி செலுத்தச் செல்லுமாறு பணித்துத் தாமும் சென்று அஞ்சலி செய்தார். அம்பலவாண நாவலரோ அவரின் இறுதி யாத்திரை தொட்டு தகனக்கிரியை நடைபெற்ற மயானம் வரை தமது குருவாகிய நாவலர் பெருமானின் பாதுகைகளைக் கைகளாற் பற்றிக் கொண்டு அங்கப் பிரதிட்டையாக மயானத்துக்கு புரண்டு சென்று அஞ்சலி செய்தார். பின்பு நாவலர் சற்குரு மணிமாலை என்னும் பெயரிய 152 பாடல்களைக் கொண்ட நூலை ஆக்கி மக்களுக்கு வழங்கினார்.

பூவல யஞ்செய்த மாதவம் ஒருருப்
போந்துவந்த
நாவல சற்குரு மாமணி மாலை
நயந்தியலப்
பாவல நம்பிக் கருள்மா மறையுண்மை
பாலித்தாம்
காவலர் நாரையிற் பொல்லார்
கழலிணை காப்பதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃது நாவலர் சற்குரு மணிமாலையில் வரும் கணபதி காப்பு. சற்குரு மணி மாலையில் வரும் செய்யுள் ஒவ்வொன்றும் நாவல சற்குருமாமணியே என்று முடிபு பெறுகின்றன. அந்நூலுக்கு அம்பலவாண நாவலர் எழுதிய முகவுரையில் ''எம்பெரு மான் வந்தருளிய புண்ணியந்தான் இந் நாள் நாவலர் யாம், பாவலர்யாம், யோகி கள் யாம், ஞானிகள் யாம் எனப் பல்லோ ரும் அங்காங்கு ஞானமும் ஆசாரமுமுடை யவர்களாய்ப் பொருளும் புகழும் பூஜ்யத் தையும் பெற்று வாழும் அவரவர் இன்ப வாழ்வு என்பது யாரறியாதார்? இந்தக் காடாந்த காரத்தில் எம்பெருமான் நாவ லர் சுவாமிகள் லோகப் பிரகாசராய் வந்த வரவை விமர்சகர்களாய் உற்று நோக்கு வார்க்கு அது சிவாஞ்ஞையினால் இத் தமிழ் உலகின் இருளைத் தடுத்து அதனை வாழ்விக்க வந்த வாழ்வின் வரவாய் முடியு மன்றி மற்று யாதென்று சொல்லுவோம்'' என்று தமது சற்குருவாகிய நாவலர் பெரு மானைக் குறிப்பிடுகின்றார். நாவலர் பெருமானின் அருள் வாழ்வையே அவர் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார்.

ஞான ஒழுக்கம் வறந்ததுட் டக்கலி
நாளில்வந்து
ஞான ஒழுக்கப் பிரசங்க மாமழை
ஞாலமெல்லாம்
கான மெனப்பொழிந் தார்த்தாய்
அருட்புட் கலாவர்த்தமே
கோனம தூறு முகநா வலசற்
குருமணியே

நாவலர் பாவலர் ஞானிகள் யோகிகள்
நாமெனவே
காவல நாட்டிலிந் நாள்வலர் வாழுங்
கருமமெல்லாம்
பூவல யஞ்செய்த பாக்கிய நீவந்த
புண்ணியங்காண்
கோவல ஆறு முகநா வலசற்
குருமணியே.

இவை நாவலர் சற்குருமணிமாலையிலுள் ளவை. ஒரு பானை சோற்றுக்கு ஓரவிழி பதம் பார்ப்பது போல இப்பாடல்களைக் கொண்டே அந்த நூலின் அருமை பெரு மைச் சிறப்புக்களையுணரலாம்.

## சேர் பொன் இராமநாதனும் அம்பலவாண நாவலரும்

1930 ஆம் ஆண்டாக இருக்கலாம். ஒரு நாள் கொழும்பு விவேகானந்தசபை யிலே ஆறுமுக நாவல குருபூசைத் தினத் திலே சேர் பொன் இராமநாதன் தலைமை யிலே நடந்த விழாவில் ''இந்த இராம நாதனைப் போல இனியொரு இராம நாதனை நான் பார்க்கப் போவது இல்லை'' எனச் சேர் பொன் இராம நாதனை அம்பலவாணநாவலர் கூறினார் எனவும் அதேபோல் ''இந்த அம்பலவாண நாவலரைப்போல் இனியொருவரை நான் காணப்போவது இல்லை'' எனச் சேர் பொன் இராமநாதன் கூறினாரெனவும் அறியக்கிடக்கிறது. இந் நாவலர் இலங் கையிற் செய்த கடைசிச் சொற்பொழிவு இதுதான் என்று பெரியோர் கூறுவர்.

## வேறு ஆக்கங்கள்

திரு நாவலர் மான்மியம், அருணாசல மான்மியம், வேணு வனலிங்கோற்பவம், திருவாதிரைத் திருநாள் மகிமைப் பிரிவாகம் என்பன அவர் இயற்றிய வசன நூல்கள். பௌஷ்கராகமம், அகோரசிவாச்சாரியார் பத்ததி என்ற சிறந்த நூல்களைத் திருத் தமுற அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

இவரியற்றிய பெரிய புராணபாடியம், சித்தாந்தப் பிரபோதம், தஷாதர்சம், சைவசந்நியாசபத்ததி, ஆரிய திராவிடப் பிரகாசிகை ஆகிய நூல்கள் இன்னும் அச் சிடப்படாமல் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாவலர் மறைவு

திருநெல்வேலியில் அமைத்து நடத்திய திருஞானசம்பந்தர் மடத்தைப் போல சிதம்பரத்திலும் நாவலர் திருஞானசம்பந்தர் மடம் அமைத்துச் சிறப்புற நடத்தி வந்தார். 1931 ஆம் ஆண்டில் சிதம்பரம் சென்ற நாவலர் அங்கேயே தங்குவாரா யினர். தேகசுகம் சிறிது பாதிப்புற்ற நிலையிலே இருந்த நாவலர் 1932 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் சிறுத்தொண்டநாயனார் குருபூசைத்தினத்தில் இறைவன் திருவடிப்பேறு பெற்றார். அப்பொழுது அவரின் வயசு 77.

### வேண்டுகோள்

நல்லைநகர் ஆறுமுக நாவலரைப் போலவே வாழ்நாள் முழுவதும் நைட்டிகப் பிரம்மச்சாரியாய் நாவலம் படைத்த வராய்த் தொண்டராய் வாழ்ந்து சைவ சமயத்துக்கும் தமிழுக்கும் அரும்பாடுபட்டவர் அம்பலவாண நாவலர். நல்லை நாவலருக்கு நல்லூரில் மண்டபம் அமைத்து உருவச்சிலை நிறுவிச் சைவத் தமிழ் மக்கள் நன்றிக்கடன் ஆற்றினர். அவ்வாறே சித்தன்கேணி நாவலருக்கும் சித்தன்கேணியில் கலாசார மண்டபம் அமைத்துப் பலரும் பயன் பெறும் வண்ணம் படிப்பகமோ வேறு மண்டபமோ எழுப்பி அவர் நினைவு நீக்காவண்ணம் நடவடிக்கையெடுத்தல் சைவத் தமிழ் மக்களுக்குப் பொதுவாகவும், சித்தன்கேணியில் சீருடன் வாழும் அவருடைய உறவினருக்குச் சிறப்பாகவும் உரிய கடமையாகும். அவர் தாபித்த வட்டு இந்துக் கல்லூரியிலேயோ அன்றி அவரின் உறவினருக்குரிய மகா கணபதிப்பிள்ளையார் கோவிற் பூங்காவிலேயோ இந்த நினைவாலயத்தை அமைக்கலாம்.

---

ஆதாரம்:


1. நாவலர் சற்குருமணிமாலை — பதிப்பித்தவர் பண்டிதர் த. சுப்பிரமணியம்
2. தமிழறிஞர் சரித்திரம் — வெளியீடு வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம்
3. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் — மகாவித்துவான் சி. கணேசையர்
4. நாவலர் மரபினரான திரு. ச. திருச்சிற்றம்பலம் அவர்கள் தந்த குறிப்புக்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி ஆடை அகம்

முருகன் அருள் பொலிகவென வாழ்த்தி அழைக்கின்றது

உங்களுக்குத் தேவையான

வெளிநாட்டு உள்நாட்டு

★ துணிவகைகள், றெடிமேட் ஸ்கேட்
பிளவுஸ் வகைகளுக்கும்

★ ஆடவர் சேட்டிங், சூட்டிங்ஸ்
ஆதியனவுடன்

மேலும் தேவைகளுக்கு வேண்டிய
பிடவைகளையும்
உங்கள் விருப்பம் போல்
தெரிந்து பெறச்
சிறந்த தாபனம்

# அபிராமி ஆடை அகம்

155, சிறப்பு அங்காடி,
இராசன் தெரு (மின்சாரநிலைய வீதி),
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதத்தில் கன்மம்
## — ஒரு நோக்கு

ஆக்கம்: நயினை கி, கிருபானந்தர்

இந்து சமய மரபிலும் தத்துவ சிந்தனைகளிலும் கன்மக் கோட்பாடும் மறுபிறப்புக் கோட்பாடும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத வகையிலே பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. கன்மம் என்றால் செயல் எனப் பொருள்படும். செய்யும் செயல்கள் அனைத்திற்கும் பலன் உண்டு என்பதே கன்மக் கோட்பாட்டினுடைய அடிப்படையான அம்சமாகும். செயல்கள் மூன்று விதமாக அமைகின்றன. உள்ளத்தால் செய்வது, உடலால் செய்வது, வாக்கால் செய்வது என அவை முத்திறப்படும். உள்ளத்தினாலே ஒருவனுக்கு கேடு நினைப்பது தீது என்பதனை திருவள்ளுவரும்,

''உள்ளத்தால் பொய்யா தொழுகின்
உலகத்தார்
உள்ளத்து ளெல்லாந்தலை''

எனக் கூறிப்போந்தார்.

எனவே மனத்தளவில்கூட மற்றவர்களைப் புண்படுத்தக்கூடாது என்ற ஒரு நல்ல கருத்தினைக் கன்மக் கோட்பாடு எமக்கு எடுத்து விளக்குகின்றது. நாம் செய்கின்ற எல்லாச் செயல்களும் கன்மத்தின் பாற்படுகின்றது. ஆகவே நல்வினையாயினும் சரி தீயவினையாயினும் சரி அது கன்மமே. இந்த கன்மம் இரண்டு வகைப் படும். ஒன்று நல்வினை மற்றையது தீவினை, நல்வினையின் பயனாக புண்ணியமும், தீவினையின் பயனாக பாபமும் உண்டாகின்றது. ஒருவன் இருவினைகளையும் செய்யும் இடத்து அவ்விருவினைகளுக்கும் உரிய பயனையும் அவன் அனுபவித்தே தீரவேண்டும். அவன் செய்த புண்ணியம் அவன் செய்த பாவங்களை நீக்க மாட்டாது. அது மட்டும் அன்றி அவரவர் செய்த வினைப்பயன்களையும் அவரவர்களே அனுபவித்து ஆக வேண்டும். அவன் செய்த நல்வினைகள் அவன் செய்த தீவினைகளைக் களைய மாட்டாது. இரண்டுக்கும் உரிய பலனை அவன் அனுபவித்தாக வேண்டும் எனலாம்.

''தினை விதைத்தவன் தினையறுப்பான்
வினை விதைத்தவன் வினை
அறுப்பான்''

என்ற பழமொழி இதனையே விளக்குகின்றது எனலாம். ஒவ்வொரு மனிதனுக்குமிடையில் பல ஏற்றத்தாழ்வுகள், மாறுபாடுகள், இருக்கின்றன. இதற்கு எல்லாம் என்ன காரணம்? நாம் இப்பொழுது எப்படி இருக்கின்றோம், என்ன செய்து கொண்டு இருக்கின்றோம் என்பது எல்லாம் நாம் முன்பு என்ன செய்தோம் எப்படி இருந்தோம் என்பதைப் பொறுத்து இருக்கின்றது. அப்படி என்றால் எமது வாழ்க்கைப் போக்கின் விருப்பு வெறுப்பும் உயர்வு தாழ்வும் ஏற்கனவே நிச்சயிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுவிட்டதா? அப்படியானால் நாம் இப்பிறப்பிலே என்ன முயற்சி செய்தும் எம் வாழ்வில் முன்னேற்றம் இல்லையா? என்ற வினா எழுகின்றது. இதற்கு தகுந்த விடை அளிக்கின்றது சைவசித்தாந்தம்.

வினைகள் ஒவ்வொன்றும் அதற்குரிய பலனைக் கொடுத்தே தீரும். அதனைத் தடுத்தல் முடியாது. ஆனால் பகுத்தறிவு உள்ள மனிதனால் ஓரளவுக்கு கட்டுப் படுத்தமுடியும். இதற்கு திரு. இராதா கிருஷ்ணன் விளக்கம் கூறும்போது ஒரு சீட்டு ஆட்டத்தில் சீட்டுக்களைத் தெரிந்து எடுக்கும் உரிமை இல்லை. ஆனால் கிடைக்கப்பட்ட சீட்டுக்களைக் கொண்டு விளையாட்டை வெற்றிகரமாக ஆடுவதும் தோல்வி அடையச் செய்வதும் அவரவர் கையிலேயே இருக்கின்றது. அதுபோன்று கன்ம வினைகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆன்மாவுக்கு இல்லை ஆயினும் கிடைக்கப்பட்ட சீட்டுக்களைக் கொண்டு விளையாட்டை வெற்றிகரமாக ஆடுவதும் தோல்வி அடையச் செய்வதும் அவரவர் கையிலேயே இருக்கின்றது. ஆயினும் கிடைக்கப்பட்ட வினைகளை தனது பகுத்தறிவினைப் பயன்படுத்தி அதன் தாக்கங்களை ஓரளவிற்குக் குறைத்துவிடலாம். கொல்லும் விஷமானது வைத்திய முறையிலே சுத்திகரிக்கப்பட்டால் அது மருந்தாவது போல எம்மைப் பந்தித்த வினைகள் செயற்படும் போது அதிலே பற்று வையாது பயன் கருதாது ஆற்ற முற்படுவதே கன்ம பந்தத்தில் நின்று விடுபட ஓரேவழி என்று கூறுகின்றது.

இதனையே பகவத்கீதையும் ''கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'' என்கின்றது. போர்க்களத்திலே பாண்டவர்கள் ஒருபுறமும் கௌரவர்கள் மறுபுறமும் நிற்கின்றார்கள். அருச்சுனன் உறவினர் களையும் நண்பர்களையும் கொல்லவேண்டி வந்து விட்டதே என எண்ணி தேரிலே சோர்வு உற்றவனாக இருக்கின்றான். இந்த நிலையில் கண்ணன் ''அருச்சுனா! நீ கடமையைச்செய் பலனை எதிர்பாராதே. பலனை எதிர்பார்ப்பதால் கன்மமே உண்டாகின்றது. கன்மத்தினால் மீண்டும் பிறப்பு உண்டாகின்றது. எனவே பலனை எதிர்பார்த்து கடமையைச் செய்தல் கூடாது'' என்கிறார்.

ஒருவன் ஒரு பிறப்பில் செய்த வினைகளின் பயன்களை சில சமயம் அப்பிறப்பிலே அவன் அனுபவிக்க நேரும். அது தவறின் அனுபவியாது எஞ்சியுள்ள வினைப்பயன்களை அனுபவிப்பதற்கு இன்னும் ஒரு பிறப்பு உண்டாகும். இதனை மறுபிறப்பு என்பர். ஒருபிறப்பில் செய்த வினைப்பயன் அப்பிறப்பிலே அனுபவித்தமைக்கு அயோத்தி மன்னன் தசரதச் சக்கரவர்த்தியை உதாரணம் காட்டிடலாம். அவனது தவறால் கண்ணிழந்ததாய் - தந்தையர் புத்திர சோகத்தால் உயிர் துறந்தது போல் அவனும்தனது மகனை பிரிந்த புத்திர சோகத்தால் உயிர்துறந்தான். ஒருபிறப்பில் செய்த வினைப்பயன் அப்பிறப்பிலேயே அனுபவித்தான். ஒரு பிறப்பில் செய்த வினைப்பயன்களை அப்பிறப்பிலே அனுபவிக்க முடியாதுபோனவிடத்து அதனைத் தொடர்ந்து வரும் பிறவியிலேயே அனுபவிக்க நேர்ந்தமைக்கு 'கோவலன்' தான் முற்பிறப்பிலே கள்வன் இல்லாத ஒருவனைக் கள்வன் எனக் குற்றம் சாட்டி கொன்றவன் என்றும், அவ்வினைப்பயன் அவன் தொடர்ந்து வந்த பிறப்பிலே அவன் கள்வன் அல்லாத போதும் பாண்டிய மன்னனால் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டு கொலை செய்யப்படுகின்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதில் இருந்து ஒருவன் தனது வினைப்பயனை ஒருபிறப்பிலேனும் அல்லது தொடர்ந்துவரும் பிறப்பிலேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்தாக வேண்டும் என்ற கருத்து தெரிகின்றது.

ஒவ்வொரு செயலும் பயனைத்தருவது என்பது போல ஒருவன் தனது செயலுக்குரிய பயனைத் தனது வாழ்நாளில் அனுபவித்து முடிக்கின்றானா என்றால் அது சாத்தியம் இல்லை எனலாம். எனவே அவ் வினைப்பயனை அனுபவிப்பதற்கு இன்னும் ஒரு பிறப்பு அவனுக்குக் கொடுக்க வேண்டும். இதுவே மறுபிறப்பு என்பதாகும். இவ்வாறு மறுபிறப்பு ஏற்பட்டால் தான் ஒருவன் தான் முற்பிறப்பில் அனுபவித்து எஞ்சியுள்ள வினைப்பயனை அனுபவிக்க முடியும். அவ்வாறு வினைப்பயனை அனுபவிக்கும்போது அவன் மேலும் பல புதிய வினைகள் செய்கின்றான். அவற்றின் பயன்களை அனுபவிக்க மேலும் பிறப்பு எடுக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது. எனவே கன்மமும் மறுபிறப்பும் தம்முள் ஒன்றை ஒன்று பற்றிப் புனைந்து ஒரு சங்கிலித் தொடர் போல அமைந்து விளங்குகின்றது எனலாம்.

நல்வினை செய்தோர் துன்பம் அடைவதையும் தீவினை செய்தோர் இன்பமாக இருத்தலையும் நாம் காணும் போது இவற்றுக்குக் காரணம் என்ன? உலகில் அங்கவீனர்கள் பிறப்பதற்குக் காரணம் என்ன? முற்பிறப்பும் முற்பிறப்பில் செய்த வினையும் இல்லை என்றால் இவற்றுக்குக் காரணம் காட்ட முடியுமா? இதனால் தான் பழவினை உண்டு என்கின்றார்கள். அப் பழவினையினை மூன்றாக வகுப்பர். அவை பிராரத்துவம் — ஆகாமியம் — சஞ்சிதம் எனப்படும்.

பலபிறவிகள் பெற்று அதிலே செய்த கன்மவினை இன்னும் அனுபவிக்கப்படாது சேர்ந்து இருக்கும் வினையின் தொகுதி சஞ்சிதம் எனப்படும். அந்த வினைத் தொகுதியில் இருந்து இப்பிறவிக்கு என நாம் அனுபவிப்பதற்காக எடுத்துக் கொடுக்கப்படும் குறிப்பிட்ட வினைப்பகுதி பிராரத்துவம் எனப்படும். பிராரத்வ வினையை அனுபவிக்கும் போது புதிதாக ஈட்டப்படும் வினை ஆகாமியம் எனப்படும். இவற்றை முறையே பழவினை — நிகழ்வினை — எதிர்வினை என்றும் கூறுவர். பிராரத்துவ வினைக்கேற்பவே தனுகரண — புவன போகங்கள் எமக்குக் கொடுக்கப்படுகின்றன.

நாம் செய்த கன்ம வினைகளின் பலன்கள் சில உடனே எம்மை வந்து சேரும் தன்மை வாய்ந்தவை. சில கன்மவினைகள் காலம் தாழ்த்தியும் மறுபிறப்பிலும் எம்மை வந்துசேரும் தன்மை வாய்ந்தவை. இதற்கு இந்துமதம் கூறும் விளக்கம் என்னவென்றால் ஒருவன் தென்னை – வாழை – கீரை என்பவற்றை ஒரே நேரத்தில் நடுகின்றான். இவற்றுள் இறுதியாக நாட்டப்பட்ட கீரையே முதலில் பயன் தருவதாகவும் இரண்டாவதாக நாட்டப்பட்ட வாழை இரண்டாவதாகப் பயன் தருவதாகவும் முதல் நாட்டப்பட்ட தென்னை மூன்றாவதாகப் பலனைத் தருவதாகவும் அமைகின்றது. இவ்வாறு ஒழுங்குமாறி பலன்கள் எம்மை வந்து அடைகின்றன. இதனைப் போன்றே கன்மவினைகளும் ஒழுங்கு மாறி எம்மை வந்து சேருகின்றன எனலாம்.

கன்மக் கோட்பாட்டை ஏற்கும் மதங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று இப்பிறப்பும் இப்பிறப்பிலுள்ள கன்மங்களும் மட்டுமே உண்மை என்பர். இப்படிக் கூறுபவர்கள் மறுபிறப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள். இவர்கள் நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய் என்ற சடக் கொள்கைக் கருதுகோள் உடையவர்கள். அதாவது அவர்கள் மேல்நாட்டுச் சமய வாதிகள்.

இரண்டாவது பிரிவினர் சமண பௌத்தர்கள். இவர்கள் கன்மம் ஓர் அறிவுடைய பொருள் என்றும் அதற்குத் தனக்குரிய ஆன்மாவை சென்றடையக் கூடிய திறன் உண்டு என்றும் கூறுவர். ஒரு மாட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவத்திலே பல மாடுகளும் கன்றுகளும் இருக்கும் பொழுது ஒவ்வொரு கன்றும் தனக்குரிய தாய்ப் பசுவைத் தானே சென்றடையும் திறன் வாய்ந்தது போல கன்மம் தனக்குரிய ஆன்மாவைத்தானே சென்றடையும் திறன் வாய்ந்தது என்பர்.

மூன்றாவது பிரிவினர் இந்துக்கள். இவர்கள் கருத்துப்படி இறைவன் தான் ஆன்மாவிடம் வினைப்பயன்களைச் சேர்த்து வைக்கிறான் என்பர். ஒரு பிறவியிலே ஆன்மா செய்யும் வினைப்பயனைத் தொகுத்து வகுத்து அடுத்து வரும் பிறவிக்கு உரிய நிலையை அமைத்துக் கொடுக்கின்றான். ஏனெனில் ஆன்மா தான் முன்வினைப் பயனை அறிவதற்கு அல்லது தேர்ந்து எடுத்துக் கொள்வதற்கு சக்தி அற்றது என்றும் வினைப்பயனும் தான் செய்த வினையைத் தானே சென்றடையும் சக்தி அற்றது என்றும் அது ஒரு சடப்பொருள் - எனவே இரண்டையும் இணைக்க ஓர் இறைவன் இந்து சமயத்திலே உள்ளான். இதுபற்றி சைவசித்தாந்த நூலாகிய திருவருட் பயன் பின்வரும் குறள் மூலம் தெளிவுபடுத்துகின்றது.

''செய்வானும் செய்வினையும்
சேர்பயனும்
சேர்ப்பவனும் உய்வான் உளன் என்று
உணர்''

என்கின்றது. கன்ம வினைகள் எமக்கு மீண்டும் திரும்பி வரும்போது அவை மூன்று விதமாக வருகின்றன. அவையாவன ஆதி பௌதிகம், ஆதி ஆத்மிகம், ஆதி தைவிகம் என மூவகைப்படும். ஆதிபௌதிகம் என்னும் பொழுது பஞ்சபூதத்தால் வருவன. (நீரில்மூழ்கல், தீப்பற்றல் போன்றன) ஆதிதை வீகம் என்னும் போது தெய்வத்தால் வருவன. (தெய்வசீற்றம் பேய் முதலியன) ஆதி ஆத்மீகம் என்னும் போது உயிர்களால் வருவன. (மனிதனால் – நாய் – புலி போன்ற மிருகத்தால் வருவன) இவ்வாறு அமையும்.

வள்ளுவப் பெருந்தகை ஊழ்பற்றிக் குறிப்பிடும் பொழுது,

''ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினும் தாம் முந்துறும்''

என்கிறார். தேவார திருவாசகங்களிலும் பல பிறப்புக்கள் உண்டு என்ற கருத்து நிலவுகின்றது. மாணிக்கவாசக சுவாமிகள்,

''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி
என்மனத்தே வழுவாது இருக்கவரம்
தரல் வேண்டும்''

என இறைவனிடம் அடுத்த பிறவிக்கு விண்ணப்பிக்கின்றார். ஒருவனின் சிந்தனை சொல் – செயல் என்பவற்றால் வரும் பயன் கன்மத்துள் அடங்கும். இதுவே கன்மக் கோட்பாட்டின் அடிப்படை ஆகும். ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு என்ற காரணத்தினால் அச் செயலைச் செய்தவன் அச்செயலுக்குரிய பலனை அனுபவித்தே தீர வேண்டும் என்ற நிலை உருவாகின்றது. எனவே ஒருவனின் நன்மை தீமை யாவும் அவனால் செய்யப்பட்ட செயல்களின் விளைவே என்பது தெரிகின்றது. எனவே ஒருவன் தன்னுடைய இன்றைய நிலைக்குத்தானே காரணமாகின்றான்.

''நன்றும் தீதும் பிறர் தரவாரா''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் வீதியில் உலாவிய மூவர்

ஆத்மஜோதி நா. முத்தையா

அந்த மூவர், சுவாமி முத்தியானந்தர் என்ற பெயருடைய கடையிற் சுவாமிக ளும், இவருடைய சீடரான செல்லப்பா சுவாமிகளும், செல்லப்பா சுவாமிகளின் ஒரே ஒரு சீடரான யோகர் சுவாமிகளும் ஆவர். வைரமுத்துச் செட்டியார் நல்லூ ரைச் சேர்ந்தவர். இவர் கடையிற் சுவா மிகளுடைய உத்தம சீடர். கடையிற் சுவா மிகள் வைரமுத்துச் செட்டியாரை முன் னிட்டே முதன் முதல் நல்லூருக்கு வந்த வர்.

முத்தியானந்தர் காலகதியில் பெரிய கடையையே இருப்பிடமாகக் கொண்டார். ஆனபடியினால் கடையிற் சுவாமிகள் என் னும் பெயரைப் பெற்றார். தினமும் கடை யிற் சுவாமிகள் தமது அடியார் புடை சூழ நல்லூர் கந்தனிடம் வந்து திரும்புதல் வழக் கம். ஓட்டமாகவே வந்து உள்வீதியை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு ஓடிவிடுவார்.

கோப்பாயைச் சேர்ந்த ஒரு அம்மை யாருக்கு பாரிசவாதம் வந்து ஒருகை வழங்க முடியவில்லை. அந்த அம்மையாருக்குக் கடையிற் சுவாமிகளைத் தரிசனை செய் தால் தனது நோய் நீங்கிவிடும் என்ற நம் பிக்கை. சுவாமிகளை அவர் எப்பொழு துமே கண்டதில்லை. சுவாமிகள் நல்லூ ருக்கு வந்து செல்பவர் என்று கேள்விப்பட் டிருந்தார்.

அம்மையார் ஒருநாள் கோவில் வாச லுக்கு வெளியே நின்று கொண்டிருந்தார். கடையிற் சுவாமிகள் வருகிறார் என்று யாரோ சொல்வதை அம்மையார் கேட் டார். மக்களின் பின்னே அம்மையாரும் ஓடினார். அம்மையார் வாசலுக்குச் செல் வதற்கிடையில் சுவாமிகள் உள்வீதியைச் சுற்றி ஓடிவந்து விட்டார். கோயில் ஐயர் எல்லோருக்கும் பூ கொடுத்துக் கொண்டு வந்தார். சுவாமிகளும் ஐயரிடம் கைநீட் டினார். ஐயர் கைநிறைந்த பூக்களைக் கொடுத்தார். சுவாமிகள் அதனை வாங்கி வாயில் போட்டுக் குதப்பினார். அச்சம யம் அம்மையார் சென்று கையை நீட்டி னார். சுவாமிகள் வாயில் குதப்பிய பூ வினை எடுத்து கையில் பூசிவிட்டார். அன் றோடு அம்மையாருடைய பாரிசவாதமும் நீங்கிவிட்டது.

கடையிற் சுவாமிகள் தினமும் முருகன் சந்நிதிக்கு வந்து செல்வதை ஒருவர் தேர டியில் இருந்து பார்த்துக் கொண்டிருப்பார். ஜனங்கள் கடையிற் சுவாமிகளின் பின்னே ஓடிச் செல்வதைப் பார்த்து ரசிப்பார். அவ ருக்கும் ஒரு ஆசை தோன்றியது. தானும் கடையிற் சுவாமிகளைக் குருவாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. அவர் செல்லப்பா சுவாமிகள். சாமானிய மக்களின் கண்களுக்கு இந்தச் சீவன் முத்தர் வீசர்ச் செல்லப்பராகக் காட்சி அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பர், கடையிற் சுவாமிகள் சாராயம் குடிப்பவர் என்று கேள்விப்பட்டுள்ளார். அதனால் தனது குருநாதரைத் தரிசிக்கும்போது ஒரு சாராயப் போத்தல் கொடுக்க வேண்டும் என்று ஒரு சாராயப் போத்தலும் ஒரு வெள்ளி ரூபாவும் சேர்த்து வைத்திருந்தார். ஒருநாள் கடையிற் சுவாமிகள் வருகிறார் என்பதை அறிந்து சாராயப் போத்தலை எடுத்துக் கொண்டு ஓடினார். சாராயப் போத்தல் வெறுமானே இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டார். குருவைத் தேடி தான் அல்லவா செல்ல வேண்டும் என்று திட்டம் போட்டு குருவைத் தேடிச் சென்றார்.

செல்லப்பர் தூரத்தே வருவதைக் கண்ட கடையிற் சுவாமிகள் பக்கத்தில் இருந்த கடலைக்காரியிடம் ஒரு முழு ரூபா வாங்கி அதனை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து வைத்துக்கொண்டார் செல்லப்பர் கிட்ட வந்ததும் கடையிற் சுவாமிகளின் காலில் விழப்போனார். கடையிற் சுவாமிகள் அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு தான் வைத்திருந்த முழு ரூபாவை செல்லப்பரிடம் கொடுத்தார். கடையிற் சுவாமிகள் தன்கையிலிருந்த குடையைச் செல்லப்பரின் தலையில் வைத்துச் சிறிது நேரத்தின் பின் ஓடடா என்றார். செல்லப்பர் தேரடிக்கு வந்து 15 நாட்கள் மூச்சுப் பேச்சற்று ஒரே படுக்கையாய்ப் படுத்துவிட்டார். இதுதான் செல்லப்பருக்குக் கிடைத்த ஸ்பரிசதீட்சையாகும்.

செல்லப்பர் இரவு பத்து மணிக்கு மேல் ஊர் அடங்கினபின் கோயில் சந்நிதிக்குச் செல்வார். பிதாவே! பிதாவே என்று இரவு முழுவதும் முருகனோடு பேசிக்கொண்டே இருப்பார். காலை நாலரை மணிக்கு கோயில் மணி ஓசை கேட்டதும் தமது பழைய இடத்தில் சென்று முடக்கிக் கொள்வார். யோகிகள் ஞானிகளுக்கு இரவு பகலாவதும் பகல் இரவாவதும் இப்படியேதான்.

யோகர் சுவாமிகள் இக்காலத்தில் கிளிநொச்சியில் அரசாங்க உத்தியோகம் பார்த்தவர். செல்லப்பர் தனது எதிர்காலச் சீடனைத் தேடிக் கிளிநொச்சி சென்றார். ஜன்னலால் அவரைப் பார்த்தார். யோகர் செல்லப்பருடைய நயன தீட்சை பெற்றதும் செல்லப்பருக்குப் பின்னாலேயே நல்லூருக்கு வந்துவிட்டார்.

யோகர் நல்லூர்த் தேரடியிலேயே தனது குருநாதருடன் தங்கிவிட்டார். செல்லப்பர் தனது ஒரே ஒரு சீடனுக்கு நான்கு மகாவாக்கியங்களை உபதேசம் செய்தார்.

எப்பவோ முடிந்த காரியம்  
ஒரு பொல்லாப்புமில்லை  
நாம் ஒன்றும் அறியோம்  
முழுவதும் உண்மை

இந்த நான்கு மகாவாக்கியங்களுக்குள்ளும் அடங்காத விஷயங்கள் எதுவும் இல்லை என்றே கூறலாம். செல்லப்பர் சிலகாலம் யோகரை தன்னுடன் வைத்து வேட்டைவாளி தான் எடுத்த புழுவைக் கொட்டிக் கொட்டி தன்னைப்போல் ஆக்குவது போன்று செல்லப்பரும் யோகரைப் பக்குவப்படுத்தி கதிர்காமத்துக்கு ஓடுங்கடா என்று சொல்லி உடனிருந்தவர்களையும் துரத்திவிட்டார்.

நல்லூர் வெளியிலே தனது குருநாதனைக் கண்டவாறு யோகர் பாடுகின்றார்.

நல்லூர் வெளியிலே பொதுநடம்  
புரிகின்றான்  
நங்கள் குருநாதன் எங்கும் பிரகாசன்  
எல்லாரையுந்தன் னிடத்திலேயே  
காண்பவன்  
இயம நியமங்களில் எள்ளளவுமோ  
சபிகான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாப்பிங் கில்லை யென்று
போதனைசெய்வான்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக்
காண்பவன்
செல்லப்ப னென்னுந் திருப்பெய
ருடையான்
சிங்கார நடையொடு சிரிப்பினை
யுடையான்

ஆரறி வாரென அடிக்கடி
சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்காரமாய்க்
கிடப்பான்
பேரறி வாளனெனப் பிறரெவரு
மோவறியார்
பித்தனென் றுலகோர் பேசுவா
ரேசுவார்.

## நவக்கிரக கணநாத விநாயகர்

கணபதி தோற்றங்களில் மக்களுக்கு அருள் பாலிக்க ''நவக்கிரக விநாயகர்'' ஒருவராவர். இத்தோற்றத்திலே சூரியனைத் தன் நெற்றியிலும் சந்திரனைத் தன் நாபிக்கமலத்திலும் செவ்வாயைத் தனது வலது தொடையிலும் புதனைத் தம் வலது கீழ்க்கையிலும் வியாழனைத் தன் சிரசிலும் வெள்ளியைத் தன் இடது கீழ்க்கையிலும் சனியை தனது வலது மேற்கையிலும் இராகுவை தனது இடது மேற்கையிலும் கேதுவை தமது இடது தொடையிலும் அடக்கிக் கொண்டு காட்சியளிக்கின்றார். மனிதருடைய வாழ்க்கையில் கிரக சஞ்சாரங்களின்படி நன்மை தீமைகள் கஷ்ட நட்டங்கள் நடைபெறுகின்றன என்பர். அவ்வாறு கிரகசஞ்சாரங்களின் படிநடக்கும் செயல்களால் விக்கினங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு தலைவனாய கணபதி தாள்பணிந்து வணங்குவேமாயின் துயர் நீங்கி உண்மையான நிலையில் பேரானந்தம் அடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகுந்தா ஆடையகம்

## யாழ் நகரில் சிறந்த தாபனம்

### உங்கள் மனம்போல

இன்றைய நாகரீக உலக நங்கையர் விரும்பும்

❋ சேலை வகைகள்

❋ சேட், வேட்டி, சால்வைகள்

❋ பஞ்சாபி மற்றும் புதிய ரகங்களுக்கு

நீங்கள் நாடவேண்டிய இடம்

## முகுந்தா ஆடை அகம்

21, சிறப்பு அங்காடி (உட்புறம்)

**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரண கமலாலயம்

பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா

தூய்மையில் தோன்றுவது இன்பம். தூய்மையின்மையில் தோன்றுவது துன்பம். தூயமனம் உடையவர்கள் உலகமெங்கும் பேரின்ப வடிவினனாகிய இறைவனையே காண்பர்.

நான், எனது, என்னும் ஆணவமாகிய அழுக்கேறி, பேராசையெனும் பிணியிலகப் பட்டு வருந்தும் மனத்திற்குத்தான் துன்பமும் நோக்காடும் உண்டாகின்றன. அவ்வழுக்கையகற்ற வழி என்ன?

இறைவன் சரணார விந்தத்தைப் பற்றினால் மனத்திலுள்ள அழுக்கு நீங்கித் தூய்மையடையும். சரணார விந்தத்தைப் பற்றும் வழி இடைவிடாமல் அவன் நாமத்தை சொல்லிக் கொண்டிருப்பதேயாகும்.

அருணகிரியார் முருகனிடம் சென்று ''அப்பா! நான் சடன், கசடன், மூடன், மட்டி, பவ வினையிலே ஜனித்தவன். முன் செய்த தீவினைகள் என் அறிவை மறைத்து விட்டன. அவமாயையில் அகப்பட்டு விழிக்கிறேன். பக்தியிருந்தால் மாயையாகிய அம்மா தானே உள்ளே அழைத்துக் கொண்டு போய் அப்பாவாகிய பிரம்மத்தைக் காட்டி விடுவாள். நானோ பழ வினையால் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய முடியாமல் வருந்துகிறேன். செய்ய வேண்டிய காரியம் உன் சரணார விந்தத்தை நினைப்பதே. அதை அரை நிமிஷ நேரம் கூட மனதை நிறுத்தி தியானம் செய்யும் வகையறியேன். நீ கருணை கூர்ந்து உன் சரணத்தைப் பற்றும் வகையை அருள் செய்ய வேண்டும்'' என்று கதறுகிறார்.

இறைவனுடைய சரணம் தாமரை மலர் போன்றது. தாமரை சேற்றிலே யுதித்து வளர்ந்து மலருகிறது. அதேபோல் சம்சாரமாகிய சேற்றுக் குட்டையிலே பக்தியெனும் வித்தை ஊன்றி இறைவனுடைய சரணமாகிய தாமரை மலரை வளர்க்கத் தெரிய வேண்டும். சம்சாரமென்பது மனைவியல்ல, மக்கள் அல்ல, காமக்ரோத ஆணவாதிகளே! சம்சாரமாகிய சேறு, முருகன் சரணமாகிய, தாமரை மலர்ந்தால், சேற்றுக் குட்டையாயிருந்த மனமும் தூய்மையாகி கங்கா தீர்த்தமாகிவிடும். அந்தச் சரணத்தைத் தவமுறையிலே தியானம் செய்து பற்றினால் பவ வினையால் வருந்தாமலிருக்கலாம்.

தவமுறையென்பது என்ன? காட்டுக்கு ஓடுவதா? காவி உடுப்பதா? மனைவி மக்களைத் துறப்பதா? அல்ல. இவை எல்லாம் இயற்கை முறைக்கு விரோதமானவை. இறைவன் இயல்பில் அல்லது இயற்கையில் தானிருக்கிறார்.

''எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ'' என்றார் மாணிக்கவாசகர் திருவாசகத்திலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காவியுடுத்தும் தாழ்சடை வைத்தும்
காடுகள் புக்குத் தடுமாறி
காய்கனி துய்த்தும் காயமொறுத்தும்
காசினி முற்றும் திரியாதே
சிவ னொடுக்கம் பூத வொடுக்கம்
தேற உதிக்கும் பரஞான
தீபவிளக்கம் காண எனக்குள்
சீதளபத்மம் தருவாயே''

என்று முருகனை வேண்டுகிறார் அருணகிரிநாதர். ஐம்புலன்களும் மனமும் ஒடுங்குமிடத்தில் பரஞான ஒளி தோன்றுமாம். அதைக்காண உன் பாதார விந்தத்தைத் தா, என்கிறார். முருகனுடைய அழகிய சரணாரவிந்தங்களில் புலன்களும் மனமும் ஒடுங்கினால் அங்கே ஞான ஒளி தோன்றும். ஆதலால் உணவையும், உடலையும், ஒடுக்குவதால் பயனில்லை என்கிறார்.

இறைவனுடைய சரணார விந்தத்தில் மனத்தை வைத்து எல்லாவிடங்களிலும் இறைவனையே காண்பவர்கள் தெய்வத்திற்கு சமமானவர்கள். வெகு தூய்மையானவர்கள். இவர்கள் காவியுடுக்காவிட்டாலும் சந்நியாசிகள்தான். இவர்கள் பழவினையால் வரும் துன்பங்களைப் பாராட்டமாட்டார்கள். இந்த உடம்பு வினையினால் வந்தது. வினைகளிடம் கடன்பட்டிருக்கிறது. வினைகளை அனுபவித்து அதன் கடனை தீர்க்காவிட்டால் பல பிறவி எடுக்க வேண்டி வரும். ஆதலால் அனைத்தையும் ஒரே பிறவியிலேயே அனுபவித்து ஒழித்து விடுவோம் என்று ''நோயேவா! உடம்பே படு! வருவனவெல்லாம் வருக, வாரா தொழிவனவெல்லாம் ஒழிக!'' என்று நடக்கும் காரியங்களுக்கெல்லாம் சாட்சியாக மட்டும் இருப்பார்கள். வெளி உலகத்தையே ஆத்மா பார்த்துக் கொண்டிருப்பதால் உள்ளே பார்க்க முடியவில்லை. உள்ளே பார்க்க வேண்டுமானால் புறப் பார்வையைச் சற்று மூடி அகத்தில் திருப்ப வேண்டும்.

''முகத்தில் கண்கொண்டு காண்கின்ற
மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே
ஆனந்தம்

என்ற சித்தர் வாக்கியம் இதையுணர்த்துகிறது.

பக்தியின் இயல்பு பகவானை நினைத்து உருகுவதே. பத்துவருடம் உருகினாலும் ஒரு நிமிடம் உருகினாலும் அருள்கிடைத்து விடும். ஆனால் மனம் மட்டும் ஒன்றுபட வேண்டும்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்
கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்'' என்றார் வள்ளலார். பள்ளிக்கூடப் படிப்பினால் பக்தியும் இறைவனுடைய அனுபவமும் உண்டாகாது. பக்தர்களுடைய உறவினால் தான் உண்டாகும்.

நான் பதினான்கு வயது சிறுவனாக இருக்கும்போது ஒரு பெரியார் ''சிவ சிவ சிவ சிவ சிவராஜா – சிவகாமிப்பிரிய நடராஜா'', என்ற நாமாவளியைப் பாடி பஜனை செய்தார். அந்த நாமாவளி என் மனதைப் பிடித்துக் கொண்டது. மறுநாள் பள்ளிக் கூடம் போகும் பொழுது மற்ற பள்ளித் தோழர்களுடன் அந்த நாமாவளியைப் பாடி கூத்தாடிக் கொண்டே சென்றேன். கவலையற்ற இளம் மனது ஆகையால் பக்தியெனும் வித்தைப் போட்டவுடன் பற்றிக் கொண்டது. அந்த ஆரம்பம் தான் இந்த நிலையில் என்னை வளர்த்துவிட்டிருக்கிறது.

அருணகிரியார் முருகனுடைய சரணத்தி வீடுபட்டார். முருகன் தேவர் தலையிலும், வேதங்களிலும், காட்டிலும், புனத்திலும் ஒன்றுபோல் கமழும் தன் சரணத்தை அருணகிரியாரின் தலைமேல் வைத்தாராம். அக்கருணையைத் தாங்க முடியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா! எங்கும் நிறைந்த நின் சரணார விந்தத்தை சிறியேனாகிய என் தலையி லும் வைத்தருளிய நின் கருணைக்கு என்ன கைமாறு செய்வேன் என்று அருணகிரி யார் கதறுகிறார்.

"சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ
வீடும் சுரர்மாமுடி வேதமும் வெங்
காடும் புனமும் கமழும் கழலே"

என்ற கந்தரனுபூதிப் பாட்டால் இக் கருத்தை யுணரலாம். நாம் இறைவனை நினைத்தாலும், நினைக்காவிட்டாலும் அவனுடைய கருணையாகிய சரணத்தை அனைவருக்கும் தருவதற்குத் தயாராயிருக் கிறான். ஆனால் பக்தன் அவன் கரு ணையை உணர்ந்து சரணத்தைப் பற்றுகி றான். மற்றவர்கள் அதை உணருவ தில்லை. இறைவனை நினைத்திருப்பது தவம்; நினைக்காமலிருப்பது அவம்.

அரைநிமிஷம் மனதை அடக்கி முரு கனை நினைக்கத் தெரிந்து விட்டால் அவன் ஓடிவந்து நம் உணர்ச்சியில் புகுந்து நம் மைத் தன் தலைமேல் வைத்துக் காப்பான். சூரியன் முதலிய எல்லா ஜீவராசிகளும் ஜகன் மாதாவினுடைய ஆணைக்கு அடங்கி நடக்கின்றன. அப்படிப்பட்ட சக்தி அவ ளுக்கு சிவத்தினிடமிருந்து வருகிறது. சிவத் தினிடம் ஊறும் சக்தியே அது. சிவத்தி னிடம் ஒன்றியிருப்பவளே ஜெகன் மாதா. சிவத்தினிடம் ஈடுபடும் ஜீவராசிகளனை வரும் பராசக்தியின் அம்சமேயாவர்.

ஜெகன்னாதனாகிய கண்ணன் குழலில் ஓங்காரத்தை ஊதி ஜீவராசிகளாகிய கோபி களை அழைத்துக் கொண்டேயிருக்கிறான். குரு நாதனாகிய குமரன் சிவ சொரூப மாகிய ஜீவராசிகளுக்கு ஓங்காரத்தை ஓதிக் கொண்டே இருக்கிறான். ஐம் பொறிகளை யும், ஆசாபாசங்களையும் அடக்கினால் கண்ணன் ஊதுவதையும், குமரன் ஓதுவ தையும் கேட்கலாம். அப்போது பக்தர்கள் சரணகமலாலயத்தை அனுபவிக்கும் காலத் தில் விழிகள் சொருகி ஒருவிதமான இன்ப மயக்கத்தில் ஆழ்ந்து தம்மை மறந்திருப் பார்கள்.

எனவே, இரவு பகலாகிய கால எல்லை யைக் கடந்தவர் தான் முருகனுடைய சர ணத்தைக் காண முடியும். "இதயத்தை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யத் தயா ராய் காத்திருக்க வேண்டும். அவ்வாறு மலர்ந்த இதயமுடையவரை நாடி, வள்ளி யைத் தேடி வந்தது போல், குமரன் மலர் முகத்துடன் தேடி, ஓடிவருவான்.

## நேத்திர விநாயகர்

சுவாமி மலையில் இருக்கும் விநாயகர் மிகவும் வரப்பிரசாதி. கொங்கு நாட்டைச் சேர்ந்த பிறவிக்குருடன் தலயாத்திரை செய்து வரும் பொழுது சுவாமி மலைக்கும் வந்தான். இவன் காவிரிக்குச் சென்று நீராடி, பின்பு நேத்திரபுஷ்கரணியிலும் நீராடி ஆலயம் வந்தான். பிறர் துணையோடு விநாயகர் சந்நிதியில் நின்று அவரைத் துதித்தான். அக்கணமே அவன் கண்பார்வை பெற்றான். அந்நாள் முதல் இத் தலத்திலுள்ள இவ் விநாயகருக்கு நேத்திர விநாயகர் என்ற பெயர் வழங்கலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியங்கா ஆடை அகம்

நல்லை குமரன் அருள் பொலிகவென
வாழ்த்துகின்றது.

உங்கள் மனங்கவர் நவநாகரீக ஆடைகளுக்கு
நாடவேண்டிய சிறந்த இடம்

# பிரியங்கா ஆடை அகம்

3, சிறப்பு அங்காடி (உட்புறம்)
**யாழ்ப்பாணம்.**

கிருஷிகா ஆடை அகம்

சிறந்த ரகம்! நிதான விலை!! அமைதியான சேவை!!!

இறக்குமதி செய்யப்பட்ட — மங்கள வைபவங்களுக்கேற்ற

* கூறைச்சேலைகள்
* காஞ்சிபுரம் பட்டுக்கள்
* பட்டு வேட்டி சால்வைகள்

எல்லாவற்றையும் ஒரேயிடத்தில் மலிவாகப் பெற
சிறந்த இடம்

# கிருஷிகா ஆடை அகம்

69 A, சிறப்பு அங்காடி,
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நகரத்திற்கு ஒரு சதுக்கம்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஒரு நாட்டிற்கு அல்லது ஒரு பிரதேசத்திற்கு அதன் தலைநகரில் அல்லது முக்கிய நகரத்தில் பல செயற்பாடுகளுக்கு அரசியல் கூட்டங்கள், ஊர்வலங்கள், தேசிய நிகழ்வுகள், கலாசார நிகழ்ச்சிகள் போன்றவற்றைச் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடத்துதற்கு சிறந்ததொரு திறந்த சதுக்கம் இருக்க வேண்டியது அவசியமாகும். இச்சதுக்கம் அநேகமாக நகர மையப் பகுதியில் அல்லது அண்மித்து இருக்கும். உலகின் பிரதான நகர்கள் பிரசித்தி பெற்ற சதுக்கங்களையும், பூங்காக்களையும் கொண்டிருப்பதனைக் காணலாம். லண்டனில் ரபல்கர் சதுக்கமும், கைட்பார்க்கும், மொஸ்கோவில் செஞ் சதுக்கம், பீஜீங்கில் ரெமன் சதுக்கம், பிராக் நகரின் வென்சிலாஸ் சதுக்கம் போன்றன குறிப்பிடத்தக்கன. இவை நகரின் மையப் பகுதியில் அமைந்திருப்பதுடன் அதன் சுற்றாடல் பிரதேசத்துடன் போக்குவரத்து பாதைகளால் இணைக்கப்பட்டும், கிராம நகரங்களுக்கிடையேயும், நகரத்திற்குள்ளேயும் இலகுவாக பிரயாணஞ் செய்யக்கூடிய போக்குவரத்து வசதிகளையும் பெற்றிருக்கின்றன. மேலும் நகரின் மையப் பகுதியிலேயே மக்களுக்கு தேவையான அடிப்படை சேவை வசதிகளான தேநீர்க் கடைகள், குளிர்பானக் கடைகள், உணவு விடுதிகள், வர்த்தக, வங்கி நிறுவனங்கள் அமைந்திருக்கும். மேலும் நகரின் மையப் பகுதி மக்கள் கூடும் இடமாக இருப்பதால் இங்கு நிரந்தரக் கழிவறைகள், நீர்வசதிகள் உண்டு. இதனால் நகரிலுள்ள சதுக்கம் கூடுதலாக நகரின் மையப் பகுதியை அமைந்து காணப்படுவது நோக்கத்தக்கது. இதனால் நகரின் நிரந்தர சேவை வசதிகளை பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு.

யாழ்ப்பாண நகரத்திற்கு நன்கு விருத்தியாக்கப்பெற்ற சிறந்த சதுக்கம் இல்லாது இருப்பது இப்பிரதேசம் சார்ந்ததும், இந்நகரத்திற்குரியதுமான சிறந்த வெளி நிகழ்ச்சிகளை, சிறப்பாக பெரிய கூட்டங்களை நடத்துவது கடினமாகவுள்ளது. நகரத்தில் மக்கள் ஒன்றுகூடுவதற்கும், கூட்டங்கள் நடத்துவதற்கும் பொருத்தமான மைதானம் இல்லாமலுள்ளது. இதனால் இந்நகரத்தின் பல்வேறு செயற்பாடுகளை நடத்துவதற்கு நகரில் இடமில்லாமல் நல்லூர் ஆலய வீதியில் அல்லது பாடசாலை மைதானங்களில் நிகழ்த்த வேண்டியுள்ளது. இதனால் இருபகுதியினரும் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசியற் கூட்டங்கள், ஊர்வலங்கள், பல்வேறு பெரிய பொது நிகழ்வுகளை நடத்துவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நகரின் மையப்பகுதியில் சிறந்த முறையில் அமையப் பெற்ற ஒரு சதுக்கம்/ மைதானம் அவசியமாகவுள்ளது.

யாழ்ப்பான நகரில் மையப் பகுதியில் சதுக்கம் அமைவதற்கு ஏற்ற வெற்று நிலம் இருப்பது கவனிக்கத்தக்கது. இந்நிலம் தேவைக்கேற்ப பயன்படுத்தப்படுவது நல்லது. மேலும் இந்நிலத்தின் வடக்கு எல்லை ஸ்ரான்லி வீதியாகவும், கிழக்கெல்லை புதிதாக அமைக்கப்பெற்றதும் முன்னைய பஸ்தரிப்பு நிலையத்தையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் பாதையாகவும், தெற்கு எல்லை இராணி படமாளிகையை அண்டிய பகுதியாகவும் மேற்கெல்லை கஸ்தூரியார் வீதிக்கு இடைப்பட்ட பிரதேசமாகவும் அமைய வேண்டும். இன்று இப்பிரதேசம் நகரக் கழிவு கொட்டி நிரப்பப்பட்டுவரும் இடமாக இருக்கின்றது. இதன் மையப்பகுதி மாத்திரம் தூர்ந்த குளமாக உள்ளது. இப்பிரதேசம் நிரப்பப்பட்டு இதனது நிலத்தோற்றம் தேவைக்கேற்ப விருத்தி செய்யப்படவேண்டும். இப்பிரதேசம் பொது நிகழ்ச்சிகள் அமையக்கூடியதொன்றாக அதற்குரிய முறையில் விருத்தி செய்யப்பட்டு அதன் சுற்றுப்புறங்கள் நிழல் மரங்கள் கல்லாசனங்கள் சிலவற்றைக் கொண்டதாக அமைவது சிறந்தது.

குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு சதுக்கம் அமையுமிடத்து வடபுலத்தினதும், யாழ்ப்பாண நகரினதும் பொது வைபவங்கள், குறிப்பாக ஊர்வலங்கள் பல திசைகளிலிருந்தும் நகர் நோக்கி வந்து ஒன்றிணைந்து நிகழ்ச்சிகளை வைப்பதற்கும் மற்றும் பல்வேறு பொது நிகழ்ச்சிகளை வைப்பதற்கும் சிறந்ததாக அமையும்.

எனவே இதனை விருத்தியாக்கின் இப்பிரதேசத்தின் சதுக்கத் தேவையை இது பூர்த்தி செய்யும்.

## நவக்கிரக நிவேதனம்

பரிகாரங்களுக்குரிய நவக்கிரகத் தலங்களில் பிரியமான நிவேதனங்கள்—

| | | |
|---|---|---|
| சூரியன் | — | சர்க்கரைப்பொங்கல் |
| சந்திரன் | — | பாற்பாயசம் |
| செவ்வாய் | — | வெண்பொங்கல் |
| புதன் | — | புளியோதரை |
| வியாழன் | — | தயிர்ச்சாதம் |
| வெள்ளி | — | நெய்ப்பொங்கல் |
| சனி | — | எள்சாதம் |
| இராகு | — | உளுந்துச்சாதம் |
| கேது | — | சித்ரான்னம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஸ்கிருதத்திலுள்ள முருகன் துதிமாலைகள்

பேராசிரியர் வி. சிவசாமி
சமஸ்கிருதத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உலகெங்கும் நீக்கமற நிறைந்தும் அவையனைத்தினையும் கடந்தும் நின்று அருள் புரியும் பரம்பொருளாகிய இறைவனை மனிதன் பலவாறு வழிபட்டு வந்துள்ளான். தன் உடம்பினாலே - பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்தல், முழுமையான அங்கப் பிரதிஷ்டை செய்தல், இருகரங்களையும் கூப்பி வணங்குதல், காவடி எடுத்தல், இறைவன் புகழ் பற்றிய பாடல்களைப்பாடியும் ஆடியும் வணங்குதல் எனப் பலவாறும், உள்ளத்தினால் இறைவனைத் தியானித்தும், சமாதிநிலையிலிருத்தல் போன்றவற்றினாலும் பரம்பொருளுக்கு மனிதன் வழிபாடு செய்து அருள் பெற்று வந்துள்ளான். இறைவனின் பெருமையினையும், அருஞ் செயல்களையும் அளவிடற்கரிய இரக்கத்தினையும், இன்னோரன்னவற்றையும் கொண்டிலங்கும் துதிப்பாடல்கள் அல்லது தோத்திரங்கள் (ஸ்தோத்திரங்கள்) மூலம் இறைவனை வழிபடும் முறையிலும் உள்ளமும் உடம்பும் நன்கு ஒன்றுபட்டு இறைவனில் ஒன்றிணைவன.

தோத்திரமென்பது நமஸ்கரித்தல், ஆசி கூறுதல், சித்தாந்தத்தினை எடுத்துக்கூறல், பராக்கிரமத்தினைப் புகழ்தல், பெருமைகளை விளக்குதல், பிரார்த்தனை செய்தல் என ஆறு அமிசங்களை (நமஸ்காரஸ்ததாசீச்ச சித்தாந்தோக்தி பராக்கிரமஹ/விபூதிஹி பிரார்த்தனா சேதிஷட்விதம்ஸ்தோத்திர லக்ஷணம்) கொண்டிலங்கும் இத்தோத்திரங்கள் இறைபக்தியும், இலக்கியச் சிறப்பும் கொண்டவை. இறைவனிடத்தில் ஆன்மா கொண்டிருக்கும் பேரன்பே பொதுவாகப் பக்தி எனப்படும். இதேவேளையில் மறுபுறமாக இறைவனும் ஆன்மாவிடத்து இயல்பாகவே பேரன்புடையனாக அதன் ஈடேற்றத்தினை விரும்பிக் கொண்டேயிருக்கிறான் என்பதும் ஈண்டுகுறிப்பிடற்பாலது.

முருகப் பெருமானைப்பற்றிய திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி முதலிய நூல்களும், வேறு தனிப்பட்ட தோத்திரங்களும், கீர்த்தனைகளும் பிறவும் தமிழிலுள்ளன. இவை போலவே, வடமொழியிலும் பல தோத்திரங்கள் உள்ளன. இவ்விரு மொழிகளிலுமுள்ள தோத்திரங்கள் கூறும் பொருளில் அதிகம் வேறுபாடில்லை. இவ்வகையில் தென்னிந்தியாவிலே இயற்றப்பட்ட வடமொழித்தோத்திரங்கள் குறிப்பிடற்பாலன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருதம் இந்துக்களின் புனித மொழியாகவும், இந்தியப் பொதுமொழியாகவும், சாஸ்திரீய மொழியாகவும் பல நூற்றாண்டுகளாக நிலவி வந்துள்ளது. இந்தியாவின் எப்பகுதியிலும் வாழ்ந்த அறிஞர்கள் தத்தம் அறிவியல் கருத்துக்களை இம்மொழியிலே நெடுங்காலமாக எழுதி வந்தனர். மேலும் இந்துக்களின் புனித மொழியாகவும் இது விளங்கி வந்தமையாலும், சமயத் தொடர்பான விடயங்கள் பற்றி இம்மொழியிலும் எழுதப்பட்டு வந்தமை இயல்பேயாகும். முருக வழிபாடு தமிழ் நாட்டிற்குச் சிறப்பான வழிபாடாயினும், முருகனின் பல்வேறு நாமங்களிலும் வடிவங்களிலும், அவரின் வழிபாடு இந்தியாவின் பிற இடங்களிலும், கடல்கடந்து இலங்கை தென்கிழக்காசிய நாடுகளிலும் தற்போது உலகின் வேறு பல பாகங்களிலும் நிலவிவருகின்றது. வடமொழி இலக்கியமரபிலே முருகன், சரவணபவ, ஸ்வாமிநாத, ஸுப்ரஹமண்ய, குமார, மஹாசேன, ஸ்கந்த, ஷண்முக, கார்த்திகேய, குஹ எனப் பலவாறு அழைக்கப்படுகின்றார். இத்திருநாமங்கள் தமிழிலும் வந்துள்ளன. அவருடைய மூலமந்திரத் திருநாமமாகிய சடாக்ஷரமாக ஆறெழுத்து மந்திரமாக சரவணபவ என்பது வந்துள்ளது. இச் சிறு கட்டுரையிலே வடமொழியிலுள்ள முருகன் துதிப்பாடல்கள் பற்றிச் சுருக்கமாகக் கூறப்படும்.

இத்தகைய பாடல்கள்

1) தனித்தனி குறிப்பிட்ட தொகை கொண்ட பாடல் தொகுதியாகவும்,

2) சில பெரிய நூல்களின் (ஸ்கந்த புராணம் போன்றவற்றின்) சிறிய பகுதியாகவும்,

3) இசைவளமுள்ள கீர்த்தனை போன்ற இசை உருப்படிகளாகவும் வந்துள்ளன.

முதலாவது வகையினைச் சேர்ந்தவையே இங்கு நன்கு கவனித்தற்பாலன. பல ஞானிகளும், பக்தர்களும் பற்பல காலங்களில் அருளிச்செய்த பல்வேறு துதிகள் குறிப்பிடற்பாலன. இவற்றுடன் இப்பெருமான் பற்றிய சில முக்கியமான மந்திரங்களும் சேர்த்துக் கூறப்படும்.

மேற்குறிப்பிட்ட மந்திரங்களிலே காயத்திரி மந்திரம் நன்கு குறிப்பிடத்தக்கது. சுப்பிரமணியப் பெருமான் பற்றிய காலத்தால் முந்திய காயத்திரி மந்திரம் தைத்திரீய ஆரண்யகத்திலே

''தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி!
தந்நஹ ஷண்முக ப்ரசோதயாத்''.

என வந்துள்ளது. இது போலவே குமார தந்திரத்திலே வந்துள்ள இரு காயத்திரி மந்திரங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அவையாவன:

''கார்த்திகேயாய வித்மஹே சக்திஹதாய தீமஹி/
தந்நஸ்கந்தஹ ப்ரசோதயாத்//
குக்குடத்வஜாய வித்மஹே சக்திஹஸ்தாய தீமஹி/
தந்நஸ்கந்தஹ ப்ரசோதயாத்//''

என்பனவாம்.

தனிப்பட்ட துதிப்பாடல்களைப் பல வகையாக வகுக்கலாம். சில பாடல்கள் அவற்றின் தொகையின் அடிப்படையில் ஸுப்ரஹ்மண்ய பஞ்சரத்தினம் (05), ஷண்முகஷட்கம் (06), ஸுப்ரஹ்மண்ய கராவலம்பாஷ்டகம் (08), என வந்துள்ளன. வேறுசில 'மாலை' எனும் பொருளிலே சரவணபவஸ்வர்ணமாலா எனவும், வேறு சில யாப்பின் பெயரிலே ஸுப்ரஹ்மண்ய புஜங்கஸ்தோத்திரம் எனவும், வேறுசில அவரின் திருநாமங்களைத் தொகுத்துக் கூறும் நாமாவளிகளாக வந்துள்ளன.

ஸுப்ரஹ்மண்ய மானஸபூஜா முதலிய வேறுசில வகைகளும் உள்ளன. இத்தோத் திரங்களை இயற்றியவர்களிலே பலரின் பெயர்கள் திடமாகத் தெரியாது. பஞ்ச ரத்தினம், புஜங்கஸ்தோத்திரம் ஆகியன ஆதிசங்கரர் இயற்றியதாகக் கூறப்படுகின் றன.

மேற்குறிப்பிட்டவற்றுள்ளே கராவலம் பாஷ்டகம், இறைவன் இங்கு முருகன் பக்த னுக்கு என்றும் உதவி செய்பவனாக, கைகொடுத்துத் தூக்கிவிடுபவனாக (கராவ லம்ப) ஆபத்பாந்தவனாக இலங்குகின்றான் என்பதை எட்டுச் செய்யுட்கள் எடுத்துக்கூறு கின்றன. எடுத்துக்காட்டாக, இதிலுள்ள முதலாவது செய்யுள

''ஹே! ஸ்வாமிநாத! கருணாகர! தீன
பந்தோ! பார்வ தீசமுக
பங்கஜபத்மபந்தோ!
ஸ்ரீசாதிதேவகண பூஜிதபாதபத்ம! வல்
லீஸநாத! மமதேஹி கராவலம்பம்!'

ஓ! சுவாமிநாதனே! (தந்தையாகிய சிவ னுக்குப் புரணவத்தை உபதேசித்து அவரி லும் மேலானவராக விளங்குபவனே!) கரு ணைக்கடலே! ஏழைகளின் சுற்றத்தவனே! பார்வதி பரமேஸ்வரன் ஆகியோரின் முகங் களாகிய தாமரைக்குச் சூரியனே! மலரச் செய்பவனே), திருமால் முதலிய தேவர் கள் பூசிக்கும் திருவடித்தாமரையை உடை யவனே! வள்ளியின் நாயகனே! எனக்குக் கை கொடுத்து உதவி செய்வீராக, (காப் பாற்றுவீராக) என வருகிறது. இச்செய்யு ளிலே காணப்படும் கருத்தாழமும், இலக் கியச் சிறப்பும், ஓசைநயமும் குறிப்பிடற் பாலன.

ஸுப்ரஹ்மண்ய புஜங்கஸ்தோத்திரம் 33 செய்யுட்களைக் கொண்ட பாமாலை ஆகும். ஒரு தீராத நோயினால் பீடிக்கப் பட்டிருந்த சங்கராச்சாரியர் (ஆதிசங்கரர்) திருச்செந்தூரில் உள்ள முருகப் பெருமான் மீது இதனை இயற்றிப் பாடிப் பிணி தீர்ந் தார் எனக் கூறப்படுகின்றது. விநாயக வணக்கத்துடன் தொடங்கும் இப்பாமாலை யிலே ஆசிரியர் முருகனைப் பலவாறு போற்றுகிறார். அவனுடைய திருவருள் கிடைக்க வேண்டுமென அவனையே சர ணடைகின்றார். தமக்கு ஒன்றும் தெரி யாது எனவும் இறைவனே வழிகாட்டிட வேண்டுமெனவும், அவனே யாவரையும் சமமாகக் கருதும் கருணாமூர்த்தியெனவும், அவனையே எல்லாரும் குடும்பமாக வழி பட்டு அவன் அருள் பெற வேண்டும் என வும் கூறுகிறார். 33 வது செய்யுளிலே பாமாலையின் பயன்களாகச் சிறந்த மனைவி, மக்கள், நீண்ட ஆயுள், இறை வனுடைய (முருகனுடைய) திருவடிசேர் தல் கூறப்பட்டுள்ளன. இப்பாமாலையின் சிறப்புக்களைச் சில செய்யுட்கள் மூலம் சுட்டிக் காட்டலாம். இரண்டாவது செய் யுளிலே ஆசிரியர் தமக்குச் சொல்லோ, பொருளோ, வசனமோ, செய்யுளோ ஒன் றுமே தெரியாது எனவும், ஆறுமுகமுள்ள 'சித்' உள்ளத்திலே ஒளிவிட, முகத்திலி ருந்து மிக அழகான சொற்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன எனும் பொருள்பட

''ந ஜாநாமி சப்தம் ந ஜாநாமி சார்தம்
ந ஜாநாமி
பத்யம் ந ஜாநாமி கத்யம்!
சிதேகா ஷடஸ்யா ஹ்ருதி த்யோததே
மே முகாந் நிச்சரந்தே கிரச்சாபி
சித்ரம்''

என வியப்புடன் கூறுகிறார்.

இரண்டாது அடியில் கவிதை திடீரெ னப் புலவன் உள்ளத்திலே தோன்றுவது பற்றிய கருத்துள்ளது. யமதூதர்கள் கோபத்துடன் என்னை நோக்கி வரும் போது, விரைவிலே மயிலிலேறி வேலுடன் வந்து 'பயப்படாதே' என அபயம் அளிக்க வேண்டும்'' என 11 ஆம் செய்யிளிளே ஆசிரியர் கூறியிருப்பது கந்தரலங்காரத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், திருப்புகழிலும் காணப்படும் சில செய்யுட்களை நினைவூட்டுகின்றது. அதற்கு அடுத்த செய்யுளிலே ஆசிரியர் தாம் எப்போதும் துக்கக்கடலிலே அமிழ்ந் திருப்பதாகவும், தீனபந்துவான முருக னைத் தவிர வேறு எவரையும் இரந்து கேட்பதில்லை எனவும், முருகனிடம் பக்தி யில்லமையினால் ஏற்பட்டுள்ள தமது கவ லையைத் தீர்த்தருளுமாறு வேண்டுகிறார். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளாலும் முருகனிடம் லயித்து இருக்க வேண்டுமென ஆசிரியர் 14வது செய்யுளிலே இறைவனை இரந்து கேட்கி றார். பிள்ளைகள் செய்யும் பிழையினைப் பெற்றோர் பொருட்படுத்தாதது போல, உலகின் தந்தையாகிய முருகன் சிறுபிள் ளையாகிய தமது பிழைகளைப் பொறுத் தருளுமாறு யதார்த்த நிலையிலே ஆசிரியர்

''ஜநித்ரீபிதாச ஸ்வபுத்ராபராதம்
ஸஹேதே நகிம்
தேவசேநாதிநாத அஹம் சாதிபாலோ
பவாந்
லோகதாதஹ ஷமஸ்வாபராதம்
ஸமஸ்தம் மஹேச''

என எளிமையான நடையிலே கூறியிருப் பது கவனித்தற்பாலது.

மேலும் யாவருக்கும் வேறுபாடின்றி அருள் வழங்குவதில் முருகனுக்கு நிகரான தெய்வம் இலர் என ஆசிரியர் (27) கூறி யுள்ளார். இப்புஜங்கஸ்தோத்திரம் பாம்பு (புஜங்க) செல்லுதல் போன்ற யாப்பி னால் அமைக்கப்பட்டுள்ளமையால் இப் பெயர் பெற்றது. மரபுவழிக் கதைப்படி, ஆதிசங்கரர் திருச்செந்தூருக்குச் சென்ற போது ஆதிசேடன் முருகப்பெருமானை நன்கு பக்தி பூர்வமாக வழிபட்டுக் கொண் டிருந்தான். அக்காட்சி சங்கரரை மிகவும் கவர்ந்தது. எனவேதான் இந்த யாப்பி னால் பாடி உள்ளார். இவ்வாறு குறிப் பிடத்தக்க சமயத்தத்துவக் கருத்துக்களு டன் எளிமையான நடையிலே இலக்கியச் சுவையும் ஏற்படும் வகையில் அமைந்துள்ள பாக்கள் பக்திக் களஞ்சியங்களாகவும் விளங் குகின்றன.

வடமொழியிலுள்ள ஸ்கந்தபுராணம் போன்ற சில நூல்களில் இடையிடையே வேறு சில தெய்வங்களைப் போலக் கந்த னைப் பற்றிய தோத்திரங்களும் உள்ளன.

இறைவனுடைய சிறப்புக்களைக் குறிக் கும் பெயர்களை ஒழுங்காக வரிசைப்படுத்தி அவரை வணங்குதல் ஒரு வழிபாட்டு முறை யாகும். யசுர்வேதம் (இந்நூலிலே சிவனு டைய 100 பெயர்கள் முதன்முதலாக வந்துள்ளன) தொடக்கம் இத்தகைய வழி பாட்டு முறை நிலவி வருகின்றது. முருகப் பெருமானின் 16, 108, 300, 1000 திருப் பெயர்களை அடுக்கிக் கூறும் ஷோடஷ நாமாவலி, அஷ்டோத்ரசத நாமாவலி, த்ரி சத்நாமாவலி, ஸஹஸ்ரநாமாவலி தோத் திரங்களாகவும் உள்ளன. இவற்றிலே இறைவனின் பல்வேறு அழகுத் தோற்றங் கள், சாதனைகள், குணாதிசயங்கள் முதலி யன சிறப்பிடம் பெற்றுள்ளன.

கீர்த்தனை போன்ற இசை உருப்படி களும் ஒரு வகையிலே தோத்திர அம்சங் கள் பலவற்றைக் கொண்டுள்ளபடியால் இவை பற்றியும் சிறிது குறிப்பிடலாம். இவற்றிலே பக்தியுடன் இசை வளமும் சிறப்பாக இடம்பெறும். கர்நாடக இசைக் குரிய மிகக் கூடுதலான வடமொழிக் கீர்த் தனைகளை ஸ்ரீமுத்துச் ஸ்வாமி தீஷிதரே பாடியுள்ளார். இவர் இயற்றிய முதலா வது கீர்த்தனை முருகன் பற்றியதே. இவ ருடைய முத்திரையும் ''குருகுஹ'' என்ப தேயாம். இவரைவிட வேறு சிலரும் முரு கன் பற்றிய கீர்த்தனைகளை வடமொழி யில் எழுதியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு முருகன் பற்றிய தோத்திரங்கள் பக்திச்சுவையும், இலக்கியச் சிறப்பும் சமய, தத்துவக்கருத்துக்கள் பொதிந்தும் காணப்படுகின்றன. இவை என்றும் வாடாத மாலைகளாக முருகனின் சிறப்பினைக் கூறிக்கொண்டிருப்பன. தமிழிலுள்ள தோத்திரங்கள் போலவே இவையும் பாராயணம் செய்யத்தக்கவை; பாராயணம் பண்ணப்படுகின்றன. எனவே இவற்றையும் பாராயணம் செய்து இம்மை மறுமைக்கான நற்பலன்களை மக்கள் அடைவார்களாக.

---

### சில முக்கியமான உசாத்துணை


Anantharama Iyyar (Ed), Bhakti Sudha, Madras, 1962

Clothey F.W. The Many Faces of Murukan, Netharlands, 1978.

Kumara Tantra

Sri Skanda Mahapurana.

Ratna Navaradnam, Karttikeya — The Divine Child, Bombay, 1978.

Sankara Sanmata, Madras, 1969.


### பத்ரம் - புஷ்பம் - பலம் - தோயம்

இறைவனை வழிபடும் பொழுது சாதாரண ஏழையும் அர்ப்பணிக்கத் தருந்த பொருள்களைத் தான் முனோர்கள் ஏற்படுத்தி வைத்தார்கள். அதாவது - பத்ரம், புஷ்பம், பலம், தோயம் என்பவை களேயவையாகும். பத்ரம் என்பது - வில்வமிலை' துளசி, அருகம் புல் ஆகியன. இவற்றை மரம் செடிகளிலிருந்து அர்ச்சிப்பவரே தனது கையால் பறிக்கவேண்டும். புஷ்பமும் பலவித மலர்களைக் குறிக்கும். காசிற்கு இவற்றை வாங்கக்கூடாது. பலம் என்பது பலவித பழங்களைக் குறிக்கும். தோயம் என்பது தண்ணீரைக் குறிக்கும். கிணறு, குளம், ஆறு முதலிய இடங்களிலிருந்து தருவர் தாமாகவே இறைத்து எடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத்து வனிதையரும் விரைந்து வரத்துடித்திடும்

மண்ணகத்து மாளிகைதான்

## விதுரா ஆடை அகம்

★ பெண்களுக்கான பிளவுஸ் – ரீசேட் பஞ்சாபி
ஸ்கேட் அன் பிளவுஸ் – வெளிநாட்டு ஸ்கேட்
பிளவுஸ் – சாறிவகைகள் காஞ்சிபுரம் – பெனாரிஸ்
யாவும் ஒரேயிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ ஆண்களுக்கான சேட் வகைகள் – ரீசேட்டுகள்
சூட்டிங் வகைகள் யாவற்றுக்கும்

**விலையில் மலிவு – நயமுண்டு**

**துணிவகைகளோ நவீனமானவை**

புடவை ராஜ்யத்தின் சிகரமென்னும்

புகழ்பெற்ற ஒருங்கிணைந்த தாபனம்

# விதுரா ஆடை அகம்

34, நவீனசந்தை - உட்புறம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அந்த ஒரு வாசகம்" எது? — ஒரு சிந்தனை

க. சிவராமலிங்கம்

''தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும்
— கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகமென் றுணர்''

சைவப் பெருமக்கள் நாவிலும் நெஞ்சிலும் நிறைந்து நிற்பது இவ் வெண்பா. பொருளும் வெளிப்படை தான். திருக்குறள் உணர்த்தும் கருத்தும், நான்மறையின் முடிவாகிய வேதாந்தத்து உச்சியிற் பழுத்த சைவசித்தாந்த முடிவும் — (நான் மறையின் முடிவை இப்படித்தான் நான் கொள்ளுகிறேன்) மூவர் தேவாரங்களின் செம்பொருளும், மணிவாசப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருக்கோவையாரும், திருவாசகமும் கூறும் பொருளும் நிறைவாக, யோகநிலையில் முதிர்ந்து உலகியலில் நின்று அருளியலை உணந்து உணர்த்தி, இறைவழிப்பட ஆற்றுப்படையாக அமைந்த தோத்திர சாத்திரப் பனுவலாகிய, ''தமிழ் மூவாயிரம்'' என்று சிவநெறிப் புலமையோர் உச்சிமேற் கொள்ளும் திருமந்திரமும் காட்டும் பொருள் ஒன்றே தான் என்று கூறியும் நினைத்தும் அமைதி கொள்ளுகின்றோம். மிகப்பொருத்தமானதே.

எனினும் அந்தப் பொருள்தான் எது? என்று கேட்டால், ''சிவம்'' என்று விடையும் கூறி விடுகிறோம். கேட்டவர் சமாதானப்பட்டாரோ இல்லையோ! போய் விடுகிறார். விடைபொருந்துவதாக இல்லை என்றும் கூறமுடியவில்லை. ஆனால் இவ் விடையும், தொடர்ந்து நீளக்கூடிய சிந்தனையும் ஆழமான ஒரு கருத்தை மிக எளிமையும் தெளிவும் கொண்டதாக அமைய இடந்தருகிறது.

திருக்குறள் ஒரு நீதி நூல். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் தலையானதாகத் தக்கோரால் போற்றப் பாடுவது. ' நீதி ' சொல்லவேண்டிய தேவை எப்போது எழுகிறது? நீதி மறக்கப்படும் போதும் மறுக்கப்படும் போதும் இடித்துச் சொல்ல வேண்டிய நிலை ஒன்று ஏற்படுகிறது. மக்கள் நல்வாழ்வில் கருத்துக் கொண்ட சான்றோர்கள் நீதி செல்லப் பின் நிற்கமாட்டார்கள். சங்கம் மருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சியின் போது, மக்கள் அறம் பிறழ்ந்த வாழ்வு வாழத்தலைப் பட்டபோதே, திருக்குறள் தோன்றியது. நீதிக்கும் இரக்கத்திற்கும் நெருக்கமான தொடர்புண்டு. இரக்கம் அன்பின் குழந்தை. சட்டம் நீதி என்பன சேர்ந்து தொழிற்பட்டாலும், சட்டம் வேறு நீதி வேறு. அன்பினால் அகிலத்தை வெல்லமுடியும் என்ற நம்பிக்கை தமிழர் தம் வாழ்வு. இதை நிலைப்படுத்தும் சாதனமே திருக்குறள். எனவே மக்களை அன்புமயப்படுத்தி வாழ்விக்க முயன்ற வள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியே திருக்குறள் எனக் கொள்ளல் தவறாகாது.

வேதங்களின் முடிபாகிய வேதாந்தமும் அதன் உச்சியிற் பழுத்த சைவசித்தாந்த மும், இறைவனை அன்பின் வடிவாகவே காட்டி நிற்கின்றன. சிவஞானபோதம் தத்துவ விளக்கத்தை தனக்குவமையில் லாதவாறு விளக்கிய முடிவில் பன்னிரண் டாவது சூத்திரமாக — தத்துவ நோக்கின் பெரும் பேறாக, துரியாதீதப் பழம் பொருளை அன்பு செய்து பெறுவதே எம் மனோர்க்கு ஏற்புடைத்து என்ற தொனி யில்

''செம்மலர் நோன்றாள் சேரவொட்டா
அம்மலங் கழீஇ
அன்பரொடு மரீஇ, மாலத நேயம்
மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத்
தொழுமே''

என்கிறார் மெய்கண்டார். இங்கு இறை அன்பர்களை அடைந்தால், மலமெலாம் நீங்கப் பெறும் என்பது உறுதிப்படுத்தப் படுகிறது. அன்பு இறை அடியார் பாலும் அதன்வழி இறைவன் மாலும் உயிர்கள் அன்பு செய்வதே முதன்மைப்படுத்தப் படு கிறது.

மூவர் தமிழுக்கு வருவோமானால் அங் கும் அரன் அடியார் இடத்து அன்பு செய் வதே அரனிடத்து அன்பு செய்வதாகும் என்ற கருத்தே வலியுறுத்தப்படுகிறது. அறிவு நெறித்துறை போகிய மூவரும் அன்பு நெறியையே, எம்மனோர்க்கு உகந் தது என்று கருதிப் போலும் சாத்தியம் செய்யாது தோத்திரம் பாடி எம்மானை யும் பாடவைத்தனர் என்று கருதுவதே பொருத்தமானது. இங்கும் அன்பு தலை நிற்பது காண்க.

முனிமொழியும் கோவையும் திருவாச கமும் அன்பினால் உருகிப்பாடுவதையே வலியுறுத்துகின்றன. என்பதற்கு பெரு விளக்கம் வேண்டா. மணிவாசகர் திருப் பாடல்கள் கருங்கல் மனத்தையும் கசிந் துருகவைக்கும் பேரன்புப் பெரும் பாடல் கள். ''வாதவூர் அன்ப! மாஎனப் பாடப் படுவது உன் பாட்டு'' என்று போற்று வார் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவா மிகள். இங்கும் அன்பு அரசோச்சுகிறது.

திருமூலர் சொல்லும ஒரு வாசம் எது? 'அன்பே சிவம்' அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார் என்பது மட்டும் போதாதா அன்பு நெறியே மூலர் நெறி எனக் கூற!

ஆக குறள் காட்டும் நெறியும் வேதம் காட்டும் பாதையும் தேவாரம் காட்டும் பெரும் துறையும் மணிவாசகர் சுட்டும் திக்கும் திருமூலர் காட்டும் தனி நெறியும் அன்பு நெறியே. இவர்கள் பேசும், பேச வைக்கும் ஒரு வாசகம் அன்பு தான் என்று கொள்ளுவது பொருத்தமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனும் தமிழும்

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
தலைவர்,
இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முருகன் தமிழ் மக்களின் அழகுத் தெய்வமாகவும், மலையுறை கடவுளாகவும், 'வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ'னாகவும் வணங்கப்பட்டு வந்துள்ளான். பண்டைத் தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது. வாழ்க்கை நடைமுறைகள் இயற்கை நிலைக்கேற்பவே அமைந்தன. தமது ஆற்றலுக்கு மேற்பட்டவற்றைத் தமிழர் உயர்ந்த நிலையில் வைத்து வழிபாடு செய்தனர். பழந்தமிழ் இலக்கியங்கள் பழைய வழிபாட்டு நடைமுறைகளைத் தெளிவுறப் பதிவுசெய்து வைத்துள்ளன. ''போர்க்களம் இரத்தத் தாற் செந்நிறத்தையுடைய களமாகும்படி அசுரர்களைக் கொன்று இல்லையாக்கிய இரத்தத்தாற் சிவந்த அம்பையும், சிவந்த கொம்பையுடைய யானையையும், உழல இட்ட வீரவாளையையுமுடைய முருகக் கடவுளுக்குரிய இம்மலையானது சிவப்பாகிய பூங்கொத்துள்ள காந்தள் மலர்களையுடையது'' என்னும் பொருளமைய,

''செங்களம் படக்கொன் றவுணர்த்
தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்
டியானைக்
கழலொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே''

என்னும் குறுந்தொகை முதலாவது பாடல் அமைகின்றது. சங்க இலக்கியங்களிலே பல இடங்களில் முருகன் தமிழர் கடவுளாகப் பல நிலைகளிலே குறிப்பிடப்படுகிறான்.

இவ்வாறு தமிழ் நாட்டு வழிபாட்டு நிலைக்கேற்ற கடவுளாயமைந்த முருகனை வடநாட்டுத் தொன்மச் செய்திகளுடன் இணைத்து நோக்கும் மரபு திருமுருகாற்றுப் படையிலும் பரிபாடலிலும் காணமுடிகின்றது. ஆறுமுகங்களும் பன்னிரு தோள்களும் அவன் உருவில் இணைக்கப்படுகின்றன. கோழியும் மயிலும் அவனுடன் சேர்கின்றன. பன்னிரண்டு கைகளுக்கும் முறையே மறியும், மயிலும், சேவலும், வில்லும், மரனும், வாளும், ஈட்டியும், கோடரியும், மழுவும், கனலியும், மாலையும், மணியும் கூறப்பட்டன. திருப்பரங் குன்றம் செவ்வேள் உறையும் சிறப்பிடமாகக் கூறப்பட்டது. அது பொதுவான குன்றம் என்றமையாது தொன்மச் செய்திகளோடு பரிபாடல் சிறப்பிக்கின்றது. திருமாலும், சிவபெருமானும், பிரமனும், ஆதித்தர் பன்னிருவரும், அசுவனி மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், ஏனைத் தேவர்களும், அசுரர்களும், முனிவர்களும் செவ்வேளைக் காண மண்ணுலகில் அமைந்த குன்றமென

விளக்கப்பட்டுள்ளது. எப்படி யமையினும், தமிழரின் உயர்நிலைக் கடவுளாகவே முருகன் கருதப்பட்டு வந்துள்ளான். ஆனால் இந்நிலை கி. பி. ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் மாற்றமடையலாயிற்று.

கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் எழுந்த பக்திப் பாசுரங்களெல்லாம் சிவனையும் திருமாலையுமே உயர்நிலைக் கடவுளர்களாகப் பாடின. தேவாரங்களிலே முருகன் முதனிலைப்படுத்திக் கூறப்பட்டிலன். சிவனுடைய பிள்ளைகளுள் ஒருவனாகக் குறிப்பிடப்படுகிறான். நகையாடுவது போல சிவனுடைய குடும்பத்தைப் பற்றிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவோணகாந்தன் தழிப் பதிகத்திலே "அங்கை வேலோன் குமரன் பிள்ளை" என்று குறிப்பிடுவதை இங்கு ஓர் எடுத்துக்காட்டாகக் காட்டலாம். பக்திப் பாசுர காலத்தை அடுத்துத் தோன்றிய காவியங்களும் இதே நிலையினையே பின்பற்றின. சமண பௌத்த காவியங்களை விடுத்து நோக்கின், திருமலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு கம்பராமாயணமும் சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டு பெரிய புராணமும் தோன்றின. ஆனால், இந் நிலைமை கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின்னர் மாற்றமடைந்தது.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னரே முருகனை உயர் நிலைப் படுத்தும் காவியமாகிய கந்தபுராணம் கச்சியப்ப சிவாச்சாரியராலே பாடப்பட்டது. பண்டைத் தமிழருடைய கடவுளாகிய முருகன் வடமொழித் தொன்மக்களின் கந்தனுடன் இரண்டறக் கலந்த நிலையைக் கந்தபுராணத்திலே காண்கின்றோம். எனினும் இக்காவிய நூலுக்குப் பின்னர் பல தமிழ்ப் புலவர்களாலே முருகன் மீண்டும் நினைவு கூரப்படுகிறான். இதற்கு ஒரு காரணமுமுண்டு.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் இஸ்லாமியருடைய படையெடுப்புகள் நிகழ்ந்தன. தமிழ் நாட்டில் நிகழ்ந்த இப்படையெடுப்புகளால் சாவச்சம் கூற்றுவனச்சம் பலருடைய மனத்திலே குடி புகுந்தன. இவ்வச்சத்துக்குக் காரணமான இஸ்லாமியரை முறியடிக்கப் படையும் படைத்தலைவர்களும் வேண்டப்பட்டனர். அத்தலைவர்களே சாவச்சத்தைத் தீர்க்கக் கூடியவர்களாக நம்பப்பட்டனர். எனவே, அருணகிரிநாதர் போன்ற புலவர்களுக்குச் சேனைத் தலைவரெனப்படும் முருகன் அமைதியளிப்பவனாயினான். பகவத்கீதையிலே கண்ணன்,

> "ஜோதிகளில் நான் சூரியன், தேவர்கள் கூட்டத்திலே நான் இந்திரன், உருத்திரர்களில் நான் சங்கரன், மலைகளில் நான் மகாமேரு; நீர்நிலைகளில் நான் சமுத்திரம்; மாதங்களில் நான் மார்கழி; சேனைத் தலைவர்களில் நான் கந்தன்..."

என்று கூறுகின்றான். இதனாலே சேனைத் தலைவனாகிய கந்தன் பல தமிழ்ப் புலவர்களாலே நினைவு கூரப்படுகிறான். இவ்வாறு முருகனைப் பாடிய புலவர்கள் இடையிடையே அவன் தமிழர் தம் கடவுள் என்னும் நினைவு வரும் போதெல்லாம் அவனுடன் தமிழையும் இணைத்தும் பாடும் போக்கினை அவர்களுடைய பாடல்களிலே காணக்கூடியதாயுள்ளது.

அருணகிரிநாதர் முருகன் ஒருவனையே பாடும் போக்குடையவர். அவர் தன்னுடைய கந்தரலங்காரத்திலே,

> "மொய்தார ணிகுழல் வள்ளியை
> வேட்டவன் முத்தமிழால்
> வைதா ரையுமங்கு வாழவைப்
> போன்..."

என்று (22) பாடுகின்றார். கந்தன் பற்றிய வடமொழித் தொன்மக் கதைகளையும் பெருந்தொகையான வடமொழிச் சொற்களையும் பெய்து பாடும் அருணகிரிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிடையே செந்தமிழையும் நினைத்துக் கொள்வார். எடுத்துக்காட்டாக,

''சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ்
சேவலும் செந்தமிழாற்
பகரார்வ மீபணி பாசசங் க்ராம
பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்கநி
ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர
குணதுங்கனே''

என்னுஞ் செய்யுளை (52)க் காட்டலாம். செந்தமிழ்நூல் விரித்தோனாகவும் முருகன் அருணகிரியாராலே பாடப்படுவதை,

''சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளிக்
காந்தனைக் கந்தக் கடப்பனை
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே''

என்னும் பாடலிலே (72) காணமுடிகின்றது.

அருணகிரியாருக்கு முன்னரும், அவர் காலத்தும், பின்னரும் செய்யுளியற்றிய புலவர்கள் பலர் முருகனையுந் தமிழையும் இணைத்துப்பாடியதைப் பல நூல்கள் வாயிலாக அறிகிறோம். திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் பாடிய பகழிக்கூத்தர் பல இடங்களிலே முருகனையும் தமிழையும் பாடுகிறார். தாலப்பருவத்தினைப் பாடுமிடத்தில், ''தென்றலுடன் தமிழ் தேர் தென்பொதியம் பயில்வாழ் தேனார் தார் மார்பா'' என்றும், ''சரவண மருவுந் தண்டமிழ் முருகா தாலோ தாலேலோ'' என்றும்,

''செங்கனி மணிவாய் தங்கிய நாகைதா
தேவா சிறாதே
திண்டிறன் முருகா தண்டமிழ் விகார
சேரார் போரேறே''

என்றும் பாடியுள்ளார். முத்தப்பருவத்திலே ''குறுமுனிக்குத் தமிழுரைக்குங் குழவி முத்தந் தருகவே'' என்று கூறுகின்றார். சிறுதேர்ப் பருவத்தில்,

''முலைநெறிக் கும்புனிற் றெருமைவா
யுஞ்சிறுவர்
மொழியும் பரந்த வழியுஞ்
செந்தமிழ் மணக்குந் திருச்செந்தில்
வேலனை
சிறுதே ருருட்டி யருளே''

என்று திருச்செந்தூர் முருகனைச் ''செந்தமிழ் மணக்கும்'' கடவுளாகப் பாடுகின்றார்.

தமிழ்ப் புலமைக்கே அடிப்படையானவன் முருகன் என்பதையே குமரகுரு பரசுவாமிகள் பல செய்யுட்களூடாகப் புலப்படுத்துகிறார். அவர் பாடிய கந்தர் கலிவெண்பாப் பிரபந்தத்தில்

''எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமும்
தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து —
ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவா தனை
அகற்றி''

என்று தமிழ்ப் புலமையைக் காத்தருளும் கடவுள் என முருகன் போற்றப்படுகிறான். குமரகுருபரருடைய முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தில் தாலப் பருவத்தில்,

''தண்ணொளி பொங்கிய கருணா
நிதியே!
தாலோ தாலேலோ சங்கத் தமிழின்
தலைமைப் புலவா தாலோ
தாலேலோ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முருகன் தமிழ்ப் புலவனாய்த் தமிழ்ச் சங்கத்துத் தலைவனாய் வீற்றிருந்த வரலாற்றை நினைவூட்டுகிறார். முத்தப் பருவத்தில் ''மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி முருகா முத்தந் தருகவே'' என்று முத்தமிழுடனும் முருகனை இணைத்துப் பாடுகிறார்.

முத்தமிழ் வல்லவனாகவும், தமிழ் மொழியை விரும்புபவனாகவும், தமிழ்ப் புலவர்கள் பலர் வீற்றிருந்த சங்கத்திலே வீற்றிருந்த தலைமைப் புலவனாகவும் முருகன் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுந்த பிரபந்தங்களிலே குறிக்கப்படுகிறான். பண்டைத் தமிழருடைய கடவுள் என்பதனாலே அவன் தமிழ்க் கடவுளாகவும், தமிழுடன் நெருங்கிய இயைபுடையவனாகவும் கருதப்பட்டான். தமிழ்ப் பாடல்கள் இதற்குச் சான்று வழங்குகின்றன.

## வேல் சிறப்பு

''தேரணியிட்டுப் புரமெரித்தான் மகன் செங்கையில் வேல்
கூரணி யிட்டணு வாகிக் கிரெளஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்தர லோகம் பிழைத்ததுவே''

★ ★ ★

## சேவலின் சிறப்பு

''படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுநீ
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ள சலதிகிழிந்
துடைபட்ட தண்டகடாக முதிர்ந்த துதிபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே''

* * *

வேலை வழிபடுவாருக்கு ஞானமும் சேவலை வழிபடுவாருக்கு அருட்பிரகாசமும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தோராம் நூற்றாண்டுக்கான கல்வியும் தெய்வீகப் பொலிவு வழங்குதலும்

கலாநிதி சபா. ஜெயராசா
முதுநிலை விரிவுரையாளர்
கல்வியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்.

''மாற்றங்களை உள்வாங்குவோர்'', ''மாற்றங்களுக்கு அஞ்சுவோர்'' (Neophobiacs) என்ற இரு பிரிவினரதும் மோதல்கள் புதிய கல்வி வடிவங்களை ஆக்குவதில் கருத்து விசைகளாகத் தொழிற்படுகின்றன.

மாறிவரும் சமூக பொருளாதார தொழில்நுட்ப அசைவுகளுடன் கல்வி இணைந்தும் இசைவுபட்டும் பொருத்தப்பாடு கொண்டும் இயங்க வேண்டும் என்று சிந்திப்போர் பின்வரும் அறிவுப் புலங்கள் மீது ஆழ்ந்த கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

1. மாணவரது ஆக்கத்திறன், புத்தாக்கம் செய்யும் திறன், முதலியவற்றை விசைப்படுத்தல்.
2. புதிய தொழில்நுட்ப மாற்றங்களின் மத்தியில் மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களை மலரச் செய்தல்.
3. சிக்கலான தொழிற் பிரிவுகளும் இயக்க வேகங்களும் மிக்க புதிய சூழலில் மனித உள்ளுணர்வுகளை வளம்படுத்தி உளச்சுகம், தன்னியல் நிறைவு என்பவற்றை ஏற்படுத்துதல்.
4. தெய்விகப்படுத்தல்.

மனிதரின் வயது ஏற்றத்தோடு ஆக்கத் திறன் வீழ்ச்சியடைந்து செல்வதைப் பின்வரும் மதிப்பீடு சுட்டிக்காட்டுகின்றது. (LEONARDO DE LA CRUZ - 1993)

| வயது | | ஆக்கத்திறன் மிக்கோர் |
|---|---|---|
| 40 | — | 2% |
| 35 | — | 2% |
| 30 | — | 2% |
| 17 | — | 10% |
| 5 | — | 90% |

பாடசாலைக் கல்வி முறைசாராக் கல்வி, முறையில் கல்வி நிறுவனங்களும், ஆசிரியர், பெற்றோர், அதிகாரிகள் முதலியோரும் மாணவரின் ஆக்கத்திறன் வளர்ச்சியை சிதறடித்து விடுவதற்கான கல்வி முறைமை செயற்பட்டு வந்துள்ளதா என்ற சிந்தனையை மேற்கண்ட மதிப்பீடு எழச் செய்கின்றது.

உளவியல் அடிப்படையிலே திறனாய்வு செய்யும் பொழுது கூடுதலாக ''இடமூளையின்'' விருத்தியிலேதான் நடைமுறையில் உள்ள கல்வி உழைத்து வருகின்றது என்றும் ''வலமூளையின்'' மேம்பாட்டுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகள் பின்னடைந்துவிட்டன என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. கல்வித் தொழிற்பாட்டின் அடிப்படையில் இடமூளை, வலமூளை என்பவற்றின் அறிவு சார் இயக்கங்களை ஆய்வாளர்கள் பின் வருமாறு பிரித்துக்காட்டியுள்ளனர்.

| இடமூளை | | வலமூளை |
|---|---|---|
| 1. தருக்கநிலைப்பட்டது | — | உள்ளுணர்வுநிலைப்பட்டது |
| 2. ஒரே தொடர்பிற் செயற்படுவது | — | திடீரென்ற பளிச்சீடுகளை ஏற்படுத்துவது |
| 3. சொல் சார்ந்தது | — | சொல் சாராத காட்சிகளைக் கொண்டது |
| 4. அளவு நிலைப்பட்டது | — | பண்பு நிலைப்பட்டது |
| 5. தொகுத்து அறிவது | — | பகுத்தறிவது |
| 6. கருத்து நிலைகளை ஆராய்வது | — | உணர்ச்சி நிலைகளை விளக்குவது |

அடுத்த நூற்றாண்டுக்கான கல்வி இரு பக்க மூளையினதும் செயற்பாடுகளையும் துரிதமாக்கி, வலுவூட்டி உள்ளுணர்வு மேம் பாட்டினையும் விழுமியங்களின் ஆற்றல்க ளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது. வெறும் பொறிமுறையாகச் செயற்படும் மனிதனையன்றி, உள்ளுணர்வுடனும் ஆன் மிக வலுவுடனும் தெய்வீகச் சுகவுணர்வுட னும் பரிணமிக்கும் மனிதரைப்பற்றிச் சிந் திக்க வேண்டியுள்ளது. அந்நியமயப்படாத, உணர்வுகள் நலுங்காத, ஆளுமை நிறைவு கொண்ட மனிதர்களை உருவாக்குவதற் கான கல்வியில் ''இறை உள்ளுணர்வுப் பொலிவூட்டல்'' பிரதான பரிமாணமாக அமையவேண்டியுள்ளது. பொருளாதார நலன்களுடன் உள நலன்களையும் கல்விச் செயற்பாடுகள் கட்டியெழுப்ப வேண்டியுள் ளன.

உடல், உள்ளம் மனவெழுச்சிகள், தெய் வீக இயல்புகள் என்ற அனைத்தையும் ஒன்றிணைக்கும் ''கூட்டு நிறைவுக் கல்வி''யை (Total Education) முன்னெ டுத்தல் காலப் பொருத்தமுடையதாக அமையும். கூட்டு நிறைவுக் கல்வி உள்ளு ணர்வுப் பொலிவூட்டும் கல்வியாக மலரும். நனவிலிபூர்வமான கற்றல் உள்ளுணர்வை வலுப்படுத்தவும் பொலிவூட்டவும் துணை செய்கின்றது! இயற்கைச் சூழலில் இருந் தும் நனவிலிபூர்வமாகப் பெருமளவு அனு பவங்கள் கற்றுக் கொள்ளப்படுகின்றன. இது நனவிலி சார்ந்த கல்வி (Unconseious Education) குறிப்பிடப்படும். இவ்வகை யான கற்றல் நியமமற்ற முறையிலே நிகழ்ந் தாலும் இது ஆழ்ந்ததாகவும் பல்வேறு உளவிசைகளுடன் தொடர்புபட்டதாகவும் நம்பிக்கைக்குரியதாகவும் இருக்கும்.

உள்ளத்தால் உலகு அறியப்படுகிறது. தன்னை அறிதலும், புறத்தை அறிதலும் உள்ளத்தால் நிகழ்த்தப்படுகின்றன. உள் ளத்தின் உன்னதநிலை ஆன்மீக நோக்கு டன் இணைந்தது. சமூக உள்ளத்தின் ஓர் அலகாக அமைவது தனிமனித உள்ளம். அது பிரபஞ்சத்தின் ஓர் அலகாகவும் அமை கின்றது. புலன் கடந்த உணர்வுகளும் உள் ளத்தினால் உய்த்துணரப்படும். உள்ளத் தின் விரிந்த வடிவமே பிரபஞ்சம்.

கல்வி என்பது ஒரு ''வழிவகையாக'' இருக்குமேயன்றி; முடிவாகமாட்டாது. உல கியல் தளத்திலிருந்து தெய்விகத் தளத் திற்கு அசையும் பொழுது கல்வி வாயிலாக நிகழும் தேடல் பலம் பெறுகின்றது. அறிவு அறிவுக்காக மட்டும் அமைவதில்லை. அது பயனும் ஆன்மீகத் தேடலும் கொண் டது. இந்நிலையில் அறிவு (Knowledge) என்பது மேம்பட்ட அறிவாக அல்லது ஞானமாக (Wisdom) மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுணர்விலே ஆன்மீக வலுவைத் தேக்கும் கல்விச்செயல்முறை ''ஞானவிளைச்சல்'' எனப்படும். இந்நிலையானது, உள்ளுணர்வை உணர்த்தல் அல்லது தன்னுள்ளே குவிந்திருக்கும் நிறைபொருளை அறிதலாக மாறும். தன்னுள்ளே குவிந்துள்ள நிறைபொருளை அறியும் பொழுது உண்மை, அன்பு, அறம், சாந்தி, அனுராகம் (Grace) போன்ற விழுமியங்களைத் தழுவிய சிந்தனையும் செயல்களும் உள ஒடுக்க உணர்வும் மேலோங்கும்.

உள்ளுணர்வுடன் இணைந்த ஆத்ம நிறைவைக் காணும்பொழுது அறியாமைத் திரை விலகிவிடும் என்பது இந்துக்கல்வி மரபிலே விதந்துரைக்கப்படுகின்றது. தன்னை உணராத நிலையே ''அறிவற்ற'' நிலையாகக் கொள்ளப்படுகின்றது.

அனைத்துத் தொழிற்பாடுகளுக்கும்முரணுரை இருப்பது போன்று புலன் உணர்வுக்கும் முரணுரை உண்டு. (1) புலன்கள் வழியாகப் பெறும் அறிவு, (2) புலன்கள் வழியாகப் பெறாத அறிவு – என்றவாறு முரண்பட்ட வலுக்கள் செயற்படுகின்றன. புலன்கள் வழியாகப் பெறாத அறிவும் உள்ளுணர்வை வளப்படுத்தும் அறிவாகச் செயற்படும்.

உள்ளுணர்வை அறிய முடியாது தடுக்கும் வலுக்கள் பற்றியும் இந்துக்கல்வி நெறியில் ஆராயப்பட்டுள்ளது. இந்த வலு ''மமகாரவலு'' வென்றும், ''சுயநல அடுக்கு'' என்றும் ஆணவம் என்றும் பல்வேறு எண்ணக்கருக்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. ''அறியவிடாது தடுக்கும் அறியாமையே'' ஆபத்தானது என்று கொள்ளப்படுகின்றது. அறியவிடாது தடுக்கும் அறியாமை ''வற்கட அறியாமை'' என்ற தொடரால் குறிப்பிடப்படும்.

இவற்றின் பின்புலத்தில் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான கல்வியைத் திட்டமிடும் பொழுது பின்வரும் எண்ணக்கருக்கள் மீது முன்னரிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அவையாவன:

1. வற்கட அறியாமை
2. ஞான விளைச்சல்

உள்ளுணர்வே மேலானது – யதார்த்தங்களில் உன்னதமானது – அது முடிவிலியானது – மட்டுப் பாடுகளைக் கடந்து நிற்பது. அதன் வளத்திலும் பலத்திலுமே புத்தாக்கங்களும், புதிய கண்டுபிடிப்புக்களும் தோன்றும், புதிய நெருக்கீடுகளின் மத்தியில் திடத்யையும், இசைவாக்கத்தையும், ஏற்படுத்தவல்ல வலுவின் களஞ்சியமாக ''உள்ளுணர்வு'' விளங்குவதனால் அதனை வளமூட்டும் தெய்விகக் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

*References:*


1. D. C. Jayasuriya, **Education and the Quality of Life**, Asian Pathfinder Publishers, Colombo, 1993.
2. Alvin Toffler, **Future Shock**, Pan Books. London, 1975.
3. Neville I. Smith and Murrav Ainsworth, **Managing for Innovation** W. H. allen & Co. London, 1989.
4. K. Subrahmanyam, **Value Education**, Ramana Publication, Madurai, 1990.
5. Sri Aurobindo, **The Supramental Manifestation**, Sri Aurobindo Ashram Pondicherry, 1952.
6. G. R. Malkani, **Philosophy of the self**, Indian Institute of Philosophy, Amalner, 1939.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஸ்கோ BOSECO

பாடசாலை அப்பியாசக் கொப்பி
உற்பத்தியாளரும் விற்பனையாளரும்

அச்சுக்கூடங்களுக்கான தாள், மை
விற்பனையாளர்

அலுவலக உபகரண விற்பனையாளர்

அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**போஸ்கோ**
நவீன சந்தை,
3 A, கேணல் கிட்டு சாலை,
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய இந்துமதம் — ஒரு சிந்தனை

கலாநிதி கா. குகபாலன்
முதுநிலை விரிவுரையாளர், தரம் 1
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மிகவும் செழிப்பான நாகரிகத்தோடு விளங்கிய இந்து நதிப்பள்ளத்தாக்குப் பகுதிகளில் வாழ்ந்த மக்களால் இந்துமதம் வணங்கப்பட்டது என்பர். வரலாற்றுக் காலத் தொடக்கத்திலிருந்து பல்வேறுபட்ட இனக்குழுக்கள், பண்பாட்டினைத் தழுவுபவர்கள், பல்வேறு மொழிகளைப் பேசுபவர்கள் போன்றோர் வடக்கு, மேற்குப் பகுதிகளிலிருந்து இந்தியாவுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்தனர். இத்தகையோர் இந்து நதியின் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த மக்களை இந்துக்கள் என அழைத்தனர் எனவும் இதனாலேயே இந்து என்ற சொல் இந்நதி பாயும் நாட்டைக் குறிப்பதாகவும் காலப் போக்கில் இந்நாட்டின் எல்லைக்குள் வாழ்ந்தவர்களைக் குறிப்பதாகவும் அமைந்தது. நாளடைவில் தொல்குடிமக்கள், காட்டு மனிதர்கள், நாகரீகம் அடையாதோர் பண்பட்ட திராவிடர்கள், வேதகாலத்து ஆரியர்கள் போன்ற அனைவரையும் குறிக்கும் சொல்லாக வளர்ச்சி பெற்றுள்ளது.

இந்துமதம் போற்றும் இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை என்பதே அதன் உட்பொருளாகும். இதனை சநாதநம் என அழைப்பர். இம்மதமானது தொடக்கத்தில் பெயர் எதுவும் இல்லாததாக இருந்தாலும் காலப்போக்கில் "இந்து" என்ற பெயரினைப் பெற்றுள்ளது எனலாம். இந்து நாகரீகம் பாஞ்சாலத்திலிருந்து கங்கைசமவெளியில் பரவி அங்கிருந்த பழங்குடி மக்களின் வழிபாட்டோடு கலந்து தொடர்ந்து தென்திசையில் படர்ந்து அங்கு நன்கு வளர்ந்த மேம்பாட்டுடன் இருந்த திராவிடத்துடன் இரண்டறக் கலந்தது. அதாவது இதிகாச காலத்தில் திராவிட ஆரியப் பண்பாடுகள் இரண்டும் கலந்துள்ளன. அக்காலத்தில் வேதமதம் என்ற நிலைமாறி "இந்து மதம்" என வழங்கப்படலாயிற்று.

இந்து மதத்தில் ஆறு உப கூறுகளான சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன முறையே சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, முருகன், சூரியன் ஆகியவர்களை முழுமுதற் கடவுளாக கொண்டிருக்கின்றன. மக்களின் தேவையாகிய மனநிறைவினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு வழிபடும் நெறிமுறைகளும் ஒன்றோடு ஒன்று இணையும் நிலை காணப்பட்டிருந்தன. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு நெறிகளும் சைவம், வைணவம் என்ற இரண்டாக குறுகி இறுதியில் நெறிகள் யாவும் சைவத்திற்குள் அடக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. அதாவது இந்துக்கள் பல கடவுளர்களை வழிபடுவது போலத் தோன்றினாலும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் இறுதி நோக்கிலேயே வழிபடுகின்றனர் எனலாம்.

சிந்து வெளியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் விளைவாக சிவவழிபாடானது இற்றைக்கு 6,000 வருடங்களுக்கு முந்தியது என்பதைத் தெரிய முடிகிறது. இம்மதம் உலகில் பெரும்பாலான பகுதிகளில் பரந்திருந்தது என்பதற்கு அவ்வவ் பிரதேசங்களில் கண்டெடுக்கப்பட்ட, காணப்படும் சான்றுகள் ஆதாரங்கள் ஆவணப்படுத்துகின்றன.

உலகில் வாழும் மக்கள் மன அமைதியைப் பேணும் வகையிற் பல்வேறு மதங்களைப் பின்பற்றுகின்றனர். மதங்களை உயர்மதம், சிறிய மதம், தொன்மையான மதம் என மூன்று வகைக்குள் அடக்கலாம். கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, பௌத்தம் என்பன முதலாவது பிரிவுக்குள்ளும் சமணம், சீக்கியம், யூதம், உஷண்டோயிஷம் டாவோஜிஷம் போன்றன இரண்டாவது வகைக்குள்ளும் பூர்வீக மற்றும் பழங்குடி மக்களால் பின்பற்றப்படுவனவற்றை மூன்றாவது பிரிவுக்குள்ளும் அடக்கலாம். அட்டவணை 1 உலகில் வாழும் மக்கள் பின்பற்றி வரும் மதங்களை வெளிக்கொணர்கின்றது.

அட்டவணை 1

உலகில் மத அடிப்படையிலான குடித்தொகை — 1991

| மதங்கள் | எண்ணிக்கை (மில்லியன்) | | விதம் | |
|---|---|---|---|---|
| 1. கிறிஸ்தவம் | | 1783.8 | | 33.1 |
| அ) றோமன் கத்தோலிக்கம் | 1010.4 | | 18.8 | |
| ஆ) புரட்டஸ்தாந்து | 368.2 | | 6,8 | |
| இ) சமய அடிப்படைவாதிகள் | 168.7 | | 3.8 | |
| ஈ) அங்கிலிக்கன் | 73.9 | | 1.4 | |
| உ) ஏனையோர் | 162.6 | | 3.1 | |
| 2. இஸ்லாமியர் | | 950.7 | | 17.7 |
| 3. சமயசார்பற்றவர் | | 884.5 | | 16.4 |
| 4. இந்துக்கள் | | 719.3 | | 13.4 |
| 5. பௌத்தர்கள் | | 309.1 | | 5.7 |
| 6. நாத்திகர் | | 236.8 | | 4.4 |
| 7. சீனப்பழங்குடி சமூகம் | | 183.6 | | 3.4 |
| 8. புதிய சமயத்தவர் | | 140.8 | | 2.6 |
| 9. பழங்குடி சமயத்தவர் | | 94.0 | | 1.7 |
| 10. சீக்கியர் | | 18.5 | | 0.3 |
| 11. யூதர் | | 17.6 | | 0.3 |
| 12. ஷமானிஸ்ட், கன்பியூசியன், பஹாய் ஜைனர், ஷன்போலிங்ட் மற்றும் பிற சமயத்தவர் | | 44.0 | | 1.0 |
| மொத்தம் | | 5385.3 | | 100.0 |

**Source:** Encyclopedia Britannica, Book of the year.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழம் பெரும் சமயமும் மனித வாழ்க்கையின் தன்மைகள், ஆன்மீக மேம்பாட்டிற்கான வழிகள், கர்மம், மறுபிறப்பு, தர்மம், போன்ற பல கருத்துக்களை உள்ளடக்கியதுமான இந்துமதம் உலகில் மூன்றாவது பெரிய மதமாகும். 719.3 மில்லியன் மக்களின் நம்பிக்கைக்குரியதாகவுள்ளது. சிந்துவெளியில் தோற்றம் பெற்ற இம்மதம் உலகம் முழுவதும் பரந்திருந்தது என்பதற்கு பல நாடுகளில் காணப்படும் சான்றுகள் வலியுறுத்துகின்றன. அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து வாழ் பழங்குடிமக்களின் மொழியில் இலிங்கம் என்னுமொரு சொல்லுண்டு. அதுமட்டுமல்லாது இம்மக்கள் திராவிட இனத்தின் வழித்தோன்றல்கள் எனத் தெரிவிக்கப்படுவதும் இவர்கள் இந்துமதத்தை பின்பற்றியவர்கள் எனக் கருத இடமளிக்கிறது. இவ்விரு பிரதேசங்களைச் சூழவுள்ள பிஜி, நியூகினி, யாவா போன்ற தீவுகளில் சிவ சின்னங்களின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தற்போது பிஜித்தீவின் 41.0 சதவீதத்தினர் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தோனேசியாவில் சுமாத்திராவில் மெடான் பிரதேசத்திலும் பாலித்தீவிலும் இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக பாலித்தீவில் வாழும் சகல மக்களும் இந்துக்களே யாவர். இவர்கள் இந்தோனேசிய மொழியை தம் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இந்து தர்மத்தைக் கடைப்பிடித்து வாழும் சமூகமான இவர்கள் திருமூர்த்திக்கு கோவில் கட்டி வழிபடுகின்றனர். திருமூர்த்தி என்றால் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோரைக் குறித்து நிற்கின்றது. இந்நாட்டில் மொத்தக் குடித்தொகையில் 9.5 சதவீதத்தினர் இந்துக்களாவர்.

தென்கிழக்காசியப் பகுதிகளில் சீயம், (தாய்லாந்து) கம்போடியா, (கம்பூச்சியா) பிரதேசங்களில் பழைய திருவுருவங்களும் சிவவழிபாட்டுச் சிதைவுகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அதேபோலவே ஜப்பான், பபிலோனியா, சின்னாசியா, எகிப்து, கிரேக்கம் போன்ற பிரதேசங்களிலும் சிவ வழிபாட்டுச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பிரதேசங்களில் இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்களைக் காணமுடியாதுவிடினும் சிவவழிபாடு உலகில் பெரும்பாலான பிரதேசங்களில் செழிப்புற்றிருந்த பழம்பெருமையை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

இந்துசமயம் பின்பற்றப்படும் இந்தியத் துணைக்கண்டத்தில் குறிப்பாக இந்தியாவில் 83.0 சதவீதத்தினர் இந்துக்களாவர். இந்நாட்டிலுள்ள மக்கள் இந்து சமயத்தின் பல பிரிவுகளை பின்பற்றி வருகின்றனர். எனினும் தென்னாட்டில் வானளாவிய கோபுரங்களுடன் கூடிய சிவன் கோயில்களைக் கண்டு 'தென்னாடுடைய சிவனே' எனப் போற்றும் பேறு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அட்டவணை II) இந்தியாவுடனிருந்து பிரிந்து சென்ற பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய நாடுகளில் முறையே 1.5, 4.0 சதவீதத்தினர் இந்துக்களாவர். உலகில் இந்துமதத்தை மதமாக கொண்ட நாடு நேபாளமாகும். இந்நாட்டில் இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் மொத்தக் குடித்தொகையில் 95.0 சதவீதத்தினராவார். இவர்கள் தவிர பௌத்த சமயத்தைத் தழுவுபவர்கள் மிகச் சிறுபான்மையினரேயாகும். இந்நாட்டில் கிறிஸ்தவ மிசனரிமாரின் உள்வரவுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் மத மாற்றத்திற்கு தடை அரசினால் விதிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை — 2

## இந்தியாவில் மதப்பிரிவுகள்

| மதம் | வீதம் |
|---|---|
| இந்து | 82.6 |
| இஸ்லாம் | 11.4 |
| கிறிஸ்தவம் | 2.4 |
| சீக்கியம் | 2.0 |
| பௌத்தம் | 0.7 |
| சைவம் | 0.5 |
| பிற சமயங்கள் | 0.4 |
| சமயம் சாராதவர்கள் | 0.01 |
| மொத்தம் | 100.0 |

ஆதாரம்: Stateman's Year Book 1989.

## இலங்கையில் மதப்பிரிவுகள்

| மதம் | வீதம் |
|---|---|
| பௌத்தம் | 69.3 |
| இந்து | 15.5 |
| இஸ்லாம் | 7.5 |
| றோமன் கத்தோலிக்கம் | 6.9 |
| ஏனைய கிறிஸ்தவர்கள் | 0.7 |
| ஏனையோர் | 0.1 |
| மொத்தம் | 100.0 |

ஆதாரம்: குடிக்கணிப்பு அறிக்கை 1981.

இலங்கையில் மொத்தக் குடித்தொகையில் 15.5 சதவீதமானவர்களே இந்துக்களாவார். இலங்கை மற்றும் இந்தியத் தமிழர்களில் பெரும்பாலனோர் இந்துக்களாவார். ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் நாட்டில் வாழ்ந்த தமிழர்கள் யாவரும் இந்துக்களாக இருந்துள்ளனர். அவர்களின் வருகையினைத் தொடர்ந்து தமிழர், சிங்களவர்களில் கணிசமானோர் கத்தோலிக்கம் மற்றும் கிறிஸ்தவ சமயங்களைப் பின்பற்றலாயினர் அட்டவணை — 2).

ஐரோப்பியர் இந்துசமயத்தைச் சார்ந்த பிரதேசங்களை தமது குடியேற்ற நாடுகளாக்கியதைத் தொடர்ந்து அந் நாடுகளில் கத்தோலிக்கம் மற்றும் ஏனைய கிறிஸ்தவ சமயங்களைக் கட்டாயப்படுத்தியும் சலுகைகளைக் காட்டியும் மக்களிடையே அறிமுகஞ் செய்தனர். இதனைத் தொடர்ந்து இந்நாடுகளில் மதப்பரம்பற் கோலங்களில் கணிசமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன என்றால் மிகையாகாது. உலகில் மதம் மாறியோரினைப் பொறுத்தமட்டில் பெரும் சமயங்களான இந்து, பௌத்தம் என்பன பெரும் பாதிப்பினைப் பெற்றிருக்கின்றன. இலங்கையிலும் இவ்விரு சமயத்தவர்களும் மதம் மாற்றத்துக்குட்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

19 ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் முதலரைப்பகுதிகளில் ஐரோப்பியர், குறிப்பாக ஆங்கிலேயர் தமது குடியேற்ற நாடுகளில் பொருளாதாரத் தேட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இந்தியாவிலிருந்து கிழக்கு ஆபிரிக்கா, மலேசியா, பசுபிக் தீவுகள், மொறிஸஸ், பிரித்தானிய கயானா, மேற்கிந்தியத் தீவுகள் போன்றவற்றிற்கு இந்துக்களை அழைத்துச் சென்றனர். இவர்கள் அங்கு சென்றாலும் தமது மதத்தில் நம்பிக்கை கொண்டிருந்தமையால் தாம் சென்றடைந்த நாடுகளில் இந்து ஆலயங்களை நிறுவியுள்ளனர். மொறிஸஸில் 48.8 சதவீதத்தினரும் பிரித்தானிய கயானாவில் 37.0 சதவீதத்தினரும் மலேசியாவில் 9.3 சதவீதத்தினரும் சிங்கப்பூரில் 4.0 சதவீதத்தினரும் இந்துக்களாக இருக்கின்றனர்.

இரண்டாம் உலகப் போரினைத் தொடர்ந்து இந்துக்கள் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கான வெளியிடப் பெயர்வினை மேற்கொள்ளத் தொடங்கவே தாம் எங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெங்கு சென்றார்களோ அங்கு இந்து ஆலயங்கள் அமைத்து வழிபடத் தொடங்கினர். உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, போன்ற நாடுகளில் சிறு ஆலயங்கள் அமைத்து வழிபடத் தொடங்கினர். உதாரணமாக ஐக்கிய இராச்சியத்தில் லண்டன் முருகன் கோவில், ஈஸ்ட்காம் அம்மன் கோவில், விம்பில்டன் பிள்ளையார் கோவில்களைக் குறிப்பிடலாம். ஏறத்தாழ 300 இந்து மக்களைக் கொண்ட தீவான சிசெல்சுவில் ஸ்ரீநவசக்தி விநாயகர் ஆலயம் அமைத்துள்ளனர்.

1970 களைத் தொடர்ந்து இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான இந்துக்களின் சர்வதேச இடப்பெயர்வினைத் தொடர்ந்து தாம் சென்ற நாடுகளில் கோவில்களை அமைத்து வழிபட்டு வருவதைக் காணமுடிகின்றது. குறிப்பாக சுவிஸ்லாந்தில் ஒன்பது சிறிய கோவில்களை அமைத்து வழிபடுகின்றனர். இவ்வருடம் யூலை மாதம் சூரிச் நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீசுப்பிரமணிய ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது என அறியக்கிடக்கின்றது. இவை தவிர ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளிலும் இந்து ஆலயங்கள் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

மனித வாழ்க்கையை புனித வாழ்க்கையாக்கப் புறப்பட்ட மார்க்கமான இந்து சமயம் எச்சமயக் கொள்கைகளையும் நல்லெண்ணத்துடனும் மரியாதையுடனும் வரவேற்கும் பண்புடையது மட்டுமல்லாது பிறசமய கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுடன் நெகிழ்வுத் திறனும் இணக்கத்தன்மையும் கொண்ட சனாதன தர்மமாக விளங்குகின்றது.

பொதுவாக இச்சமயத்தை பின்பற்றுபவர்களில் பெரும்பாலோர் பொருளாதார ரீதியாக நலிவுள்ளவர்களாகவுள்ளனர். இலங்கை, இந்தியாவில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாக பொருளாதார சமூக முன்னேற்றம் என்ற ஒரு மாயையைக் காட்டி மதம் மாற்றி வரும் நிகழ்வு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றது. சர்வதேசரீதியாக நிறுவனப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ மதப்பிரிவுகள் பொருளாதார ரீதியாக நலிவுள்ளவர்களுக்கு தற்காலிக கவர்ச்சித் தன்மைகளை காட்டி மதம் மாற்றிவரும் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. இச்செயற்பாட்டினை வெளிநாடுகளுக்கு பொருளாதார தேட்டத்தினை மேற்கொள்ளச் சென்றவர்களிடையேயும் ஊக்கப்படுத்தி வருகின்றனர். இத்தகைய நிகழ்வானது சமயங்களிடையே பகையுணர்வினை தோற்றுவிக்கக் கூடியதாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது வேதனைக்குரியதாகின்றது.

எனவே இவ்வாறான தம் மதம்விட்டு பிறமதம் மாறுவதற்கான காரணிகளை கண்டறிவதும் அதனை தடுத்து நிறுத்துவதும் இந்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களின் பொறுப்பேயாகும். இந்துசமயத்தவர்களை ஒன்றிணைக்கும் சர்வதேச அமைப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

ஏழை மக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட இந்துசமயம் அண்மைக் காலங்களில் பல்வேறுபட்ட பிரச்சனைகளைச் சந்தித்து வருகின்றது. அதாவது பொருளாதார பிரச்சனையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதாக தெரிவிக்கும் ஒரு சில மதப் பிரிவுகள் தம் மதம் சாரச் செய்வதில் அண்மைக் காலங்களில் முனைப்பாக இருந்து வருவதை இலங்கையில் மட்டுமல்லாது இந்துக்கள வாழும் எல்லா நாடுகளிலும் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றினைத் தடுத்து நிறுத்தி இந்துப் பண்பாட்டினை தொடர்ச்சியாக முன்னேற்ற வேண்டுமானால் இந்துக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சார்ந்த நிறுவனங்களும் பெரும் பங்காற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் ஒரு சில இந்து அமைப்புக்கள் சர்வதேச ரீதியாக இயங்கிவரினும் அவ்வமைப்புக்களின் செயற்பாடுகள் மதமாற்றத்தை தடுப்பதில் பங்கு கொள்வதில் பெருமளவில் அக்கறை கொண்டவர்களாக இருக்கவில்லை. ஆகவே சர்வதேசரீதியாக செயற்பட்டுவரும் அமைப்புக்கள் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுமட்டுமல்லாது புதிய அமைப்புக்கள் சர்வதேச மட்டத்தில் மட்டுமன்றி நாடுகள் ரீதியாகவும் அன்றில் பிரதேச மட்டத்திலோ அமைக்கப்படுதல் அவசியமாகின்றது. இவர்களது பணியானது பொருளாதார ரீதியாகவோ அல்லது கல்வி ரீதியாகவோ பின்தங்கியவர்களுக்கு உதவிகளை மட்டுமல்லாது ஊக்கமும் கொடுத்தல் வேண்டும். உலகில் வாழும் 720 மில்லியன் இந்துக்களின் குறைந்த பட்சம் அரைப்பங்கினர் ஒரு வருடத்திற்கு 10 டொலரினை அன்பளிப்பாக வழங்குவார்களேயானால் மூவாயிரத்து அறுநூறு மில்லியன் டொலரினைப் பெற்றுக் கொள்ளலாம் இவ்வாறு கிடைக்கும் பணம் ஏழை மக்களைச் சென்றடையுமாயின் மதமாற்றத்தைத் தடுக்க முடியும்.

இலங்கையில் நிகழ்ந்துவரும் மதமாற்றத்திற்கு பொருளாதாரக் கஷ்டமே காரணம் எனக் கொள்ளப்படுகின்றது. நாட்டிலுள்ள பெரும்பாலான கோவில்களில் திருவிழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்படுகின்றது. அப்பணத்தின் ஒரு பகுதியினை சமூகப் பணிக்கு ஒதுக்குவது அவசியமாகின்றது. அத்துடன் சகல கோவில்களின் பரிபாலன சபைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட பொதுச்சபை ஒன்று அமைக்கப்படுதல் வேண்டும். அவ்வக் கோவில்களின் வருமானத்திற்கு ஏற்ப குறித்த பங்களிப்பினை பொதுச்சபைக்கு வழங்குதல் வேண்டும். அவ்வமைப்பு நலிவுற்ற மக்களை இனம் கண்டு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அதாவது இவ்வமைப்பு சமூகப் பணியூடாக சமயப் பணியினை மேற்கொள்வது என்பதே அதுவாகும். இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் இந்துமகா சபையினை வலுப்படுத்தி அதன் ஊடாக சமூகப் பணியினை மேற்கொள்வதற்கு தூண்டப்படுதல் வேண்டும்.

மேலும் சமய மற்றும் சமூகப் பணியினை முன்னெடுத்துச் செல்வதற்கு இளைஞர்கள் யுவதிகளிடையே மதப்பற்றினை வளர்த்தெடுக்கும் வகையில் கருத்தரங்குகள் பட்டிமன்றம் மற்றும் சமயச் சொற்பொழிவுகள் போன்றவற்றை பட்டி தொட்டிக்கள் எல்லாம் பரவச் செய்ய வேண்டும். நேபாளத்தில் அரசினால் மதமாற்றம் செய்வது சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அதேபோலவே இலங்கை அரசு தூண்டப்பட்ட மதமாற்றத்தை தடுப்பதற்குச் சட்டம் கொண்டு வரவேண்டும்.

" அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்",

—குறள் 997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமமார்க்கமும் தருமமார்க்கமும் போதிப்பதென்ன?

திருமதி கலைவாணி இராமநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கருமம் என்பதென்ன; தருமம் என்பதென்ன என்பதை விளக்குவதானால் கருமம் எனில் செயல் அல்லது வினை. தருமமும் அதுவேதான் எனலாம். அப்படியெனில் கருமம்–தருமம் என்பவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுதான் யாது? என்ற கேள்வியும் எழக்கூடும். பலனைக் கருதி அல்லது அவாவிச் செய்யும் செயல்களைக் கருமம் எனவும், பயனில் விருப்பின்றிக் கடமை எனக்கொண்டு ஆற்றும் செயல்களைத் தருமம் எனவும் வேறுபடுத்தலாம். பெரும்பாலோர் புண்ணியம் என்ற பலனை மனதிற்கொண்டே தருமகாரியங்களையும் ஆற்றுவதனால் தருமம் அல்லது அறம் என்பது சாதாரண செயற்பாடாகக் கருதப்படாது புண்ணியச் செயல்களாகவும் கருதப்படுகின்றன. ஆதலால் கருமச் செயல்களும் தருமச் செயல்களும் இருவினைகளை அடிப்படையாகக் கொண்டமைவதாகச் சைவ சித்தாந்தம் போதிக்கின்றது.

'தருமம்' என்பதன் விளக்கத்தை முழுமையாகப் புரிந்து கொள்வோமானால் தருமச் செயலின் அடிப்படையும் கருமச் செயலின் அடிப்படையும் ஒன்றாகவே அமைந்திருப்பதை உணரமுடியும். கருமம் என்பது காமிகம் – நிஷ்காமிகம் என இரு பிரிவிலே அழைக்கப்படுதலால்; நிஷ்காமிய கருமம் பலன் கருதாத செயலைக் குறிப்பிடும் போது அது தருமமாகும் தகுதியை அடைகின்றது. அங்கே கருமத்தினதும் தருமத்தினதும் அடிப்படை நோக்கு ஒத்திருத்தலைக் காணலாம். அதாவது கருமமானது சுய விருப்பினை விலக்கி கடமையினைப் பெரிதென மதித்துச் செயற்படுமிடத்து அதுவே தருமம் தழைத்து வளரும் நிலமாக விளங்குகின்றது. தருமத்தை நிலைநாட்டி அதருமத்தை அழிப்பதை நோக்கமாகக் கொண்டெழுந்த கீதோபதேசமும் 'பலன் கருதாத கருமமே தருமத்தை வாழ்விக்கும்; கருமம் என்பது தனிமனிதனால் பின்பற்றப்படும் உயர்ந்த கடமையாகும்' என்பதையே தனது போதனையாக உணர்த்தியுள்ளது. இங்கு தருமமும் கருமமும் அடிப்படை நோக்கிலே ஒன்றுபடுகின்றன. தன்னலம் கருதாத எந்தக் கருமமும் தருமத்தின் பாற்படும் என்பதே சித்தாந்த சிந்தனையாகும்.

'தருமம் என்பது உலகினைப்
பரிபாலிக்கும்
இறைவனின் பேராற்றல்'

என சுவாமி கேசவதாஸ் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்வினைக் கடந்தோரால் தான் அறச் செயல்களைத் தடையின்றி ஆற்றமுடியும் என்ற தவறான கருத்தொன்றும் பெரும்பாலோரிடையே காணப்படுகின்றது. ஆனால் அறச் செயல்களின் விளைநிலமாக இல்வாழ்க்கை அமைவதன் பொருட்டே இந்துசமயம் அதனை 'இல்லறம்' என இயம்பிற்று என்பதை மறந்து விட்டோம்.

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தென்''
(குறள்)

என வள்ளுவர் குறிப்பிடுவது இல்லறத்தை என்பதை மனதிற் கொள்ள வேண்டும். கிருகஸ்தன் ஒருவனது கடமை ஐவகை (வேள்வி) அறம் புரிதல் என தர்ம சாஸ்திரங்கள் போதிக்கின்றன. பெற்றோர், பெரியோர் (விருந்தினர்), இறைவன், தேவர், பூதங்கள் (மன்னுயிர்கள்) என்ற ஐந்து பிரிவினரையும் ஆதரிப்பது கிருகஸ்த தர்மமாகும். அதனை ஒருவர் உயர்ந்த கருமமாகவோ அன்றிக் கடமையாகவோ கொள்ளின் அவரே தன் சுயகர்மத்தைச் செய்து உயர்நிலை பெற்ற தேவராவார். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' தகுதி அவருக்குக் கிட்டுகின்றது. பெண்களும் தம்குல ஒழுக்கத்தால் கணவரைப் பிள்ளைகளை – குடும்பக் கடமைகளை பேணுவதில் கணவருக்கு ஒத்துழைப்பதால் அவர்களது 'பதிவிரதா தர்மம்' பேணப்படுகின்றது. அங்கு சுயவிருப்புக்கள் அற்றுப்போனதால் கர்மவிதி அவர்களைப் பந்திப்பதில்லை. எந்தப் பந்தத்திலும் அவர்கள் அகப்படுவதில்லை. அவர்கள் உயர்ந்த கருமயோகி ஆகின்றார்கள். ஸ்ரீராமகிருஷ்ண – சாரதாதேவியாரும், மகாத்மா காந்தி – கஸ்தூரிபா அம்மையாரும் இவற்றிற்கு நல்ல உதாரண புருஷர்களாகும்.

மேலும் தெய்வத்திற்கும், இயற்கைக்கும், தேசத்திற்குமுரிய ஒழுக்க நெறிகள் 'ரிதம்' என்ற கோட்பாடு மூலம் வேதகாலத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றினை நால்வகை வருணம், நால்வகை ஆச்சிரமம், நால்வகைப் புருடார்த்தங்களாக தர்ம சாஸ்திரங்கள் வகுத்துக் காட்டியுள்ளன. எல்லோரும் எல்லாவித அறநெறிக் கோட்பாடுகளையும்' ஒழுக்க விதிகளையும் அனுட்டிக்க வேண்டுமென்ற கட்டாயம் இருக்கவில்லை. தனக்கென அமைக்கப்பட்ட வாழ்க்கை நெறியில் கொடுக்கப்பட்ட நியதிகளை கடமை வழி தவறாமல் ஆற்ற முடிந்தால் அதுவே தர்மமாகும். உதாரணமாக நால்வகை வாழ்க்கை நிலைகளில் மாணவநிலையில் கற்றலும், கிருகஸ்த நிலையிலே காத்தலும் (ஐம்புல வேள்வி) வானப்பிரஸ்த நிலையிலே கடமையின் தாற்பரியத்தை உணர்த்தலும், சன்னியாஸ தர்மத்தில் உணர்ந்ததை அறிதலும், பிறருக்கு அறிவித்தலுமாம். இதுவே கடமையின் பாற்பட்ட கர்மமாகும். இக்கடமைகளை ஆற்றுமிடத்து மனிதர்க்கு ஏற்படும் துயரம், இடையூறு, தடைகள், சோதனைகள், வேதனைகள் இவற்றினைப் பக்குவமாகத் தாண்டுவதற்குக் கொடுக்கப்பட்ட பாலங்களே பக்தி, பிரார்த்தனை, ஆலய வழிபாடு, தியானம், யோகப்பயிற்சி என்பனவாம். வாழ்க்கை இடையூறுகளால் மனிதர் பாதிக்கப்படுமிடத்து மேற்சொன்ன நியதிகளைப் பின்பற்றுவோர் மன ஆரோக்கியமும், உடல் ஆரோக்கியமும் கெடாமல் பாதுகாக்கப்படுகின்றனர்.

இப்பாலங்கள் தகர்ந்து போனால் பள்ளமாகிய பெருவெள்ளத்தில் விழுந்த நிலைதான் உண்டாகும். கரையேறும் வழியானது அத்தருணம் கர்மம் என்னும் விதியின் கரங்கட்குப் போய்விடும். ஏனெனில் எமது செயல்களை கடமை மறந்து எமது விருப்பப்படி ஆற்றுவதானால் அதன் மூலம் எமது எதிர்காலவிதியை நாமே நிர்ணயிக்கிறோம் — எழுதுகிறோம் — திருமண எழுத்து நடைபெறும் சமயங்களில் அடிக்கடி சிந்திப்பதுண்டு. ஆம் அங்கு போடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவர் கையெழுத்தும் இருவரது எதிர் காலத்தையும் நிர்ணயிப்பதில்லையா? 'தாரமும் குருவும்' தலைவிதி என முன்னோர் குறிப்பிட்டதும் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.] இந்து ஒருவனின் குடும்பவாழ்வு சல்லாபத்துக்கானதுமல்ல - சன்னியாசமுமல்ல; அது சம்சாரமாகும். கிருகஸ்தர் சட்கு சாஸ்திரங்கள் போதிப்பதெல்லாம் கடமை நெறியுணர்ந்த உலக வாழ்க்கையாகும். இந்துக்களின் குடும்பவாழ்வு ஆன்மீகப்பயணத்திற்கான முதற்படியாகவே சாஸ்திரங்கள் வகுத்துத் தந்துள்ளன. சம்சாரக் கடலில் நீந்துவோர் கடமை என்ற படகில் ஏறி வாழ்வைச் செலுத்தினால் முறைப்படி கரை சேர்வர். அக்கடலில் கடமைதவறி காமத்தில் மூழ்கி, காமிக கர்மத்தில் ஆழ்வோர் ஆழ்கடலில் விழுந்து அவதிப்படுவோராவார். எதுவரினும் மனத் திடத்துடன்;

செய்வதுன் கடனே — அறம்
செய்வதுன் கடனே — அதில்
எய்துறும் விளைவினில்
எண்ணம் வைக்காதே

என்றவாறு வடநாட்டு பக்தர் அஸ்வினி குமாரின் பாடலும் நிஷ்காமிய கர்மத்தையே விளக்குகின்றது.

கடமையுணர்வினை உலக வாழ்வில் பின்பற்றுவது பாசத்திற்கடிமையான எம் போன்றோர்க்கு மிகக்கடினமானது. அப்படியான சமயங்களில் நாம் கர்மவிதியின் கைப்பொம்மைகளாகிறோம். நாமே பற்று வைத்ததன் விளைவாக எமது அடுத்த வாழ்விற்கான பற்று - வரவையும் எம்மையறியாமலே எழுதிவிடுகிறோம். ஆனால் அது எமக்குப் புரிவதில்லை. அவைகள் எமது புண்ணிய பாவக்கணக்கிலே சேருகின்றன. இது புரியாததால் கடவுளைக் கணக்காளன் - விதியின் தந்தை எனக் கண்டிப்பதுமுண்டு. நாம் செய்தவை தமக்கு வருகின்றன என்பதை உணர்வது கடினமே. ஏனெனில்,

''புண்ணியமாம் பாவம் போம் போன நாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள் — எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்
தீ தொழிய நன்மை செயல்''

என்ற ஔவையின் போதனைதான் பலவீனமான மனத்தைத் திடப்படுத்தும் மருந்தாகும். புண்ணிய பாவங்கள் இரண்டுமே பிறவித் துயருக்கு எம்மை அனுப்பி வைக்கும் சாதனங்களாகும். ஆதலால் கடமையினைச் செய்யும் போது பாசத்தால் வருந்த நேரிட்டால்,

''வருந்தி அழைத்தாலும் வாராதன வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா
இருந்தேங்கி நெஞ்சம் புண்ணாகி நெடுந்தூரம் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்''

என்று நம்மை நாமே தேற்றப் பழகிக் கொள்ள வேண்டும். அதனைத் தொடர்ந்து மனப்பக்குவமும் நாளடைவில் வந்துவிடும். காமியகர்மத்தை விடுத்து நிஷ்காமிய கர்மம் காட்டும் தர்மநெறியினைப் பின்பற்றும் மனத் தெளிவுமுண்டாகும்.

''நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே'

(மணிவாசகர்)

'என் செயலாலாவது யாதொன்றுமில்லை யினித் தெய்வமே எலாம்
நின் செயலென்றுணரப்பெற்றேன்'

(பட்டினத்தார்)

என முன்னோர் காட்டிய வழியினைப் பின்பற்ற வேண்டும். அந்த நிலையிலே ... ப வாழ்வைச் சுமையாக நினைக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமாய் நினைக்கப் பழகவேண்டும். கடமையை மறக்கும்படி இடமளிக்கக் கூடாது. "சுமையாய் நினைப்பவன் சன்னியாசி; சுகமாய் நினைப்பவன் சம்சாரி' என்ற கவிஞர் ஒருவரின பாடலின் பொருள் இதுவெனலாம். சன்னியாசிகளில் சிலரை வேடதாரிகள், ஆஷாடபூதிகள் என்றும் பொதுவாக இந்து சமயம் நோக்குவதுண்டு. ஆனால் லோகக்ஷேமத்திற்காகத் தன்னைத் துறந்தும் – தவத்திலிருந்து தருமத்தை பரிபாலிக்கும் ரிஷிகளையும், தவசிகளையும் இந்துமதம் ஞானிகள் என்றும், ஆன்மீக ஆச்சாரிய சுவாமிகள், மெய்யடியார்கள் என்றெல்லாம் போற்றுகின்றது. எமது வேதங்களை, உபநிடதங்களை, தர்மசாஸ்திர நூல்களை ஆக்கித் தந்தோர் யாவரும் இறையருள் பெற்ற குடும்பத் துறவிகளே யாவார். அவர்கள் தத்தம் குடும்பத்தினரை விலக்கிவிட்டு உலகிற்கு உபதேசிக்க வரவில்லை. குடும்பத்திலிருந்து சேவையாற்றி ரிஷிஞானம் பெற்றவர்களாவர். எனவே கடமை செய்தல், சேவை புரிதல் என்பனவற்றால் 'செயலைத் துறத்தல் அல்ல'; தத்தம் 'செயல்களில் துறவு' கொள்ளும் மனப்பான்மையினை வளர்த்துக் கொள்வதேயாகும்.

முனிவர்களையும் ரிஷிகள் என்ற பெயருடையோரையும் அடிக்கடி வேறுபடுத்தி சிந்திப்பதுண்டு. 'முனி' என்றால் முனிதல் அல்லது கோபித்தல் என்பதும் பொருள். கோபத்தை வென்றோர்களை சினத்தைக் கடந்தவர்களை முனிவர்கள் எனப்படுவதுண்டு. ஆனால் நமது முனிவர்களிற் பலர் கோபக்காரர்கள் எனப் புராணங்கள் சித்தரிக்கின்றன. துர்வச முனிவரால் சகுந்தலை வாழ்வும், விஸ்வாமித்ர முனிவரால் மேனகையும் தோற்றதுடன், கௌசிக முனிவருக்கு உபதேசமளித்த பெண்மணியையும் நோக்குமிடத்து அவர்கள் தமது தவவலிமை கொண்டு தணிக்காமல் தவத்தினைச் செலவிட்டதுதான் 'முனிவர்' என்று பெயர் பெறக் காரணமோ என எண்ணுவதுண்டு

ஏனெனில் சில தவ சிரேஷ்டர்களைச் சமய நூல்கள் வசிட்டமகரிஷி, வியாசமகரிஷி, சுகப்பிரம்மமகரிஷி எனக் கூறும் போது சிலரை 'முனிவர்' எனக் கூறுவது அத்தகையோரது கோபமாகிய குண விசேடத்தாலே எனக் கருதுவதுண்டு. எது எப்படியாயினும் முற்காலத் தவசிகள் அனைவரும் குடும்ப வாழ்விலிருந்து கடமைபுரிந்து ஜீவன்முக்தராகிய – விடுதலை நிலைக்கு வந்தவர்களாகவே உள்ளனர். அதிலிருந்து பற்றற்ற நிஷ்காமிய கர்மம் – அதர்மத்தை – மறத்தை – அகம்பாவத்தை – ஆணவத்தை – அநீதியை அழித்து அறநெறியை நிலைநாட்டத்துணை புரியுமென்பது புலனாகின்றது.

புத்தரும், மகாவீரரும், யேசுவும், காந்தியும் இவ்வுண்மையினையே தமது தரும போதனைகளில் பின்வந்த காலத்திலும் எடுத்துக்காட்டினர். குடும்பத்திலுள்ளவர்களது தேவைகளைப் புறக்கணித்துவிட்டுத் தருமம் செய்யும்படி ஓரிடத்திலும் தர்மநூல்கள் விதிக்கவில்லை. அதேபோன்று பெருமைக்காகவும் புகழுக்காகவும் தருமம் செய்வதையும் வேத சாத்திரங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்துக்கோவில்களில் கிரியை முதலிய சடங்குகள் பற்றின்மையை ஏற்படுத்தவும், மனப்பக்குவத்தை ஊட்டவும், தானதர்மங்களை வளர்க்கவுமே ஏற்படுத்தப்பட்டவையாகும். கடவுள் என்ற கல்லுக்கு இவை அவசியமா என்ற வினா காலம்தோறும் கேட்கப்பட்டாலும் சடங்குகள் மூலம் சேதமாகின்றன என நினைக்கும் பொருள்கள் யாவும் கடவுளைவிட மக்கட்கூட்டத்தையே சென்றடைகின்றன என்பது பலருக்குப் புரிவதில்லை. அதுமட்டுமன்றிக திருவிழா போன்ற பெருவிழாக்காலங்களில் சடங்குகள் பலவகை மக்கட்பிரிவினருக்கு வருமானம் தேடிக்கொடுக்கின்றன.

மாலைகள் வாங்குவதால் பூக்காரப் பிரிவினருக்கும், இசைக் கச்சேரிகள் மூலமாக கலைஞர்கட்கும், பழவகை அபிஷே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் பொருட்களை வாங்குவதால் வர்த்த கர்கட்கும், கமக்காரருக்கும், பால் பெரு மளவில் தேவைப்படுவதால் பால் உற்பத்தி யாளருக்கும் என ஒரே சமயத்தில் எத் தனை பிரிவினர்க்கு வருமானம் கிடைக்க ஏதுவாகின்றன. ஆண்டவனுக்கு படைத்த பொருள்களிலும் சில அந்தணர்கட்கும்' மீதியைப் படைப்போரும் பெறுவதுடன், அதனைப் பிறருக்கும் பங்கீடு செய்கின் றோம். பலருக்கு உணவு கிடைக்கிறது. பலருக்குத் தொழில் வளர்கிறது. இத்த னையும் ஆண்டவன் சன்னிதானம் என்ற ஒரு நோக்கத்திற்காகச் செலவழிக்கிறோமே யன்றிச் சாதாரண சமயத்தில் அவ்வாறு பொருளை விரயம் செய்ய யாரும் எண் ணமாட்டார்கள். இதனால் தானதர்மமே கிரியைகளின் அடிப்படைப் போதனை என் பது புலனாகும். வேதகாலயாகாதி கிரியை களின் சுருங்கிய வடிவமே இன்றைய ஆலயக் கிரியைகள் எனலாம்.

இன்றைய நிலையிலே உற்சவங்களை விட ஏனைய ஆலயத்திலிடம் பெறும் பூசைகள் பலவும் பெரும்பாலும் காமிகக் கிரியைகளாகவே மாறிவிட்டன எனலாம். கடவுளிடத்துள்ள பிரியமும் நமக்குப் பற் றினைப் போக்குதற்குதவாது என்பதால் தான்,

'ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்'

என்றார் திருமூலர். செய்கருமத்தில் பற்று விட்டவன் யாராயினும் அவனுக்கு

'அஞ்சுவது யாதொன்றுமில்லை
அஞ்ச வருவதுமில்லை'

என்பதை அப்பர் சுவாமிகளும் எடுத்துக் காட்டினார். எனவே குடும்பவாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி கருமநெறியா னது, கடமையின் பாற்படி ஆற்றுமிடத்து அதுவே தருமநெறியாகி விடுகின்றது. நாயன்மார்களும் சமய நெறியாக நால் வகை மார்க்கங்களின் வழி தருமத்தையே போதித்தனர். அரசன் முதல் ஆண்டவன் வரை வாழ வாழ்த்தொலி எழுப்பியதுடன் அறம் தழைக்க அறிவுரையும் வழங்கினர்.

வாழ்க! அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க! தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க! தீயது எல்லாம்
சூழ்க! அரன் நாமமே

என்றவாறு தீயவை கழிந்து தருமத்தின் நாமம் ஓங்க வேண்டும் எனப் போதித்த தைத்தான் மூன்று நூற்றாண்டுகள் கழித்து சேக்கிழார் சுவாமிகளும் பின்வரு மாறு சமூகத்திற்கு மொழிந்தார்.

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க — மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம், வேள்வி மல்க...

இரு பாடல்களும் ஒன்றினையே போதிக் கின்றன. 'வேத அறங்கள் தழைக்கவும், கொடிய வேந்தன் ஆட்சி ஒழியவும், கட வுள் பெயரால் மன்னன் ஆட்சியும், மக் கள் குலமும் வாழ வேண்டும்' என்ற தரும போதனை மிகப் பழையதுதான். நாமும் மீண்டும் அதைத்தான் நினைத்துப் பார்க் கும் தேவையில் வாழ்கிறோம். புதியன வாக எதுவுமில்லையே எனவும் தோன்ற லாம். 'சத்தியம்', 'தருமம்', 'உண்மை' இவற்றுக்கு முற்காலம், பிற்காலம், பழமை, புதுமை எதுவும் கிடையாது என் பதே பொது முடிபாகும். அரைத்தமாவை திரும்பவும் புதிய கலவையில் அரைத்தா லும் முக்காலமும் நிலைத்தபடி உள்ளதே வெளிப்படத் தோன்றும். ஆதிகாலமாம் வேதகாலம் முதல் இன்றுவரை 'தருமம்' ஒன்றுதான் கடவுளாகவும் காலமாகவும் கருமவிதியாகவும், கடமைக் கொள்கையாக வும், இயற்கை விதியாகவும் எல்லாச் சம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களும், எல்லாத் தரிசனங்களும் கூறி வந்துள்ளன.

இந்தியத் தத்துவக் கோட்பாடுகளில் கூட வைதிக தரிசனங்களும்சரி, அவைதிக தரிசனங்களும் சரி கடவுட் கோட்பாட்டினை முதன்மைப்படுத்துவதைவிட கருமக் கொள்கையினை முதன்மைப்படுத்துவதை நோக்குமிடத்து இவ்வுண்மை புலப்படாமற் போகாது. இந்துமதம் தனது புராதன பெயராக 'சனாதன தர்மம்' என்ற பெயரைக் கொண்டிருப்பதும் இக்காரணம் பற்றியே ஆகும். புத்தரும் மகாவீரரும் அதனால்தான் கருமவிதியினை தரும போதனையாக மேற்கொண்டனர். வேதாந்தமும் பக்தியைவிட கருமயோகத்தையும் பற்றின்மையையும் புலப்படுத்தவே நிர்க்குணபிரமத்தை உயர்ந்த போதனையாகக் கொண்டது. சைவ சித்தாந்தம் கருமக் கொள்கையின் மேம்பாட்டினைக் கடவுட் கொள்கை மூலம் திட்டமிட்டுக் காட்டியதும் அறக் கோட்பாட்டை வலியுறுத்தும் காரணத்தினாலாகும்.

கருமமும் தருமமும் ஒன்றா வேறா? என்ற சிந்தனையினை சொந்தப் பாவனை மூலமே ஒருவர் உணரமுடியும். இறப்பு - பிறப்பு; இருள் – ஒளி; இன்பம் – துன்பம்; உயர்வு - தாழ்வு; அன்பு – அகந்தை; அறிவு – அறியாமை ஆகிய நேரெதிர் இரட்டைப் பண்புகள் மனிதராகிய எம்மிடம் உள்ளவரை நாம் ஒருபோதும் கரும-தரும ஒருமைப்பாட்டை உணருவது கடினமேயாகும். இரட்டைத் தன்மைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதால் தான் உலகிலே பிரச்சினைகளும், துயரங்களும், வேதனைகளும் எழக் காரணமாகின்றன. 'இரண்டு' என்பது இல்லையாகி 'ஒன்று' என்ற ஐக்கியபாவம் ஏற்படுமானால் அங்கு பேதத்திற்கே இடமில்லை. இதுவே அத்வைத பாவனை. சித்தாந்த வேதாந்தம் தெளிவுபடுத்தும் தத்துவபோதனையாகும். கடவுளா? கன்மமா? ஆத்மாவா? பிரம்மமா? இச்சிந்தனையின் முடிவு சாதாரண மக்கட் பிரிவினர்க்கு என்றுமே புதிராகத் தான் உள்ளது.

இம்முடிபுகளை விளக்க நினைத்தோமானால் அவை சிலசமயம் வேதாந்த முடிபைச் சாரும். அல்லது சித்தாந்தத்தை தொட்டு நிற்கும். எனவே

இரண்டில் ஒன்றா?
இரண்டும் ஒன்றா?

இதனைத் தெளிவாக்கிக் கொண்டால் சித்தாந்தம். அது தெரியாமற் போனால் வேதாந்தம் என்பதுதான் இன்றைய பொது முடிபாகும். எப்படி ஆராயினும் 'முடிபு' மேற்குறித்த இரண்டிலே ஒன்றினைத்தான் சாரும் என்பதனாற் போலும் வேதாந்த சித்தாந்தக் கோட்பாட்டின் பின் இந்து மதத்திலே புதிய முடிபினைக் காட்டும் எத்தரிசனமும் எழவில்லைப் போலும்.

சுபம்.

கட்டுரைக்குதவிய நூல்கள்

1. The Principal Upanishads, S. Radhakrishnan, George Allen Unwin Ltd., London, 1953.
2. Indian Thought A Critical Survey K. Damotharan, Bombay, 1967.
3. திருமந்திரம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமட வெளியீடு, 1968.
4. பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு, ப. இராமநாதபிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, 1961.
5. பகவத்கிதை, ஸ்ரீ சங்கரபாஷ்யம், சுந்தரராஜ சர்மா (மொழிபெயர்ப்பு) 1970.
6. கர்மயோகம், மு. ஞானப்பிரகாசம், வட இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம், 1968.
7. இந்து தர்மங்கள், ஆச்சார்ய சுவாமிகள், சென்னை, 1976.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலோன் மருகன்

எஸ். சிவலிங்கராஜா, M. A.
முதுநிலை விரிவுரையாளர் - தரம் I

அருணகிரிநாதர் முருகனைப் பாடும் போது பெரும்பாலும், முருகனின் மாமனாகிய திருமாலின் புகழை, வீரத்தை, சிறப்பைத் தெய்வத்தன்மையை வியந்தேபாடுகின்றார். திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி முதலியவற்றை நோக்கும் பொழுது முருகனுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் அளவுக்குத் திருமாலுக்கும் வழங்கப்படுகின்றமையையும் அவதானிக்க முடியும்.

தமிழ்நாட்டில் முருக வணக்கம் மிகப் பழங்காலத்தில் இருந்தே வழக்கில் இருந்துள்ளது. அவ்வாறே திருமால்வழிபாடும் நடைமுறையில் இருந்துள்ளது. இவ்விரு கடவுளர்களுக்கு மிடையே ஏற்பட்ட குடும்ப உறவுபற்றிய புராண இதிகாசக்கதைகளும் தமிழிலே நிறைய உள்ளன. உயர் இலக்கியங்களிலன்றி வாய்மொழி இலக்கியப் பரப்பிலும் இக் குடும்ப உறவுப் பாரம்பரியம் பற்றிய கதைகளைக் காணலாம். பொதுவாகச் சைவக் கடவுள்வாழிபாட்டு மரபில் இக்குடும்பத்தன்மை பேணும் வகை மிக நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது.

குடும்ப மரபினுள் இறைவனையும் இணைத்து வழிபாடியற்றியமையின் பல்வேறு பரிணாமங்களையும் சைவ, வைஷ்ணவ சமயங்களிலே பரவலாகக்காண முடியும் ''அம்மை நீ, அப்பன்நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீ'' என்று உரிமை கொண்டாடுவது தொடக்கம் ''மானுடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்க்கிலேன் கண்டாய்'', மைத்துனன்நம்பி மதுசூதனன் வந்து என்கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி'' என்று கூறுவது வரை குடும்ப உறவுச் சூழலையே சித்திரித்து நிற்கின்றது.

திருமால், முருகன் உறவு நிலைபற்றி நீண்டகாலமாகப் பேசப்பட்டுவந்த போதிலும் அருணகிரிநாதரின் காலப்பகுதியில் இந்தக் ''குடும்ப உறவு'' அழுத்தம் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. ''கொற்றவை சிறுவனான'' முருகனுக்குரிய வீரம், ஆற்றல் என்பவற்றிற்கு உறுதுணையாக மாலோனின் வீரம், வெற்றி ஆற்றல் என்பன அமையவேண்டும் என்ற ஓர் எதிர்பார்ப்பின் வெளிப்பாடகவும் இதனைக் கொள்ளலாம். திருமாலின் பல்வேறு அவதாரங்களையும் அருணகிரியார் குறிப்பிட்டுப் பாடிய போதிலும் இராமாவதாரத்தினையே விதந்து பாடுகின்றார். ''இலங்கையழித்த'' பிரானாகிய மாயனின் மருகனுக்கு வீரம் இரட்டிமடங்காகும் என்ற குரல்போலவே அருணகிரியாரின் பாடல்கள் ஒலிக்கின்றன.

முருகனின் வீரத்தையும் திருமாலின் வீரதீரச் செயல்களையும் ஒன்றிணைத்துப் பாடவேண்டிய ஓர் சமூக அரசியல் தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரியருக்கு ஏற்பட்டிருக்கலாம். சம காலத்து அரசியல் சமூகப்பிரச்சினைக ளைக் குறியீடக்கி அருணகிரியார் சமயத் தினூடு உலவிட்டமையின் ஓர் வெளிப் பாடாகவே ''மாலோன் மருகன்'' என்ற உறவு நிலையைப் பல முறைபயன்படுத் தப்பட்டமையைக் கொள்ளலாம்.

தமிழ்மக்களின் உறவுமுறை பாரம் பரியத்திலே ''மாமன்'' என்ற உறவுமுறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

தமிழிலே மாமன் என்ற சொல் ''அம் மான்'' என்றே வழங்கி வந்தது. அம்மான் என்றால் தலைவன், பெரியவன், உயர்ந் தவன், தாயுடன் பிறந்தவன் எனப்பல பொருள் தருவதைத் தமிழ் இலக்கியங்க ளிலே பரக்கக் காணலாம்.

இறைவனை ''அம்மான்'' என்று ஆழ் வார்களும் நாயன்மார்களும் பல்வேறிடங் களிலும் பாடியுள்ளனர். ''வீரட்டானத் துறையம்மானே'' என்பதை ஓர் வகை மாதிரியாகச் சுட்டிக்காட்டலாம்.

அம்மா + வன் = அம்மான் என ஆகி யது என்றும் கூறுவர். அம்மான் என்றால் அம்மாவுக்கு நிகரானவன், அம்மாவைப் போன்றவன், (அம்மா + அவள்) (He Mother) என்ற பொருளிலும் நோக்கலாம் போலத் தெரிகின்றது. இது இன்னும் ஆய் வுக்குரியது.

தமிழர் தம் பண்பாட்டிலே தாய் மாமன் மிகவும் முக்கியம் பெறுகின்ற மையை எமது சடங்காசாரங்கள் பலவும் காட்டி நிற்கின்றன. பிள்ளைக்குத் தொட் டில் கட்டுவது, தலைத்தண்ணீர் வார்ப் பது, தலைப்பாகை வைப்பது முதலிய சடங்குகள் இன்றும் தாய்மாமனின் குடும்ப நிலைப்பட்ட மேலாதிக்கத்தினையும் உற வுப் பிணைப்பினையுமே காட்டி நிற்கின் றன எனலாம். இச் சடங்காசாரங்கள் தொடர்பான தகவல்களை எழுத்திலக் கியங்களைக் காட்டிலும் வாய்மொழி இலக்கியங்களே தருகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் வழங்கும் தாலாட்டு, ஒப்பாரிப்பாடல்களிலே அம்பான் என்ற சொல்லும், அம்மான் என்ற உறவு முறை யின் பயன்பாட்டுத் தன்மையும் பெருமள வுக்குக் காணப்படுகின்றன.

ஒரு குடும்பத்தின் தலைமைப் பொறுப்பினைக் குழுநிலைச் சமூக அமைப் பிலே தாய்மாமன் பெற்றிருந்தமையைப் புலப்படுத்துவனவாகவே இவ்வாய்மொழி இலக்கியங்கள் அமைகின்றன.

குடும்பப் பெருமை, மதிப்பு முதலிய வற்றிற்கு ஓர் அடையாளமாகக் கல்விப் பாரம்பரியத்திலேகூட, இப் புலவர் இன் னாரின் மகன், அல்லது இன்னாரின் மரு மகன் என்று கூறும் வழக்காலும் தமிழ் மக்கள் மத்தியிலே காணப்படுவதை மிக அண்மைக்காலம் வரை காணலாம்.

''நாவலரின் மருகரும் மாணாக்கரு மாகிய வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை'' என்ற தொடர் இவ் வுறவு முறையின் பலத்தினைக் கண்டறிய உதவு கின்றது எனலாம்.

அம்மான், என்ற சொல்லுக்கும் மாமி என்ற சொல்லுக்குமிடையேயுள்ள உறவு நிலையும் ஆய்வுக்குரியது.

மருகன் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களிலே பரவலாக இடம் பெற் றுள்ளமையும் அவதானிக்க முடிகின்றது. மருகன் என்ற சொல்லுக்குப் பெரும் பாலான உரையாசிரியர்கள் (மருமகன் என்று இன்று வழங்கும் பொருளைத்தராது) குடியினுள்ளவனே, மரபில் வந்தவனே'' என்றே பொருள் கொள்ளுகின்றனர். மரபில் வந்தவன் மருகன் ஆகினான் போலும். (மரபன், மருகன்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கிலே மருகன், மருமகன் ஆகியிருக்கலாம். மருமகன் என்ற சொல்லுக்கு அறிஞர்கள் பல்வேறு வகையான விளக்கங்களை அவ்வப்போது கூறியுள்ளனர்.

ஒரு காலகட்டத்தின் சமூக, அரசியல், தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் சமய நோக்கிலும் வளர்த்தெடுக்கலாம் என்பதையும் அருணகிரிநாதரின் திருமால், முருகன் உறவுபற்றிய செய்திகள் புலப்படுத்தி நிற்கின்றன எனலாம்.

எந்தை வருக, ரகுநாயக வருக
மைந்த வருக மகனே இனி வருக
என் கண் வருக எனதாருயிர் வருக
அபிராம

இங்கு வருக அரசே வருக
முலையுண்க வருக மலர்சூட்டிட வருக
என்று பரிவினொடு கோசலைபுகல
வருமாயன்

சிந்தை மகிழு மருகா.

## கருமான் மருகனை

இதனை கருமால் மருகனை என்று எடுக்கும்பொழுது கரிய நிறத்தையுடைய திருமாலுக்கு மருமகனாக விளங்குபவரை என பொருள் கொளலாம். திருமால் கரிய நிறமுடையவர், கரியமேகம் மழை பொழிவது போல திருமாலும் கருணை பொழிபவர். கரிய மாணிக்க மலைபோன்ற அழகிய திருமேனியையுடையவர், திருமாலும் சிவனுடைய சக்தியாகும். சிவசக்திகள் நான்கு — போர் சக்தி (ஐயை — துர்க்கை), கோபசக்தி (காளி) இன்பசக்தி (உமை), புருஷசக்தி (திருமால்) என்பர். கந்தபுராணத்திலே '' இறுதி செய்திடலே சிற்றம்... எனப்படும் பாடலில் இச்சக்திகள் பற்றி திருமாலே உணர்த்தியுள்ளார். இதனால் — திருமால் உமையம்மையாருக்கு உடன் பிறந்தவர் என்று கூறுவது மரபு, திருமாலுடைய தங்கையாகிய பார்வதிதேவியின் குமாரர் முருகன் திருமாலுடைய குமாரிகளாகிய அமுதவல்லியும் சுந்தரவல்லியுமே தேவயானை — வள்ளியம்மையாக அவதரித்து முருகவேளை மணந்து கொண்டனர் ஆதலினாலும் முருகன் மால் மருகன் ஆயினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

## நல்லூர்க் கிளை

உயிரைக் காக்க முதல்உதவியைப் படியுங்கள்.

பயிற்சிக்கு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

## "இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்"

நல்லூர்க் கிளை,

நல்லூர்.

---

ஆறிரு தடந்தோள் வாழ்க.

# NIROSAN PUDAIVAI AHAM

மங்கையர் விரும்பும் பட்டுச் சேலைகள்

ஆடவர் விரும்பும் சேட்டிங் சூட்டிங் வகைகள்

சகலவிதமான ஜவுளி வகைகளையும்
இணையற்ற டிசைன்களில் எண்ணம்போல் தெரிவு செய்ய
ஏற்ற இடம்

↓

# நிரோசன் புடைவை அகம்

41, சிறப்பு அங்காடி (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சியப்பரின் கவிதா சாமர்த்தியம்

தமிழருவி த. சிவகுமாரன், B. A. (Hons).

புராண நாயகம் என்று சிறப்பு பெற்றது கந்தபுராணம். வட மொழியிலே ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட கிரந்தங்களைக் கொண்டு வியாசரின் கைவண்ணத்தில் மிளிர்ந்த ஸ்காந்தம் தமிழிலேயும் கச்சியப்பரின் அழகொழுகு தமிழிற்குள் அடைபட்டு அன்பு நூலாகப் பக்திப் பனுவலாகிச் சிறந்தது.

தொண்டை மண்டலத்துக் கற்றார் ஏத்தும் காஞ்சிபுரத்துக் குமரகோட்டத்து ஆச்சாரியாராக விளங்கிய கச்சியப்ப சுவாமிகள் தம்முடைய உயர்ந்த தெளிந்த பக்தியினால் முருகன் அருட் பிரவாகத்துக்கு ஆட்பட்டு பாடிய பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து பாடல்களைக் கொண்டு மிளிரும் கந்தபுராணம் சிவநூல் மட்டுமன்று, பக்திநூல் மட்டும்மன்று, தான் சொல்ல வந்த கருத்தை மிகத் தெளிவாக அழகோவியமாக இலக்கியச் சுவையுடன் காட்டிய பெரும் கவிதைப் பொக்கிஷமுமாகும். கந்தபுராணத்தைப் பாடுவதற்கு முருகனே அடியெடுத்து தந்தான் என்பதும் அந்நூல் அன்றன்று. 'சரித நாயகனாகிய முருகனே சரிபார்த்தான்' என்பதும் இந்நூலுக்கு இருக்கின்ற வேறு ஒரு சிறப்புமாகும்.

கந்தபுராணத்தை சிவநூல் என்று சொல்லுவது ஒரு மரபு. இது மிக விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒரு தனிப்பகுதி ஆகும். ஆயினும் சிறிது நோக்குவோம். வியாசரால் எழுத்து வடிவில் ஆக்கப்பட்ட புராணங்கள் பதினெட்டு. இவை சிவனால் தோற்றுவிக்கப்பட்டு நந்தியம் பெருமான் மூலம் சனற்குமார முனிவருக்கு சொல்லப்பட்டவற்றை சிவனின் கட்டளையின்படி மகாவிஷ்ணுவின் ஒரு அம்சம் வேதங்களைத் தொகுத்து வகுப்பதற்காக வியாசராக பூமியிலே அவதாரம் செய்த போது, சிவனின் கட்டளைப்படியே மேலும் வியாசர் சனற்குமார முனிவரிடம் ஆரணியத்தில் பதினெட்டுப் புராணங்களையும் கேட்டு உலக நன்மைக்காக பாடித்தந்தார். இதுவே பதினெட்டுப் புராணங்களின் தோற்றம் என திருவாவடுதுறை ஆதினத்து குருமகாசந்திதானங்களில் ஒருவராக விற்றிருந்து விநாயகபுராணத்தை தமிழ்ப் படுத்தியவரின் செய்தியாகும். இப்பதினெட்டுப்புராணங்களுள் சிவபுராணம் பத்து, விஷ்ணுபுராணம் நான்கு, பிரமபுராணம் இரண்டு, சூரியபுராணம் ஒன்று, அக்கினிபுராணம் ஒன்று ஆகும். சிவபுராணம் பத்தினுள் ஒன்றே கந்தபுராணம். இந்தக் கந்தபுராணம் தவிர சிவபுராணத்துள் அடங்கும் ஒன்பது புராணங்களும் போலவே கந்த புராணமும் முருகனின் பெருமை பேசுவது. அந்த வகையில் கந்தபுராணம் கூறும் முக்கிய கருத்து என்னவெனில் ''சிவன் வேறு, முருகன் வேறு அல்ல; இருவரும் ஒருவரே'' என்பதாகும். இதைக் கந்தபுராணம் மிகத் தெளிவாக சந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ப்பம் ஏற்படும் இடமெல்லாம் பலபடப் பேசிச் செல்லும். கச்சியப்பர் இதை மிகத் தெளிவாகக் கையாண்டுள்ள இடங்கள் கிட்டத்தட்ட இருபதுக்கும் மேற்பட்டவை. ''சோதிப் பிழம்பு அது ஓர் மேனியாகி கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகு உய்ய'' என்னும் முருகோதயக் காட்சியை கச்சியப்பர் காட்டும் போதே சிவன் முருகனாகிய சிறப்பை மறைமுகமாக புலப்படுத்துகிறார். அது மட்டுமன்றி சரவணப் பொய்கையில் இருந்து முருகனை அழைத்து வந்த பின்னர் பார்வதி பரமேஸ்வரனிடம் குழந்தையின் பெருமை பற்றிக் கேட்கும் போது சிவன் ''ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் நானும் பேதகமன்று; நம்மிற் பிரிவிலன், யாண்டும் உள்ளான்'' எனப் பேசுமாறு கச்சியப்பர் காட்டுவதும் மேற்படி கருத்தை வலியுறுத்துவதேயாகும். தாரகாசுரசமரின் போது அவன் ஏவிய பாசுபதத்தை முருகன் ''கொடுத்தவனே வாங்குவது போல்'' வாங்கினார் என்று கச்சியப்பர் காட்டுவதும் சிவன் வேறு முருகன் வேறு அல்ல என்பதை அழகாக காவியத்துட் புகுத்தி காட்டுவதாக நாம் காணலாம். கச்சியப்பருடைய கவிதா சாமர்த்தியத்தில் சிவனும் முருகனும் ஒருவரே என்கிற தத்துவத்தைக் காட்டும் சில துளிகளே இவை ஆகும். ஒரு காவியத்தை ஆக்கும் புலவன் தான் வலியுறுத்த விரும்பும் உண்மையை தன் காவியத்துக் கவிதைகளினூடாக அழகோடு இயம்புவது அவனின் ஆற்றலை புலப்படுத்துவது ஒன்றே. அந்தவகையில் கச்சியப்பர் மற்றை தலைசிறந்த காவியத்து புலவர்கட்கு எவ்வகையிலும் பின்னிற்பவர் அல்லர்.

இனி கச்சியப்பருடைய கந்தபுராணத்தில் அழகான இலக்கியச் சுவையோடு மிளிர்கின்ற சில இடங்களை தொட்டுப் பார்த்து நயந்து மகிழ்வோம். இதை விரித்தால் இதுவே ஒரு தனிப்பெரும் நூலாக அமைந்து சிறக்கக்கூடிய கவிதா சாமர்த்தியம் கச்சியப்பரின் தனிச் சொத்து ஆகும். விரிவஞ்சி அதனை விடுத்து சில மணியான இடங்களை மட்டும் மகிழ்ந்து நோக்கலாம்.

தம் நூலுக்கு கச்சியப்பர் வைத்திருக்கக் கூடிய பெயர் என ஒன்று உண்டு. இதை அவர் கவிதைவடிவாகவே அகச் சான்றாக நோக்கலாம்.

''வற்றா அருள்சேர் குமரேசன் வண்காதை
தன்னை
சொற்றாரும் ஆராய்ந்திடுவாரும்
துகளுறாமே
கற்பாரும் கற்பான் முனைவாரும்
கசிந்து கேட்டல்
உற்றாரும் வீடுநெறிப் பாரின்
உறுவரன்றே''

'குமரேசன் வண்காதை' என்பது கச்சியப்பரின் உள்ளம் கந்தனின் புராணத்துக்கு இட்ட பெயராகலாம். ஆனால் அது கந்த புராணம் என்று தான் நிற்கிறது. இது சேக்கிழார் 'திருத்தொண்டர் புராணம்' என்று தந்நூலுக்கு இட்ட பெயர் பின்னால் 'பெரியபுராணம்' என்று ஆகியதை ஒத்ததாகும்.

எந்த ஒரு புலவனுக்கும் இல்லாத பக்தி உள்ளமும் கவிதை உள்ளமும் கவிதா சாமர்த்தியமும் கச்சியப்பரிடம் ஒன்றிணைந்து காணப்படுவதற்கு அடுத்து வரும் பாடல் ஒரு சான்றாகும். தன் காவியத்தில் காவிய லட்சணப்படி ஆற்றுப்படலம் கூறவருகின்றார் கச்சியப்பர். ஒவ்வொரு காவியத்திலும் ஒவ்வொரு ஆறு போற்றப்படும். கம்பராமாயணத்தில் சரயு நதியும் மகாபாரதத்தில் கங்கை நதியும் பெரியபுராணத்தில் காவிரி நதியும் திருவிளையாடற்புராணத்தில் வைகை நதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்படுவதுபோல கச்சியப்பரின் கந்த புராணத்தில பாலாறு என்னும் நதி பாடப் படுகின்றது. இந்நதி உற்பத்தியாகும் மலை 'நந்தி' மலையாகும். மலை உச்சியில் இருந்து நதி இறங்கத் தொடங்குகின்றது. அந்த மலையின் மேலே கரிய திரண்ட மேகங்கள் வந்து கூடிநிற்கின்றன. இந்த வேளையில் மலைஉச்சியின் பக்கத்தில் வானவில் தோன்றுகிறது. இதைக்கண்ட கச்சியப்பருடைய கவிதையுள்ளம் வெறும் கவிஞனாக மட்டுமல்லாமல் பக்தனாகவும் மாறிநின்று காட்டுகின்ற காட்சி நினைத்து இன்புறற்பாலது ஆகும்.

'திரண்ட மேகங்கள் கரிய நிறம் படைத்த திண்ணனாராகவும் பக்கத்தில் நிற்கும் வானவில் அவர் கையிலே பிடித்த வில்லாகவும் நந்தி மலை காளத்தி மலையிலே இருந்த குடும்பித்தேவராகவும் நந்தி மலையிலே இருந்து இறங்கிவரும் பாலாறு குடுமித்தேவராகிய சிவலிங்கத்தின் மேல் திண்ணனார் கொப்பளித்த பொன் முகலி ஆற்றுத் தண்ணீராகவும் காட்டப்படுகிறது''

''பூட்டு கார்முகம் தன்னொடும் தோன்றிய புயல்வா
ஊட்டு தண்புனல் நந்தியெம் கிரிமிசை உகுத்தல்
வேட்டுவக் குலத்திண்ணனார் விமலற்கு மஞ்சனம்
ஆட்டுகின்றதோர் தனிப்பெரும் செயல் போன்று உளதன்றே''

இதுவே அப்பாடல். கச்சியப்பரின் கவிதா சாமர்த்தியம் நுணுக்கமான ஒரு செய்தியையும் இப்பாடலிலே சொல்கின்றது. திண்ணனாராக இருக்கும் மட்டும் தான் அவர் பொன்முகலி ஆற்றுத் தண்ணீரை குடுமித் தேவரின் மீது கொப்பளித்தவர். கண்ணப்பராகிய பிறகு அவர் சிவனின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கும் பேறு பெற்றாரே தவிர வேறு செயல் அவருக்கில்லை. இதை மிக அழகாக கச்சியப்பர், கண்ணப்பர் என்று பேசாது திண்ணனார் எனத் தன் பாடலில் அமைத்திருப்பது அவரது கவிதா சாமர்த்தியத்தை பறை சாற்றுவது என்றாகும்.

இன்னொருசான்று, மகேந்திர காண்டத்தில் சூரனிடம் தூதாகப் போகும் வீரவாகுத்தேவர் பேசுவதாக கச்சியப்பர் கூறும் அழகான பாடல் ஆகும். கந்த புராணத்தில் வீரவாகுதேவர் தூது ஒரு தனிச் சிறப்பு பெறுவதாகும். ஒரு காவியத்தில் தூது தோற்றால் காவியம் வெல்லும், தூது வென்றால் காவியம் தோற்கும். மகாபாரதத்தில் கிருஷ்ணன் தூது இராமாயணத்தில் அங்கதன் தூது விநாயக புராணத்தில் நந்திதேவர் தூது போன்றவை தோல்வியடைந்த தூதுக்களாகும். இதனால் காவியம் வென்றது. அதாவது முறையே கௌரவர்களும் இராவணனும் கஜமுகாசுரனும் அழிக்கப்பட்டனர் தர்மம் வென்றது. அவ்வாறே கந்தபுராணத்திலும் வீரவாகுதூது தோற்றது. சூரன் சங்காரம் செய்யப்பட்டான். காவியம் வென்றது. கச்சியப்பர் இத்தூதை அழகாகப்படைத்தது மட்டுமல்லாமல் தன் காவியத்தில் எங்களுக்கு ஓர் ஓவியத்தையும் தீட்டித் தந்துள்ளார். ''முருகனுடைய தூதுவனாக வீரவாகுதேவர் வீரமகேந்திரபுரியில் நுழைகிறார். சூரனின் அடாதசெயல்களினால் கோபமுற்று வந்த வீரவாகுதேவர் அவனுடைய நாட்டின் வளப்பத்தைக்கண்டு திகைத்துப் போகிறார். ''வியாழபகவான் திருச்செந்தூரிலே முருகனிடம் வீரமகேந்திரபுரியின் அழகைச் சொன்ன போது கேட்டதைவிட எண்ணற்ற மடங்குகள் எழில் நிறைந்து காணப்படுகிறதே'' என்று வியந்தவருடைய உள்ளம் அடுத்த கணம் சூரனுக்காக பரிதாபப்படுகின்றது. சூரனின் இந்த வாழ்வும் வளமும் இன்னும் எத்தனை நாள்! அவன் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவற்றினால் அத்தனையும் அழியப்போகி றதே என்று நினைத்தவர் ஓர் அழகான உவமையை எண்ணுகிறார். ஒரு தூக்கணாம் குருவி இரவு நேரத்தில் தன் கூட்டுக்கும் குஞ்சுகளுக்கும் வெளிச்சம் தருவதற்காக மண்ணை கூட்டிலே கொண்டு வந்து வைத் துவிட்டு மீண்டும் வெளியே சென்று மின் மினிப் பூச்சிகளைப் பிடித்து வந்து அவற் றின் முஞ்சிப்பக்கமாக களிமண்ணில் குத்தி வைப்பதும் ஆப்பூச்சிகளின் பின்புறத்தி லுள்ள வெளிச்சத்தினால் இரவு முழுக்ககூடு வெளிச்சமாக இருப்பதும் இயல்பு. ஒரு நாள் அறிவு கெட்ட தூக்கணாங்குருவி மின் மினிப்பூச்சிகளைக் கொண்டு வருகின்றேன் என்று எரிந்த தீக்கங்குகளுடன் பிரகாசிக் கின்ற நெருப்புக் கொள்ளிகளைக் கொண்டு வந்து களிமண்ணுக்குள் செருகி வைத்து விட்டது. அதனால் கூடும் எரிந்து குஞ்சு களும் எரிந்தும் தூக்கணாங்குருவியும் அழிந்து போய் விட்டது. அதுபோல் இந் தச் சூரனுக்கும் விதியினால் மதிமாறு பாடுற்று எரிந்து கொண்டிருக்கின்ற கொள் ளிக்கட்டைகள் போன்ற சயந்தனையும் தேவர்களையும் வீரகேந்திரச் சிறையிலே கொண்டு வந்து வைத்து விட்டானே! இவனும் இவனது வீரமகேந்திரபுரியும், தூக் கணாங்குருவியும் கூடும் அடைந்த கதியை அடையப் போகிறார்களே என்று நினைத் துப் பார்க்கிறார்.

'' மெய்ச்சோதிதங்கு சிறு கொள்ளிதன்னை
விரமகின்மை கொண்ட குருகார்,
கட்சோதம் என்று கருதிக் குடம்பைத் தனிலுய்த்து
மாண்ட கதைபோல்
அச்சோ எனப்பல் இமையோரையீண்டு
சிறைவைத்த பாவமதனால்
இச் சூரபன்பன் முடிவெய்தும் நாளை
இதனுக்கோர் ஐயமிலையே ''

இவ்வாறு கச்சியப்பர் காட்டும் கவிதா சாமர்த்தியம் கற்றாரையும் மற்றோரையும் மகிழவைத்து கந்தனின் திருவடித்தாமரை களில் பக்தி கொள்ள செய்வதாகும். கச் சியப்பரின் '' கந்த களஞ்சியத்துள் '' இன் னும் நுழைந்து பார்ப்போமேயானால் இதுபோல் பல நல்முத்துக்களைப் பெற லாம் என்பதில் ஐயமில்லை.

## போர்வேல்

காம குரோத லோக மோக துர்க்குணங்களுடன் போராடுவது ஞானம் — அறிவு, வேல் — ஞானம், இந்தவேல் — நெடுவேல், அறியாமையை அழித்து, ஞானத்தை ஊட்டி, இன்பவாழ்வை தருவது முருகவேளுடைய திருமுன்சென்று போற்றிசெய்து உய்வுபெறுவது ஒன்றுதான் உண்மையான அன்பு, தீமைகளை எதிர்த்து போராட உதவுவதுதான் ''போர்வேல்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ நல்லூர் குறவஞ்சி

நயினைக்கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை

நல்லூரில் முருகனுறை திருக்கோயில் மணியின்
    நாதமெழ எப்போதும் முப்போதும் கூடி
எல்லோரும் தொழுதெழுந்து இன்னருளை நாடி
    இசைத்தமிழால் தோத்திரங்கள் இரந்துருகிப் பாடி
இல்லோரும் இளைத்தோரும் இளமுருகைத் தேடி
    ஏங்கியுளம் உருகிஉயர் நோன்புகளால் வாடி
வல்லோராய் வாழ்வாங்கு வாழவரம் வேண்டும்
    வள்ளிமண வாளனுறை ஈழத்து நல்லூர். 1

வடிவொழுகு கந்தனுக்கு வனப்பான கோயில்
    வருவோரை வரவேற்கும் திருநிறைந்த வாயில்;
குடிபுகுந்து வேல்வடிவாய் மூலத்துள் செவ்வேள்
    குவையாகக் கருணைமழை பெய்கின்ற மெய்வேல்
நெடிதுயர்ந்த கோபுரமும் நிம்மதியும் சூழல்
    நித்தமுமே பூசைமுறை தப்பாத சூழல்
அடிபணிந்து தொழுவோரும் ஆறுதலே கேளல்
    ஆறுமுக மாகவளர் ஈழத்து நல்லூர். 2

ஒளிகாலும் திருவேலும் ஒய்யார எழிலும்
    ஒத்திசைவாய்ச் சாத்திடுமின் ஒளிர்கின்ற பட்டும்;
களிகூரக் கண்கூசக் கதிர்வீசும் அணியும்;
    காட்சிக்கே மாட்சிதரும் ஊர்திகளும் குடையும்
வழியூரும் வீதியெலாம் பண்ணிசையும் பாட்டும்;
    வாழ்த்தொலியும் பரவசமும் கூத்துவெறி யாட்டும்
வெளிசூழும் நாதஇசை மேளஒலி ஆர்ப்பும்
    விளைகின்ற அருட்பூமி ஈழத்து நல்லூர். 3

ஆறுமுக மானபொருள் அடியவர்க்கு அருளி
    அரவணைப்புத் தருவதற்காய்த் தேரின்மிசை வருவார்
தேறுதலைத் தரும்வள்ளி தெய்வானை மருவி (ச்)
    சேவல்மயில் கூத்தாடச் சேர்ந்து உளம்மகிழ்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறுபெற விடுதலைக்காய் உயிர்தரவே கருதி
விரைவோர்க்கு மனஉறுதி விளைவித்துத் தருவார்
பேறுபல தந்துபுகழ் பெற்றிடவே உயர்த்திப்
பெரிதுவக்கும் முருகனுறை ஈழத்து நல்லூர். 4

கந்தனவன் விழாவூடே களியாட்டும் நிகழும்;
காளையரும் கன்னியரும் எழிலூட்டி வருவார்;
தந்தமது நண்பருடன் மகிழ்வூட்டித் திரிவார்;
தணியாத இளமைநலச் சாகசங்கள் புரிவார்;
இந்தவித மானாலும் இறையுணர்வும் தெரிவார்
ஏற்றமுற உள்ளூறக் கந்தனிடம் பெறுவார்
இந்துமதம் இவ்வாறும் எல்லோர்க்கும் பத்தி
இயல்புரை வைக்கின்ற ஈழத்து நல்லூர். 5

சித்துடைய செல்லப்பர் யோகருடன் உற்றோர்
சிறப்புடையோர் சீருடையோர் செயற்கரிய செய்தோர்,
பத்துடையோர் பாங்குடையோர் பழஅடியர் ஆனோர்
பரவசத்தில் பைந்தமிழில் பாசுரங்கள் இசைப்போர்
சத்தெனவும் சித்தெனவும் ஆநந்தம் உற்றோர்
சந்நிதியில் எந்நிசியும் தாம்தனித்து நிற்போர்
அத்தனைபேர் அகத்துள்ளும் ஆறுமுக அண்ணல்
ஆன்மீக ஒளிபரப்பும் ஈழத்து நல்லூர். 6

ஈழத்துத் தமிழர்களின் இறைமையினுக் கெதிராய்
இந்தியத்தின் ஆதிக்கம் இறுமாந்து சதியாய்
சூழத்தான் எமையழிக்க(த்); தமிழினத்தின் கதியாய்
துணிந்தெழுந்த தீரனவன் பார்த்திபனும் பசியாய்
நாள்பத்து இரண்டாக நாவறண்டு தவியாய்
நல்லகிம்சை வழிகடவித் தவங்கிடந்த பதியாய்
வாழ்வித்து தமிழீழ வளமண்ணின் உணர்வாய்
வான்வைத்த கந்தனுறை ஈழத்து நல்லூர். 7

சங்கிலியன் அந்நியரைப் புறங்கண்டு வென்ற
சரித்திரமும் தன்மானத் தமிழனது தகவும்,
பொங்கியெழு அக்கினிப் பொருளான முருகன்
பேரழகுத் திருக்கோயில் தூபிகளும் பிறவும்
இங்கிதமாய் இசைத்தமிழும் கலைபண்பும் பலவும்
எழுச்சிபெறு மன்றங்கள் கோட்டங்கள் பொலிவும்
தங்குதடை இல்லாத தமிழ்க்குமரன் அருளும்
தனித்துவமாய் இனித்துவக்கும் ஈழத்து நல்லூர். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக்காய் ஏங்குகின்ற தமிழீழ மண்ணில்
    விரும்பியொரு கார்த்திகையில் காங்கேயனைத் தந்து
கிடுகிடுத்துப் பகைவரெலாம் நடுநடுங்கும், எண்ணில்
    கீர்த்திபெறுந் தலைவர்களை உருவாக்கி தந்து
படுகளத்தில் அவர்பின்னே பலம்மிக்க நவவீரப்
    படையணியைச் சந்நிதியால் பாய்ந்துஎழப் போக்கி,
நெடுவானும் கடல்தரையும் தமிழ்வீரம் சொல்லும்
    நிகரற்ற வேல்தந்த ஈழத்து நல்லூர். 9

கதிர்காமம் மண்டூரும் மாவிட்ட புரமும்
    களிகூரும் சந்நிதியும் பலஈழப் பதியும்,
துதிபாடும் ஆறுபடை வீடுகளும் பிறவும்
    துலங்குமயில் வேலோடிரு மாதர்புடை சூழ,
வதிவாகி இருந்திடினும் உரமாகத் தமிழர்
    வாழவகை செய்தீழ வடபால் அமர்ந்து
புதுமையுடன் தாமீழம் பிறப்பிக்க வென்று
    புகழ்சேர்க்கும் கந்தபுரம் ஈழத்து நல்லூர். 10

## ''பொக்கக்குடில்''

''பொக்க குடிலை மெய்யென்று நம்பிவிட்டேன். கதிர்வேல் தொட்ட காவலனே! செந்தாமரை மலரிலும் செக்கச் சிவந்த தேவரீரது திருவடியாகிய வீட்டை அடியேனுக்குத் தந்து இப்பொக்கக் குடிலினுள் மீண்டும் புகாதபடி காப்பாற்றியருள் வீராக என்று முருகப் பெருமானை வேண்டுகின்றார் சுவாமி அருணகிரியார். உலகவாழ்விலே நம்பியவர்களை அழித்து சொத்தைப் பெருக்கி, அதனால் ''நான்'' என்ற இறுமாப்புத் தொனிக்க பாவிகளைச் சங்காரம் செய்யும் சங்கரனாக உலவாது – சொத்துக்காக உலவும் உலுத்தர் போல் உடல் வளர்ப்போரையும் கூர்வேலால் தண்டித்து அவர் தம் ஆணவச் செருக்கடக்கி பிறரைத் தரமறியாது எள்ளி நகையாடி உன் வேலை நிறுத்திவிடுவேனென்று இறுமாந்து நடப்போரையும் வேலால் தடுத்து எங்களை குடிலுள் மீண்டும் புகாது வாழ்வை வெற்றிவேற் பெருமானே அருள்வீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

எங்களிடம் சகலவிதமான

- மஞ்சி பிஸ்கட் வகைகள்
- பால்மா வகைகள்
- பலசரக்குப் பொருள்கள்
- பிளைவூட் பலகைகள்

மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.

**அம்பிகை களஞ்சியம்**

304 (110), மருத்துவமனை வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி கோயில் தல இலக்கியங்கள்

பரராசசிங்கம் கணேசலிங்கம்
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்தியாவிலும் ஈழத்திலும் தோற்றுவிக்கப்பெற்ற திருத்தலங்கள் மீது நாயன்மார்கள், ஆழ்வார்கள் மற்றும் பிற்பட்ட காலத்துப் புலவர்கள், அறிஞர்கள், சித்தர்கள், பக்தர்கள் ஆகியோர்கள் பல்வேறு வகையான அருட்பாடல்களைப் பாடிப் போற்றித் துதித்திருக்கின்றார்கள். இத் திருத்தலங்களை மையப்படுத்தி ஓர் இலக்கிய மரபு அல்லது தோத்திர மரபு அல்லது பிரபந்த இலக்கிய மரபு அல்லது தல இலக்கிய மரபு தோன்றி வளர்ந்து வருகின்றதை நாம் அவதானிக்கலாம். இந்துத் திருத்தலங்கள் மீது தலபுராணங்கள் இயற்றுகின்ற மரபு இருநாடுகளில் மட்டுமல்லாது தென்கிழக்காசிய நாடுகளிலும் காணப்படுகின்றன. சிறப்பாக கோயில்கள் நிறைந்த பகுதிகளாக விளங்குகின்ற இந்தியாவிலும் ஈழத்திலும் ஏராளமான தல இலக்கியங்கள் அவ்வப்போது வாழ்ந்த நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பக்தர்களாலும் சித்தர்களாலும் புலவர்களாலும் இயற்றப்பட்டு வந்தன.

தல இலக்கியங்கள் பொதுவாக கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவனின் பெருமைகள், மூர்த்தி, தல தீர்த்த விசேடங்கள், வழிபட்டு முக்தியடைந்தோர் வரலாறுகள், அற்புதங்கள், நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு போன்ற இன்னோரன்ன விபரங்களைப் பாடு பொருளாகக் கொண்டவை. அதாவது இறைவனின் புகழை ஒரு தலத்துடன் இணைத்து அத் தலத்தின் பெருமையினையும், அங்குள்ள தீர்த்தத்தின் பெருமையினையும் அவ்விறைவனின் பெருமையினையும் இத்தலவிலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

ஈழத்திலுள்ள திருக்கோயில்கள் மீது தோத்திரங்கள் பாடுகின்ற மரபானது நாயன்மார்கள் காலத்திலும் காணப்பட்டன. ஈழத்திலே உள்ள திருத்தலங்களை முதன்மைப்படுத்திப் பாடுகின்ற தலஇலக்கியங்களில் முதன் முதலிற் தோன்றியது பதவியாவிற் கிடைத்த செய்யுளேயமைகின்றது. இக்கருத்தினைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, 'சைவக்கோயிலைப் பாடும் ஈழத்து இலக்கியங்களுள் இன்று கிடைக்கும் ஈழத்தவராற் பாடப்பட்ட மிகத் தொன்மையான செய்யுளாகப் பதவியாச் செய்யுள் காணப்படுகிறது' எனக் கூறியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. ஈழத்திலுள்ள பாடல்பெற்ற சிவத்தலங்களாக விளங்குகின்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்கள் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், சுந்தரமூர்த்தி நாயனாரும் திருப்பதிகங்களைப் பாடியருளியுள்ளார்கள். நாயக்கர் காலப் பகுதியில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகளும் ஈழத்திருநாட்டிலுள்ள முருகத் தலங்கள் மீது திருப்புகழ் பாக்களைப் பாடியுள்ளார். நாயன்மார்களது திருப்பதிகங்கள் பாடுகின்ற மரபினைத் தொடர்ந்து, ஈழத்துத் திருக்கோயில்கள் மீது பிரபந்த வகைகளைப் பயன்படுத்தி, அவ்வப்பொழுது வாழ்ந்த அருளாளர்கள், புலவர்கள், கவிஞர்கள் பல்வேறு தோத்திரங்களையும், புகழ் பாக்களையும் தலபுராணங்களையும் பாடியருளியுள்ளார்கள்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலே சைவக் கோயில்களுக்கு ஏற்பட்ட அழிவையும் சைவசமயத்திற்கு ஏற்பட்ட தீங்கையும் கண்ட, ஒல்லாந்தர் ஆட்சிக்காலப் புலவர்கள் தலங்களைப் போற்றி மக்களிடையே சமயப் பற்றை ஏற்படுத்தவே இத்தல விலக்கியங்களைப் பாடியிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் விஜயநகர நாயக்க மன்னர் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமியப் படையெடுப்பினாற் கோயில்கள் அழியும் நிலையேற்பட்ட பொழுது தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தலபுராணங்கள் தோற்றம் பெற்றமையைக் காணமுடிகின்றது. ஈழத்திலும் அப்படியான ஒரு சூழ்நிலையிலே, அதாவது போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் இந்துக் கோயில்களுக்கு அழிவு ஏற்பட்ட நிலையிலே இத்தகைய தலசம்பந்தமான பிரபந்தங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சியினை அடுத்து ஈழத்தில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து இலக்கியங்கள் பரவலாகவும் பல வகையினவாகவும் தோற்றம் பெற்றன. வழிபடு தலங்களையும், தலமுறை தெய்வங்களையும் போற்றும் செய்யுளிலக்கியங்களுடன் சைவசமயத்தின் உண்மைப் பொருளை, சைவக்கிரியைகளை எல்லாம் வசனநடையில் விளக்கும் இலக்கியங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்துள்ளன. இந்து இலக்கியங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்விதம் வளர்ச்சியடைய அந்தக் காலப் பின்னணியும் அப்பின்னணியிற் செயற்பட்ட நாவலரது இயக்கமுமே காரணமாக அமைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இந்து இலக்கியங்களைச் செய்யுளிலக்கியங்கள், வசன இலக்கியங்கள் என வகைப்படுத்தலாம். செய்யுளிலக்கியங்கள் முன்னைய காலப்பகுதியிலேயே தோன்றிய இந்து இலக்கியங்களைப் போன்று இந்துத் தலங்களையும், தலைமுறை தெய்வங்களையும் போற்றுவனவாகவே காணப்படுகின்றன. பொதுவாகக் கூறின் நல்லூர், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் முதலான தலங்களின் பேரிலே அதிக இலக்கியங்கள் எழுந்துள்ளன எனலாம்.

ஈழத்திலே புராதனமானதும் பிரசித்தி பெற்றதுமான முருகத் தலங்களாக கதிர்காமம், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகனாலயம், மண்டூர்க் கந்தசுவாமி கோயில், நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கந்தவனக்கடவை, வெருகல் கந்தசுவாமி கோயில் ஆகியன விளங்குகின்றன. இந்நாட்டில் இருவகையில் அமைந்த கீர்த்தி வாய்ந்த முருகன் திருக்கோயில்கள் உள்ளன. சிவாகம சிற்ப நூல் அமைவுபெற்றவை ஒருவகை. அவ்வமைவு பெறாதவை இன்னொருவகை. இவை மடாலயங்களெனப்படும். கதிர்காமம், மண்டூர், வெருகல், செல்வச்சந்நிதி, நல்லூர் போன்ற ஆலயங்கள் மடாலய வகுப்பினவாகும். இவற்றுள் சிவாகம சிற்பநூல் அமைவு பெற்ற வரிசையில் சரித்திரப் பிரசித்திமிக்க பெரும் கோயிலாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ உலகில் 'கோயில்' என்றால் சிறப்பாகக் கருதப்படுவது 'சிதம்பரம்' என்னுந் திருத்தலமேயாம். அதேபோன்று இன்று யாழ்ப்பாணத்திலும் கோயில் என்றால்சிறப்பாகக் கருதத்தக்கது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலேயாம். இவ்வாலயம்மீது பல்வேறு சமயச் சான்றோர்களும் (பெரியோர்களும்) ஈடுபாடு கொண்டு விளங்கியிருக்கின்றார்கள். நல்லூர்ப் பிரதேசமானது இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தவர்களுடன் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக ஒரு காலப்பகுதியில் விளங்கியிருந்தது. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குத் தல புராணம் எதுவும் இல்லை. அற்புதக் கதைகளோ, சம்பவங்களோ இக்கோயிலின் பழமையை எடுத்துரைக்கும் சான்றுகளாய் நிலவவும் இல்லை. கடந்த சில நூற்றாண்டுகளாக நல்லூர்க் கந்தனை வழிபடும் அடியார்களின் தொகை பெருகிக்கொண்டே வருவது பெருஞ்சிறப்பாகும்.

ஈழத்து இந்து மக்கள் இந்துசமயக் கடவுளர்களான விநாயகர், முருகன், சிவன்' சக்தி, விஷ்ணு, வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிறிய அளவிலும் பெரியளவிலும் திருக்கோயில்கள் அமைத்து வழிபாடியற்றி வருகின்றார்கள். இத்திருத்தலங்களை மையப்படுத்தி தல இலக்கியங்கள் பாடுகின்ற மரபு இந்தியாவிலுள்ள திருக்கோயில்களிலும் ஈழத்திலுள்ள திருக்கோயில்களிலும் தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றது. இத்தகைய தல இலக்கியங்களை ஆக்கிப் பேணுகின்ற பணியிலே ஈழத்தின் ஒவ்வொரு காலகட்டப் பகுதிகளிலும் தோன்றிய இந்து சமயப் பெரியார்கள் (அறிஞர்கள்) சான்றோர்கள் ஈடுபட்டுழைத்து வந்துள்ளார்கள். ஈழத்திலே யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலந்தொடக்கம் அண்மைக்காலம் வரை வாழ்ந்த இந்து சமய அறிஞர்கள், இந்து சமயத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களில் திருத்தலங்களை முதன்மைப்படுத்தி பல பிரபந்தங்களை இயற்றுகின்ற பணிகளில் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நல்லைக்கந்தன் மீது தல இலக்கியங்களை (பிரபந்தங்களை) தென்னிந்திய நாட்டைச் சேர்ந்த சைவத் தமிழ் அறிஞர்களும் ஈழநாட்டைச் சேர்ந்த சைவத் தமிழ் அறிஞர்களும் ஏனைய அறிஞர்களும் புலவர்களும் போற்றிப் பாடிச் சிறப்பித்துள்ளார்கள். நல்லைப்பதி மீது கோயில் கொண்டிருக்கின்ற கந்தசாமி மீது பாடப்பெற்ற தல இலக்கிய வடிவங்களாக (பிரபந்த வடிவங்களாக) திருப்புகழ், விஞ்சதி, பதிகம், ஊஞ்சல், கலிவெண்பா, பஞ்சரத்தினம், அகவல், கீர்த்தனம் (கீர்த்தனை) கிள்ளைவிடுதூது, மாலை, அந்தாதி, தோத்திரம், நான்மணிமாலை, திருப்புகழந்தாதி, திருவிருத்தம், தோத்திரப்பாமாலை, வெண்பா, பதிற்றுப்பத்தந்தாதி, குறவஞ்சி, கலித்துறை, யமகவந்தாதி, உலா, பிள்ளைத்தமிழ், திருப்பள்ளிஎழுச்சி, கோவை, குயிற்பத்து, வெண்பா நாற்பது, காவடிச்சிந்து, புராணம் ஆகியன அமைந்து விளங்குகின்றன.

நல்லை முருகன் மீது பாடப்பெற்ற தனிப்பாடல்களும், பிரபந்தங்களும் பலவாகும். அவையாவன: திருப்புகழ், நல்லைக்கலிவெண்பா, நல்லைவெண்பா, நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி, நற்சிந்தனைக் கீர்த்தனைகள், நல்லைநகர்க் குறவஞ்சி, நல்லைக்கந்தர் அகவல், நல்லூர்க் கீர்த்தனம், முத்தக பஞ்சவிஞ்சதி (சில செய்யுட்கள்), தனிவிருத்தம் (ஒன்று), நல்லைக் கந்தசுவாமி விஞ்சதி, நல்லைப் பதிகம், நல்லைக் கந்தசுவாமி பேரில் ஊஞ்சல், நல்லைப்பதிகம், நல்லைக்கந்தர் கலிவெண்பா, நல்லைக் கந்தரலங்காரம், நல்லூர்க் கந்தசுவாமி பஞ்சரத்தினமும் தனி முதற்பாக்களும், யாழ்ப்பாணத்துத் திரு நல்லூர்ப்பதிகம், நல்லூர்கந்தர் பதிகம், நல்லைக் கந்தரகவல், நல்லைக் கந்தராலயத் தீர்த்தக்குளச் சிறப்பு, நல்லூர்க் கீர்த்தனம். யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசுவாமி கிள்ளைவிடுதூது. நல்லைச் சண்முகமாலை, நல்லைச் சுப்பிரமணியசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரில் பரமானந்தர் கீர்த்தனை, திருநல்லைக் கந்தரந்தாதி, யாழ்ப்பாணத்துத் திருநல்லூர் அலங்காரமும் கதிரேசக் கண்ணியும், நல்லையம்பதியிலெழுந்தருளிய கலியுகவரதனான சுப்பிரமணிய சுவாமி தோத்திரம், சரவணபவமாலை, நல்லை நான்மணிமாலை, திருநல்லைத் திருப்புகழந்தாதி, நல்லைச் சண்முகமாலை, நல்லைச் சுப்பிரமணியர் திருவிருத்தம், நல்லைக்கந்தசுவாமி தோத்திரப்பாமாலை, நல்லையந்தாதி, திருநல்லையந்தாதி, நல்லூர் முருகன் திருப்புகழ், நல்லைப் பதிற்றுப்பத்தந்தாதி, நல்லைநகர்க் குறவஞ்சி, நல்லை நாயகர் நான்மணிமாலை, நல்லைக்கலித்துறை, நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், நல்லைக்கந்தர் விருத்தம், நல்லை நிரோட்டயமக அந்தாதி, நல்லை வேலவருலா, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேரடி வயிரவக் கடவுள் பேரில் தோத்திரப்பதிகம், நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ், யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும், நல்லைத் திருவருக்கமாலை, நல்லூரான் வெண்பா நாற்பது, நல்லூர் நாற்பது, திருநல்லைக்கோவை, நல்லூர் முருகன் காவடிச் சிந்து, நல்லைக் குமரன் குறவஞ்சி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தல வரலாற்றினைக் கூறுகின்ற நூல்களாக தட்சிண கைலாய புராணம், யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணச் சரித்திரம், நல்லூர்க் கந்தசாமி கோயில் நூல்கள் அமைந்து விளங்குகின்றன. இந்தியாவில் நாயக்கர் காலப்பகுதியில் வாழ்ந்த அருணகிரிநாதச் சுவாமிகள் யாழ்ப்பாணத்து நல்லூர் முருகனையும் தமது திருப்புகழாலே பாடிப்பரவியுள்ளார்:

''ஏற்போர் தாம்வந் திச்சையின்
மகிழ்வொடு
வாய்ப்பால் வீசும் பொற்பிரபை
நீண்மதின்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய
பெருமாளே''

கி. பி. 1699 – 1795 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்திலே வாழ்ந்த தென்னிந்தியாவைச் சேர்ந்த கூழங்கைத் தம்பிரான் என்பவர் நல்லைக் கலிவெண்பாவே நல்லூர்க் கந்தன் மீது பாடப்பெற்ற முதற் பிரபந்தமாகும். இப்பிரபந்தம் 1928 ஆம் ஆண்டிலே வெளியிடப் பெற்றது எனக் குலசபாநாதன் குறித்துள்ளார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசிரியரான இருபாலைச் சேனாதிராய முதலியார் (1750 – 1840) நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நல்லைநகர்க் கந்தர் பேரிற் பாடிய திருவூஞ்சல் முதலாம் பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இப்பிரபந்தங்களுள் நல்லை வெண்பா 1935 ஆம் ஆண்டிலும், நல்லை வெண்பா புலோலி வித்துவான் க. முருகேசபிள்ளையின் குறிப்புரையுடன் 1942 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டுள்ளன. நாவலரின் தந்தையார் கந்தப்பிள்ளை (1766 - 1842) நல்லை நகர்க் குறவஞ்சியையும், தமையனார் பரமானந்தப்புலவர் நல்லைக் கந்தர் அகவல், நல்லூர்க் கீர்த்தனம் ஆகிய இரு நூல்களையும் இயற்றினார். இவ்விரு நூல்களும் 1923 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் பேரன் முத்துக்குமார கவிராசர் 'முத்தக பஞ்ச விஞ்சதி' (சில செய்யுட்கள்) என்னும் நூலை இயற்றினார்.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் கந்தன் மீது பிரபந்தம் பாடாவிட்டாலும் தனிவிருத்தம் ஒன்றினை இயற்றியுள்ளார். அவ்விருத்தம் வருமாறு:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி

"அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதனம்
ஆறும்அறு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவன்
அருண் முருகர் சரணம் வாழி
கருணை மழை பொழிபனிரு நயனமதி னொடுவலிய
கவினுலவு தோள்கள் வாழி
கனகிரியை இருபிளவு படஉருவு நெடிய அயில்
கரதிலத் தினிது வாழி
வருணமர கதவழகு திகழவரும் அவுணனெனும்
மயிலினொடு சேவல் வாழி
வனசரர்தம் அரசன்உத வியகுறமி னொடுகடவுண்
மயிலிவர்கள் தினமும் வாழி
தருணமிது எனஅமரர் பணிநல்லை அமர்கந்தர்
தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண
சடாக்ஷரம் வாழி வாழி"

திரு. ஆ. மு. சோமாஸ்கந்தப்பிள்ளை என்பவர் நல்லைப் பதிகத்தினையும் (1907), சுப்பிரமணிய சுவாமிதாசரும் உடுப்பிட்டி வாசகருமாகிய அ. சிவசம்புப் புலவர் – நல்லைக் கந்தசுவாமி விஞ்சதியையும் (1908) இயற்றியுள்ளனர்.

மட்டுவில் பிரம்மஸ்ரீ. க. ஐயாத்துரை ஐயர் – நல்லைக் கந்தசுவாமி கோயில் ஊஞ்சல் (1911), மயிலிட்டி திரு. க. மயில்வாகனப்பிள்ளை-நல்லைப் பதிகம் (1911), திருநெல்வேலி திரு. சி. கதிரைவேற்பிள்ளை அவர்கள் – நல்லைக் கந்தர் கலிவெண்பா, நல்லைக் கந்தரலங்காரம் (1912), கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள் – நற்சிந்தனைக் கீர்த்தனைகள், பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி பஞ்சரத்தினமும் தனிமுதற் பாக்களும் (1915), தும்பைநகர் சிவ. சதாசிவ ஐயர்-யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்ப் பதிகம் (1916), நவாலி, ஸ்ரீ. க. சோமசுந்தர உபாத்தியாயர் – நல்லூர்க் கந்தர் பதிகம் (1918), நல்லூர் சந்திரசேகர பண்டிதர்-யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசுவாமி கிள்ளைவிடுதூது (1924) வண்ணை பண்டிதர் நெ. வை. செல்லையா-நல்லைச் சண்முகமாலை (1924) நல்லைச் சுப்பிரமணியர் திருவிருத்தம் (1929), வண்ணை– திரு. மா. சிவராமலிங்கப்பிள்ளை – திருநல்லைக் கந்தரந்தாதி (1925), புலோலி திரு. வே. தா. தியாகராசபிள்ளை யாழ்ப்பாணத்துத் திருநல்லூர் அலங்காரமும் கதிரேசக்கண்ணியும் (1926), அராலி ஸ்ரீமத் குமாரசூரியர் - நல்லையம்பதியி லெழுந்தருளிய கலியுகவரதனான சுப்பிரமணிய சுவாமி தோத்திரம் (1927), கொக்குவில் குகதாசர் ஸ்ரீமான் ச. சபாரத்தின முதலியார் - சரவணபவ மாலையும் நல்லை நான்மணிமாலையும் (1928), வண்ணை–மேற்கு திரு. வை. இராமநாதன் – திருநல்லைத் திருப்புகழந்தாதி (1928), புத்தூர் பெரிய தம்பு சின்னப்பு ஆச்சாரி – நல்லைக் கந்தசுவாமி தோத்திரப்பாமாலை (1930), புலோலி பிரம்மஸ்ரீ. சிவ பஞ்சாக்ஷரக்குருக்கள் – திருநல்லையந்தாதி (1940), நவாலியூர், க. சோமசுந்தரப் புலவர்–நல்லையந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதி (1931) நல்லூர் முருகன் திருப்புகழ் (1940), சரவணை ஆ. தில்லைநாதப் புலவர் - நல்லைப் பதிற்றுப் பத்தந்தாதி (1952), நல்லைத் திருவருக்கமாலை, காரைதீவுச் சுப்பையர் - நல்லை நாயகர் நான்மணிமாலை, குமாரசுவாமி முதலியார் - நல்லைக் கலித்துறை, வடகோவை-அ. சபாபதி நாவலர், நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், வண்ணை பிரம்மஸ்ரீ பொன்னுத்துரை ஐயர் - நல்லை நீரோட்டயமக அந்தாதி, நல்லூர் சரவணமுத்துப் புலவர் - நல்லை வேலவருலா, நயினை நகர் க. நாகமணிப்புலவர் நல்லூர் கந்தசுவாமி கோயில் தேரடி வயிரவக் கடவுள் பேரில் தோத்திரப்பதிகம், நல்லூர் அப்புக்குட்டி ஐயர் என்னும் பாலசுப்பிரமணிய ஐயர் - நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ், வித்துவான் க. வேந்தனார்-யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும், பன்னைமுலை ந. சுப்பிரமணியம் - நல்லூர் கந்தன், மயிலிட்டி க. மயில்வாகனப்பிள்ளை-நல்லைப் பதிகம், புங்குடுதீவு - வித்துவான். சி. ஆறுமுகம் - நல்லூரான் வெண்பா நாற்பது, கவிஞர் வி. கந்தவனம் - நல்லூர் நாற்பது, பண்டிதர் க. வீரகத்தி - 'கந்தனே என் சிந்தனை நல்லைக் கந்தனே என் வந்தனை' என்ற வரியில் அமைந்த பாடல், கவிஞர் வ. கோவிந்தபிள்ளை நல்லைக் கந்தன் பிள்ளைத் தமிழ், வித்துவான் க. சொக்கலிங்கம் - நல்லூர் நான்மணிமாலை, கவிஞர் நாக பரமசாமி - நல்லைக் கந்தரந்தாதி, கவிஞர் சோ. பத்மநாதன்-நல்லூர் முருகன் காவடிச் சிந்து, இணுவில் ந. வீரமணிஐயர் - நல்லைக்குமரன் குறவஞ்சி ஆகியோர் நல்லைக் குமரன்மீது தல இலக்கியங்களைப் பாடினார்கள்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலானது வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றாகவும் பக்தர்களையும், சித்தர்களையும் கவர்ந்த ஆலயங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. இதன் காரணமாக இத்தலத்தினை மையப்படுத்தி பல தல இலக்கியங்கள் (பிரபந்தங்கள்) தோற்றம் பெறலாயின.

### திருவடிப் பெருமை

''திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகஞ் சிந்திக்கில்
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சமுட் டெளிவார்க்கே.''

''திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.''

—திருமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவாமைப் பெரும் பேறு

நல்லையா விஜயசுந்தரம், B. A. (Spe in Eco.)

மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கம் இறைவனை அடைதல்ஆகும் அதனால்த்தான் மானிடப்பிறவி அரிதினும் அரிது என்று ஔவைப்பாட்டி கூறினாள். உலக ஜீவ ராசிகள் எல்லாவற்றுளும் இறைவனை நினைக்கின்ற சக்தி மனிதனுக்கு மட்டும் தான் உண்டு. அதனால் மனிதப் பிறவி மாண்பு பெறுகிறது.

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வா
யிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மானிலத்தே''

என்பார் நாவுக்கரசர். இறைவனின் திருவடியை அடைய வேண்டிய நாம் வந்த நோக்கத்தை மறந்து எங்கோ செல்கி றோம். நிலையில்லாத வற்றையெல்லாம் நிலையானவையென்று எண்ணிக் காலத்தை வீணே கழிக்கின்றோம். துன்பக் கட லில் மூழ்கின்றோம். எமக்கும் ஞானிகளுக் கும் உள்ள வேறுபாடு அதுதான். எம் நினைவுகள் எல்லாம் அலைபாய்கிறது; அந்தரப்படுகிறது. ஆனால் ஞானிகள் தம் உள்ளத்தில் இறைவனுக்கு மட்டுமே இடம் கொடுத்தார்கள். ஒவ்வொரு கணப்பொழு தும் இறைவனை நினைந்து உருகினார்கள்; உள்ளத்தில் ஒளியைப் பெருக்கினார்கள்.

இமைப்பொழுது மென் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க.

என்ற மணிவாசகர் வார்த்தை அதற்குச் சான்று பகரும். அருமையான இந்த மானி டப் பிறவியைப் பயன்படுத்தி இறைவன் திருவடியில் இடம் பிடித்துவிட வேண்டு மென்று எண்ணினார்கள் ஞானிகள். இப் பிறவியை தவறவிட்டால் எப்பிறவி வாய்க் குமோ, ஏதுவகுமோ என்று ஏங்கி ஏங்கி இறைவனை வழிபட்டார்கள்.

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்
கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவரசங் கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்

என்று மணிவாசகர் பாடுவார். இறை வனின் திருவடியை அடையாத காரணத் தால் எத்தனை பிறவிகளை எடுக்கின் றோம். இன்று உலகம் முழுவதும் நோய் வாய்ப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் ''நான்'' என்ற ஆணவக் கிருமி நம் உடம் பிற்குள் புகுந்து ''தெய்வீகம்'' என்ற எதிர்ப்பு சக்தியை அழித்து விட்டது. நான் செய்தேன், என்னால் செய்யப்பட்டது, என்று மானிடப் பிறவிகள் நாம் மார்தட் டுகிறோம். கருமத்தை செய்ய முடியாது போகும் போது துன்பப்படுகின்றோம்; சோர்ந்து போகிறோம், பின்பு வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நிம்மதி! விரக்தியின் விழிம்பில் நின்று விம்மி விம்மி அழுகின்றோம். எல்லாம் அண்டங்கடந்து நின்று நம்மை ஆட்டிவிப்பானை அறிந்து கொள்ளாததால் வந்தவினை.

ஞானிகள் அப்படியல்லர். உடல், ஆவி, பொருள் மூன்றையும் இறைவனிடத்தே ஒப்படைத்தவர்கள், ஆணவம், கன்மம், மாயை என்ற இருட் கண்டத்தைக் கடந்தவர்கள்; பேரின்பத்தை உணர்ந்தவர்கள்.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னை
ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

என்று திருவாசகம் பேசும். நன்மை நடந்தாலும், தீமை நடந்தாலும் எல்லாம் இறைவன் செயல் என்று நினைப்பவர்க்குத் துன்பம் ஏது? நம் வாழ்க்கையில் ஏற்படுகின்ற செயற்பாடுகள் அத்தனையும் கர்மவினையால் ஏற்படுவது. இதை நாம் மறக்கின்றோம். ஏன் பிறந்தோம் என்று நினைக்கின்றோம்.

இதிலிருந்து விடுபடவேண்டுமானால் இந்தப் பிறப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பிறந்து பிறந்து உழன்று அலுக்கின்ற அந்தப் பெரும் பிழைக்கு இடம் வைக்கக்கூடாது. இதனால்தான்,

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும்
பிறந்து விட்டா
லிறவா திருக்க மருந்துண்டு காணிது
வெப்படியோ
அறமார் புகழ்தில்லை யம்பல வாண
ரடிக்கமல
மறவா திருமனமே யது காணன் மருந்
துனக்கே

என்றும் உள்ளம் உருகிப் பாடுவார் பட்டினத்தடிகள்.

இறவாமல் இருக்க வேண்டுமானால் பிறவாமல் இருக்கவேண்டும். பிறந்துவிட்டால் மரணம் நிச்சயம், மரண பயம் நம்மை யெல்லாம் ஆட்டிப்படைக்கிறது. இதிலிருந்து எம்மை விடுவிக்க வேண்டும். இதற்கு ஒரே ஒரு மருந்து உண்டு. அதுதான் அம்பலவாணன் அடிக்கமலத்தை மறவாது இருப்பது. ஆடுங் கூத்தனுடைய அடிக்கமலத்தை நித்தமும் நினைக்க வேண்டும். அதனால் தான்,

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்அடி என் மனத்தே
வழுவாதிருக்க வரம் தரல் வேண்டும்.

என்று நாவுக்கரசர் வேண்டுவார். இறைவன் திருவடியே நம் இலக்காக வேண்டும். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணனை நம் உள்ளத்தில் உறுதியாக இருத்த வேண்டும். அப்படியானால் அதற்கு என்னதான் வழியென்று நாம் ஏங்கலாம்.

இறைவன் அன்பு வடிவானவன். அன்பு உள்ளங்களில் உறைபவன். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்பார் திருமூலர். ஆனால் அன்பு ஊற்றை நாம் அடைத்து விட்டோம், பந்த பாசங்களில் நம் மனத்தை பறிகொடுத்து விட்டோம், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பை மறந்து விட்டோம். இந் நிலையில்

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி நம்மை ஆட்கொள்ளுவான்! முதலில் நம் உள்ளத்தைக் கடைந்து எடுக்க வேண்டும். அதன் மூலம் நம் உள்ளத்தின் ஒளியை மறைத்துக் கொண்டிருக்கும் மாசுக்களான உலகப் பற்றுக்களை அகற்ற வேண்டும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப் பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்பது வள்ளுவர் வாக்கு. எமது பற்றுதல்களையெல்லாம் விடுவதற்கு பற்றற்றவனாகிய பரம் பொருளைப் பற்றிக்கொள்ள வேண்டும். அவன் நாமத்தை இடையறாது நாம் உச்சரிக்க வேண்டும். அப்படிப் பழக்கப்படுத்திக் கொண்டால் எம்மை மறந்து போகின்ற நிலையிலும் அவன் நாமத்தை நம் நா சொல்லும்.

வ சிவ என்றிடத் தேவராகும் இறையருள் வியக்கத்தக்கது. மன அடக்கத்துடன் அன்பு, கருணை, இறைவழிபாடு என்ற ஒழுங்கில் எம்மை வழிப்படுத்துவோமானால் நிச்சயம் இறைவன் திருவடியில் இடம் பிடித்து விடுவோம்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப் புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ்
இருக்க என்றார்

என்ற சேக்கிழார் பாடல் நம் இறுதி இலக்கைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. மனிதப் பிறவியின் பயனும் அது தான், அந்தப் பயனை நாம் அடைய வேண்டும். இப் பிறப்பிற்கு முற்றும்புள்ளி வைத்து பிறவாமைப் பெரும் பேறு பெற்று அருட்பெரும் சோதியுள் கலந்து பேரின்பம் அடைவோமாக.

## நாளும் முறையிடுக

''மைவருங் கண்டத்தர் மைந்தகந்தாவென்று வாழ்த்து மிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறியேன்கற்ற கல்வி யும்போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதரப் பழகி நிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே''

—அலங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா! குகா!! சண்முகா!!! சரணம்.

உங்களுக்குத் தேவையான

★ அபிஷேக திரவியங்கள்

★ புதுமனை அத்திபாரச்சாமான்கள்

★ நாள் சரக்குகள் - கோரோசனை - குங்குமப்பூ - கஸ்தூரி

★ விவாகமுகூர்த்தப் பொருள்கள்

★ கோவில் சங்காபிஷேகச்சாமான்கள்

★ காண்டாமிருகக் கொம்பு

★ புனுகு, ஐவ்வாது, அத்தர், பன்னீர், சென்ற்வகைகள்

★ செந்தூரம், பஸ்பம், ஆசவம், அரிஷ்டவகைகள்

★ தைலவகைகள், சந்தனாதி முதலியன

★ ஊதுபத்திவகைகள், வாசனைத்திரவியங்கள்

★ ஆயுள்வேத மூலிகைவகைகள்

நியாயமான விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## ஆ. இராசையா அன் சன்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்.
(69), 209, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரும் நாவலர் சிலையும் —சில வரலாற்று நினைவலைகள்

பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்,
தலைவர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## 1. சிலைவடிவில் நாவலர்

நல்லூரை நினைக்கும் போது நமது மனக்கண் முன்னே பல நினைவலைகள் அலைமோதுகின்றன. முதலில் நமது நினைவில் வருவது நல்லைக் கந்தன் ஆலயமாகும். அடுத்ததாக ஏக்கத்துடன் நினைவில் வருவது நமது கடைசித் தமிழரசின் தலைநகர் பற்றிய சிந்தனையாகும். நந்திக் கொடியுடனும் பலம் மிக்க தரை கடற் படைகளுடனும் ஆட்சி செய்த இவ்வரசு 1619 இல், போத்துக்கேயரின் வசப்பட்டது. போத்துக்கேயரைத் தொடர்ந்து டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரது ஆட்சிக்காலத்தில் நமது கலாசாரமும் சுதேச விழுமியங்களும் சிறுமைப்பட்டுச் சீரழிந்தன. அப்போது ஈழம் முழுவதுமே மேற்கத்திய கலாசாரத்தின் தாக்கத்திலிருந்து சுதேசக்கலாசார மறுமலர்ச்சியைக் கட்டி எழுப்ப முனைந்து நின்றது. அவ்வாறு முனைந்தவர்களுக்கெல்லாம் முன்னோடி எனச் சிங்கள வரலாற்றாசிரியர்களாலும் கூட விதந்துரைக்கப்பட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார்! அவரை ஈன்றெடுத்த மண் இதுதான் என்று நினைக்கும்போது நமது உள்ளம் பூரிப்படைகின்றது. நாவலரின் நற்பணிகளை நன்றியுடன் உள்வாங்கிய சைவ உலகம் சைவத்தையும், தமிழையும் காக்க வந்த, 'நால்வருக்கு' அடுத்தாற் போல 'ஐந்தாங்குரவர்' என இவரை மதித்துப் போற்றியது. இதனாலன்றோ ஈழத்தின் அக்காலச் சட்டசபையிற் கூட 'நாவலர் இந்துக்களின் சீர்திருத்தச் செம்மல்' (Champion Reformer of the Hindus) என்ற குரல் ஒலித்தது. ''நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே'' என்று தமிழறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை நாவலர் மறைவின்போது பாட்டிசைத்து அங்கலாய்த்தமை வெறும் வெற்று வார்த்தைகளல்லவே.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நாவலருக்கு அவர் பிறந்த யாழ்ப்பாண மண்ணிலே உரிய நினைவுச் சின்னம் ஒன்று இல்லையென்பது பலகாலம் உணரப்பட்டு வந்தது. ஈழத்திற்கு வந்த தமிழறிஞர் மு. வரதராசனார் 'நாவலர் வீதி, ஒன்றைத் தவிர வேறொரு சின்னமும் நாவலரை நினைவுபடுத்த யாழ்ப்பாணத்தில் இல்லையே என்று வருத்தம் தெரிவித்தார். 1968இல் உலகத்தமிழாராய்ச்சி மாநாடு சென்னையில் நடைபெற்ற போது தமிழ் வளர்த்த செம்மல்களுக்கு அந்த நந்நாளில் சிலைகளும் எடுப்பிப்பதற்கு தீர்மானிககப்பட்டது. எனினும். அச்செம்மல்களின் வரி

சையில் நாவலர் மறக்கப்பட்டதை அறிந்து மனம் நொந்த ஈழத்தவரின் முயற்சியால் நாவலருக்குச் சிலைவடிக்கும் பணி உதயமாகியது. இப்பணியை நிறைவேற்றவே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை 17-6-1968 இல் உதயமாகியது.[3] வடித்த சிலைகோலாகலமாகக் கொழும்பிலிருந்து யாழ் நோக்கி எடுத்து வரப்பட்டது. இது பற்றிக் கூறப்படுவதாவது;[4]

''யூன் 24ந் திகதி கொழும்பில் பெருவாழ்த்து வணக்கவிழாவுடன் ஆரம்பமாகி அரச மரியாதைகளுடன் அரச பவனியாக வழியனுப்பப்பட்ட சிலை, தேச பவனியாக யாழ் குடா நாடெங்கும் ஊருராகக் கொண்டு செல்லப்பட்ட பின்னரே யூன் 29 இல் தாபிதம் செய்யப்பட்டது. யாழ் குடாநாடே சிலை வைப்பைக் காண்பதற்குத் திரண்டு வந்து நின்றது. நல்லூர் தொடங்கி முற்ற வெளிவரை ஒரு கிழமைக்கு மேலான காலம் ஒரே விழாக்கோலமும் பெருஞ் சனச் செறிவுமாகவே காணப்பட்டது. இந்நிகழ்ச்சிகளை அந்நாளில் இலங்கை வானொலி நேரடி அஞ்சல் செய்தமையும் நினைவு கூரத்தக்கதாகும். யாழ்ப்பாணத்தரசர் காலத்திற்குப்பின், சைவத்தின் பெயரால் இம்மண்ணில் நடந்த முதற் பெருவைபவம் இதுவாகும் என அந்நாளில் மக்கள் கூட்டம் கதைத்ததும் நாமறிவோம்.

இச் சிலை 1969 யூன் 29 இல் பூரணை நிலவு பொழி நன்னாளில், இலட்சோப லட்சம் மக்கள் திரண்டு நிற்க மதுரை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், செஞ்சொற்கொண்டல் சொ. சிங்காரவேலன், கிளாறினட் வித்துவான் ஏ. கே. சி. நடராசன் முதலிய தமிழ்நாட்டு அபிமானப் பெரியோர், நல்லறிஞர், கலைஞர் ஆகியோருடன் வேற்று மதத்தலைவர்களினதும் ஆசீர்வாத அஞ்சலிகளுடனே இவ்விடத்தில் நிறுவப்பட்டது''

அக்கால அறிஞர்களின் கலந்தாலோசனையின் பேரிலே, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை[5] 'சிலை உருவில் நாவலர் அதே இடத்திலிருந்து திருத்தங்களைச் சொல்லிவர வேண்டும்' என்று கூறியவாறு நாவலர் மணிமண்டபம் அமைந்துள்ள இடமே என்று கருதப்பட்டதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. பின்னர் நாவலரைக் கௌரவிக்கும் முகமாக அரசு அவரின் படம் பொறித்த முத்திரை ஒன்றை வெளியிட்டுக் கௌரவித்தது.

## 2. மணிமண்டபமும் நாவலரும்

நல்லை முருகனின் வாசலிலுள்ள நாவலர் மணிமண்டபம் அமைந்துள்ள 5 பரப்பும் 12 குழியுமுள்ள காணி நாவலரால் ரூபா 2000 செலுத்தப்பட்டு 1874 இல் கொள்வனவு செய்யப்பட்டது. நாவலர்[6] இக்காணியில் சைவப்பிரகாசமடாலயம் ஒன்றை அமைத்து, திருக்கோயில்களில் நடைபெறும் நித்திய நைமித்திய வழிபாடுகள் பற்றிக் குருமாருக்கு பயிற்சி அளிப்பதோடு திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவதற்கும் பயிற்சி அளிக்க நோக்கம் கொண்டு செயற்பட்டார். 1961 இல் நாவலர் தரும நிதியத்தின் கீழ் இயங்கிய பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபோது இக்காணியும் அரசாங்கக் காணியாக மாற வேண்டி ஏற்பட்டது. ஏற்கெனவே மணிமண்டபத்தை இங்கு கட்ட விரும்பிய நாவலர் சபையினர் பின்னர் 99 வருடக் குத்தகையிலேதான் இக்காணியை அரசிடமிருந்து பெற்று இதில் மணிமண்டபத்தினை அமைத்தனர்.

## 3. நாவலர்சபையின் நடவடிக்கைகள்

இவ்வாறு நாவலர் சிலையும் மணிமண்டபமும் நல்லைக்குமரன் வாசலில் அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரின் வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரிய பொருளாக விளங்க, திடீரென நாவலர் சபையினர் 1-7-1985 இல் ஒரு கூட்டத்திற்கு அழைத்தனர். அதற்கான அழைப்பிதழ் பின்வருமாறு அமைந்திருந்தது.[7]

'வணக்கம். எமது சபை கடந்த 17 ஆண்டுகளாக நாவலர் பெருமானின் நினைவாகப் பல பணிகளைப் புரிந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். எதிர் காலத்தில் எமது பணிகளை மேலும் விரிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனச் சபை பெரிதும் விரும்புகிறது. இவற்றிற்கான திட்டங்களையும் வழிவகைகளையும் பற்றிய ஆலோசனைகளை நாவலர் அன்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் 1-7-1985 திங்கட்கிழமை (போயா விடுமுறையன்று) காலை 9.30 மணியளவில் நல்லூர் நாவலர் நிலைய மண்டபத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டத்தைச் சபை ஏற்பாடு செய்துள்ளது.

தங்களை இக்கூட்டத்திற்குத் தவறாமல் சமூகந் தருமாறு வேண்டுவதுடன் தங்கள் மேலான கருத்துக்களையும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம். மிக்க நன்றி.[1]

நாவலர் சபையின் எதிர்காலத்திட்டம் என்ன என்பதனை அங்கு சென்ற பின்னர் தான் பலருக்கும் தெரிந்தது. அது தான் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப் படாத நாவலர் சிலை கடத்தல் ஆகும். நாவலர் சிலை கடத்தல் தான் சபையின் திட்டமென அறிந்திருந்தால் அங்கத்தவர்கள் பலரும் கூட்டத்திற்குப் படை எடுத்துச் சென்றிருப்பார்கள். இச்சூழ்ச்சியை எதிர் பார்த்திராத அங்கத்தவர்களில் முப்பது பேர் மட்டுமே கூட்டத்திற் கலந்து கொண்டு சிலை கடத்தலுக்கு எதிராகத் தமது கருத்துக்களை வெளியிட்டதோடு, சிலையைக் கடத்த வேண்டாமென்ற தீர்மானம் ஒன்றையும் பண்டிதர் இ. திருநாவுக்கரசு முன் மொழியச் சண்முகநாதன் உடையார் வழி மொழிந்து செய்த ஒரு தீர்மானத்தையும் வேண்டாமென்று கூறிக் கொழும்பிலுள்ள பொதுச்சபைக்கு இவ்வெதிர்ப்பை அறிவிக்கின்றோம் என்ற உத்தரவாதம் நாவலர் சபைக் காரியதரிசிகளினால் மணிமண்டபத்தில் கூடிநின்ற பெரும்பான்மையினருக்கு அளிக்கப்பட்டது. நாவலர் சிலை கடத்தலில் சிவத்தமிழ்ச்செல்வி எதிர்ப்புக் காட்டியிருந்து அது பயனற்றுப் போனதால் நாவலர் சபையில் தாம் வகித்த உப தலைவர் பதவியை அவர் இராஜினாமாச் செய்தார். நாவலர் வழிநிற்கும் இன்னொருவராக பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களும் இச்சிலை கடத்தப்படுதலுக்கு உடந்தையாக நின்றார் என்று விடயங்கள் திரிபுபடுத்தப்பட்டன. இது தவறான பொய்ப் பிரசாரம் என்பதை அவர் 3-11-85 இல் வெளியான வீரகேசரியில் வெளியிட்ட கருத்து எடுத்துரைக்கின்றது. அவர் 'சிலையுருவில் நாவலர் அதே இடத்திலிருந்து திருத்தங்களைச் சொல்லி வர வேண்டும்' என்ற தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.[8]

'நாவலர் பெருமானது சிலையை இப்பொழுது உள்ள இடத்திலிருந்து (நல்லூர் நாவலர் மணிமண்டபத்திலிருந்து) எடுக்கும்படி சொல்ல எவருக்கும் அதிகாரம் இல்லை என்ற என் கருத்தை, இற்றைக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் என்னை வந்து சந்தித்த நாவலர் சபையின் இணைச் செயலாளர்களிடம் தெரிவித்தேன் அத்துடன் என் கருத்தை எனது மாணவன், ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள் வாயிலாக எழுத்து மூலம் நாவலர் சபையின் தலைவர் அவர்களுக்கும் தெரியப்படுத்தினேன்.

நாவலர் சபையினரின் இவ்வுள் நோக்கத்தை நாவலர் மணி மண்டபத்தில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நடாத்திய ஆலோசனைக் கூட்டத்தி லன்று 1-7-1985 இல் வெளியான ஈழநாட் டுச் செய்தி 'நல்லூர் நாவலர் சிலை இடம் மாறும்' என்ற தலைப்பில் பின்வருமாறு அம்பலப்படுத்தியது.[9]

'நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதியி லுள்ள நாவர் சிலை அகற்றப்படும். சம யாசார முறைப்படி நல்லூர் திருவி ழாக் காலத்தில் சிலையைச் சுற்றி தேர் வீதிவலம் வரக் கூடாதென்ற விதிக்கு இணங்கவே சிலை அகற்றப்படவுள்ள தாம். நாவலர் சிலை அகற்றப்படுவது குறித்து நாவலர் சபைக்குள்ளேயே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த விவகாரம் சம் பந்தமாக இந்து கலாசாரப் பிரதேச அபி விருத்தி அமைச்சருக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.' இச்சிலை நாவலர் – வைமன் வீதியி லுள்ள நாவலர் மணிமண்டபத்தில் வைக்கப்படலாம் எனத் தெரிகின்றது.'

ஆனால் இதற்கு நாவலர் சபையினர் நாவலர் பெருமான் சிலை இடம் மாற்றம் பற்றி முடிவு செய்யப்படவில்லை என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டனர். 8/7/85 இல் வெளியான ஈழநாடு செய்தித்தாள் இது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது.[10]

'நல்லூரிலுள்ள நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையை இடம் மாற்றுவது சம்பந்தமாக இதுவரை நாவலர் சபை கூடி முடிபு எதையும் செய்யவில்லை யாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை இணைச் செயலாளர்களான திரு. நா. சோம காந்தன், திரு. கா. விசுவலிங்கம் ஆகி யோர் வெளியிட்ட அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளனர். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்ப தாவது: நாவலர் சபையின் பணிகளைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஓர் ஆலோ சனைக் கூட்டத்தைச் சபை நடத்தியது. நாவலர் திருவுருவச்சிலையை இடம் மாற்றுவது பற்றி வந்த செய்தி தொடர் பாக அங்கு பேசிய பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்தனர். எனி னும் அக்கூட்டத்தில் எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை.

இது சம்பந்தமான சகல விடயங்க ளையும் நாவலர் சபை கவனத்திற்கு எடுத்துச் சரியான இறுதி முடிவை எடுக் கும் என்பதில் எவரும் ஐயுறத் தேவை யில்லை.

மேற்கூறிய இரு திகதிகளில் வெளிவந்த ஈழநாட்டுச் செய்திகள் நாவலர் சிலையை மணிமண்டபத்திலிருந்து அப்புறப்படுத்து வதை உள்நோக்கமாகக் கொண்ட நாவ லர் சபையினருக்கு மக்களின் எதிர்ப்பைக் கண்டு ஏற்பட்ட தடுமாற்றத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். சிலையைக் கடத்துவதே நாவலர் சபையினரின் உள் நோக்கம் என்பதை 3-8-1985இல் நாவலர் சபையின் பொதுக்கூட்டம் கொழும்பில் நடைபெற்றபோது நாவலர் சபையின் காரி யதரிசிகளிலொருவரான திரு. க. விசுவ லிங்கம் அதற்கனுப்பிய அறிக்கையிற் பின் வரும் குறிப்புகள் உறுதி செய்கின்றன.[11]

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் முன் முயற்சிகளாலும் ஆக்கபூர்வமான தூண்டு தல்களாலும் இந்து கலாசார அமைச்சர் நல்லூரில் நாவலர் பிறந்து வாழ்ந்த காணியில், நாவலர் கலாசார மண்டபத் தைக் கட்டி முடித்துள்ளதை நன்றியுட னும் மகிழ்ச்சியுடனும் பாராட்டும் நாவ லர் சபையின் 15 ஆவது ஆண்டுப் பொதுச்சபைக்கூட்டம், அம்மண்டபத் தைப் பொறுப்பேற்று நிர்வகிக்க முன்வந் துள்ள யாழ் மாநகர ஆணையாளர், பொருத்தமும் பொலிவும் சிறப்பும் மிக்க தாக நாவலர் கலாசார நிலையத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பதற்கு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு நாவலர் சபையின் முழு ஒத்துழைப்பையும் வழங்குவதெனவும், நல்லூர் ஆலய வீதியில் சபையால் நிறுவப்பெற்றுள்ள நாவலர்பெருமானின் திருவுருவச் சிலையை நாவலர்பிறந்து வாழ்ந்த காணியில் கட்டப்பட்டுள்ள நாவலர் கலாசார மண்டபத்திற்கு இடம் மாற்றுவதெனவும், அப்படிச் செய்வதன் மூலம் நாவலர் பெருமானுடன் சம்பந்தப்பட்ட சகல சின்னங்களையும் கொண்ட நாவலர் மத்திய கேந்திரமாக அவ்விடத்தை அமைக்கலாமெனவும் நாவலர் சபையின் அலுவலகம் உட்பட சபையின் எல்லா விதமான நடவடிக்கைகளையும் அவ்விடத்தில் நடத்தி, சபைப் பணிகளை விஸ்தரித்து, தீவிரமாகச் செயலாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதெனவும் நல்லூர் ஆலய வீதியில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் நாவலர் பெருமானின் நினைவுச் சின்னமொன்றினை வைத்து, அவ்விடத்தில் வழமைபோல புராணபடனம், திருமுறை ஓதுதல் முதலிய நிகழ்ச்சிகளை நாவலர் சபை தொடர்ந்து நடத்திவர வேண்டும் எனவும் தீர்மானிக்கிறது.

யாழ்ப்பாணத்தவர்கள் சிலை கடத்தலை ஆதரிக்கின்றார்கள் என்ற கருத்து தவறாகக் கொழும்பிலுள்ள பொதுச் சபையினருக்கு எடுத்துரைக்கப்பட்டதை மேற்கூறிய செய்தி எடுத்துக்காட்டுகிறது. இக்கூட்டம் இச்சபையின் 15 வது பொதுச்சபைக் கூட்டமாகும். நாவலர் சிலை கடத்தப்பட வேண்டுமென்ற தீர்மானம் கொழும்பில் எடுக்கப்பட, 17-8-85 இல் இரவு 8.30 மணிக்கு மக்கள் நடமாட்டமில்லாத நேரத்தில் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான குப்பை ஏற்றும் லொறியில் நாவலர் சிலைக்கு முக்காடு இடப்பட்டு அச்சிலை க்டத்தப்பட்டு நாவலர் கலாசார மண்டபத்தில், (சிலை வைப்பதற்கு எதுவித ஒழுங்குமில்லாத இடத்து) முன்வாசலில் ஒரு பக்கத்தில் பாதரட்சைகளைக் கழற்றி வைக்கும் பகுதியில் முடங்க வைக்கப்பட்டது. நாவலர் சபையினரின் நடவடிக்கைகள் பற்றி 20-8-85 இல் வெளியான ஈழநாடு 'நாவலர் சிலை இடமாற்றம்; நல்லை மணிமண்டபம் தொடர்ந்து இயங்கும்' என்ற தலைப்பில் பின்வருமாறு செய்தி வெளியிட்டுள்ளது.[12]

'நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் சிலை வைக்க வேண்டும் என யாழ். மாநகரசபை ஆணையாளர் நாவலர் சபைக்கு விண்ணப்பித்திருந்தார். சபை ஆலோசனை செய்து நல்லூரில் இருந்த சிலையை இடம் மாற்றி வைப்பதாக முடிவு செய்தது. எனினும் நாவலர் மணிமண்டபம் தொடர்ந்தும் முன்போல பணிகளைச் செய்யும்'.

மேற்கண்டவாறு நேற்றுக்காலை நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. நாவலர் சபை, யாழ். மாநகர சபை ஆகியவற்றால் இம்மகாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது. நாவலர் சிலை இடமாற்றத்திற்குத் தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை. நாவலர் பெருமானின் கலாசார மண்டபத்தை இந்து கலாசார அமைச்சு யாழ். மாநகர சபையிடம் ஒப்படைத்து விட்டது. நல்லூர் நாவலர் மணிமண்டபத்துக் காணி இறுதியாக கல்வி அமைச்சிடமிருந்து நாவலர் மணிமண்டபம் கட்டுவதற்காக 99 வருடக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிறந்து வளர்ந்த காணிப் பகுதி மிக அண்மைக் காலம் வரை உறுதிப்படுத்தப்படவில்லை. இதனால் நல்லூரில் மணிமண்டபம் அமையப் பெற்றது. இன்று நாவலர் காணியுள் அவர் நினைவாக கிணறு, வீட்டுச்சுவர் என்பன உள்ள இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் கலாசார நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. நாவலர் கலாசார மண்டபத்தில் இந்து நூலகத்தை யாழ். மாநகர சபை நடாத்தும். இதே சமயம் நாவலருக்குத் தனியான நூல் நிலையம் இயங்கும்.

இம்மகாநாட்டில் நாவலர் சபைச் சார்பில் செயலாளர்கள் திருவாளர்கள் கா. விசுவலிங்கம், நா. சோமகாந்தன், துணைச் செயலாளர் கா. மாணிக்கவாசகர், பொருளாளர் மு. சிவராசா, உதவிப் பொருளாளர் எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரும், யாழ். மாநகரசபை ஆணையாளரும், நாவலர் சபை உப தலைவருமான சி. வி. கே. சிவஞானமும் கலந்து கொண்டனர்.

நாவலர் சபை சிலை கடத்தல் சம்பந்தமாக மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்புக்களின் விளைவாக நாவலர் சபையின் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. சி. வீ. கே. சிவஞானம், இணைச் செயலாளர்களான நா. சோமகாந்தன், கா. விசுவலிங்கம் ஆகியோர் ஓர் அறிக்கையை 2-10-85 இல் ஈழமுரசில் வெளியிட்டிருந்தனர். அதன் சாரம் பின்வருமாறு.[13]

1. வள்ளுவர் முதல் பாரதிதாசன் வரை பெரியார்கள் பிறந்து வாழ்ந்த இல்லங்களில் நினைவாலயம் அமைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதை யாவரும் அறிவர். நம்நாட்டின் எழுஞாயிறாக விளங்கிய, சைவசமயப் பெரியார் தன்னிகரில்லாத் தலைவன், தமிழ்மொழிக்குப் புதுமை செய்த வல்லாளன், நாவலர் பெருமானின் பிறந்து வாழ்ந்த இல்லம் எதுவெனக் கண்டுபிடிக்கப்பட்டபின், அவ்விடத்தில் சிலை நிறுவி அதனை நாவலர் நினைவாலயமாக்க வேண்டியது தமிழினத்தின் கடமை.

2. நாவலர் சபை நாவலர் பெருமானின் சிலையை 1969 இல் புனிதம் பெற்ற நல்லூர் வீதியில் நிறுவியது. அக்காலத்தில் நாவலர் பெருமான் பிறந்து வாழ்ந்த இல்லம் எதுவென அத்தாட்சி பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை. 1971 இல் நாவலர் பிறந்து வாழ்ந்த இல்லம் கண்டுபிடிக்கப்பட்டபின் அக்காணியினை அரசாங்கத்தைக் கொண்டு சுவீகரிக்கச் செய்து அதனை நாவலர் நினைவாலயமாக்குவதற்காகிய அரும்பொருட்சாலை, கலாசார மண்டபம் முதலியவற்றை அமைப்பதற்குத் தூண்டுகோலாக இருந்தது நாவலர் சபையே என்பதை நாடறியும்.

3. நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபம், நாவலர் அரும் பொருட்சாலை முதலியவற்றைக் கொண்ட மத்திய கேந்திரத்திற்கு மேலும் பொருத்தமும், பொலிவும் புனிதமும் சேர்க்கும் வகையில் நாவலர் பெருமானின் முதலாவது சிலையையும் இடம் மாற்றி ஸ்தாபித்து நாவலர் நினைவாலயமாக அவ்விடத்தைப் பூரணம் பெறச் செய்யலாமென சபை முடிவு செய்தது.

4. 1969 இல் சிலை நிறுவப்பட்ட காலத்தில் நிலவிய நல்லூர்க் கோயிலின் சூழல் அமைப்புக்கும் இன்றுள்ள அமைப்புக்கும் பல வித்தியாசங்களுண்டு. கோயிலின் உள்வீதி விஸ்தரிப்புக்காகக் கோயிலின் தெற்கு வீதி மதில்கள் கட்டப்பட்டு உள்வீதிக்குள் அடங்கிவிட்டதால் நாவலர் பெருமானின் சிலை முன்னர் போல் முக்கியம் பெறாமல் மூலைக்குள் முடங்கி விட வேண்டிய நிலையேற்பட்டது. இதன் காரணமாகவும் சிறப்பும், பொருத்தமும், பொலிவுள்ள நாவலர் வீதியிலுள்ள நாவலர் மத்திய கேந்திரத்திற்கே இச்சிலையை இடம் மாற்றம் செய்ய சபை முடிவு செய்தது.

5. நாவலர் நினைவாலயமாகத் திகழவுள்ள இவ்விடத்தில் சபையின் அலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலகமும் அமைக்கப்பட்டுள்ளதாலும் சபைப் பணிகளை விஸ்தரித்து முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியாகவும், கலாசார மண்டபத்தில் பயனுள்ள பொருத்தமான பல நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாலும், யாழ். மாநகர சபை இதுவரை காலமுமில்லாத வகையில் நாவலர் — இந்து கலாசார ஆய்வு நூலகத்தை மண்டப மேல் மாடியில் அமைப்பதற்கு முன்வந்துள்ளதாலும், நாவலர் நினைவாலயம் எந்நேரமும் பொது மக்கட் பொலிவுள்ள இடமாக அமையும் எனச் சபை நம்புகிறது.

என அப்பத்திரிகைச் செய்தி அமைந்துள்ளது.

### 4. சிலை இடமாற்றமும் அதற்கான பின்னணியும்

நாவலர் சபையின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்காகவே நாவலர் சிலை கடத்தப்பட்டு நாவலர் கலாசார மண்டபத்தில் முடக்கி வைக்கப்பட்டதென்பது அப்பட்டமான பொய் என்பதனை 20-10-1985 இல் வெளியான சிந்தாமணிப் பத்திரிகை துலாம்பரப்படுத்தியுள்ளது. அப்பத்திரிகையில் காணப்படும் விபரங்களாவது;[14]

1. பிரதேச அபிவிருத்தி அமைச்சரான திரு. செ. இராசதுரை இந்து சமய கலாசார அமைச்சுக்கு ஒதுக்கிய நிதியின் மூலம் 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான செலவில் நாவலர் கலாசார நிலையத்தை நாவலர் வீதியில் அமைத்தார்.

2. இக்கலாசார நிலையம் நாவலர் சபையிடமோ அன்றி வேறு ஸ்தாபனங்களிடமோ ஒப்படைக்கப்படவில்லை.

3. பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிருவாகத்தின் கீழேயே அது நிருவகிக்கப்படும். இதனை எந்த ஒரு சபையும் உரிமை கோர முடியாது.

4. யாழ். நூலகம் எரிக்கப்பட்ட பின்னர், மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் இந்திய அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பெறுமதிமிக்க நூல்களையும் ஏனைய சஞ்சிகைகளையும் பாதுகாத்துவைப்பதற்கு ஒரு இடமில்லை என்றும், தற்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் கலாசார நிலையத்தின் ஒரு பகுதியில் தற்காலிகமாக மேற்படி நூல்களைப் பாதுகாத்து வைக்க அமைச்சிடம் கேட்டிருந்தார்.

5. தற்காலிக நூலகமாக உபயோகிக்க இவ்விடத்தை அனுமதித்த அமைச்சு அதுவும் அவசியமேற்படும் போது இரண்டுமாத முன்னறிவித்தலுடன் கட்டிடத்தை அமைச்சிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே ஆணையாளர் திரு. சிவஞானத்திடம் அவ்விடம் ஒப்படைக்கப்பட்டது.

6. எக்காரணம் கொண்டும் இக்கட்டிடத்தை நிரந்தர நூல் நிலையமாகப் பயன்படுத்தவோ பெயர்ப் பலகைகளைத் தொங்கவிடவே கூடாது என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

7. இக்கலாசார நிலையத்தில் இந்து சமய நூல் நிலையம் ஒன்றை அமைக்கவும். நாவலர் பெருமானின் உருவச் சிலை ஒன்றையும் பிரதிஷ்டை செய்யவும் அமைச்சு திட்டமிட்டிருக்கிறது.

8. அமைச்சுக்குத் தெரியாமல், அமைச்சின் அனுமதி பெறாமலுமே நாவலர் சிலை இந்து கலாசார மண்டபத்திற்கு நகர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இதனை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்த அமைச்சர் திரு. செ. இராசதுரை அவர்கள் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சிவஞானத்தை அழைத்து சம்பவங்கள் பற்றித் தீவிரமாக விசாரணை நடத்தியுள்ளார்.

10. அமைச்சின் அனுமதியின்றி நடைபெற்ற சம்பவத்திற்காகத் தமது ஆழ்ந்த வருத்தத்தினைத் தெரிவித்துக் கொண்ட ஆணையாளர், இது தொடர்பாக ஏற்பட்ட தவறுகளையும் ஒப்புக் கொண்டார்.

11. நாவலர் மணிமண்டபத்திலிருந்து சிலை நகர்த்தல் சம்பவம் முன்னரே தெரிந்திருந்தால் இந் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும்.

## 5. *சிலை கடத்தலுக்கெதிராக மக்களின் அறிஞர்களின் மன்றங்களின் எதிரொலிகள்*

நாவலர் சிலை கடத்தலை எதிர்த்து பல தனிப்பட்டவர்களினதும், அறிஞர்களினதும், மன்றங்களதும் துண்டுப் பிரசுரங்களும், மகஜர்களும் வெளிவந்தன. இவற்றில் சிலவற்றை வரலாற்று ஆவணங்களாகக் குறிப்பிடுதல் இங்கே பொருத்தமாகின்றது. திரு. ந. சபாரத்தினபிள்ளை அவர்கள் 24-8-85 இல் வெளியிட்ட ஒரு பகிரங்கக் கடிதத்தில்[15] நாவலர் சிலையைச் சுற்றி நல்லைக் குமரன் தேர்வரக் கூடாதென்று கூறுபவர்கள், முருகன் ஆலயத்திலுள்ள ஆலயத்தின் ஸ்தாபகரான இரகுநாத மாப்பாண முதலியாரதும் மனைவியினதும் சிலைகளைச் சுற்றிச் சுவாமி வீதி வலம் வருவதை அனுமதிக்கலாமா? என்றும் கேட்டுள்ளார். இவ்வாறே 'நாவலர் சிலை நகர்ந்தது ஏன்? என்ற தலையங்கத்தில் திரு. ந. சபாரத்தினம்பிள்ளை ஒரு பிரசுரத்தினை வெளியிட்டிருந்தார்.[16] அதன் உப தலைப்புக்கள் பின்வருமாறு அமைந்துள்ளன. நல்லூரில் நடு இரவில் நடந்த நாடகத்தை நாடு அறியுமா? தாபகர் இரகுநாத மாப்பாணர், கந்தைய மாப்பாணர் நல்லூர் சனங்களின் கோயில் போன்ற தலைப்புகளில் அவை அமைந்திருந்தன. திரு. சி. செ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் திகதியிடப்படாது சித்திரா அச்சகத்தில் வெளியிட்ட பிரசுரத்தின் தலையங்கம் 'வெட்கம் கெட்ட நாவலர் சபையினருக்கு' இல்லை – நாவலர் விரோதிகளுக்குக் கூறிக் கொள்ளும் ஞான வார்த்தை 'என அமைந்துள்ளது.[17] பல்கலைக்கழக ஆசான்களாலும் இச்சிலை கடத்தலைப் பற்றிய கட்டுரைகள் வெளியிடப்பட்டன. பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரா. வை. கனகரத்தினம் எம். ஏ. அவர்கள் 24-11-85 இல் வெளிவந்த வீரகேசரியில் 'நாவலர் சிலை அகற்றல் சைவ உலகிற்கு இழைக்கப் பெற்ற அநீதி' என்ற தலைப்பிலும் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தார்.[18] இவ்வாறே பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் 'நல்லைக்கந்தன் கோயிலும் நல்லை நாவலரும்' என்ற தலையங்கத்தில் வெளியிட்ட கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.[19] இக் கட்டுரையில் நல்லை முருகன் ஆலய முன்றலில், இன்று நாவலர் மணிமண்டபம் அமைந்திருக்கும் நாவலரது காணியில் அவரமைத்த சிவப்பிரகாச மடத்திலே மேற்கொண்ட நடவடிக்கைகள் பின்வருமாறு கூறப்படுகிறது.

'பவஸ்ரீ (1874) திருவிழாவிலே நாவலரவர்கள் திருவாவடு துறையிலிருந்து ஓதுவார்களை வருவித்து, அவர்களுக்கும் இங்குள்ள சைவருக்கும், தெற்கு வீதி மடத்திலே மகேசுவர பூசை நடத்துவித்து, தேவார பாராயணம் செய்யத் தொடக்கி வைத்தார். நாவலரவர்கள் 24 நாளும் நியமமெனக் கொண்டு தொடக்குவித்த தேவார பாராயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 நாளுடன் திடீரென நிற்க வேண்டி வந்தது.

சுவாமிக்குப் பின்னே ஓதுவார்கள் தேவார பாராயணம் செய்து கொண்டு செல்வார்கள். சாயங்காலப் பூசைக்கும் இரண்டாங் காலப் பூசைக்குமிடையே வசந்த மண்டபத்தினெதிரே தேவார மோதியும் அதனைச் சாரங்கியில் அமைத்து வாசித்தும், சனங்களுக்குச் சிவபக்தியை வளர்விக்கவும் முயன்றார்கள். ஆனால் வசந்த மண்டபத்தினெதிரே ஓதுவார் சாரங்கி வாசிக்கவும் தேவாரம் ஓதவும் தொடங்கியவுடனே நைவேத்தியம் எடுக்கும்படி வாத்தியத்தை முழங்குவித்துத் தேவாரத்திற்கு இடையூறு செய்யப்பட்டது. அத்தோடு அமையாது நிறுத்தப் பட்டிருந்த ஆட்டுக் கொலையைச் செய்து இடப வாகனத் திருவிழா தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா, என்பனவற்றின் போது தேவார பாராயணம் இல்லாமற் செய்து விட்டனர். ''மறைகணிந்தனை சைவ நிந்தனை பொருமனம்'' உடைய நாவலரவர்கள் நல்லை முருகன் கோயிலை மீண்டும் அணுக முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டார்.

நல்லை முருகன் தேரை நெருப்பும் தீண்டியது. அடுத்து வாந்திபேதியும் பரவியது. நாவலரவர்கள் கந்தன் கோயிலை விட்டகன்று ஒரு வருடம் வரையும் பிறரைக்கொண்டு கோயிலாருக்குப் போதிப்பதும் அது சித்திபெறாமை கண்டபின்ஒரு பத்திரிகை எழுதி அதன் ஒருகையெழுத்துப் பிரதி ரூபம் கோவிலாருக்கு அனுப்பியும், அதுவும் சித்திபெறாமை கண்டபின் அதனை அச்சிற் பதிப்பித்து 'நல்லூர் கந்தசுவாமி கோயில் என்ற பெயரிலே பவ ஸ்ரீ ஆடி மீ (1875) வெளியிட்டார்.''

செங்கதிர் பத்திரிகை 15-10-1985 இல் 'நல்லூரில் முன் இருக்க நாவலரே விரும்பவில்லை' என்ற தலைப்பில் கலாநிதி க. குணராசாவின் கட்டுரையை வெளியிட்டது.[20] வீரகேசரி 1-12-85 இல் 'குருபூசை வரும் வேளையிலாயினும், நல்லைக் கந்தனருகே மீண்டும் நாவலர் வரவேண்டும்" என்ற தலையங்கத்தில் இக் கட்டுரையாளரால் எழுதப் பெற்ற கட்டுரையைப் பிரசுரித்தது. [21] யாழ். பல்கலைக்கழகத்தில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த ஆசிரியர்கள் (ஒரு சிலரைத் தவிர) நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதின கர்த்தருக்கு 'நாவலர் சிலை மீண்டும் மணி மண்டபத்திற்கே மாற்றப்படல் வேண்டும்' என்று மகஜரை அனுப்பினர். இம் மகஜர் 29-10-1986 இல் வெளியான சஞ்சீவிப் பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.[22]

மன்றங்களும் சிலை கடத்தலைக் கண்டித்துப் பிரசுரங்களை வெளிட்டன. யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம் 12-8-1985 இல், நாவலர் சிலையை எவ்வாறு தனிப்பட்ட ஒரு சிலரால் இருந்த இடத்தை விட்டு அகற்ற முடியும்? என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தை வெளியிட்டது.[23] ஏழாலை சைவாபிவிருத்திச் சங்கம் நவம்பர் மாதம் 1985 இல் வெளியிட்ட பிரசுரத்தில் 'நல்லூர்க் கோயில் வீதியில் தான் நாவலர் சிலை வீற்றிருக்க வைக்க வேண்டும்' என்ற தலைப்பில் ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருந்தது.[24] நாவலர் பணிமன்றம் திரு. மு. கந்தையாவையும், திரு. மு. திருஞானசம்பந்த பிள்ளையையும் முறையே தலைவராகவும், காரியதரிசியாகவும் கொண்டு சிலை கடத்தலை எதிர்த்துத் துண்டுப் பிரசுரம் விட்டதோடு பல தீர்மானங்களையும் வெளியிட்டது.[25] யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம், சிலையை மீண்டும் நாவலர் மணி மண்டபத்திற்கே கொண்டு வரல் வேண்டும் எனத் திரும்பவும் இக்காலத்தில் நாவலர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடம் விண்ணப்பித்தது. நாவலரின் பெயரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம் திருநெல்வேலியில் உதயமாகி 'நாவலர் குரல்' என்ற பத்திரிகையையும் வெளியிட்டது. இதன் தலைவராக இக் கட்டுரையாசிரியர் செயற்பட்டு வருகிறார். நாவலர் பணிமன்றம் சிலை கடத்தலுக்கு எதிராகப் பிரசாரங்களை மேற்கொண்டது. 24-8-1986இல் திருநெல்வேலியிலுள்ள கலாமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் அங்கமாகவுள்ள தமிழர் கலாசார சபையின் பொறுப்பாளர் திரு. மலரவனும் கலந்து கொண்டார். பின்னர் அவரது ஆலோசனையின் பேரில் தமிழர் கலாசார சபைக்கு இப்பிரச்சனை எடுத்துச் செல்லப்பட்டு 1986ஆம் ஆண்டு ஆவணி மாத மளவில் விசாரணை நடை பெற்றது. சிலை கடத்தல் தவறு என்பதற்கான நியாயம் எடுத்துரைக்கப் பட்டது. இதன் முடிவு இரண்டு வருடங்களின் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் அதுவரையும் இரு பகுதியினரையும் அமைதியாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தின் வருகையோடு இப் பிரச்சனை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

## சிலை கடத்தல் நியாயமானதல்ல என்பதற்கான விளக்கம்

1. நாவலர் சிலையின் பிரதிஷ்டைக்கு மிகப் பொருத்தமான இடம் நல்லூர் முருகன் ஆலய முன்றலே என நன்கு ஆலோசித்தே அவ்விடத்தில் இச் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

2. நமது மரபின்படி இவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலையை நகர்த்தல்/கடத்தல் மகாபாவம்.

3. 1969 இல் இச்சிலை இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டபோது நாவலர் வாழ்ந்த காணி பற்றி நாவலர் சபைக்குத் தெரிந்திருக்கவில்லை என்றும் 1971இல் தான் இக்காணி பற்றித் தமக்குத் தெரிந்திருந்ததால் அவ்விடத்திற்கே இதனை மாற்றுவது பொருத்தம் என நாவலர் சபை கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

4. இவ்வாறு சிலை மாற்றுவதற்கு நாவலர் காணி பற்றி 1971 இல் தான் தெரிந்தது எனக் கூறுவதும் தவறானது. காரணம்;

   அ) 1969இல் நாவலர் சபையால் வெளியிடப்பட்ட நாவலர் மகாநாட்டு மலரில் தற்போது நாவலர் கலாசார மண்டபம் அமைந்துள்ள காணியே நாவலர் வாழ்ந்துள்ள காணி என வரைபடத்துடன் குறிக்கப்பட்டுள்ளது. அதனால் இச்சிலை நிறுவப்பட்ட காலத்தில் நாவலர் வாழ்ந்த காணி பற்றித் தெரிந்திருந்தும் கூட, நல்லூர் கந்தனருகே மக்கள் அதிகமாகக் கூடும் இடத்தில் நாவலர் சிலை அமைவது தான் பொருத்தமானது என அன்று கருதப்பட்டது தெளிவாகின்றது.

   ஆ) 1972இல் நாவலர் வாழ்ந்த காணியில் நாவலர் கலாசார மண்டபம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதற்கான வரைபடமும் தயாரிக்கப்பட்டது. இக்காலகட்டத்திலோ அன்றி 1985 வரையிலோ அங்கே இச்சிலையைக் கொண்டு வருவது பற்றி நாவலர்சபை பிரஸ்தாபிக்கவில்லை.

   இ) நாவலர் கலாசார மண்டபத்தினை நாவலர் சபையின் நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கைகளுக்கு விடுவதற்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சு அக்காலத்தில் கருதியிருக்கவில்லை; அநுமதிக்கவுமில்லை.

ஈ) நாவலர் கலாசார மணடபத்தில் நாவலருக்கு சிலை அமைக்க பிரதேச அபிவிருத்தி அமைச்சு சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில் இவ்வமைச்சின் அங்கீகாரமின்றி இச்சிலை கடத்தல் நாடகம் அரங்கேறியது என்பதை நாம் மேலே எடுத்துக் காட்டிய சிந்தாமணிச் செய்தி உறுதிப்படுத்துகின்றது.

5. இச்சிலை கடத்தல் சம்பந்தமாக 3-7-85 இல் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்து நிகழ்ச்சி நிரலில் சபையின் மிக முக்கிய விடயமாகிய சிலை கடத்தல் என்ற விடயம் இடம் பெறாது பின்னர் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாவது சபையின் இரட்டை வேடத்தை எடுத்துக் காட்டுகிறது.

6. சிலை கடத்தலுக்கெதிராக அங்கத்தவர்கள் தீர்மானம் கொண்டுவர முற்பட்டபோது ஒரு தீர்மானமும் தேவையில்லை எனக் கூறி, அவர்களின் கருத்தினைக் கொழும்புக்கு அறிவிப்பதாக அவர்களை வழி அனுப்பிய காரியதரிசிகளில் ஒருவரான திரு. கா. விசுவலிங்கம் அவர்கள் இச்சிலையை மாநகர சபை ஆணையாளரின் கோரிக்கையின் பேரில் நாவலர் கலாசார மண்டபத்திற்கு மாற்ற கொழும்பிற் கூடிய பொதுச் சபைக்குச் சிபார்சு செய்தமை நாவலர் சபையின் விசுவாசமின்மையை எடுத்துக் காட்டுகிறது.

7. நாவலர் சபையினர் கூறுவதுபோல நல்லூர் முருகனின் வீதி விஸ்தரிப்பில் நாவலர் மணிமண்டபம் பொலிவிழக்கவில்லை. மாறாக இத்தகைய விஸ்தரிப்புத் திட்டத்திற்கு இம்மணிமண்டபம் இடைஞ்சலாக இருக்கும் எனக் கருதியே இவ்வாறு செய்யப்பட்டது எனப் பலர் பேசிக் கொள்ளுகிறார்கள். அத்துடன் ஒரு கல்லில் இரு மாங்காய்கள் விழுத்தப்பட்டன எனவும் கூறுகிறார்கள்.

8. மக்கள் காட்டிய எதிர்ப்பால் தாம செய்த தவறுகளை மூடி மறைக்கவே வருடந்தோறும் நல்லைக்கந்தன் உற்சவ காலத்தில் தெய்வீகத்தமிழ் அரங்கு ஒன்றினை நாவலர் சபை ஒழுங்கு செய்து நடத்துவது 'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கியதற்கு ஒப்பானதாகும்.

*முடிவுரை*

நாவலர் சிலை இல்லாமல் தெய்வீகத் தமிழ் அரங்கு நடாத்தினால் மட்டும் பிராயச்சித்தம் ஏற்படாது. எனவே நாவலர் தமது பணத்தில் வாங்கிய இக்காணியில் (5 பரப்பும், 12 குழியும்) மறுபடியும் நாவலர் சிலையை கோலாகலமாக எடுத்து வந்து, நாவலரின் கனவாகிய சைவப பிரகாச மண்டபத்தை அமைத்து, நமது குருமாருக்கு பயிற்சியும், தேவார பாராயணப் பயிற்சியும் அளித்தல் வேண்டும். இஃதே நமது கலாசாரத்தின் காவலனாக வாழ்ந்த நாவலருக்கு நாம் செய்யும் கைமாறாகும். நமது கலாசாரத்தின் தனித்துவத்தைப் பேணப் போராடும் இக்கால கட்டத்தில், இத்தகை போராட்டத்திற்கு அடியெடுத்துக் கொடுத்த, இயக்க வாதிகளின் முன்னோடியாக நாவலரை நாம் மறக்க முடியுமா?[26] ஏனெனில் ஆசிய – ஆபிரிக்க நாடுகளில் வெள்ளையருக் கெதிராகத் தோன்றிய – சுதந்திரத்திற்காகப் போராடிய இயக்கங்களுக்கெல்லாம், கால்கோளாக அமைந்தவை சமய மறுமலர்ச்சி இயக்கங்களே என்பது வரலாறு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந் திலரேல் சொல்லு
தமிழெங்கே, சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்து புராணாகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறி.

—தமிழறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை

---

உசாத்துணை நூல்கள்:


1. Silva, K. M. De., History of Sri Lanka Oxford, (1981). P. 350 - 355.
2. குமாரசாமி சின்னத்துரை M. A., 'மானிப்பாய் தந்த மாணிக்கம், சேர் முத்துக் குமாரசுவாமி (கி. பி. 1834 — 1879), வாழ்க்கை வரலாறு (சுன்னாகம், 1990, ப. 11)
3. இப்பணியில் முன்னின்று உழைத்தவர்களுள் திருவாளர்கள் நா. இரத்தினசபாபதி, க. இளையதம்பி, செனட்டர் த. நீதிராஜா, சி, சின்னத்துரை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். நாவலர் சிலை, கடத்தல் நடைபெற்றபோது சிலை வார்ப்பிலும், சிலைப்பிரதிஷ்டையிலும் முன்னின்று உழைத்த பெரியார்கள் பலர் உயிருடன் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
4. சோமசுந்தரம் செட்டியார், வெட்கம் கெட்ட நாவலர் சபையினக்கு இல்லை – நாவலர் விரோதிகளுக்குக் கூறிக் கொள்ளும் ஞானவார்த்தை (துண்டுப்பிரசுரம்)
5. கணபதிப்பிள்ளை. சி. சிலையுருவில் நாவலர் அதே இடத்திலிருந்து திருத்தங்களைச் சொல்லி வரவேண்டும்' வீரகேசரி 3-11-1985.
6. யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு வெளியீடு, சிற்றம்பலம் சி. க. நல்லூரும் நாவலரும் - சில வரலாற்று நினைவலைகள் நல்லைக்குமரன் மலர் 1994. பக். 57. — 61
7. நல்லைக்குமரன் மலர் — 1994. பக். 57 — 61.
8. கணபதிப்பிள்ளை சி.
9. ஈழநாடு, 1-7-1985.
10. ஈழநாடு. 8-7-1985.
11. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் ஆண்டறிக்கை — 1985 / 86.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஈழநாடு, 20-08-1985.

13. ஈழமுரசு 2-10-1985.

14. சிந்தாமணி வாரமலர் 20-10-1985 இப்பத்திரிகையில் வெளிவந்த செய்தி 'கூத்து முடியுமுன் கலைந்தது வேடம்' என்ற தலைப்பில் தனிப் பிரசுரமாக வெளிவந்துள்ளது.

15. சபாரத்தினம்பிள்ளை, ந. மாண்புமிகு இந்து கலாசார அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிய பகிரங்கக் கடிதம் தனியான துண்டுப்பிரசுரமாக வெளிவந்துள்ளது. பின்னர் 'நாவலர் சிலை கடத்தல்' - மூவர் அறிக்கைக்குச் சில விளக்கங்கள் என்ற தலைப்பில் ஒரு தனிப்பிரசுரத்தையும் இவர் வெளியிட்டுள்ளார்.

16. சபாரத்தினம்பிள்ளை, நா. 'நாவலர் சிலை நகர்ந்தது ஏன்?
தனிப்பிரசுரம் 12-9-85.

17. சோமசுந்தரம் செட்டியார் சி. செ. முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது.

18. வீரகேசரி 24-11-1985.

19. வீரகேசரி 3-11-1985.

20. செங்கதிர் 15-10-1985.

21. வீரகேசரி 1-12-1985.

22. சஞ்சீவி (உதயன் பத்திரிகையின் வார வெளியீடு) 20-10-1986.

23. யாழ். பல்கலைக்கழக இந்துமன்ற வெளியீடு 12-8-1985.

24. ஏழாலை சைவாபிவிருத்திச் சங்கம், நல்லூர்க் கோயில் வீதியில் தான் நாவலர் சிலை வீற்றிருக்க வைக்க வேண்டும்[1], துண்டுப்பிரசுரம் 1.

25. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம் கலந்துரையாடற் தீர்மானங்கள், (தனியான பிரசுரம்)

26. சிவத்தம்பி, கா. 'இயக்கவாதிகளின் சொத்து நாவலர் பெருமான் 150வது ஜயந்தி விழா மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை (கொழும்பு) 1972. பக். 82 — 84.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொண்ட் இன்ஸ்ரிற்றியூட்"

ஆண்டு மூன்று (3) முதல்

ஏ. எல். விஞ்ஞானம்

வர்த்தகம்

கணிதப் பிரிவு

வகுப்புக்களும் மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளும்

நடைபெறும் கல்வி நிலையம்

**BOND INSTITUTE**

58 — A, STANLEY ROAD,

**JAFFNA.**

நல்லைக்கந்தன் உற்சவம் சிறப்புற

யாழ் மாநகராட்சி மன்றம் ஆற்றும் பணிகளுக்கு

எமது பாராட்டுக்கள் !!

தரமான கைக்கடிகாரங்கள் சுவர்மணிக்கூடு வகைகள்

நியாய விலையில் பெற்றுக்கொள்ள

" அல்டி "

269/1, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.

ஒருவர் :- இந்த மணிக்கூடு கொழும்பிலை அன்ரி
2500 ரூபாவிற்கு வாங்கி வந்தவ !

மற்றவர் :- இதுவா ...... இந்த மணிக்கூடு யாழ்ப்பாணம்
'அல்டி' யில் 2300 ரூபாவிற்கு விற்கிறார்கள்.

ALDI

269/1, Power House Road,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் வழிபாட்டில் காவடியாட்டம் —ஓர் அறிமுகம்

எம். வேதநாதன், எம். ஏ.
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

0.0 முன்னுரை

சங்ககாலத்தில் ''முருகன்'' என்ற பெயரில் வணங்கப் பெற்ற கடவுளையே தேவார காலம் தொடக்கம் ''கந்தன்'' என்ற நாமத்திலும் மக்கள் வழிபட்டனர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் தேவாரத்திலேயே முதன் முதலாக கந்தன் என்ற பெயரைக் கண்டுகொள்ள முடிகிறது. 'பெற்று உகந்தது கந்தனையே' என்பது திருஞானசம்பந்தரின் வாக்காகும். பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் 'கந்து' என்ற சொல்லடியாகவே 'கந்தன்' என்ற சொல் தோன்றியிருக்கலாம். தொல்காப்பியம் குறிப்பிடும் 'கொடிநிலை கந்தழிவள்ளி' என்ற சொற்றொடரில் வரும் 'கந்தழி' என்பதற்குப் பற்றுக் கோடில்லாதது என்று பலர் பொருள் கூறினும், இச்சொல்லை 'கந்தன்' என்ற சொல்லுக்கும் மூலமாகக் கொள்ள முடியும். 'கந்து' என்பதற்கு கட்டுத்தறி என்று பொருள் கூறுவாரும் உளர். கந்தாகிய கட்டுத்தறி ஆடு மாடுகளை ஒன்று சேர்த்து கட்டிக்கொள்ள உதவுவது போல, உயிர்களை ஒன்று சேர்த்து உபகரிப்பவனாக கந்தன் விளங்குகிறார். ஆறு திருவடிவங்களும் ஒன்று சேர்க்கப்பட்டபோது 'கந்தன்' என்று பெயர் பெற்றதை கந்தபுராணம் ''அந்தமில்லதோர் மூவிரு வடிவுமொன்றாகி கந்தன் என்று பேர் பெற்றனன் கவுரி தன் குமரன்'' என்றும், ''சேயவன் வடிவுமாறுந் திரட்டி நீ யொன்றாய்ச் செய்தாய் ஆயதனாலே கந்தனாமெனு நாமம் பெற்றான்'' என்றும் குறிப்பிடுவதால் அறிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய கந்தக் கடவுளை சங்கத் தமிழர்கள் துன்பத்தைப் போக்கவும், குழந்தைப்பேறு கிடைக்கவும், நல்ல கணவரைப் பெறவும், நாட்டில் மழை வளம் சுரக்கவும், வேல் ஏந்தி மலர் சொரிந்து இசைக்கருவிகள் இசைத்து வெறியாட்டு மூலம் வணங்கியதாக பரிபாடல், திருமுருகாற்றுப்படை முதலான தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. இத்தகைய வேலன் வெறியாட்ட வழிபாட்டு முறையின் படிமவளர்ச்சியாகவும், கந்தனது தெய்வீகக் கதையின் வெளிப்பாடாகவும், பல இடங்களிலும் பலவகையான காவடிகளை எடுத்துக் கந்தனுக்குக் காணிக்கை செலுத்தி வருகின்றனர். காவடியாட்டம் என்பது ஒரு கடவுள் வழிபாட்டு முறையாகும். இதனையே இக்கட்டுரை ஆராய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.0 காவடியாட்டத்தின் தோற்றம்

கந்தனை வந்தனை செய்யும் அடிப்படையில் தோன்றிய ஒரு சமய வழிபாட்டு முறையே காவடியாட்டமாகும். இக் காவடியாட்டத்தின் தோற்றம் பற்றிய பின்வரும் தெய்வீகக்கதை குறிப்பிடற்பாலதாகும். ''பொதிகை மலையில் வந்து தங்கிய அகஸ்திய முனிவர் தன் சிஷ்யன் இடும்பனையழைத்து கயிலை சென்று அங்கு முருகனுக்குரிய கந்தமலையில் காணப்படும் சிவசக்தி சொரூபமான சிவகிரி, சக்திகிரி எனப்படும் இரு சிகரங்களைத் தன் வழிபாட்டிற்காகக் கொண்டு வரும்படி பணித்தார். இடும்பன் மிகவும் பக்திமான். அவன் சூரபத்மனுக்குப் போர்க் கலையைப் போதிக்கும் ஆசிரியனாக இருந்தான். சூரபத்மன் கொடுமைகள் புரிய ஆரம்பிக்கவே இடும்பன் தன்னாலானவரை அவனுக்கு நற்புத்தி கூறினான். தன் வார்த்தை எடுபடாமல் போகவே சூரனை விட்டகன்று அகஸ்தியரிடம் போய்ச் சேர்ந்தான். அகஸ்தியரின் கட்டளைக்கிணங்க இவன் கயிலைசென்று இவ்விரு மலைகளையும் இருபுறம் தொங்க காவடியாகக் கட்டிக் கொண்டு வந்தான். முருகன் இவ்விரு கிரிகளையும் திருவாவினன் குடியில் நிலைபெறச் செய்யவும் இடும்பனுக்கு அருளவும் விரும்பி ஒரு திருவிளையாடல் நிகழ்த்தினார். இடும்பன் வழி தெரியாது திகைத்த போது, முருகன குதிரைமீது செல்லும் அரசன் போலத் தோன்றி இடும்பனை ஆவினன் குடிக்கு அழைத்துவந்து சிரம பரிகாரம் செய்து போகும்படி கூறினார். அவ்வண்ணம் காவடியை இறக்கிவைத்த இடும்பன் மீண்டும் புறப்படும்போது காவடியைத் தூக்க முடியாமல் திண்டாடினான். ஏன் இப்படி நடந்தது என்பதை அவன் ஆராய்ந்தபோது, சிவகிரி மீது ஒரு சிறுவன் கோவணாண்டியாய் கையில் தண்டேந்தி நிற்பதைக் கண்டான். அவனை மலையைவிட்டு கீழே இறங்கு என்று இடும்பன் வேண்டினான். இம்மலை தனக்கே சொந்தம் என்று சிறுவன் உரிமை கொண்டாடினான். கோபமடைந்த இடும்பன் அச்சிறுவனைத் தாக்க முயன்றபோது வேரற்ற மரம்போல இடும்பன் கீழே வீழ்ந்து விட்டான். இடும்பன் மனைவி இடும்பியும் அகஸ்தியரும் முருகனை வேண்டவே இடும்பனுக்கு முருகன் அருளாட்சி புரிந்தான். இடும்பனது சீலத்தையும், குருபக்தியையும் மெச்சிய முருகன் அவனையே தனது காவல் தெய்வமாக நியமித்ததுடன் இடும்பனைப் போல் (சந்தனம், பால், புஷ்பம் போன்ற பொருட்களை) காவடி எடுத்து தன் சந்நிதிக்கு வருபவர்களுக்கெல்லாம் அருள் பாலிப்பதாக வாக்களித்தார். அன்று முதல் தான் முருகன் ஆலயங்களுக்குக் காவடி எடுத்துச் செல்லும் வழக்கம் ஏற்பட்டது'' (நடராஜன் 1982:82)

இதுபற்றிய புராணக் கதையினை பழனித்தலவரலாறும் திருக்கோயில் வழிபாடும் என்ற நூலும் ''பழனிமலையும் இடும்பன்மலையும் சிவகிரி, சக்திகிரி எனக் கயிலாயத்திலிருந்தாகவும், சிவபெருமான் அவைகளை அகத்தியமுனிவருக்குக் கொடுக்க, அவைகளைப் பொதிகைக்குக் கொண்டுபோக நினைத்து அவர் இடும்பாசுரனுக்கு ஆணையிட அவைகளைக் கொண்டு போகும்போது வழியில் களைப்படைந்து இப்போதிருக்குமிடத்தில் இடும்பன் இறக்கிவைக்க அங்கு முருகன் கருணையினால் இவ்விடமே பொருந்தியதென்றும் இடும்பன் அதன் காரணம் நோக்கும்போது சிவகிரியின் மீது முருகன் கனிவாய்ச் சிறுவனாக குராமரத்தின் கீழ்த்தோன்றவும், அசுரனுக்கும் இளஞ்சேய்க்கும் போர் நிகழவும், அசுரன் உயிர்நீர்ப்ப, இடும்பியின் முறையீட்டால் உயிர்மீண்டும் பெறவும் அவன்பெற்ற வரத்தால் ஆண்டவன் மலையில் இடும்பன் சந்நிதி என்ற இடத்தில் வாயில் காவலனாக ஒரு இடம் பெற்றுத் தான் இருமலைகளையும் எடுத்துவந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று காவடியுடன் தமது பிரார்த்தனைகளைக் கொண்டுவரும் அடியவர்கள் முருகன் அருள்பெற பிரார்த்தனையும் கைவரப்பெற்றான்'' எனக் குறிப்பிடுவதும் இங்கு குறிப்பிடற்பாலதாகும் (1974.4-5) இத்தகைய தெய்வீகக்கதைகளை பழனி மலைமீது காணப்படும் காவடியைத் தூக்கியநிலையில் விளங்கும் இடும்பனின் சிற்பமும், அகஸ்தியர்வழிபட்ட சிவலிங்க வடிவமும், குராவடிவேலர் சந்நிதியும் நன்கு விளக்கி நிற்கின்றனவெனலாம்.

இவ்வாறு கந்தனோடு தொடர்புடைய சமயப் பின்னணியிலேயே காவடியாட்டம் தொன்மைக்காலத்தில் தோற்றம் பெற்றுள்ளதெனக் கூறமுடிகின்றது.

2.0 காவடி என்ற சொல்லின் விளக்கம்

''காவடி' என்ற சொல்லைக் காவு+தடி எனப் பிரித்து நோக்கலாம். கட்டித் தொங்கவிட்டுச் சுமத்தல் என்ற பொருளினை 'காவு' என்ற பதம் சுட்டி நிற்கிறது. காவு என்ற சொல்லடியாகவே காவுதல் என்ற சொல் தோன்றியுள்ளதெனலாம். காவுதல் என்ற செயல் ஏன் ஏற்பட்டது என்பது பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகின்றது. முருகன் ஆலயங்கள் மலைமீது அமைந்து விளங்கும் சிறப்புடையன. இதனாலேயே முருகனைக் குறிஞ்சிக் குமரன் என்று கூறுவர். மலையமர் முருகனை வழிபட்ட பண்டைத்தமிழர்கள் முருகனுக்குச் செலுத்தப்படும் பழங்கள், படையல்கள், காணிக்கைப் பொருட்கள் என்பனவற்றை தோளில் காவிக்கொண்டு (சுமந்துகொண்டு) செல்லவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கும். அதன் காரணமாக ஒரு கம்பின் இருமுனைகளிலும் காணிக்கைப் பொருட்களை கட்டித் தொங்கவிட்டவாறே மலைமீது ஏறி வழிபட்டனரெனலாம், இதனால் அவர்களுக்கு சுமைக்குறைவும், வசதியும் ஏற்பட்டிருக்கும். குன்றில் குடியிருக்கும் முருகனுக்கு தங்கள் காணிக்கைகளைச் செலுத்துகின்ற பக்தர்களின் பண்டைய பழக்கத்திலிருந்துதான் காவடி எடுக்கும் மரபுதோன்றியிருக்க வேண்டும். இதற்கென ஆரம்பத்தில் பயன்படுத்திய காவுதடியே காவடியாகியிருக்க வேண்டும். (பெருமாள் 1980:74) இவ்வாறு காவிக்கொண்டு சென்று வழிபட்டதனாற் போலும் சிறுதெய்வங்களுக்கு வழங்கப்படும் ''பலியையும்'' 'காவு' என்றே அழைக்கும் மரபு காணப்படுகின்றது. மலைமீது வீற்றிருப்பவராக கந்தக்கடவுள் விளங்கினும் சிவன், உமை போன்ற தெய்வங்களும் மலையுறை கடவுளாக விளங்குவதை சமயநூல்களில் காணமுடிகின்றது. கந்தனுக்குரிய இடமாக கந்தவெற்பு விளங்குவது போன்று சிவனுக்குரிய இடமாக கயிலை வெற்புத்திகழ்தலைக் கந்தபுராணம் கூறுவது இங்கு குறிப்பிடற்பாலதாகும். இதன் காரணமாகப் போலும் கந்தன் வழிபாட்டில் காவடியாட்டம் முதன்மை பெற்று விளங்குகின்றது போன்று ஏனைய இந்து கடவுளர்களின் வழிபாட்டு முறைகளிலும் காவடியாட்டம் சிறப்பிடம் பெற்றிருப்பதனைக் காணமுடிகின்றது.

3.0 காவடி எடுப்பதன் காரணம்

காவடி எடுப்பதற்கான சமய தத்துவ விளக்கம் சமயநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், உண்மையான - திடமான கடவுள்நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், நன்றி உணர்வைப் புலப்படுத்தும் பாங்கிலுமே காவடியாட்டம் நிகழ்த்தப்படுவதை கண்டுகொள்ள முடிகிறது. தீராத நோய் தீர்க்கும் பொருட்டும், தீராதநோய் தீர்ந்தவிடத்தும், பேராபத்துக்கள், விபத்துக்கள் என்பவற்றிலிருந்து தப்பியதன் காரணமாகவும், தூக்கு முதலான கடும் தண்டனைகளிலிருந்து காப்பாற்றப்பட்டதன் பொருட்டாகவும், வளமான வாழ்க்கை அமைய வேண்டும் என்பதற்காவும், சிறப்பாக காவடி வழிபாடு நிகழ்த்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடற்பாலதாகும். போரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிபெற வேண்டி நிகழ்த்தப்படும் வீரர்களின் வழிபாட்டு முறையாகவும் காவடியாட்டம் இன்று நடைபெறுகின்றது. மனமகிழ்வை ஏற்படுத்தும் ஒரு கலை வெளிப்பாடாகவும், அவைக்காற்றுக்கலை வடிவமாகவும் காவடி இன்று விளங்கக் காண்கிறோம்.

### 4.0 காவடி எடுப்பவரின் பண்பு

கடவுளை வழிபாடு செய்யும் பொருட்டாகவோ அல்லது கந்தனை வந்தனை செய்யும் காரணமாகவோ காவடி எடுப்போர் விரதம் இருப்பதும், நோன்புகள் நோற்பதும், ஆசாரமாகவிருப்பதும் இன்றியமையாததாகும். காவடி எடுப்போரின் குடும்பமும் விரதிகளாக விளங்குவது வேண்டற்பாலதாகும். காவடி எடுப்பவர் மட்டுமன்றி அவரின் குடும்பம் முழுவதுமே கடவுளைப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு காவடியாட்டத்துடன் செல்வது காவடி வழிபாட்டின் பிரதான பண்பாகும், இந் நிலையில் காவடி வழிபாடானது தனிமனித வழிபாடாகமட்டுமன்றி ஒரு கூட்டுவழிபாடாகவும் விளங்கக் காணலாம்.

### 5.0 காவடியின் அமைப்பு

'காவடி' ஒரு குறுந்தடியில் பொதுவாகச் செய்யப்பட்டிருக்கும். அதன் இரு முனைகளையும் இணைத்து மேல்நோக்கி வளைந்த அமைப்பில் கட்டியிருப்பர். அதன் இரு மருங்கின் நான்கு மூலைகளையும் மயிர்ப்பீலிகளை ஒன்றிணைத்து நிறுத்தி ஒப்பனை செய்வர். முருகன் படமும் சில காவடிகளில் கட்டப்பட்டிருக்கும். காவடியின் நடுப்பகுதியில் ஒரு வேல் மேல்நோக்கி கட்டப்பட்டிருக்கும். அதனை மலர்மாலையால் அலங்கரிப்பர். சில காவடிகள் வடிவுக்காக வண்ணத்துணிகளாலும் அழகுபடுத்தப்பட்டிருக்கும். காவடியின் இரு முனைகளிலும் தத்தம் நேர் கடனுக்குரிய காணிக்கைப் பொருட்கள் சிறு செம்புகளிலோ அல்லது வேறு வகையாகவோ கெட்டியாகக் கட்டப்பட்டிருக்கும். காவடியாட்டம் நடைபெறும் போது இவை சிறிதும் வெளியிலே சிந்தாதவாறு இறுக்கமாகக் கட்டுவது அவசியமாகும். காவடியில் கலைஉணர்வு பரிமளிக்கின்ற போதும் காவடியின் அமைப்பைக் கண்டதும் கந்தக்கடவுளின் நினைப்பே எம் கண்முன் தோன்றுமெனலாம்.

### 6.0 காவடி வகைகள்

பக்தர்கள் தத்தம் நேர்கடன்களுக்கு ஏற்பவும் பிரார்த்தனைகளுக்கு அமைவாகவும் பலவகைப்பட்ட காவடிகளை எடுத்து கந்தனுக்கு காணிக்கை செலுத்துகின்றனர். இவ்வகையில் பாற்காவடி, பன்னீர்காவடி புஷ்பக்காவடி, பஞ்சாமிர்தக்காவடி, சர்க்கரைக்காவடி, சந்தனக்காவடி, சர்ப்பக் காவடி, இளநீர்க்காவடி, மச்சக்காவடி, பிள்ளைக்காவடி, அன்னக்காவடி, பிரதட்டைக்காவடி, சேவல்காவடி, வேல்காவடி, செடில்காவடி, குத்துக்காவடி, பறவைக் காவடி, தூக்குக்காவடி, அந்தரக்காவடி, துலாக்காவடி, முள்ளுமிதிதடிக்காவடி, பாட்டுக்காவடி, தாளக்காவடி, எனப் பெயர் பெறும் பலவகைப்பட்ட காவடி வகைகளைக் கந்தன் வழிபாட்டில் கண்டு கொள்ள முடிகிறது. கந்தனுக்கு அபிஷேகம் செய்வதற்காக அல்லது காணிக்கை செலுத்துவதற்காக காவடிச் செம்பில் பாலைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டு எடுக்கும் காவடி பாற்காவடி எனப்படும். இவ்வாறே பன்னீர், புஷ்பம், பஞ்சாமிர்தம், சர்க்கரை சந்தனம், சர்ப்பம், இளநீர், மச்சம் பிள்ளை, அன்னம், சேவல் முதலியவற்றைக் காவடியில் கட்டி காவடி எடுக்கும் போது எவ்வெப் பொருட்கள் கந்தனுக்கு காவடி மூலமாக காணிக்கைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றதோ அவ்வப் பொருட்களின் பெயராலேயே காவடியும் அழைக்கப்படும். உடம்பிலும், உதட்டிலும், நாக்கிலும், கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணத்திலும் வேல் குத்தியவண்ணம் காவடி எடுப்பது வேற்காவடி எனப்படும். இவர்கள் வாய்திறந்து பேசவோ உணவு உட்கொள்ளவோ முடியாது. வேல்காவடி எடுக்கும் பக்தர்கள் தம் உடம்பில் நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு என்ற கணக்குகளில் சிறிய வேல்களை குற்றிக் கொண்டு காவடி எடுப்பது பார்ப்பவரைப்பரவசம் ஊட்டுவதாகவிருக்கும். முதுகில் செடில் குத்தி அதில் ஒரு தேரை இணைத்து ஒருவர் இழுக்க ஆடுவது செடில்காவடியாகும். நீண்டதூரம் செல்லும் காவடி யாத்திரையின் போது காவடி எடுப்பவர்கள் களைப்படைந்தால் அல்லது காவடிகளை ஓர் இடத்திலே இறக்கிவைக்கவேண்டிய நிலை ஏற்பட்டால் அக்காவடிகளை வரிசையாக வைக்காமல் முன்பின் மாறிவைப்பதைக் குத்துக்காவடியென்பர். இவ்வாறு காவடிகளை வைக்காமல் வரிசையாக (முறையாக) வைத்தால் பின்னர் குளித்து நைவேத்தியம் செய்துதான் எடுக்கவேண்டும் என்பது பழனித்தல மரபாகும். (சண்முகம் 1980: 333.)

கிராமியக் கோலங்களும், கலைத்துவமும் இணைந்த கலை வடிவத்தை தாளக் காவடி என்று கூறலாம் (பொன்னுத்துரை 1988:2) காவடி வகைகள் பற்றிய பின்வரும் விளக்கம் இங்கு நோக்கற்பாலதாகும். ''காவடி வகைகளுள், ஆட்டக் காவடி எடுப்பவர்களுக்கு பயிற்சி அவசியமாகும். ...இவ்வாறு பயிற்சி பெற்று ஆடுகின்ற ஆட்டக்காவடியைத் ... ''தாளக்காவடி'' என்று அழைப்பர்... தாளக்காவடியில் கப்பலாட்டம் சிறப்பு மிக்கதாகும் ... முறையான பயிற்சியின்றி பக்கவாத்திய இசைக்கேற்றபடி ஆடி வரும் காவடிகளை ஆட்டக்காவடி என்று கூறுவதைவிடப் பாட்டுக்காவடி என்று கூறுவது பொருத்தமாகும். ... செடிற் காவடி என்பது உடலெங்கும் அலகு (இருப்பினாலே செய்யப்பட்ட ஊசிகள்) பாய்ச்சிக்காவடி எடுத்து வருவதாகும்... முட்கள் (இரும்பு) பதித்த மிதிதடிகளைப் பாதங்களிலே அணிந்து கொண்டு காவடி எடுத்துச் சந்நிதிக்குவரும் பக்தர்கள் பலர். இத்தகைய காவடியை முள்ளு மிதித் தடிக்காவடி என்பர்'' (சண்முகதாஸ், மனோன்மணி 1989:104—113)

தூக்குக்காவடி அல்லது அந்தரக்காவடி, பறவைக்காவடி என்ற காவடிகளை அமைக்கும் விளக்கமும் இங்கு குறிப்பிடற்பாலதாகும். ''சகடை போன்ற ஒன்றிலே இரு பக்கங்களிலும் மரங்கள் நிறுத்தி, அவற்றின் மேல் முனைகள் இரண்டையும் பொருத்தி ஒரு குறுக்கு மரம் அமைக்கப்பட்டது. காவடிக்காரர் இரண்டு கன்னங்களுக் கூடாக ஊசி ஏற்பட்டுப் பத்மாசன நிலையில் இருப்பர். அவருடைய இரண்டு தொடைகளிலும் முதுகின் இரு பக்கங்களிலும், இரண்டு தோள்களிலும் பெரிய முட்கள் ஏற்பட்டு அவற்றின் முனைகள் கயிறுகளுடன் தொடுக்கப்படும். எல்லாக் கயிறுகளையும் ஒன்றாகச் சேர்த்து குறுக்கு மரத்திலே இறுக்கமாகக்கட்ட, காவடியைத் தோளில் தாங்கிய நேர்த்திக்காரர் அந்தரத்திலே தொங்கிக் கொண்டு ஆடிக் கொண்டிருப்பர். அந்தரத்திலே தொங்கிக் காவடி கொண்டு வருவதால் இது அந்தரக் காவடி எனவும் அழைக்கப்பட்டது. இவ்வாறு தொங்குபவருடைய காலிலும் செடில்குத்தப்பட்டு பின் பக்கமாகக் கால்களையும் நீட்டிப் பறவைபோல் அந்தரத்திலே தொங்கிக் காவடி எடுத்து வருதலே பறவைக்காவடி எனப்பட்டது.'' (சண்முகதாஸ் மனோன்மணி 1989:113), ஒருவர் மட்டுமன்றி இருவர் சேர்ந்து மேற்கூறிய விதத்தில் ஒரே குறுக்கு மாத்தில் கயிறுகள் தனித்தனி கட்டப்பட்டு, இருவர் எடுக்கும் பறவைக் காவடிகளை நல்லூர்க் கந்தனின் 1994 ஆம் ஆண்டு தேர்த்திருவிழா வன்று காணமுடிந்தது. அது மட்டுமன்றி பறவைக் காவடி எடுப்பவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலாப் புறத்திலும் ஏனைய பகுதிகளிலும் முள்ளுக்கம்பிகள் ஏற்றப்பட்டு அதில் பிறிதொருவர் குந்தியநிலையில் எடுக்கும் பறவைக்காவடியின் புதிய வளர்ச்சியின் ஒரு காட்சியை சாவகச்சேரி சோலை அம்மன் ஆலயத்தில் காணமுடிந்தது.

பத்மாசன நிலையில் இருக்கும் காவடியாட்டக்காரரின் உடம்பில் வேண்டிய இடங்களில் முட்கம்பிகள் குத்தப்பட்டு அதில் கட்டியிருக்கும் கயிற்றினை ஒன்றாக ஒரு துலாவில்கட்டி எடுக்கும் காவடி துலாக்காவடியாகும். ஆலய வீதியில் சுவாலித்துக் கொண்டிருக்கும் அக்கினியின்மேல் ஓடி ஆடி காவடியுடன் செய்யும் பிரார்த்தனை அக்கினிக்காவடி எனப்படும். இப்பிரார்த்தனையினை பூமிதித்தல் என்றும் கூறுவர். துன்பம்பற்றியோ நோவைப்பற்றியோ சிறிதும் வருந்தாது செய்யப்படும் இத்தகைய காவடியாட்டங்களை நோக்கும்போது இவ்வாறான காவடியாட்டங்கள் மிகவும் கடினமான ஒரு வழிபாட்டுமுறையாகவே காணப்படுகின்றது எனலாம். இவ்வான்மீக வழிபாட்டிற்கு அறிவியல் ரீதியாக என்ன விளக்கம் கூறமுடியும்? இத்தகை கடினமான காவடி வழிபாட்டுமுறைக்கும் அமர்ந்தநிலை, குப்புற நிலை, மல்லாந்த நிலை, பக்கவாட்டு நிலை, தவழ்ந்தநிலை என்ற பல நிலைகளில் வைத்து உடலில் ஊசிகுத்துவதன் மூலம் நோய்களைக் குணப்படுத்தும் சீன மருத்துவமுறையான 'அக்குபங்சருக்கும்' ஏதேனும் தொடர்பு உண்டா என்பது நுணுகி ஆராயப்படவேண்டிய அம்சம் என்பது குறிப்பிடற்பாலதாகும். சைவசித்தாந்தம் கூறும் கன்மக் கோட்பாட்டிற்கும் காவடி எடுத்தற்கும் தொடர்பு உண்டு என்பது அவதானிக்கற்பாலதாகும்.

## 7.0 காவடியாட்டத்தில் இசைக்கருவிகள்

பண்டைத்தமிழர் பண்பாட்டில் கூத்தும் இசையும் இணைந்தே வளர்ந்துள்ளமை குறிப்பிடற்பாலதாகும், பழந்தமிழரின் வேலன் வெறியாட்டத்திலும், கந்தனின் காவடியாட்டத்திலும் இம்மரபு பரிமளிப்பதை கண்டுகொள்ளமுடிகின்றது. சங்க காலத்தில் பெருவழக்காக இருந்த வழிபாட்டுமுறை வேலன் வெறியாட்டமாகும். முருகனுக்காக எடுக்கப்பட்ட இவ்விழாவில், வேலன் கையில் வேலேந்தி ஆடும்போது குழல், யாழ், முழவு, முரசு முதலான இன்னிசைக்கருவிகள் இசைக்கப்பட்ட செய்தியை பட்டினப்பாலை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''வெறியாடு மகளிரொடு செறியத்தா அய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவயரு வியலாவணத்து''
(பட்டினப்பாலை, 155 – 158)

வேலன்வெறியாட்ட வழிவந்ததாககருதப்படும் காவடியாட்டத்தின்போதும் பல இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. இன்று தவில் நாதஸ்வரம், நையாண்டி மேளம், மிருதங்கம், ஒத்து, தாளம், பறை, உடுக்கு, முதலான இசைக்கருவிகள் காவடியாட்டத்தின்போது இசைக்கப்படும் இசைக்கருவிகளாக விளங்குகின்றன. செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலும், சுன்னாகம் ஐயனார் கோயிலிலும் நடைபெறும் காவடியாட்டத்தின்போது பறையும், உடுக்கும் இசைக்கப்படுவது குறிப்பிடற்பாலதாகும்.

## 8.0 காவடியாட்டத்தில் காவடிச்சிந்து

''காவடி'' எடுத்து கந்தக்கடவுளை ஆராதிப்பேனென்று பிரார்த்தனை செய்துகொண்டவர்கள் அப்பிரார்த்தனையை நிறைவேற்றும்காலங்களில் காவடியைத் தன்தோள்மீது சுமந்துகொண்டு இன்னிசைக்கருவிகள் இசைக்க பாடல்களைப் பாடிச் செல்வர். அல்லது பிறர்பாட இவர்

கள் ஆடுவர். இங்ஙனம் காவடியாட்டம் நடைபெறும்போது பாடப்படும் தமிழிசைப் பாடல்களே "காவடிச்சிந்து" எனப் பெயர் பெறுகின்றது. 'சிந்து' என்பது ஒருவகை இசைப்பாட்டாகும். அது பெரும்பாலும் மூன்று சீர்களைப்பெற்ற சிந்து அடிகளால் ஆனதால் அதைப் பழங்காலத்தில் சிந்து என வழங்கினர். (கலைக்களஞ்சியம் 111 1956: 611)

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் 'கந்தனை வந்தனைசெய்யும் காவடி வழி பாடு' மிகவும் செல்வாக்குப்பெற்றபோது, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுக மலையில் எழுந்தருளியிருக்கும் முருகவேளைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு சென்னிகுளம் என்னும் ஊரில் பிறந்த அண்ணாமலைரெட்டியார் (1865 — 1891) என்பவரால் முதன் முதலாக 'காவடிச் சிந்து'' பாடப்பெற்றது. இவர் இச்சிந்துப் பாடல்களை தன்னை நன்கு ஆதரித்த கூற்றுமலை ஜமிந்தாரான இருதாலய மருகப்ப தேவர் என்பவர் கழுகுமலை முருகன் மீது காவடி எடுத்தபோது அவருக்காகப் பாடினார் என்று கூறுகின்றனர். நீண்ட தூரம் காவடியெடுத்துச் செல்லும் அடியார்களை மகிழ்வடையச் செய்வதற்காகவே பாடினார் என்றும் கூறுவாரும் உளர்.

அண்ணாமலைரெட்டியார் பாடிய காவடிச் சிந்தில் 22 இசைப்பாடல்கள் உள்ளன. விநாயகர்துதி, முருகன் துதி, என்பவற்றை முதலிலே பெற்று பின்னர் கழுகுமலை நகர்வளம் கோயில் வளம், கழுகுமலைவளம், வாவிவளம் எனும் வர்ணனைகளையுடையதாய் விளங்கும் இவ்விசைப் பாடல்கள் முருகனைத் தலைவனாக வைத்து நற்றாய்கூற்று, தலைவிகூற்று, பாங்கிகூற்று எனும் கூற்று வகைகள் அமைந்த அகப்பொருட்பாடல்களையும் பெற்றதாய் விளங்குகின்றது. இந்த நூற் பாடல்கள் தமிழ்நாட்டு முருகன் கோயில்களில் மட்டுமன்றி இசையரங்கங்களிலும் பாடப்படுகின்றன. இராமநாதபுரத்தைச் சார்ந்த சிவஞானபுரத்து முருகக் கடவுள் மீது பாண்டித்துறைத் தேவர்பாடிய பன்னிரண்டு காவடிச்சிந்து பாடல்களும் காவடி ஆட்டத்தின்போது பாடத்தக்க சிறப்புடையனவாக விளங்குகின்றன. இந்நூலாசிரியர் விநாயக துதி, முருகக்கடவுள் துதி, சிவஞானபுரத்தின் வளம் என்பவற்றை எடுத்துக்கூறி தலைவி கூற்று தோழி கூற்று, நற்றாய் கூற்று, தலைவன் கூற்று என்பவற்றால் அகப்பொருள் மரபையும் குறிப்பிட்டு ஆறுமுகனின் அளப்பெரும கருணையை விளக்கியுள்ளார். பண்டைத் தமிழரின் வேலன்நெறியாட்டத்தை இன்றைய காவடியாட்டத்தோடு இணைத்து நோக்கமுயலும் ஆசிரியரின் சிந்தனை பாராட்டுதற்குரியதாக உள்ளது.

கவிஞர் சோ. பத்மநாதன் நல்லூர்க் கந்தன் மீது பாடிய 'நல்லூர் முருகன் காவடிச் சிந்து' குறிப்பிடத்தக்க சிறப்புடையதாக விளங்குகின்றது. பன்னிரண்டு பாடல்களோடு விளங்கும் இக்காவடிச் சிந்துப் பாடல்களினூடாக 'நல்லூரின் சைவத் தமிழ்ப் பண்பாட்டை' ஆசிரியர் பக்திச் சுவையுடன் வெளிப்படுத்தியுள்ளார். முதற் பாடல் வெயிலுகந்த விநாயகரின் துணையுடன் தொடங்குகின்றது. நல்லூரிலிருந்த தமிழ் மன்னர்கள், நல்லூர் முருகன் கோவில் விழாச் சிறப்பு, நல்லூரில் வாழ்ந்த நாவலர், யோகிகள் என்போர் பற்றியும் இக் காவடிச் சிந்துப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இந்நூலின் முதற்பதிப்பு 1984, கார்த்திகை மாதம் வெளிவந்துள்ளது. இந்நூலை வெளியிட்ட 'ரெவிதுளோப்' நிறுவனத்தாரே இப்பாடலின் ஒலி நாடாவையும் வெளியிட்டுள்ளனர். இவ்வொலிநாடவில் கண்ணன் இசையமைக்க பொன் சுந்தரலிங்கம் பாடியுள்ளார். காவடிக் கந்தனெனப்படும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் மீதும் காவடிச் சிந்தும் தாளக் காவடிப் பாட்டும், தாளக் கட்டுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் எழுந்துள்ளன. (சண்முகதாஸ், மனோன்மணி 1989:105 — 170)

வாய்மொழியாக வழங்கிவரும் மானவை முருகன் காவடிப்பாடல்களை கனகசபாபதி – நாகேஸ்வரன் தனது முதுகலைமாணி ஆய்வேட்டில் பதிவுசெய்துள்ளார். (நாகேஸ்வரன் 1987:282 — 289) காவடிச்சிந்து என்று இல்லாமல் கந்தனையும், காவடியையும் இணைத்து புதுவை இரத்தினதுரை போன்ற கவிஞர்கள் பல தமிழிசைப்பாடல்களைப் பாடியுள்ளமையும் இங்கு குறிப்பிடற்பாலதாகும்.

இவ்வாறாக தமிழகத்தில் மட்டுமன்றி, ஈழத்திலும் முருகபக்தியை வெளிப்படுத்துமுகமாக காவடிச்சிந்து பாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடற்பாலதாகும்.

ஆனால் காவடியின் தொடர்போ, அல்லது கந்தனுடைய தொடர்போ இல்லாமலும் காவடிச்சிந்துப் பாடல்கள் தோன்றியுள்ளன. உதாரணமாக இராமாயணக் காவடிச்சிந்து, பாரதக் காவடிச்சிந்து என்பவற்றை குறிப்பிடலாம். இத்தகைய நூல்கள் நிலைத்து நிற்கவில்லை என்பதும் நோக்கற்பாலதாகும். சுப்பிரமணிய பாரதியாரும் ஒரு காவடிச்சிந்து பாடியதாக கூறப்படினும், அந்நூல் இப்போது கிடைக்கவில்லையென கி. வா. ஜகந்நாதன் குறிப்பிட்டுள்ளார்.

### 9.0 காவடியின் தத்துவ விளக்கம்

காவடி எடுத்தல் கந்தன் வழிபாட்டில் ஒரு சிறப்பியல்பாகும். கந்தன் வழிபாட்டு முறையில் தனித்துவம் பெற்று விளங்கும் காவடியாட்டத்திற்கு ஒரு சமயப் பின்னணி மட்டுமன்றி தத்துவ விளக்கமும் உண்டு. காவடியிலும், காவடியாட்டக்காரரின் கைகளிலும் காணப்படும் வேலானது "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாக" விளங்கும் சைவசித்தாந்த கடவுட் கொள்கையினைச் சுட்டி நிற்கின்றது. கடவுளை எப்பொழுதும் பற்றிப் பிடிக்க வேண்டும் என்ற பேருண்மையினையும் கையில் காணப்படும் வேல் உணர்த்துகின்றது. ஆணவ முனைப்புடைய அவுணர்களை அழித்து விண்ணோர் சிறை மீட்ட திருக்கைவேலின் குறியீடாகவே காவடியாட்டக்காரரின் கை வேல் விளங்குகின்றது. கெட்டவர்களையழித்து நல்லவரைக் காப்பாற்றும் கடவுட் தத்துவத்தை காவடி வேல் காட்டி நிற்கின்றது. காவடியில் காணப்படும் மயிற் தோகையானது பிரணவமாகிய ஓங்காரம் குறிக்கும் உயர்தத்துவத்தைக் குறித்து நிற்கின்றது. காவடியில் கட்டப்பட்டிருக்கும் மயில் இறக்கைகள் "ஆணவம் அழியாது வலிகுன்றி – மலபரிபாகப்பட்டிருக்கும்" என்ற சைவசித்தாந்த ஆணவக் கொள்கையினையும் சுட்டி நிற்கின்றது. இது பற்றிய பின்வரும் விளக்கம் குறிப்பிடற்பாலதாகும்." காவடியில் மயில் இறக்கைகளைச் சேர்த்து ஆடுவர். சூரபன்மனின் ஆணவம் அடங்கி அவன் மயிலானதைக் காவடி மயிற்பீலி உணர்த்தும் என்பர் ஒரு சாரார். பக்தன் ஒருவன் ஓர் ஆண்டில் ஒரு முறை தன் ஆணவத்தை அடக்கி முருகன் முன்னிலையில் காவடியுடன் திருவடியில் வந்து தன்னை ஒப்புவிக்கிறான். அத்துடன் உடலில் வேலைப் பாய்ச்சி முள்ளுமிதி தடியில் நடந்து வருவர். அப்பனே! உன்னால் உண்டாக்கப்பட்டது இந்த உடல். அதனை உன்பெயரைச் சொல்லி வருத்தி உன்னை நினைந்து உருகி ஆடிப்பாடி வருகின்றேன் என நினைக்கிறான். இதுதான் செடிற் காவடியின் மெய்ப்பொருள்" (சண்முகசுந்தரம் 1981:6) இவ்வாறு சைவசித்தாந்தம் கூறும். ஆணவம், கன்மம் என்ற கோட்பாடுகளை விளக்கும் வழிபாட்டு முறையாக காவடியாட்டம் நிகழ்த்தப்படுகின்றது. காவடி எடுப்பவர் சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாவைச் சுட்டி நிற்கின்றார் எனலாம். இவ்வான்மாவானது ஆணவம், கன்மம் முதலான பாசங்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபட்டு ஆன்மீக விடுதலையினை அவாவி நிற்றலே காவடியாட்டத்தின் உட்பொருளாகும். கடினமான காவடி வழிபாட்டு முறைகளை நிகழ்த்துகின்றவர்களின் வாழ்க்கையினை நோக்குகின்றபோது ''அவரவர் செய்ததை அவரவரே அனுபவிப்பர்'' என்ற சைவசித்தாந்த கன்மக் கொள்கையின் ஓர் உண்மை தெளிவாகின்றது.

இவ்வாறாக காவடியிலும், காவடி வழிபாட்டுமுறைகளிலும் சைவக்கொள்கையும் சைவசித்தாந்த மெய்யியல் அடிப்படைகளும் நன்கு எதிரொலிப்பதனைக் கண்டுகொள்ள முடிகின்றது.

எத்துணை துன்பம் வந்தவிடத்தும் ''தன்னைத்தானே துன்புறுத்தி நோன்புகள் நோற்பதன் மூலமாக'' ஆன்மீக விடுதலையடையலாம் என்ற சைவக் கொள்கையை அகிலத்திற்கு எடுத்துக்காட்டுவதே கடினமான காவடி வழிபாட்டுமுறைகளின் மாபெருந்தத்துவமாகும். பண்டைய இந்துக்களின் தவவழிபாட்டு முறையின் கடினமான அம்சங்கள் தன்னைத்தானே வருத்தியெடுக்கின்ற காவடிக் கோட்பாட்டிலும் நன்கு பதிந்திருப்பதை அவதானிக்கமுடிகின்றது. இவ்வகையில் கடவுளுக்காக நிகழ்த்தப்படும் காவடியாட்டம் பண்டைய தவநெறிக் கொள்கையின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றது.

10.0 ஈழத்தில் காவடியாட்டம்

ஈழத்திலுள்ள கந்தன் ஆலயங்களில் மட்டுமன்றி சிவன்கோயில்கள், சக்தி ஆலயங்கள், பிள்ளையார் கோயில்கள், ஐயனார் கோயில்கள் என்பவற்றிலும் காவடியாட்டம் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடற்பாலதாகும். கந்தன் கடைவுமுதல் கதிர்காமம் வரையிலும் காவடியாட்டத்தின்மூலமாகக் கந்தனை வழிபடும் மரபு காணப்படுகின்றது. ஈழத்தில் நிகழ்த்தப்படும் காவடிகளை ''ஆட்டக்காவடி, பாட்டுக்காவடி, செடில்காவடி, முள்ளுமிதிதடிக்காவடி, பறவைக்காவடி, அந்தரக்காவடி, பாற்காவடி, பிள்ளைக்காவடி, பிரதட்டைக்காவடி'' எனச் சண்முக சுந்தரம் (1981: 3 - 4) வகைப்படுத்தியுள்ளார். ''அன்னதானக்கந்தன்'' என்று அன்புடன் அழைக்கப்படும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆண்டுதோறும் ஆவணிமாதத்தில் நிகழும் திருவிழா நாட்களில் தூக்குக்காவடி, துலாக்காவடி, முள்ளுமிதிதடிககாவடி, பறவைக்காவடி எனப் பலவகையான காவடிகளை எடுத்துக் கந்தனுக்குக் காணிக்கை செலுத்துவது பார்ப்பவரைப் பரவசமூட்டுவதாகவிருக்கும். செல்லச்சந்நிதி ஆலயத்தில் 1955 ஆம் ஆண்டுமுதலே தூக்குக்காவடி (அந்தரக்காவடி) எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது (சண்முகதாஸ், மனோன்மணி 1989.13-1) இவ்வாலயத்தில் நடைபெறும் தேர், 1989:31 தீர்த்தத்திருவிழாத் தினங்களில் வடமராட்சிப் பகுதியிலிருந்தும், தென்மராட்சிப் பகுதியிலிருந்தும் கூடுதலான காவடிகள் சந்நிதி ஆலயத்திற்கு வருவதைக் கண்டுகொள்ள முடிகின்றது. இவ்வகையில் சந்நிதிக் கந்தன் ''காவடிக்கந்தனாக''வும் விளங்கும்மாட்சி குறிப்பிடற்பாலதாகும். மௌன பூசை நிகழ்த்தப்படும் கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிமாத திருவிழா நாட்களில் வேலவனின் வீதி எங்கும் வேற்காவடி, செடிற்காவடி முள்ளுமிதிதடிக்காவடி, பிள்ளைக்காவடி, அன்னக்காவடி முதலான காவடிகளை எடுத்துக் கந்தனை வந்தனை செய்வதைக் காணமுடிகின்றது. அங்குள்ள உச்சிமலை மீதேறி கந்தனுக்குக் காவடி வழிபாடாற்றுவது உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சியாகவிருக்கும். பண்டைய நாட்களில் கொழும்பு சம்மாங்கோட்டு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திலிருந்து கதிர்காமத்திற்குக் காவடி எடுத்துச் செல்வது வழக்கமாக இருந்தது. பின்னர் அந்தக்காவடியைக் கதிர்காமம் கொண்டு செல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளவத்தைப்பிள்ளையார் கோவிலுக்குக் கொண்டு செல்வது வழக்கமாயிற்று. வருடந்தோறும் ஆடி மாதத்தில்பால், பன்னீர், சருக்கரை, மலர் முதலியவற்றைத் தாங்கிய காவடிகள் முன்னே செல்ல கதிர்வேலாயுத சுவாமி வெள்ளவத்தையிலுள்ள பிள்ளையார் கோவிலுக்குச் சென்று திரும்புவது வழக்கமாகும். இந்த வேல் விழாவைக் காவடிவிழா என்றும் குறிப்பிடலாம். மேற்படி இரு கோயில்களையும் தென்னிந்திய சைவத்தமிழர்கள் அமைத்தனர் என்பது இங்கு குறிப்பிடற்பாலதாகும். நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் ஆவணிமாதத்தில் நடைபெறும் தேர், தீர்த்தத் திருவிழாத் தினங்களில் வேலவனின் வீதிகளில் பால்காவடி, பறவைக் காவடி, சர்க்கரைக்காவடி என்பன எடுத்து கந்தனை வணங்கி வருகின்றனர். தேர்த் திருவிழவன்றும், தீர்த்தத்திருவிழாவன்றும் நல்லூர்கந்தன் ஆலயத்தை நோக்கிவரும் நல்லூரின் எல்லா வீதிகளிலும் காவடிகள் எடுத்துவருவது கண்கொள்ளாட்காட்சியாகவிருக்கும். மாவிட்டபுரக்கந்தசுவாமி ஆலயத் திருவிழா நாட்களிலும் காவடிகள் எடுத்து கந்தனை வழிபடும் மரபுண்டு. இத்தலத்தில் நிகழும் கார்த்திகைத் திருவிழாவன்றும் பலர் காவடி எடுத்துக் கந்தனை வழிபடுவர். இன்று இக்கோயிலுக்குச் சென்று வணங்கமுடியாத நிலை காணப்படுகின்றது.

திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் காணப்படும் கந்தன் கோயில்களிலும் காவடி வழிபாட்டு முறை காணப்படுகின்றது. திருக்கோணமலை, மட்டக்களப்பு என்ற இரு மாவட்டங்களுக்கும் எல்லைக் கோயிலாக விளங்கும் வெருகலம்பதி சித்திர வேலாயுதசுவாமி கோயிலில் ஆவணி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் நடைபெறும் திருவிழா நாட்களின் போது பக்தர்கள் காவடி எடுத்துக் கந்தனுக்குக் காணிக்கை செலுத்துவது போன்று அங்குள்ள மாடுகளும் காவடியெடுத்துக் காணிக்கை செலுத்துவது பார்ப்பவரைப் பரவசமூட்டுவதாகவிருக்கும். இது சிந்து நாட்டவர்களின் பாரம்பரியத்தையுணர்த்தும் நேர்க்கடனாகவுமிருந்து வருகின்றது. (வடிவேல் 1982:289) திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமியார் கோயில், திருக்கோணமலை முத்துக்குமார சுவாமி கோயில் ஆகிய கோயில்களில் நடைபெறும் உற்சவங்களின் போதும் காவடி எடுத்து கந்தனைத் துதி செய்து வருகின்றனர்.

திருப்படைக்கோயில்கள் என்று அழைக்கப்படும் மட்டக்களப்பு முருகன் கோயில்களில் நடைபெறும் காவடியாட்டம் பறைமேள இசையுடன் நிகழ்த்தப் படுவது குறிப்பிடற்பாலதாகும். மட்டக்களப்பு தில்லை மண்டூர் முருகன் கோயிலில் ஆவணி மாதப் பூரணையன்றும் தீர்த்தத் திருவிழாவன்றும் அதற்கு முன் நடைபெறும் திருவிழாக்களிலும் காவடி எடுத்துக் கந்தனைச் சிறப்பாக வழிபடும் மரபு தொன்று தொட்டு இருந்து வருகின்றது ''மண்டூர்த் திருவிழா காவடியாட்டத்திற்குப் பேர்போனது. உடம் பெங்கும் அலகுகளும் முதுகில் நான்கு சோடி முதல் எட்டு சோடிவரை வளைந்த ''முள்ளுச் செடில்'' என்கிற கொழுக்கிகளும் பாய்ச்சியபடி கூட்டம் கூட்டமாகப் பலர் மேளதாளங்களுடனும் காவடிச் சிந்து முதலான பக்திப் பாடல்களின் இசையுடனும் ஆடிச் செல்வது பார்ப்போரை மெய்மறந்து பக்தியிற் திளைக்கச் செய்யும் ''(கந்தையா 1983:69) சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோவில், உகந்தை மலை முருகன் கோயில். கல்லடி வேலாயுதசுவாமி கோயில் என்பவற்றிலும் காவடி வழிபாடு நிகழ்த்தப் படுகின்றது.

தென்மராட்சிப் பகுதியில் காணப்படும் காவடி விழா தனித்துவமானதாக தெரிகின்றது. இப்பகுதியிலுள்ள அம்மன் ஆலயங்களில் காவடி வழிபாடு ஒரு விழாவாகவே நடைபெறுகின்றது. மட்டுவில் பன்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனி மாதத் திங்கட்கிழமைகளிலும், மண்டுவில் சோலை அம்மன் ஆலயத்தில் வைகாசி விசாகத்திற்கு முதல்வரும் திங்கட்கிழமையன்றும், சாவகச்சேரி கச்சாய் அம்மன் ஆலயத்தில் வைகாசி விசாகத்திற்கு அடுத்து வரும் திங்கட்கிழமையன்றும் நடைபெறும் காவடி வழிபாட்டைக் "காவடிவிழா" என்றே குறிப்பிட முடிகின்றது. இப்பிரதேசத்தில் சக்தியை நோக்கிச் செய்யப்படும் பிரார்த்தனையாகக் காவடி வழிபாடு விளங்குவதனைக் காணமுடிகின்றது. இவ்விடங்கள் தவிர அராலி அம்மன் ஆலயம், சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம், இணுவில் சிவகாமி அம்மை ஆலயம், மருதடிப் பிள்ளையார் கோவில், மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் இணுவில் கந்தசுவாமி கோயில், காரைநகர் சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) என்ற கோயில்களில் நடைபெறும் திருவிழாத் தினங்களிலும் காவடி எடுத்து வழிபாடு செய்வது வழக்கமாக இருந்து வருகின்றமை குறிப்பிடற்பாலதாகும். கந்தக் கடவுளை வந்தனை செய்யும் நோக்கமாகத் தோன்றிய காவடியாட்டம் (இந்து) இந்துக் கடவுளர்கள் எல்லோரையும் பிரார்த்தனை பண்ணும் வழிபாட்டு முறையாக வளர்ச்சி கண்டுள்ளதை ஈழத்தில் அவதானிக்க முடிகின்றது. பக்தி வைராக்கியத்துடன் ஆரம்பித்த காவடியாட்டம் மனவைராக்கியம் உள்ளவர்களும் காவடியாடலாம் என்ற நிலையில் விளங்குகின்றது. ஆறுமுகனின் அருள் வேண்டி நிகழ்ந்த காவடியாட்டம் அவைக் காற்றுக் கலையாக அரங்குகளில் ஆடற்படுவதும் குறிப்பிடற்பாலதாகும். கந்தக் கடவுளின் வழிபாட்டு முறையாகத் தோன்றிய காவடியாட்டத்தைக் கிராமிய நடனம் என்றும் பாமரக்கூத்து என்றும் கூறும் கலை மரபு காணப்படுகின்றது. பொலன்னறுவையிலுள்ள முருகன் கோயில் போன்ற இடங்களில் நடைபெறும் காவடியாட்டத்தை ஓர் களியாட்டமாகவே நிகழ்த்துகின்றனர்.

### 11.0 வீரசைவரும் காவடியும்

ஈழத்தில் இராவணேஸ்வரன் காலம் தொடக்கமாக வீரசைவமரபு இருந்துவருகின்றது. அகஸ்திய முனிவரின் வழிபாட்டிற்காக கயிலையிலுள்ள சிவகிரி, சக்திகிரி என்ற இருமலைகளை இடும்பன் தூக்கி வந்ததாகக் கூறப்படுகின்ற தெய்வீகக் கதையே காவடியாட்டத்தின் தோற்றத்திற்கு மூலம் என நம்பப்படுவது போன்று, தன் தாயார் வணங்கும் பொருட்டு கயிலாய மலையைத் தூக்க முயன்ற வீரசைவனாகிய இராவணனது தெய்வீகக்கதையின் காரணமாகவும் ஈழத்தில் காவடிதூக்கி வழிபாடு செய்யும் மரபு தோன்றியிருக்காலம். இராவணனது வீரசைவ மரபில் வந்தவர்களே ஈழத்தில் காவடிக்கலையை இன்றும் போற்றி நன்கு வளர்த்தெடுத்து வருகின்றவர்களாக விளங்குகின்றனர். இவ் வீரசைவமரபினர்களே இன்றும் கலையம் சத்தோடு காவடியைக் கட்டிக்கொடுப்பவர்களாகவும், காவடியாட்டக்காரர்களுக்கு காவடியாட்டத்தைப் பழக்குகின்றவர்களாவும், செடிற்காவடி எடுப்போரின் முதுகில் ஏற்றப்பட்டிருக்கும் முள்ளில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை ஏற்றவாறு பிடிப்பவர்களாகவும், காவடியாடுகின்ற போது பக்தி புணர்வு ஏற்படக்கூடிய விதத்தில் இசைப் பாடல்களைப் பாடும் இசை வேளாளராகவும் விளங்குகின்றன ரெனலாம். பனிப்புலம், பண்ணாகம், அளவெட்டி, கீரிமலை உரும்பிராய், திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் வாழும் வீரசைவ மரபினர் ஈழத்துக் கலை வளர்ச்சிக்கும் காவடிக் கலையின் சிறப்புக்கும் ஆற்றி வரும் தொண்டு குறிப்பிடற்பாலதாகும். தெய்வீகக் கலையை வளர்க்க விரும்பும் இவர்களையே எம்மவர் இன்று பண்டாரம் என்று பகிடி பண்ணிவருகின்றனர். இந் நிலை மாறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 12.0 தமிழ்நாட்டில் காவடியாட்டம்

கந்தக் கடவுளை வழிபடும் நிகழ்ச்சியாக தமிழ் நாட்டில் காவடியாட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடற்பாலதாகும். தமிழ் நாட்டிலுள்ள முருகன் ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் '' காவடி விழா '' எனக் கூறத்தக்க சிறப்புடையனவாக விளங்குகின்றன. பங்குனி உத்தரப் பெருவிழாவன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் அறுநூற்றுத்தொண்நூற்றேழு படிகள் ஏறி தீர்த்தக் காவடிகளும், ஏனைய காவடிகளும் கொண்டு பழனித்திருத்தல முருகனுக்கு காவடி மூலம் காணிக்கை செலுத்துவது அற்புதமான வழிபாடாக இருக்கும். தென்னைமட்டையில் இளநீர்க் குலைகளை கட்டித்தூக்கிக்கொண்டு எடுக்கும் இளநீர்க் காவடிகளை பழனித்திருத்தலத்தில் பங்குனி உத்தரத்திருநாளில் பார்க்கமுடியும், மேலும் திருப்பரங்குன்றம், திருத்தணிகை, திருச்செந்தூர் முதலிய முருகன் ஆலயங்களிலும் காவடி வழிபாட்டுமுறை சிறப்பாக நிகழ்த்தப்படுகின்றது.

### 13.0 மலேசியாவில் காவடியாட்டம்

முருக வணக்கம் சிறப்புற்று விளங்கும் மலேசியாவில் காவடியாட்டம் சிறப்புடன் விளங்குகின்றது. மலேசியாவில் உள்ள பத்துமலை முருகன் கோயில், சிகாமட் சிங்காரவடிவேலர் ஆலயம், கங்கைப் பட்டாணி ஸ்ரீசுப்பிரமணியர் ஆலயம், ஜோகூர்பாரு ஸ்ரீதண்டாயுதபாணி ஆலயம், காஜாங்சுப்பிரமணியசுவாமி கோவில், கெர்லிங்சுப்பிரமணியர் ஆலயம், பினாங்கு தண்ணீர்மலை ஸ்ரீபாலதண்டாயுதபாணி ஆலயம், ஈப்போ கல்லுமலை முருகன் ஆலயம், பாகங்கைச் சேர்ந்த ரவூப் முருகன் ஆலயம் போன்ற முருகன் ஆலயங்களில் தைப்பூச தினத்தன்று காவடியெடுத்து கந்தக்கடவுளைவழிபட்டு வருகின்றனர். பினாங்கு தண்ணீர்மலை ஸ்ரீபாலதண்டாயுதபாணி ஆலயத்தில் நடைபெறும் தைப்பூச விழாவில் மலாய்க்காரர்களும், சீனர்களும்கூட காவடியெடுத்துக் கந்தனை வழிபட்டு வருகின்றனர். மலேசியாவில் உள்ள பத்துமலை முருகன் கோவில் தைப்பூச விழாவிற்கும், காவடி வழிபாட்டிற்கும் பெயர் பெற்று விளங்குகின்றது. தமிழ் நாட்டின் பழனிமலை எப்படியோ அதேபோல மலேசியாவில் பத்துமலை விளங்குகின்றது. பல லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் தைப்பூச விழாவன்று பத்துமலையில் உள்ள இருநூற்றி எழுபத்திரண்டு படிகளை ஏறிச் சென்று மலை உச்சியில் உள்ள குகையில் எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானுக்கு பக்தர்கள் காவடி எடுத்துக் காணிக்கை செலுத்துகின்றனர். பாற்காவடி, பழக்காவடி, சர்க்கரைக்காவடி, இளநீர்க் காவடி, பஞ்சாமிர்தக் காவடி, எனப் பல காவடிகளை எடுத்துப் பக்தர்கள் கந்தன் புகழ்பாடி தத்தம் நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர். முருகனிடம் தான் கொண்டுள்ள பக்தியை எடுத்துக் காட்டுவதற்காக சிவகிரி, சக்திகிரி, என்ற இரண்டு குன்றுகளைத் தன் தோளில் ஒரு தண்டத்தின் உதவியால் இடும்பன் தூக்கியதே தைப்பூசத்தின் வரலாறு என்று இக் கோயிலில் கருதப்படுவதன் காரணமாகவே தைப்பூசத்தன்று இடும்பன் தூக்கிய பிரமதண்டம் அல்லது காவடியை மக்கள் தூக்கிச் சென்று முருகனை வழிபட்டுவருகின்றனர்.

(ஞானபூமி 1995:34-35)

### 14.0 சிங்கப்பூரில் காவடியாட்டம்

சிங்கப்பூரில் உள்ள தண்டாயுதபாணி ஆலயத்தில் தைப்பூசத்திருநாளும், கார்த்திகைத் திருநாளும், பங்குனி உத்தரமும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. தைப்பூசத்தினத்தன்று சுமார் ஆயி

ரக்கணக்கான பக்தர்கள் காவடிகள் எடுத்து கந்தனை வந்தனை செய்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

15.0 சுமத்திராவில் காவடியாட்டம்.

சுமத்திராவில் உள்ள மேடானில் இந்து சமய வழிபாட்டிற்குரிய பல கோயில்கள் காணப்படுகின்றன. அவற்றுள் தண்டாயுதபாணி கோயிலும் ஒன்றாகும். இக் கோயிலில் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் தைப்பூசத்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. அவ்விழாக்காலங்களில் நூற்றுக்கணக்கான காவடிகள் முருகனுக்குச் செலுத்தப்படுகின்றன. அவற்றுள் பால்காவடியும் சர்க்கரைக் காவடியும் அதிகமாகக் காணப்படுகின்றன.

16.0 தென்னாபிரிக்காவில் காவடியாட்டம்

தென்னாபிரிக்காவில் உள்ள கிளோர்ஷட் என்ற இடத்தில் வசிக்கும் தமிழர்கள் 'சிவசுப்பிரமணியம்' என்ற பெயரில் கந்தனுக்கு ஓர் ஆலயம் அமைத்துள்ளனர். அங்கு தைப்பூசத்தினத்தன்றும் பங்குனி உத்தரத்தன்றும் பக்தர்கள் இன்று காவடி எடுத்து கந்தனை வழிபட்டு வருகின்றனர்.

17.0 முடிவுரை

பண்டைத்தமிழர்கள் முருக வழிபாட்டில் சிறந்து விளங்கினார்கள். முருகனைக் கந்தன் என்ற பெயரில் வழிபடும் வழக்கம் தேவாரகாலம் முதலாக இருந்து வருகின்றது. கந்தனை வந்தனை செய்யும் வழிபாட்டு முறைகளுள் காவடியாட்டம் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. பண்டைத் தமிழரின் வேலன் வெறியாட்டத்துடன் கந்தனின் காவடியாட்டத்தை இணைத்து நோக்க முடிகின்றது. கந்தனுக்குக் காணிக்கைப் பொருட்கள் கொண்டு சென்ற காவு தடியே 'காவடி' எனப் பெயர் பெற்றதென்ற அறிஞர் கருத்து ஏற்புடைத்தாகவுள்ளது. இடும்பன் தூக்கிய சிவகிரி, சக்திகிரி என்ற இரண்டு மலைகள் பற்றிக் கூறப்படும் தெய்வீகக் கதையடியாகவே "கந்தன் வழிபாட்டில் காவடியாட்டம்" இன்றும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. காவடி வழிபாட்டு முறையானது தனி மனித வழிபாட்டு முறையாக மட்டுமன்றி, குடும்ப வழிபாட்டு முறையாகவும், கூட்டு வழிபாட்டு முறையாகவும் விளங்குகின்றது. பக்தர்கள் தத்தம் நேர்த்திக்கடன்களுக்கு ஏற்ற விதத்தில் வெவ்வேறு பெயர்களில் காவடிகள் எடுத்துக் கந்தனை வந்தனை செய்து வருகின்றனர். காவடியில் காணிக்கையாகக் கொண்டு செல்லப்படும் பால், தயிர், தேன், சர்க்கரை, பன்னீர், இளநீர் முதலான பொருட்கள் ஆண்டவனின் அபிஷேகத்திற்குப் பயன் படுத்தப் படுகின்றன. தூக்குக்காவடி, பறவைக் காவடி போன்ற காவடியாட்டங்கள் கடினமான கடவுள் வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றன. அளவற்ற அன்பு, நன்றியுணர்வு போன்றனவற்றை வெளிப்படுத்தும் வழிபாட்டு முறையாகவே காவடியாட்டம் நிகழ்த்தப்படுகின்றது. ஆன்மீக அனுபவம், கலை அனுபவம் ஆகிய இரு அனுபவங்களும் ஒரே அனுபவத்தினையே உணர்த்திநிற்கின்றன என்பதனைக் காவடி வழிபாட்டு முறைகள் நன்கு விளக்கி நிற்கின்றன. 'அக்குபஞ்சர்' என்ற சீன மருத்துவ சிகிச்சை முறையினைக் கடினமான காவடிகள் நினைவூட்டி நிற்கின்றன. காவடியை எத்துணை கலையுணர்வோடு அலங்கரித்திருப்பினும் காவடியில் காணப்படும் வேலும், மயிற்பீலிகையும் கந்தனை நினைவுபடுத்துவதாகவே விளங்குகின்றன. தன்னைத் தானே வருத்தும் சைவக்கொள்கையின் வெளிப்பாடாக காவடி வழிபாட்டு முறை காணப்படுகின்றது. காவடியின் அமைப்பிலும், காவடியாட்டக்காரரிலும் சைவசித்தாந்த அடிப்படைகள் எதிரொளிப்பனவாகவுள்ளன. கடவுளுக்குக் காவடி எடுப்பவர்கள் ஆசார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலராகவும் விரதிகளாகவும் விளங்குவர். தெய்வீகக் கலையாகத் தோன்றிய காவடி யாட்டத்தை இன்று கிராமியக் கலைக ளுள் ஒன்று எனக் கூறும் நிலை காணப் படுகின்றது. இன்று காவடியாட்டமானது அவைக் காற்றுக் கலையாக அரங்குகளில் ஆடப்பட்டு வருவதும் குறிப்பிடற் பால தாகும். சில இடங்களில் அர்த்தமற்ற களி யாட்டமாகவும் காவடியாட்டம் நிகழ்த் தப்படுகின்றது. காவடியாட்டத்தை உணர்வு பூர்வமாக ஆடுவதற்குப் பல இசைக் கருவிகளை இசைப்பது மரபாகும். காவடியாத்திரையினையும் காவடியாட் டத்தையும் மேன்மேலும் உற்சாக மூட்டிச் சிறப்பிப்பதற்கு தமிழகத்தி லும், ஈழத்திலும் தோன்றியுள்ள காவடிச் சிந்துப் பாடல்களும், பிற காவடிப்பாடல் களும் பெரிதும் உதவுகின்றன. கந்தக் கடவுளை வழிபாடு செய்யும் நோக்கில் தோன்றிய காவடியாட்டமானது ஈழம், தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், சுமத் திரா, தென்னாபிரிக்கா, முதலிய இடங்க ளில் இன்றும் சிறப்பாக நடை பெறுகின் றது. வீரர்களின் வழிபாட்டு முறையாகவும் ஈழத்தில் காவடியாட்டம் விளங்குகின்றது. ஈழத்தில் காவடிக் கலையினை நன்கு வளர்த் தெடுத்துவரும் பெருமைக்குரியவர் களாக வீரசைவர் விளங்குகின்றனர். கந் தனுக்குக் காணிக்கை செலுத்துகின்ற வழி பாட்டு முறையாகக் காவடியாட்டம் தோற் றம் பெற்றுள்ள போதிலும் ''ஈழத்து இந்து ஆலயங்களில் காவடி விழா'' எனக் கூறத்தக்க வகையில் கந்தன் ஆலயங்களில் மட்டுமன்றி ஏனைய இந்து ஆலயங்களிலும் காவடியாட்டம் நடைபெறுவது ஈழத்துக்கு ரிய குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். இவ்வாறாக கந்தன் வழிபாட்டில் முதன்மை பெற்று விளங்கும் காவடியாட்டமானது ஏனைய இந்து ஆலயங்களிலும் சிறப்பாக நடைபெறுவது இந்த ஆய்வின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

---


உசாத்துணை நூல்கள்

அண்ணாமலைசெட்டியார்,

சுப்பிரமணியசுவாமி காவடிச்சிந்து, கோலாலம்பூர், 1924

கந்தையா, வி. சி.,
மட்டக்களப்புச் சைவக்கோயில்கள், இந்து சமயத்திணைக்களம், கொழும்பு. 1983

கமலையா, க. சி. (பதிப்பு)
பாண்டித்துரைத் தேவர்பாடிய காவடிச்சிந்து, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1984.

கலைக்களஞ்சியம், தொகுதி III, தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956

சண்முகதாஸ், அ., மனோன்மணி, ச, ஆற்றங்கரையான்., வராவெல்லை வெளியீடு, பருத்தித்துறை 1989

சண்முகசுந்தரம், த., மாவைமுருகன் காவடிப்பாட்டு அருள் வெளியீட்டகம், தெல்லிப் பழை, 1981




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானபூமி, ஜனவரி 1995.

நடராஜன், எஸ்., முருகதரிசனம், பிரதிபா பிரசுரம், சென்னை, 1982.

நாகசண்முகம்., பழனிமலைக்காவடி, வானதிபதிப்பகம், சென்னை, 1980

நாகேஸ்வரன், க., நல்லூர்க்கந்தசுவாமி கோயில்பற்றியும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பற்றியும் எழுந்த பிரபந்தங்கள், முதுகலை மாணிப்பட்டத்திற்காக யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, 1987

நாச்சியார், செ., இலங்கையில் கந்தன் கோயில்களிற் பேணப்படும் ஆகமக்கிரியை மரபுகள், முதுகலைமாணிப்பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, 1987

பத்மநாதன், சோ., நல்லூர்முருகன் காவடிச்சிந்து, ரெலிகுளோப், யாழ்ப்பாணம், 1984

பழனித்தலவரலாறும்
திருக்கோயில் வழிபாடும், பழனிதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் வெளியீடு, 1974

பெருமாள், ஏ. என்., தமிழக நாட்டுப்புறக்கலைகள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் சென்னை, 1980

பொன்னுத்துரை, ஏ. ரி., தாளக்காவடி, குரும்பசிட்டி சன்மார்க்கசபை வெளியீடு, 1988

வடிவேல், இ., திருக்கோமலை மாவட்டத் திருத்தலங்கள், இந்து சமயத்திணைக்களம், கொழும்பு, 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ குமாராய நம

கவர்ச்சிமிக்க

அச்சுவேலைகளை

நியாயமான கட்டணத்தில்

திருப்திகரமாக செய்வதற்கு

எப்பொழுதும்

நாடுங்கள்

# சாந்தி அச்சகம்

நாச்சிமார் கோவிலடி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் அறமும் ஆறுமுகம்

திருமதி நாச்சியார் செல்வநாயகம்,
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மக்களைப் பிற விலங்கினின்று வேறாகப் பிரித்துச் சிறந்தவனாக்குவது அவனது அறிவே எனலாம். எனவே அறிவு, உலகில் மனிதன் மனிதனாய் வாழ இன்றியமையாதது. அப்படியாயின் அந்த அறிவு யாது? அதை எப்படிப் பெறலாம்? சான்றோர், மனிதனை வாழவைப்பதுதான் அறிவாகும் என்பர். வாழ்க்கை, போராட்டம் நிறைந்தது. போராட்டம் இல்லை என்றால் வாழ்வில்லை. போராட்டம் நிறைந்த வாழ்க்கையை உதறித்தள்ளாமல் நிதானத்துடன் வாழ வைக்கும் உயிர்ப்பே அறிவாகும். மனிதனை மனிதனாக வாழ வைக்கும் உயிர்ப்பே அறிவாகும். மனிதனை மனிதனாக வாழவைக்கும் அறிவு இருந்தால் அனைத்துச் செல்வாக்கும் ஒருவனுக்குக் கிடைக்கும் எனலாம். இதனை வள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுவர்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்"

அவ்வறிவு கல்வியினால் வளர்க்கப் பெறுகின்றது. கல்வி என்பது வெறும் புத்தகப் படிப்பன்று. கல்வி மனிதப் பண்பைப் பயிற்றுவிக்கும், நல்ல சிந்தனையை ஏற்படுத்தும் ஒரு சாதனமெனலாம். வெறும் நூல் அறிவால் மட்டும் மானிடம் உயிர்ப்படைய முடியாது. இன்று வீட்டிலும், நாட்டிலும், உலகிலும் உண்டாகும் அல்லல்கள் அனைத்துக்கும் மானிடப் பண்புகளின் வளர்ச்சியின்மையே காரணம் எனலாம். நூலறிவிற்கு அப்பால் மனிதன் வளர்ச்சியடையும் போதே மானிடம் வளம் பெறுகின்றது. முடிவாகச் சொன்னால் உலகம் அன்பில் வாழவேண்டும் என்று எண்ணி அதற்கு வேண்டும் ஆக்கப் பணிகளை ஆற்றுவதே அறிவுடைமையாகும்.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றியா அறிவு"

நிலை வேண்டினார் தாயுமானவர். வள்ளுவரும்,

"அறிவனால் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்
தந்நோய் போல் போற்றாக் கடை"

என்றும்

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலொர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்றும் கூறுவது அறிவு என்பது தன்னைப் போல் மற்றவரை ஒத்து நோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலே என்பது தெளிவாகும். "சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை, ஆந்துணையும் காப்பர் அறிவுடையோர்" என்றார் ஔவையார். அறிவுடைமை தீயவரையும் நன்னெறிப்படுத்தும் தன்மையது.

பாடசாலை, பல்கலைக்கழகம் முதலானவற்றில் கற்று, பெரும் பட்டங்கள் பெற்றவர்கள் பலர் இன்று மனிதப் பண்புகள் அற்றவர்களாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் அறிவின் அடித்தளம் பற்றிய கருத்துத் தெளிவு அவர்களுக்கு இல்லாமையே எனலாம். எனவே பிறிதின்நோய் தன்நோய் போல் போற்றிக் காப்பாற்றும் உணர்வுக்கு அடிப்படையாக அமைவது அறிவு. இந்த அறிவு வழியில் பெருகும் பண்பே அறமாகும். எனவே அறமென்பது அறிவின் வழிவந்தது என்பது தெளிவாகும். அறிவு நெறியில் பயில்வோரின் பண்பாக வளர்ச்சியடைவதே அறமாகும். எனவே அறிவு என்பது உணர்வாகும். அறம் என்பது செயலாகும். அறியாமையை நீக்கி அறிவை விருத்தி செய்து அதன் பண்பாகிய கருமத்தைப் பேணா வாழ்க்கை வாழ்க்கையல்ல என்பதனைத் திருமூலர் பின்வருமாறு தெளிவுபடுத்துவர்.

"அழுக்கினை ஒட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென் செய்வீர் வெம்மை பரந்து
விழிக்கவன் றென்செய்வீர் ஏழை நெஞ்சீரே"

அறிவாளி ஒருவன் தன்னை அறிகின்றான். தன்நோக்கத்தை அறிகின்றான். அந்தநிலையில் பரம்பொருளின் இருப்பை அறிகிறான். பரம்பொருள் பூரணப் பொருள் என்பதையும், அதனை அதன் அருளால் அடைந்து அனுபவிக்க முடியும் என்பதையும் அறிகின்றான். பூரணத்திலிருந்து பூரண அருள் வடிவங்கள் தோன்றி தருமத்தைப் பேணுவதையும் அறிகின்றான். மேலும் அறவாழ்க்கையால் அருளை அடைந்து அனுபவிக்கலாம் என்பதையும் அறிகின்றான். பறவைகளும், மிருகங்களும் மரம் செடி கொடிகளும் தனது இயற்கை நீதியில் நிலைப்பது போன்று மனிதனும் இயற்கையான தர்மவாழ்க்கையை வாழ்வானேயானால் அவன் பேரின்பப் பெருவாழ்வைப் பெறலாம். வாழ்வின் வழிமுறை அல்லது தர்ம வழியின் கோட்பாடுகள் ஒருவருக்கு ஒருவர் மாறுபடுகின்றன. ஆண், பெண், ஆசிரியர், மாணவர், முதலாளி, தொழிலாளி, குழந்தை, வாலிபர், தகப்பன், தாய், பிள்ளை பிறர்பால் சார்ந்திருப்பவர், தானேஇயல்பாக வாழ்பவர் எனும் பல விதமான மாறுபட்ட நிலைகளுக்கு ஏற்ப தர்மத்தின் கோட்பாடுகள் அமைகின்றன. ஆயின் தர்மத்தின் அடிப்படைத் தத்துவங்களாக உண்மை அன்பு, சகிப்புத்தன்மை, அஹிம்சை என்பவை உள்ளன. தர்மத்தின் எல்லாவிதமான அம்சங்களும் இந்த நான்கு விதமான கொள்கைகளின் விரிவுகளேயாகும். இந்நான்கு கொள்கைகளின் அடிப்படைப் பொருள் அன்பு ஒன்றே. ஜீவசக்தியை வளர்க்கும் அமிர்தம் அன்பே. ஒரு பாண்டத்தில் போதியளவு நீர் இருக்குமாயின் அதனுள் சந்திரனது பிம்பத்தை காணலாம். இதேபோன்று இதயம் என்னும் பாத்திரத்தில் அன்பு எனும் நீர் போதிய அளவு இருக்குமாயின் அத்தகைய இதயத்தில் இறைவன் சாந்நித்தியப்படுகின்றான்.

•கருணை கூர் முகங்களாறு. உயிர்களுக்கு அருளை வாரி வழங்கும் முகங்கள் ஆறைக் கொண்டு பெற்ற வடிவே ஆறுமுக வடிவம். மனிதனிடமுள்ள காம, கோப, குரோத, லோப, மத, மாற்சரியங்களை அகற்றி அவனிடம் தர்மத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கும் வகையில் தோன்றியதே ஆறு முகம்.

''மனத்துக்கண் மாசிலனாதல்
அனைத்து அறன்
ஆகுல நீரபிற''

என்பது வள்ளுவர் வாக்கு. மனத்திலுள்ள மேற்கூறிய அறுபகைகளையும் களைவதற்கு எமக்கு உதவும் அருள்வடிவே, ஆறுமுக வடிவு எனலாம். தூய்மை, அறிவும், அழகும், எழிலும், இன்பமும், வீரமும் கொண்டு விளங்குகின்றது. இதற்கு ஆறுமுக வழிபாடு அவசியமானதாகும். அருட்கண்ணால் ஞானிகள் கண்டு வழிபட்ட கோலங்களே இறைவனின் திருவருட் கோலங்கள். அத்திருவுருவங்களை நாம் முதலில் புறக்கண்ணால் கண்டு, வழிபட்டு, பின், அதனை அகக் கண்ணிற் தரிசிக்கும் பேறுபெறும் போதே வாழ்க்கை பூரணத்துவம் பெறுகிறது. ஆறுமுக வடிவம் நம்மை அஞ்சேல் என்று அபயமளிக்கின்றது. எனவேதான் 'அஞ்சு முகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்' என அனுபூதியாளர் கூறினர். அநீதிகள் நிறைந்த இக்காலகட்டத்தில் சத்தியப் பொருளாம் அறிவும், அறனும் தழைக்க ஆறுமுகனைப் போற்றி வணங்குவதே சாலவும் ஏற்புடையதாகும்.

## நல்லூர் வீதியில்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.

அனுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

சரணம்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனாலென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்துகும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே. (எந்நாளும்)

சத்தியம் பொறாமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பக்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச் சயமே (எந்நாளும்)

— யோகர்சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை குமரன் மலர்

சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சகல விதமான சேட்டிங், சூட்டிங் வகைகளுக்கு

இன்றே நாடுங்கள்.

# துணிப் பூங்கா

158, சிறப்பு அங்காடி (வெளிப்புறம்)

யாழ்ப்பாணம்.

---

நல்லை குமரன் மலர்

சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சகல விதமான சாய்ப்புச் சாமான்களுக்கும்

இன்றே விரையுங்கள்.

# கண்ணன் அழகு மாடம்

72, சிறப்பு அங்காடி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நடாத்தப்பட்ட

# சமய அறிவுப் போட்டிகளின் முடிவுகள் - 1994

## I. சமய அறிவுப் போட்டி

1. கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் — செல்வி ஏரம்பமூர்த்தி கார்த்திகா,
யா / வேம்படி மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம் — செல்வி ஜெயரட்ணம் ஜெயசாந்தி,
யா / இந்துமகளிர் கல்லூரி.

மூன்றாம் இடம் — செல்வி சிவபாதசுந்தரம் நித்தியகலா,
யா / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

தகைமை பெற்றோர் ஐவர் (05)

2. மத்திய பிரிவு

முதலாம் இடம் — செல்வன் மகேந்திரராஜா பிரவீணன்
யா / யூனியன் கல்லூரி.

இரண்டாம் இடம் — செல்வி தனபாலசிங்கம் கௌரி,
யா / யூனியன் கல்லூரி.

மூன்றாம் இடம் — செல்வன் திருச்சிற்றம்பலம் கஜேந்திரன்
யாழ். இந்துக்கல்லூரி.

தகைமைபெற்றோர் ஏழுவர் (07)

3. மேற்பிரிவு

முதலாம் இடம் — செல்வி சண்முகலிங்கம் கிருஷ்ணவதனா,
யா / கொக்குவில் இந்துக்கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் இடம் — செல்வன் கிருஷ்ணபிள்ளை குருபரன்,
யாழ். இந்துக்கல்லூரி

மூன்றாம் இடம் — செல்வி அருள்லிங்கம் சுஜீவா,
யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

தகைமை பெற்றோர் நால்வர் (04)

4. அதி மேற்பிரிவு

முதல் மூன்று இடங்களுக்கும் எவரும் தகுதி பெறவில்லை.
தகைமை பெற்றோர் ஒருவர் (01)

## 2. பண்ணிசைப் போட்டி

1. கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் — செல்வி அந்தோனிப்பிள்ளை ஜீவந்தினி.
யா / மகாஜனாக் கல்லூரி

இரண்டாம் இடம் — செல்வி ரஞ்சன் தாரணி,
யா / வேம்படி மகளிர் கல்லூரி

மூன்றாம் இடம் — செல்வன் ரஞ்சன் கஜானனன்,
யாழ். இந்துக் கல்லூரி

தகைமை பெற்றோர் எழுவர் (07)

2. மத்தியபிரிவு

முதலாம் இடம் — செல்வி ஸ்ரீ பாலச்சந்திரன் தாட்சாயினி,
யா / இந்து மகளிர் கல்லூரி

இரண்டாம் இடம் — செல்வி மகாலிங்கசிவம் லதாங்கி,
யா / மகாஜனாக் கல்லூரி

மூன்றாம் இடம் — (இருவர்) அ) செல்வன் ஸ்ரீரங்கநாதன் தர்ஷணன்,
யாழ். இந்துக் கல்லூரி

ஆ) செல்வி சிவபாதம் கவிதா,
யா / ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி

தகைமை பெற்றோர் இருவர் (02)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மேற்பிரிவு

முதலாம் இடம் — செல்வி சிவபாலன் சிவரதி
நாவலடி, பன்னாலை, தெல்லிப்பழை

இரண்டாம் இடம் — செல்வி விக்ரர் வடிவாம்பிகை,
யா / இராமநாதன் கல்லூரி

மூன்றாம் இடம் — செல்வி மார்க்கண்டு சூரியகுமாரி,
புளியங்கண்டு பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை

தகைமை பெற்றோர் ஒருவர் (01)

## 3. பேச்சுப் போட்டி

1. மேற்பிரிவு

முதலாம் இடம் — செல்வன் முருகையா சதீஷ் பாலமுருகன்,
யா / மகாஜனக் கல்லூரி

இரண்டாம் இடம் — செல்வன் ஜெயராசா ஜெயகாந்தன்,
யாழ் / இந்துக் கல்லூரி

மூன்றாம் இடம் — செல்வன் முருகையா சிவபாலன்,
யாழ் / இந்துக் கல்லூரி

தகைமை பெற்றோர் ஒருவர் (01)

2. கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் — செல்வி ஏரம்பமூர்த்தி சிவசாமி,
யா / இணுவில் இந்துக்கல்லூரி

இரண்டாம் இடம் — செல்வி இராமச்சந்திரா திருஷா,
யா / மகாஜனக் கல்லூரி

மூன்றாம் இடம் — செல்வன் கணேசன் சேந்தன்,
யா / பரியோவான் கல்லூரி

தகைமை பெற்றோர் எண்மர் (08)

## 4. கட்டுரைப் போட்டி

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் — செல்வி தனபாலசிங்கம் கௌரி,
யா / யூனியன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் இடம் — செல்வன் குணரெட்ணம் செந்தூரன்,
யாழ். இந்துக் கல்லூரி

மூன்றாம் இடம் — செல்வன் மகேந்திரராஜா பிரவீணன்,
யா / யூனியன் கல்லூரி

தகைமை பெற்றோர் இருவர் (02)

2. மேற்பிரிவு

முதலாம் இடம் — செல்வி தங்கவேல் தவனேஸ்வரி,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பளை.

இரண்டாம் இடம் — செல்வி சுப்பையா சாயரூபி,
யா / இராமநாதன் கல்லூரி.

மூன்றாம் இடம் — செல்வி சிவபாலசிங்கம் மாதினி,
யா / கொக்குவில் இந்துக்கல்லூரி.

தகைமை பெற்றோர் ஒருவர் (01)

## 5. கவிதைப் போட்டி

1. கீழ்ப் பிரிவு

அதிவிசேட தரம் — செல்வன் மகேந்திரராஜா பிரவீணன்,
யா / யூனியன் கல்லூரி.

(1993 ஆம் ஆண்டிலும் 1994 ஆம் ஆண்டிலும் இதே பிரிவில் முதலாம் இடத்தினைப் பெற்றிருப்பதனால் அதி விசேட தகைமை பெற்றமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது)

முதலாம் இடம் — செல்வன் கிருஷ்ணபிள்ளை குருபரன்,
யாழ். இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் — செல்வன் கணேசன் சேந்தன்,
யா / பரியோவான் கல்லூரி.

மூன்றாம் இடம் — செல்வன் தர்மகுலசிங்கம் இராஜேந்திரா,
யாழ். இந்துக் கல்லூரி.

2. மேற்பிரிவு

முதலாம் இடம் — செல்வன் தனபாலசிங்கம் ஜெயசீலன்,
இல. 828, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

இரண்டாம் இடம் — செல்வி சபாரத்தினம் பிரேமினி,
யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

மூன்றாம் இடம் — செல்வன் சயனொளிபவன் முகுந்தன்,
யா. இந்துக் கல்லூரி.

தகைமை பெற்றோர் இருவர் (02)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY.

COMMERCIAL BANK

# கொமர்ஷல் வங்கி சேமிப்பு சான்றிதழ்கள்
# COMBANK SAVINGS CERTIFICATES

## கொம்மர்ஷல் வங்கி சேமிப்பு சான்றிதழ் உறுதி செய்வது

- வைப்பிலிடும்போதே வளமான வட்டி.
- கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
- வட்டிமீதான பிடிப்பு வரிவிலக்கு (NO WITH HOLDING TAX)
- முத்திரைத் தீர்வு விலக்கு (NO STAMP DUTY)
- கடன்பெற இலகுவான பிணை உறுதி.
- நியமிக்கும் மறு உரித்தாளருக்கு பணம்

இச் சான்றிதழ்களில் முதலிட விரும்புபவர்கள் தமது அடையாள அட்டையை அல்லது கடவுச் சீட்டைக் கொண்டுவரவும்.

"சிறுதுளி பெரு வெள்ளம்"

சான்றிதழுக்கான அட்டவணை:

| நீங்கள் கொடுப்பது | | | | | | நீங்கள் பெறுவது | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 மாதங்கள் | | 12 மாதங்கள் | | 24 மாதங்கள் | | | |
| 14.5% | | 15.5% | | 16.5% | | முதிர்ச்சியில் | |
| ரூபா | 465/- | ரூபா | 433/- | ரூபா | 375/- | ரூபா | 500/- |
| ரூபா | 930/- | ரூபா | 865/- | ரூபா | 750/- | ரூபா | 1000/- |
| ரூபா | 4662/- | ரூபா | 4330/- | ரூபா | 3760/- | ரூபா | 5000/- |
| ரூபா | 9325/- | ரூபா | 8659/- | ரூபா | 7519/- | ரூபா | 10000/- |
| ரூபா | 23310/- | ரூபா | 21645/- | ரூபா | 18797/- | ரூபா | 25000/- |

வாருங்கள்! இணையுங்கள்!! வளருங்கள்!!!

"உங்கள் வெற்றி எங்கள் பலம்"

# கொமர்ஷல் வங்கி

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை

**சிவபதி பல்பொருள் வாணிபம்**

புடவை அகம்

(62) 19, மின்சார நிலைய வீதி, — யாழ்ப்பாணம்.

**SIVAPATHY MULTI SPOT**

(62) 19, Power House Road — JAFFNA.

றெடிமேட் ஆடைகள், சாறி வகைகள், சேட்டிங், சூட்டிங் வகைகள்

பெண்களுக்கும் ஆண்களுக்கும், குழந்தைகளுக்குமான

றெடிமேட் ஆடைகளை மலிவான விலையிலும்

திருப்திகரமானதாகப் பெற்றுக்கொள்ள

சிறந்த ஸ்தாபனம்

**சிவபதி மல்ரி ஸ்போட்**

(62) 19, மின்சார நிலைய வீதி, — யாழ்ப்பாணம்.

---

முருகா என்றால் முத்தி கிடைக்கும்.

உங்களுக்குத் தேவையான

- அபிஷேகத் திரவியங்கள் ✻ புதுமனை அத்திபாரச்சாமன்கள்
- நாள் சரக்குகள் - கோரோசனை - குங்குமப்பூ - கஸ்தூரி
- விவாகமுகூர்த்தப் பொருள்கள் ✻ கோவில் சங்காபிஷேகச்சாமான்கள்
- காண்டாமிருகக் கொம்பு ✻ தைலவகைகள், சந்தனாதி முதலியன
- புனுகு, ஜவ்வாது, அத்தர், பன்னீர், சென்றவகைகள்
- செந்தூரம், பஸ்பம், ஆசவம், அரிஷ்டவகைகள்
- தைலவகைகள், சந்தனாதி முதலியன ✻ ஆயுள்வேத மூலிகைவகைகள்
- ஊதுபத்திவகைகள், வாசனைத்திரவியங்கள்
- தயாரிக்கப்பட்ட சித்த ஆயுள்வேத மருந்துகள்

நியாயமான விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**கா. இரத்தினசபாபதி அன் சன்ஸ்**

மருந்துச் சரக்கு வியாபாரம்

(285) 131, கே. கே. எஸ். றோட் — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தெய்வம் முருகனைப் போற்றி வாழ்வோம்

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்புவரையான

சகல நூல்களுக்கும்

★ பிறந்ததின வாழ்த்து மடல்கள்

★ திருமண வாழ்த்து மடல்கள்

★ வாராந்த - மாதாந்த சஞ்சிகைகள்

★ காகிதாதிகள் - அலுவலக பாடசாலை உபகரணங்கள்

ஆகியவற்றுக்கும்

புத்தகங்கள் கட்டுவிக்கவும்

யாழ் நகரில் கலையகமாக மிளிரும் தாபனம்

# பூபாலசிங்கம் புத்தகசாலை

245, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

4, ஆஸ்பத்திரி வீதி,
( பஸ் நிலையம் )
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லாத அருட்கடலான
நல்லைக் கந்தன் கருணையே பொலிக!

தேவைக்கேற்ப கடன்பெறு வசதியும்
வைப்புக்கேற்ப தாராள வட்டியும்
நாடித்தந்து நற்பணி செய்யும்
நலங்கள் நிறைந்த தனித்துவ வங்கி

**மக்கள் வங்கி**

- நடைமுறை — முதலீட்டு — சேமிப்புக் கணக்கு
- சிறுவர் நிரந்தர — சேமிப்புக் கணக்குகள்
- நிலையான வைப்புகள் — சேமிப்புச் சான்றிதழ்
- கூட்டுறவு அபிவிருத்தி, சுயவேலைக் கடன்கள்
- விவசாய, கைத்தொழில் விரிவாக்கக் கடன்கள்
- மகளிர் அதிர்ஷ்டக் கணக்குகள், சிறுவர் உண்டியல்
- முதியோர் யாத்திரைக் கணக்குகள்

வாய்ப்பும் வசதியும் இன்னும் பலப்பல!

பொருண்மிய பலத்தைப் புதுக்கி உயர்த்தும்
அருந்துணையாக அரும்பணி செய்வது

**மக்கள் வங்கி**

அருகிலுள்ள கிளைகளில் ஆலோசனை பெறுவீர்!
வழமையாளராகி வசதிகளைப் பெருக்கிடுவீர்.

**மக்கள் வங்கி**

**(இலங்கையில் அதிகூடிய கிளைகளையும் கோடிக்கணக்கான
வழமையாளரையும் கொண்டு பணிசெய்யும் சிறந்த வங்கி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MENAN TRADING CO.

No: 82. 4th Cross Street, Colombo II

No: 208. Prince Street, Colombo II

**GENERAL MERCHANTS**
**&**
**COMMISSION AGENTS**

DEALERS IN LOCAL FOOD PRODUCTS

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய

விவகாரக் குழு வெளியிடும்

"நல்லை குமரன் மலர்"

சிறப்போடு வெளிவர வேண்டுமென

உளமார வாழ்த்துகின்றோம்.

V

# மேனன் ரேடிங் கோ

# M. T. C.

T. P. 324092



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா — உன் வேல் போற்றி !
அழகா — உன் மயில் போற்றி !!
சண்முகா — உன் சேவற் கொடி போற்றி !!!

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

என்றும்

உங்கள் தேவைகளுக்கு

- விளைவு சூடம்
- அபிஷேகச் சாமான்கள்
- புதுமனை அத்திபாரப் பொருள்கள்
- நாள் சரக்குகள் — குங்குமப்பூ
- விவாக முகூர்த்தப் பொருள்கள்
- அஷ்டபந்தன மருந்துத் திரவியங்கள்
- பச்சைச் சந்தனம் — மைசூர் சந்தனம்
- ஆயுள்வேத மருந்துகள்
- மருந்துச் சரக்குகள்
- வாசனைத் திரவியங்கள்

வைத்தியர்களுக்குத் தேவையான

☐ சூரணம் ☐ தைலம் ☐ எண்ணெய் வகைகள் ☐ லேகியம்

☐ பஸ்பம் ☐ செந்தூரம் ☐ குளிசை வகைகள்

எப்பொழுதும் பெற்றுக் கொள்ள

# க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்

4, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
( ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் )

76 (5), மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் ஜவுளித் தேவைகளை

நிறைவு செய்வதே

எம் பணி

அனைத்து வகை ஆடைகளுக்கும்

எம்மை நாடுங்கள்,

# சிற்றி ரெக்ஸ்

40, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன் அருள் பொலிகவென

வாழ்த்துகின்றோம்.

கண் வைத்தியர்களின் சிபார்சுக்கேற்ப

சிறந்த தொழில் நுட்பவியலாளரினால்

குறித்த நேரத்தில் சிறந்த முறையில்

மூக்குக் கண்ணாடி

வழங்குபவர்கள்

★

இறக்குமதி செய்யப்பட்ட பிறேம்களுக்கும்

போட்டோகிறே (Photo Gray)

கண்ணாடிகளுக்கும்

நாடுங்கள்

# எரிக் கணேஸ்

இல: 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன் அடியாருக்கு அவனருள் பொலிக.

**ELAVARASI TEXTILE**

திருமணம் — மற்றும் முகூர்த்தங்களுக்கு வேண்டிய
பட்டுப் புடவைகள் — எத்தனையோ ரகங்களில்
இணையற்ற வண்ண வண்ண அமைப்புடன்
உங்கள் மனம்போல் தெரிவு செய்து
நிதான, நியாய விலையில் பெற்றுக்கொள்ள உதவும்
ஜவுளி உலகின் முன்னோடிகளாய

**இளவரசி சேலைச் சோலை**

57, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.

---

ஆங்கில மருந்து
வகைகள் அனைத்திற்கும்
நாடவேண்டிய
ஒரே நிறுவனம்

**RATNAM PHARMACY & GROCERY**

388, HOSPITAL ROAD,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**55 வருட சேவை**

★ தன்னிகரற்ற சேவையில்

★ தன்னிறைவு காண்கிறது.

# சன்லைட் றெக்கிளீனஸ்

( சூரியப் பிரகாஷ் )

மின்சார நிலைய வீதி,

( பழைய பஸ் நிலையம் முன்பாக )

**யாழ்ப்பாணம்.**

கிளை : கச்சேரியடி – யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HATTON NATIONAL BANK
HNB
LIMITED

# ஹற்டன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

**யாழ்ப்பாணம்.**

**சிங்கிதி சேமிப்புத் திட்டம்**

சிங்கிதி சேமிப்புத் திட்டம் உங்கள் பிள்ளைகள் மத்தியில் சேமிக்கும் பழக்கத்தை வளர்த்து மகிழ்ச்சியும் வளமும் நிறைந்த பிரஜைகளாக உருவாக வேண்டுமென்பதற்காக அன்புடன் வழங்கப்படும் ஒரு திட்டமாகும்

**ஒரு கணக்கை ஆரம்பிக்க ரூ. 50/- மட்டுமே**

ஆகக் குறைந்த தொகையான ரூ. 50/- உடன் கணக்கை ஆரம்பிக்கலாம். அதன்பின்னர் ரூ. 5/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புச் செய்யலாம்.

**பல விசேட அனுகூலங்கள்**

உறுதியான, சீரான வளர்ச்சி காணப்படும் சிங்கிதி சேமிப்புக் கணக்குகளை வைத்திருக்கும் பிள்ளைகள் பின்வரும் அனுகூலங்களைப் பெறலாம்.

- அன்பளிப்பாக எழுதும் பொருள்கள்.
- ஹ.ந.வ. பயிற்சி நிலையத்தில் அநுமதிபெறச் சிறப்புரிமை.
- ஹ.ந.வ. சுயதொழிற் திட்டத்தின்கீழ் விசேட சந்தர்ப்பங்கள்.
- ஹ.ந.வ. வங்கியின் வருடாந்த சித்திரப் போட்டியில் பெறுமதியான பணப்பரிசுகளை வென்றெடுக்க வாய்ப்புகள்.
- சிங்கிதி பத்துச் சீட்டிழுப்பில் பெரும் பணப் பரிசுகளை வெல்ல வாய்ப்புகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை குமரன் மலர்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சேட்டிங், சூட்டிங், பஞ்சாபி, சாறிவகைகள்,
தரமான கூறைகள், சிறுவர்களுக்கேற்ற ஆடைகளுக்கு
இன்றே நாடுங்கள்.

# ராசி பட்டுச்சோலை

70, 71 A, சிறப்பு அங்காடி உட்புறம்
**யாழ்ப்பாணம்.**

---

**நல்லை குமரன் மலர் சிறப்புற**
**வாழ்த்துகின்றோம்.**

சகல விதமான பட்டுப் புடவைகள்
சேட்டிங், சூட்டிங் ஆடைகளுக்கு
இன்றே நாடுங்கள்.

# கீர்த்திகா புடவையகம்

21, சிறப்பு அங்காடி உட்புறம்
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி

இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர் என்ற முறையில் எமது சேவை சீரான மேன்மைச் சிறப்புகள் கொண்டவை.

அவற்றுள் சில:

01. சிறுவர்களுக்கு எனத் தனியான பல நன்மைகளை உள்ளடக்கிய சேமிப்புக் கணக்குகள், சிறுவர் சேமிப்புக் கணக்கிற்கு சாதாரண சேமிப்புக் கணக்குகளை விட 2% வட்டி அதிகம். மாணவர்களுக்குக் கடன் வசதி. அத்துடன் ரூபா 1,500/- ஐயும் அதற்கு மேற்பட்ட தொகையையும் கணக்கில் மீதியாகக் கொண்டுள்ள சிறுவர் பரிசு பெறுவதற்காகப் போட்டியில் பிரவேசித்துப் பின்வரும் வாய்ப்புகளுக்கும், பரிசில்களுக்கும் உரித்துடையவர் ஆவர்.

அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆகக்கூடிய தொகையை மீதியாகக் கொண்டிருக்கும் 10 மாணவர்களுக்கு ஹெலிகொப்டர் மூலம் உள்ளூர் வான் பிரயாணத்தை மேற்கொள்ளும் வாய்ப்புக் கிட்டும்.

ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் உயர்ந்த மீதியை வைப்பாகக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு சகல தரைகளிலும் ஓடக்கூடிய பைசிக்கிள்கள் வழங்கப்படும்.

இ) இந்தச் சேமிப்புத் திட்டத்தில் பங்கெடுத்து ஊக்குவிக்கும் பாடசாலைகளுக்கு கவர்ச்சியான ஊக்குவிப்புகள் வழங்கப்படும்.

ஈ) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆகக்கூடிய தொகைய வைப்பாகக் கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கு ரூபா 15,000/- வழங்கப்படும். (வைப்புத் தொகை 75,000/- ரூபாவுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.)

உ) ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அவை திரட்டிய வைப்புகளின் ஒரு வீதமான தொகை பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்படும்.

02. இலங்கை வங்கியின் எக் கிளையிலாவது வெளிநாட்டு உண்டியல்லைக் கருமபீடத்தில் காசாகப் பெறுபவர்களுக்கும், தமது கணக்கில் வைப்பில் இடுபவர்களுக்கும்கூட அதிஷ்டம் காத்திருக்கிறது.

01 வது பரிசு — ரூபா 50,000/-
02 வது பரிசு — ரூபா 25,000/-
03 வது பரிசு — ரூபா 15,000/-

இதற்கான மேலதிக விபரங்களைப் பெற உங்கள் அருகாமையில் இருக்கும் இலங்கை வங்கிக் கிளையை நாடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# நல்லைக் குமரன் மலர்

## சிறக்க பங்களித்த உங்களுக்கு

## எங்கள் உளங்கனிந்த நன்றிகள்

1995 ஆம் ஆண்டின் இம்மலர் சிறப்புற ஆக்கி வெளியிட உதவிய எல்லோருக்கும் குமரன் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்.

## முக்கிய குறிப்பு

எழுத்தாக்கங்களை 30-05-95ற்கு முன் தருமாறு அறிஞரைக் கேட்டிருந்தும் அவர்கள் தாமதம் காரணமாக மலர் வெளியீடும் தாமதித்து விட்டது. வாசகர் மன்னிக்கவேண்டும். இம் மலரில் வெளிவந்துள்ள கட்டுரையாக்கங்களின் கருத்துக்கள், அபிப்பிராயங்கள், விளக்கங்கள் யாவும் எழுதிய அறிஞரையே சாரும். அவைபற்றி யாராவது கருத்துக்கள் தெரிவிக்க விரும்பின் சுருக்கமாக — தெளிவாக எழுதியனுப்பினால் அடுத்த மலரில் அவற்றை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

சைவ சமய விவகாரக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன் மலர் இனிதே மலர வாழ்த்துகிறோம்.

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும்

கண்ணாடிகளை சரிவரப் பெற்றுக்கொள்ள



**S.M.FERNANDO**

580, Hospital Road, JAFFNA.

**எஸ். எம். பெர்னாண்டோ**

580, வைத்தியசாலை வீதி,

(இலங்கை வங்கி அருகாமையில்)

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை குமரன் மலர் 1995



வெளியீடு:
யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற
சைவ சமய விவகாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org